14
N12

120759


துரைத்தன
விளக்கம்

OFFICE OF THE ... OF BOOKS
29 NOV 1912
MADRAS.

853
32019



பம்பாய் நகர பரிபாலன சபையின் கட்டிடங்கள்.

# துரைத்தன விளக்கம்

மாணாக்கர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும்
பயன்படும்படி அநேக சித்திரப்படங்களுடன்,
உபாத்திமைத்தொழிலைக் கற்பிக்க
சென்னையில் நடைபெறும் கல்லூரியில் இப்போது
சரித்திர ஆசிரியராகிய

தி. சே. சுப்பிரமணிய அய்யரவர்களால்
இயற்றப்பட்டு,

மதிராஸ் டெக்ஸ்ட்-புக்-கமிட்டியாரால்
ஏற்றுக்கொள்ளப்பட்டது

மாக்மில்லன் கம்பெனி லிமிடெட்
லண்டன், பம்பாய், கல்கத்தா
எஸ். பி. வி. கே. புஸ்தகசாலை, வேப்பேரி, சென்னை.
1912

விலை, 12 அணா

காபிரைட் ரிஜிஸ்டரானது

120759

PRINTED AT THE

S. P. C. K. PRESS, VEPERY, MADRAS

1912

OFFICE OF THE ... BOOKS
REGISTERED
29 NOV 1912
MADRAS.

## உரிமையுரை

தூய்மையுள்ளதும்

பிறர்க்குப் பயன் அளிப்பதுமான

ஓர் அடக்கமுள்ள உத்தியோகத்தில்

முப்பது வருஷகாலம் உண்மையுடன்

சலிப்பின்றி உழைத்து ஊக்கமுள்ள அநேக

மாணாக்கர்களைக் குணமுள்ள கல்விமான்களாகச் செய்து

அவர்களுடைய பயபக்தியையும், பரவிய

புகழையுமே பெரும்பயனாகப் பெற்றவராகிய

எனது அருமைத் தந்தையாரவர்களுடைய

ஞாபகத்தின்பொருட்டு

இந்நூலை இயற்றலானேன்.

# முகவுரை

"திலக நீண்முடித் தேவரும் வேந்தரும்
உலக மாந்தர்க ளொப்பவென் றோதுப."
(சீவகசிந்தாமணி.)

பிரஜைகள், தங்கள் கடமைகளையும் உரிமைகளையும் நன்றாகத் தெரிந்துகொண்டு சட்டத்துக்கு விரோதமில்லாமல் நடக்கும்படி செய்வது, கல்வியைப் பரவச்செய்யும் நோக்கங்களுள் ஒன்றாகும்.

அமெரிகாவிலும், இங்கிலாந்திலும் வித்யாவிசாரணைத் தலைவர்கள் இவ்விஷயத்தில் நன்றாகக் கவனத்தைச் செலுத்திவருகிறார்களென்று தெரிகிறது.

ஆங்கிலேயர்கள் ஆண்டுவரும் இந்தியாவில், துரைத்தன முறைகளையும் துரைத்தனத்தாருடைய கருத்துக்களையும் நன்றாக விளக்குவதே பிரஜைகளுக்கு அமைதியையும் திருப்தியையும் விளைவிக்குமாதலால், இந்நாட்டில் இதுஸம்பந்தமான பாடமொன்று கற்பிக்கப்பட வேண்டுமென்பதைச் சொல்லவும்வேண்டுமோ!

சிலகாலமாக, சென்னை மாகாணத்தில், போதனாமுறைக் கலாசாலை உபாத்தியாயர்களுக்கும் பால பாடசாலை மாணாக்கர்களுக்கும் இவ்விஷயம் ஒரு பாடமாக ஏற்பட்டிருக்கிறது; அங்ஙனம் இருப்பினும் இதுஸம்பந்தமாக அவர்கள் படித்து அறிந்துகொள்ளத்தக்க புஸ்தகங்கள் இல்லாமையாலும், ஆங்கில பாஷையிலுள்ள புஸ்தகங்கள் யாவும் அவர்கள் அளவுக்கு

மேற்பட்டிருத்தலாலும், இவ்விஷயத்தை அவர்களும் ஸாமான்ய ஜனங்களும் நன்றாக அறிந்துகொள்ளவேண்டுமென்று கருதி, ஆங்கிலேயர்களுடைய அரசியன் முறைகளையும் அவர்களால் இந்தியர்களுக்குக் கிடைத்திருக்கும் நன்மைகளையும் ஜனங்களுடைய கடமைகளையும் விளக்கக்கூடிய 'துரைத்தன விளக்கம்' என்னும் இந்நூலைத் தமிழில் இயற்றி வெளியிடத் துணிந்தேன். அபிப்பிராய பேதங்களை யுண்டாக்கும் விஷயங்கள் அநேகமாக இதில் எழுதப்படவில்லை.

துரைத்தனத்தாருடைய நன்மைகளையும், குடிகள் அவர்களுக்குச் செய்யும் உதவிகளையும், மேற்படி நன்மைகள் அளிக்கப்படும் விதங்களையும், இந்தியாவின் சுருக்கமான சரித்திரத்தையும் முறையே தெரிவிப்பனவாகிய நான்கு பாகங்கள் இப்புஸ்தகத்தில் அமைந்துள்ளன.

'தெரிந்ததைக்கொண்டு தெரியாததை விளக்கவேண்டும்' என்னும் சிறந்த போதனாமுறைக்கேற்ப எல்லாருக்கும் தெரிந்தனவாகிய குடும்பம், கிராமம், பஞ்சாயத்து முதலியவற்றால் துரைத்தனம், தேசம், நியாயஸபை முதலிய விஷயங்கள் இதில் விளக்கப்பெற்றுள்ளன.

எடுத்துக்கொண்ட விஷயம் நூதனமாதலால் இந்நூலிற் செய்யவேண்டிய மாறுபாடுகள் எவ்வளவோ இருத்தல்கூடும்; ஆதலின், இதனைப் படித்துப்பார்க்கும் விவேகிகள், இதிற் செய்யவேண்டிய திருத்தங்கள் இன்னவையென்று எனக்குத் தெரிவிப்பார்களாயின், அவற்றை மிக்க அன்புடன் ஏற்றுக்கொண்டு அவர்கள்பால் நன்றியறிவுள்ளவனாக இருப்பேன்.

சைதாப்பேட்டை,
சென்னை, 28-10-1912. }

தி. சே. சு.

# சூசிபத்திரம்

## முதற்பாகம்

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | குடும்பமும், குடும்ப தருமங்களும் .... .... | 1 |
| 2. | குடித்தனமும் துரைத்தனமும் .... .... | 8 |
| 3. | துரைத்தனத்தார் செய்யும் நன்மைகள் .... | 18 |
| 4. | துரைத்தனமும், பாலபோதமும் .... .... | 30 |
| 5. | துரைத்தனத்தாரும், மேற்படிப்பும் .... .... | 44 |
| 6. | துரைத்தனமும் நியாய விசாரணையும் .... .... | 59 |
| 7. | துரைத்தனமும் ஊர்க்காவலும் .... .... | 68 |
| 8. | துரைத்தனமும் தேசக்காவலும் .... .... | 78 |
| 9. | துரைத்தனமும், தபாலும், தந்தியும் .... .... | 90 |
| 10. | துரைத்தனமும் இருப்புப்பாதைகளும் .... | 108 |
| 11. | துரைத்தனமும், கட்டிடமும், ஜலவசதியும் .... | 121 |
| 12. | துரைத்தனமும் அளவைகளும் .... .... | 136 |
| 13. | துரைத்தனமும் தேசச் செழிப்பும் .... .... | 143 |

## இரண்டாம் பாகம்

| | | |
|---|---|---|
| 14. | துரைத்தனத்தாருக்கு நாம் செய்யு முதவி .... | 153 |
| 15. | வரி மூலங்களும், வரி தண்டலும் .... .... | 156 |
| 16. | நகர பரிபாலனம் முதலியன .... .... | 171 |

## மூன்றாம் பாகம்

| | | |
|---|---|---|
| 17. | மாகாண அரசாட்சி .... .... .... | 181 |
| 18. | தேச அரசாட்சி .... .... .... .... | 192 |

19. இந்தியாவைப்பற்றி இங்கிலாந்தில் நடக்கும் அர சாட்சி .... .... .... .... .... 197
20. இங்கிலாந்தின் ஏகாதிபத்தியம் .... .... 207


## நான்காம் பாகம்


21. ஆங்கிலேயர் வருதற்குமுன் இந்தியா .... .... 218
22. ஆங்கில வர்த்தகர்கள் ஆதீனத்தில் இந்தியா .... 227
23. ஆங்கில மன்னர் ஆதீனத்தில் இந்தியா .... 235
பரீட்சைக் கேள்விகள். .... .... .... 251


OFFICE OF ... REGISTERED 29 NOV 1912 MADRAS.

# உபாத்தியாயர்கள் கவனிக்கவேண்டிய விஷயங்கள்

1. மாணுக்கர்களுக்கு உபயோகமற்ற விஷயங்களை விவரிக்க வேண்டியதில்லை. ஸர்க்காரின் ஒவ்வொரு இலாகாவின் சட்ட திட்டங்களையெல்லாம் சொல்லவேண்டுமென்பதில்லை. போதிக்கும் விஷயங்களைவிட போதனுமுறைமையே மேலானது.

2. தெரிந்த விஷயங்களைக்கொண்டு தெரியாததை விளக்க வேண்டும். சித்திரங்கள், சித்திரப்படங்கள், உருவங்கள், பொருள்கள், கச்சேரிகளில் நடைபெறும் பத்திரங்கள், தஸ்தாவேஜுகள் முதலியவற்றை உபயோகித்து பொருட்பாடங்களைப்போலவே துரைத்தன முறைமைகளையும் குடிகளின் தருமங்களையும் விவரிக்கவேண்டும்.

3. அந்தந்த விடங்களிலுள்ள தொழில்களையும், கச்சேரிகளையும், செங்கோன்மையின் அடையாளங்களையும் பயன்களையும் பார்த்துத் தெரிந்துகொள்ளும்படி மாணுக்கர்களை அடிக்கடி வெளியே உலாவ அழைத்துச் செல்லவேண்டும். முதல்முதல் மேலதிகாரிகளின் கடமைகளையெல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டுமென்பதில்லை. பற்பல இலாகாக்களால் ஜனங்களுக்கு உண்டாகும் நன்மைகளை விவரித்தால் போதும்.

4. சரித்திர பாடம், பொருள் பாடம், சம்பாஷணை, தொழில் பாடம், பாட்டு முதலிய விஷயங்களோடு இணங்க துரைத்தன விளக்கத்தையும் நடத்திவரவேண்டும்.

5. நாளடைவில் துரைத்தனத்தின் முறைமைகள் ஒழுங்குபட்டு நன்மைகளும் பெருகியிருக்கின்றனவென்றும், அமைதியுள்ள வாழ்வுக்கும் செல்வப் பெருக்கத்திற்கும் இன்றியமையாத துரைத்தனத்திற்கு உதவுவது எல்லோருடைய முக்கிய கடமையென்றும் அடிக்கடி வற்புறுத்தவேண்டும். துரைத்தனத்திற்குச் செய்யவேண்டிய கடமைகளைப்போலவே இனத்தார்களுக்கும் செய்யவேண்டிய கடமைக ளிருக்கின்றனவென்றும் எடுத்துக் காட்டவேண்டும்.

6. பாடங்கள் நடக்கும் காலத்திலும், விளையாட்டு சமயத்திலும், தேசப்பயிற்சி செய்யும்போதும், ஒழுங்கான சட்டதிட்டங்களை அனுஷ்டித்து வருவதாலுண்டாகும் பயன்களை மாணாக்கர்களே அறிந்துகொள்ளும்படி அவர்களுக்கு இடம் கொடுத்து வரவேண்டும். இப்பயிற்சியால் சிறந்த பழக்க வழக்கங்களைக் கைக்கொண்டு நாளடைவில் மாணாக்கர்கள் அறிவும் விவேகமுமுள்ள மனிதர்களாவார்கள்.

7. இப்போதுள்ள துரைத்தனத்தின் ஒழுங்கையும் நன்மைகளையும் நன்கு விளக்க நிகழ்காலத்தை இறந்தகாலத்தோடு பலமுறை ஒப்பிடலாம். ஆனால் காரணமின்றி இறந்தகாலத்தை தூஷித்து நிகழ்காலத்தைப் பூஷிக்கலாகாது.

8. துரைத்தன முறைமைகளையும், பிரஜாதருமங்களையும் விவரிக்கையில் அவசியமில்லாமல் ஆங்கில வார்த்தைகளை உபயோகிக்கவும் வேண்டாம். தகுந்த தமிழ் வார்த்தைக ளில்லாதபோது, சுலபமாய்ப் புலப்படாத மொழிபெயர்ப்பைத் தேடவும் வேண்டாம்.

# துரைத்தன விளக்கம்

## முதற் பாகம்

### 1.—குடும்பமும், குடும்ப தருமங்களும்

மனிதர்களின் பற்பல நிலைமை—குடும்ப வாழ்க்கை—குடும்ப தருமங்கள்—இவற்றைச் செய்வது நம்முடைய நன்மைக்கே—பிதாவின் அதிகாரமும், குடும்பப்பற்றும்—உயர் குடும்பத்தின் அடையாளங்களும், பெருமையும்.

உலகத்திலுள்ள ஜீவராசிகளோ அளவற்றன. அவற்றுட் சிறந்தது மனிதஜாதி என்பது மனிதனுடைய செய்தொழில்களாலும் புத்தி விசாலத்தாலும் நன்றாக விளங்குகின்றது. எல்லா மனிதர்களும் ஒரேவிதமாக இருப்பவர் அல்லர். கல்வி, மதம், நாகரிகம் முதலிய விஷயங்களில் ஒவ்வொரு ஜாதியாரும் ஒவ்வொருவிதமாக இருக்கிறார்கள். ஒரு தாய்வயிற்றிற் பிறந்த பிள்ளைகள் எல்லாரும் ஒரேமாதிரியாக இருக்கிறார்களா? அப்படிப்போலவே சில தேசத்தார்கள் தங்களுடைய ஊக்கத்தாலும், புத்தி விசாலத்தாலும், கல்வி,

கைத்தொழில், இராஜ்யபரிபாலனம், இவற்றில் மேன்மையடைந்து விளங்குகிறார்கள். வேறு சில தேசத்தார்களுடைய இயற்கையைப் பார்க்கையில் அவர்களுக்கும் மிருகங்களுக்கும் அதிக வித்தியாசம் காணப்படவில்லை. தென்னிந்தியாவிலுள்ள நீலகிரியிலிருக்



தோடர்கள்.

கும் தோடர்களைப்போல், காடுகளிலும் மலைகளிலும் சிறு குடிசைகளில் வசித்துக்கொண்டு, ஆடுமாடுகளை மேய்த்து, நிலத்தைப் பண்படுத்திப் பயிர்செய்யாது, காய் கனிகளையே புசித்து வாழும் மனிதர்களும் பலர் உளர். மற்றும் சில மனிதர்கள் ஆடு மாடுகளை மேய்த்தலை ஜீவனோபாயமாகக் கொள்ளாமல், காடுகளை

யழித்து வயல்களை உண்டாக்கிக் காலங்களில் அவற்றை
நன்றாகப் பயிரிட்டுத் தங்களுக்கு வேண்டிய உண
வுப்பொருள்களை வீடுகளிற் சேர்த்துவைப்பதல்லாமல்
தங்கள் அறிவின் பெருக்கத்திற்கு வேண்டிய வழிகளை
யும் தேட ஆரம்பிக்கின்றார்கள். இவ்வாறு, பல தேசத்
திலுள்ளவர்களும், தேசத்திலுள்ள பல ஜாதியாரும்
வெவ்வேறு நாகரிக நிலைமையிலிருக்கிறார்கள்.

மேற்கூறிய எந்த நிலைமையில் மனிதர்கள் இருந்த
போதிலும், அவர்கள் தனித்தனியாக இராமற் சிலர்
சிலராகச் சேர்ந்தே வசிக்கிறார்கள். மிருகங்களைப்
போன்ற நடையுள்ள மனிதனும் தன்னுடைய இனத்
தார்களோடு சேர்ந்து வசிக்கிறான். தனித்தனி வீடு
களில் ஒவ்வொருவரும் தத்தம் இனத்தார்களுடன்
சேர்ந்து வசிக்கிறார். இவ்விதமான தொகுதிகளுக்குக்
குடும்பம் என்று பெயர். எல்லாத் தொகுதிகளையும்
குடும்பம் என்று சொல்லுதல் பொருந்தாது. ஒரேவீட்
டில் ஒருங்குசேர்ந்து வசிக்கும் ரத்தக்கலப்புள்ள தொகு
திக்குக் குடும்பம் என்ற பெயர் வழங்கப்பட்டு வரு
கிறது.

குடும்பம், பலமாக இருக்கவேண்டுமானால் ஒற்றுமை
இருக்கவேண்டும். நாகரிகமற்றவன்கூட, தன் குடும்
பத்தில் உள்ளவர்களை நேசிப்பான்; சண்டையொன்றும்
போடமாட்டான். குடும்பத்திலுள்ளவர்கள் யாவரும்
தாங்கள் ஒரே முன்னோரிடமிருந்து வந்தவர்களென்
னும் பலமான எண்ணங்கொண்டவர்களாக இருப்பதை

நாம் காண்கிறோம். எதுவரையில் ஒரு குடும்பத்திலுள்ள தாய், தந்தை, மக்கள் முதலான யாவரும் தத்தம் கடமைகளைச் செய்து ஒருவரை யொருவர் நேசித்துத் தங்கள் குடும்பத்தின் பெருமையையும், ஒழுக்கத்தையும் கவனித்து நடக்கிறார்களோ அதுவரையில் தான் அக்குடும்பம் க்ஷேமத்தை யடைந்துகொண்டு வரும். ஒருவனுடைய நடையாலும், செய்கையாலும் அவனுடைய குடும்ப நிலைமையை எளிதாகத் தெரிந்து கொள்ளலாம்.

பசித்தவர்களுக்கு அன்னமிடலும், யாசகர்க்கு ஈதலும், தரித்திரர்களுடைய வறுமைத் துன்பத்தை நீக்குதலும், வழிப்போக்கர்களுக்காகச் சத்திரங் கட்டலும், நோயாளிகளுடைய பிணியைத் தீர்க்க வைத்தியசாலைகளை ஸ்தாபித்தலும், சிறந்த தருமங்களென்று சொல்லுகிறார்கள். ஆயினும், இவை எல்லாவற்றிலும் சிறந்த தருமம் ஒன்றுண்டு. அஃதாவது ஒவ்வொருவனும் குடும்பத்திற் பிறந்திருப்பதற்காக அவனவன் செய்ய வேண்டிய கடமையை இன்னதென்றுணர்ந்து அதனை ஒழுங்காகச் செய்தலாம். இதனையே குடும்ப தருமமென்று சொல்லவேண்டும். இந்தச் சிறந்த தருமத்தை நடத்தினால் மற்றத் தருமங்கள் யாவும் எளிதாக நடைபெறும். பிதா மாதாக்கள் மக்களுக்கு வேண்டியவற்றைக் கவனித்தலும், தந்தை தாய்களாகிய இருமுதுகுரவர்களைத் தெய்வம்போற் பாவித்துத் தள்ளாத பருவத்தில் அவர்களைப் பாதுகாத்தலும், புருஷன் மனை



விக்கு ஆகவேண்டியவற்றைச் செய்து கொடுத்தலும், மனைவி தன் கணவனைத் தெய்வமாக நினைத்து அவன் குறிப்பறிந்து நடத்தலும், தமையன் தன் தம்பிகளைப் புத்திரர்கள்போல் மிக்க அன்புடன் நடத்தலும், தம்பி தன் தமையனிடத்தில் பிதாவுக்குரிய மரியாதையைப் பாராட்டலும், சகோதரர்கள் யாவரும் மனமொத்து வாழ்தலும் குடும்ப தருமங்களாகும். குடும்ப தருமங்களை நடத்திவருவது தத்தம் க்ஷேமத்திற்கென்றே ஒவ்வொருவரும் நினைக்கவேண்டும்.

ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளைச் செய்வது தத்தம் க்ஷேமத்திற்காகவே என்பதைத் தெரிவிக்கும் விநோதமான வரலாறு ஒன்று உண்டு. அது வருமாறு:—கை, கால், கண், காது, மூக்கு, வாய் என்னும் அவயவங்கள் எல்லாம் சேர்ந்து “நாம் ஏன் வயிற்றுக்காக உழைத்துப் பாடுபடவேண்டும்? அஃது என்ன வேலை செய்கிறது? நம்முடைய வேலைகளைச் செய்யாமல் அதனை அழித்துவிடுவோம்.” என்று தீர்மானித்து ஒவ்வொன்றும் வழக்கமாகச் செய்துவரும் தொழில்களைச் செய்யாமல் சும்மா இருந்துவிட்டன. கைகள் ஒன்றையும் எடுப்பதில்லை யென்றும், கால்கள் ஓரிடத்திற்கும் நடந்து செல்வதில்லை யென்றும், கண்கள் ஒன்றையும் பார்ப்பதில்லை யென்றும், காதுகள் ஒன்றையும் கேட்பதில்லை யென்றும், மூக்கு வாசனையை அறிவதில்லை யென்றும், வாய் ஒன்றையும் உட்கொள்வதில்லை யென்றும் சொல்லிக்கொண்டு ஒன்றையும் கவனியாமல் இருந்

தன. இவ்வாறு பல நாட்கள் சென்றபின் எல்லாம் சோர்வடைந்து ஆகாரமில்லாமல் இறந்துபோகும் நிலைமைக்கு வந்துவிட்டன. அப்போதுதான், தாம் செய்தது தவறென்றும், வயிற்றுக்கு உழைப்பது தத்தம் பலத்துக்கென்றும் உணர்ந்து, தத்தம் கடமைகளைச் செய்ய ஆரம்பித்தன. சில தினங்களுக்குப்பின் தேகம் பழைய நிலைமையை அடைந்தது. இம்மாதிரியே குடும்பத்திலுள்ள யாவரும் அவரவர் கடமையை ஒழுங்காகச் செய்துவந்தால் குடும்பம் க்ஷேமமடையும்.

இங்ஙனம் ஒழுங்காகச் செய்துவருகிறார்களா என்று கவனிப்பவர் யார்? குடும்பத்தலைவர் அல்லது தகப்பனார். அவரே குடும்பத்திலுள்ளோரைப் போஷித்து, தருமங்களைச் சொல்லிக்கொடுத்துத் தம்முடைய இனத்தின் பெருமையை நிலைநாட்டுகிறவர். **பிதா** என்னும் பதத்துக்கு இதுதான் பொருள். பிதாவின் சொற்படி நடப்பது பிள்ளைகளின் கடமை. தலைவனுக்கு அடங்காமலும், தலைவனில்லாமலுமிருக்கும் குடித்தனங்கள் எந்தக் கதியை அடைகின்றன? பிள்ளைகள் சண்டைபோட்டுக்கொண்டு, தங்களுடைய கடமைகளை விட்டுச் செல்வத்தை யிழந்து, நெறிதவறி, முன்னோர்களின் பெருமையையும் நல்ல பெயரையும் கெடுத்துவிட்டுத் தாங்களும் நாசமடைகின்றார்கள்.

நம்முடைய தேகத்தில் ஏதாவது ஓர் உறுப்பில் அசௌகரியம் உண்டானால் மற்ற உறுப்புக்களெல்லாம் சேர்ந்து அதை மாற்றுவதில் எப்படி பரபரப்புடைய



னவாக உள்ளனவோ அப்படியே குடும்பத்திலுள்ள ஒருவனுக்கு ஆபத்து நேரிட்டால் அது தங்களுக்கு வந்துவிட்டதாகவே அக்குடும்பத்திலுள்ள மற்றவர்கள் நினைத்து, அவனை அதிலிருந்து விடுவிக்க என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்து அப்பால்தான் கவலையற்றிருப்பார்கள். இவ்வாறு இருக்கும் இயல்புக்குக் குடும்பப் பற்று என்று பெயர்.

குடும்பத்தைச் சிறு **ராஜ்யமென்று** சொல்லலாம். அந்த ராஜ்யத்துக்குத் தலைவன் **தகப்பன்**. அவனுடைய பிரஜைகள் **குடும்பத்திலுள்ளவர்கள்**. வீட்டுக்கு வெளியே போய் வீட்டுக்கு ஆகவேண்டிய காரியங்களைப் பிதா கவனிப்பதுபோல் வீட்டுக்குள்ளிருந்து வீட்டு விஷயங்களிற் பிதாவுக்கு ஒரு விதமான கவலையும் இல்லாமற் பார்த்துக்கொள்பவள் குடும்பத் தலைவியாகிய தாயாகிறாள். இக்காரணம்பற்றியே ஒருவனுடைய ஸ்திரீக்கு மனைவி யென்றும், இல்லாள் என்றும், கிருஹிணீ என்றும் பெயர்கள் ஏற்பட்டுள்ளன.

நெறிதவறாத குடும்பத்தையே உயர்ந்த குடும்பமென்று சொல்லவேண்டும். உயர்ந்த குடும்பத்திற் பிறந்தவனென்றால் அவனை எல்லோரும் மதிக்கிறார்கள். அவன் எந்த இடத்திற்கும் போகலாம். ஒரு வேலைக்குப் புகும்போதுகூட, ஒருவன் தன் குடும்ப நிலைமையைத் தெரிவிக்கவேண்டும். நல்ல குடும்பத்திற் பிறந்தவனென்பதே ஒருவனுக்குச் சிறந்த யோக்கியதையாகிறது. ஆதலால் ஒவ்வொருவரும் தத்தம் குடும்பப்

பெருமையைப் பாதுகாத்து நடப்பது முதற்கடமை யாகும்.

> "அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
> பிறன்பழிப்ப தில்லாயி னன்று." (திருக்குறள்.)

## 2.—குடித்தனமும் துரைத்தனமும்

மனிதர்களின் சிறிய பிரிவுகளும் பெரிய பகுதிகளும்—இவற்றின் அமைதிக்குக் காரணம்—துரைத்தனமும் தலைவருடைய குணங்களும்—அமைதிக்குக் காரணம் துரைத்தனமே—எறும்புகளுக்கும் ஈக்களுக்கும் மிருகங்களுக்குமுள்ள துரைத்தனமும் ஒழுங்கும்—துரைத்தனத்தின் அருமையும் பெருமையும்.

மனிதர்களுடைய சிறு தொகுதிகளைக் குடும்பமென்று சொன்னோம். சாதாரணமாக ஒரு குடும்பத்தார் ஒரு வீட்டிலேயே இருப்பார்கள். ஆனால் ஒரே வீட்டிலுள்ள குடும்பத்தார் விருத்தியாகி சொத்துக்களைத் தேடிக்கொள்ளும்போது தங்களுடைய சௌக்கியத்தைக் கருதிப் பல குடும்பங்களாகப் பிரிந்து பல வீடுகளில் வசிக்க ஆரம்பிக்கிறார்கள். இவ்விதமாகப் பிரிவுபட்டாலும், தங்களுடைய முன்னோர்களின் ஞாபகமும், தாங்கள் உறவினர்களென்ற எண்ணமும் அவர்களை விட்டு எளிதில் நீங்குவதில்லை. ஆயினும், நாளடைவில் கிளைக் குடும்பங்கள் அதிகரிக்கவே, காலதேச



வித்யாசங்களினால் ரக்தசம்பந்தமான அடையாளங்கள் மாறுபடுகின்றன. அப்போது அக்கிளைக் குடும்பங்கள், தனிக் குடும்பங்கள்போலக் காணப்படுகின்றன. இவ்விதமாக, ஒரு குடும்பம் பல குடும்பங்களாகப் பிரி




இராஜ்யத்தின் பிரிவுகள்.

யப் பல குடும்பங்கள் சேர்ந்து ஒரு கிராமமாகி, ஒரு கிராமம் பல கிராமங்களாகப் பெருகிப் பல கிராமங்கள் சேர்ந்து ஒரு மாகாணமாகி, ஒரு மாகாணம்

பல மாகாணங்களாகப் பிரிவுபட, பல மாகாணங்கள் சேர்ந்து ஒரு தேசமாக விளங்குகின்றன. பல தேசங்கள் சேர்ந்து ஒரு ராஜ்யமாகின்றன. ஜனத்தொகை பெருகுவதனால் உறவினர்களென்ற ஞாபகம் போய் வேறு வகையான பற்றுக்கள் உண்டாகின்றன. முன்பு இன்ன குடும்பத்தோனென்று சொல்லும் பெருமை வாய்ந்தவன் இப்போது இன்ன கிராமத்தானென்றும், இன்ன மாகாணத்தானென்றும், இன்ன தேசத்தானென்றும், இன்ன இராஜ்யத்தானென்றும், இன்ன ஜாதியானென்றும் பலவாறாகச் சொல்லப்படுகிறான்.

இவ்விதமாக, ஒரு தேசத்தில் பற்பல குடித்தனங்கள் சேர்ந்து பெருங்கூட்டமாக வசிக்கிற நிலைமையில், ஜனங்களைக் காத்து அவர்களுடைய சண்டைகளைத் தீர்ப்பவர் யார்? துரைத்தனத்தார். குடும்பத்தைக் காப்பவன் தகப்பனென்றும், அவனே பெரும்பாலும் குடும்ப வழக்குக்களைத் தீர்த்துத் தனக்குக் கீழ்ப்பட்டவர்கள் தங்களுடைய கடமைகளைச் செய்யும்படி பார்த்துக் கொள்பவனென்றும் முன்னமே சொன்னோம். குடும்பத்துக்குப் பிதா எப்படியோ அப்படியே தேசத்துக்குத் துரைத்தனத்தார் ஆகிறார். ஜனங்கள் மிகுந்த இடத்தில் அல்லது தேசத்தில், அவர்களைக் காப்பவரும், அவர்களுடைய விவாதங்களைத் தீர்ப்பவரும், ஆபத்தினின்றும் அவர்களைப் பாதுகாப்பவரும், துரைத்தனத்தாரே. கவனிக்கவேண்டிய விஷயங்கள் பலவாக இருத்தலாலும், எல்லாவற்றையும் ஒருவரே கவனிப்பது அசாத்தியமாதலாலும் துரைத்தனத்தார் தாங்கள் கவனிக்கவேண்டியவற்றைப் பலவகையாகப் பிரித்துக் கொண்டு தனித்தனி அதிகாரிகளிடம் ஒப்புவித்திருக்கிறார்கள். நம்முடைய நாடாகிய இவ்விந்தியாவை ஆள்பவர்களுக்கு இங்கிலீஷ்காரர்களென்று பெயர். ஐரோப்பா கண்டத்தின் மேற்கு சமுத்திரத்திலிருக்கும் இங்கிலாந்து என்னும் தீபத்திலுள்ளவர்கள்; கல்விச் செல்வத்திலும், பொருட் செல்வத்திலும், நாகரிகத்திலும் மிகச் சிறப்புற்றவர்கள். இத்தேசத்தின் நல்ல நிலைமைக்குக் காரணம் அவர்களே.



நாலைந்து மனிதர்கள் அடங்கிய ஒரு சிறு குடித்தனத்தைக் காப்பதற்கே அக்குடித்தனத் தலைவனுக்குப் புத்தி, தயை, விவேகம், அனுபவம், நல்லொழுக்கம் முதலான பல குணங்கள் வேண்டியிருக்கின்றன. இப்படியானால் கோடிக்கணக்கான பல ஜனங்களடங்கிய இந்தப் பெரிய ராஜ்யத்தை நெறிதவறாமலும், குடிகளுக்கு எவ்விதமான அசௌகரியமும் உண்டாக்காமலும் பரிபாலித்துவர வேண்டுமானால் துரைத்தனத்தார்களுக்கு எவ்வளவு இன்றியமையாத குணங்கள் வேண்டும்? ஆதிகாலத்தில் இத்தேசத்தின் வடபாகத்தில் அயோத்தியா புரியில் இராமர் இராஜ்யபரிபாலனம் செய்துவந்தபோது, ஜனங்கள் மிக்க சௌக்கியத்தை யடைந்து இன்புற்றிருந்தார்களென்று பழைய புராணங்களில் நாம் படிக்கிறோம் அம்மகிழ்ச்சிக்குக் காரணம் அவருக்கிருந்த உயர்ந்த குணங்களேயாம். அவர் புத்தியிற்

சிறந்தவரென்றும், கருணைக்கடலென்றும், கல்வியிற் பெரியவரென்றும், வீரரென்றும், ஊரார் சொல்லுக்குப் பயந்தவரென்றும் சொல்லப்பட்டிருக்கிறார். இப்படியே, இந்தியாவின் வடக்கேயுள்ள மகததேசத்தை வெகுகாலத்திற்கு முன் ஆண்டுவந்த **சந்திரகுப்தர், அசோகர்** முதலிய சக்கரவர்த்திகள் காலத்திலும் அவர்களுடைய நல்லொழுக்கத்தாலும், பராக்கிரமத்தாலும் குடிகள் மிகவும் சௌக்கியமான நிலைமையில் இருந்தார்களென்று கேள்விப்படுகிறோம். பிறகு இத்தேசத்தை ஆண்டுவந்த மகம்மதிய அரசர்களுள் சிரேஷ்டரான ஆக்பர் சக்கரவர்த்தி தம் குடிகளுடைய க்ஷேமத்தைக் கருதி அவர்களுக்குத் தம்மாலியன்ற நன்மைகளைச் செய்து ஜனங்களுக்குள் இருந்த சண்டைகளைத் தீர்த்துத் தாம் மகம்மதியராக இருந்தும், தம் குடிகளாகிய மகம்மதியரையும் இந்துக்களையும் பக்ஷபாதமில்லாமல் சமமாக நடத்தி, ஜனங்கள் மூடத்தனமாக அனுஷ்டித்துவந்த சில கெட்ட வழக்கங்களை நீக்கி, இன்னும்


ஆக்பர்.



பிரஜைகளுடைய க்ஷேமத்துக்கு என்ன என்ன செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்து திருப்தியை விளைவித்தாரென்றும் சரித்திரங்கள் கூறுகின்றன. இந்த உதாரணங்களால், ஒரு பெரிய ராஜ்யத்தை ஆளுவது எளிதானவேலையன்றென்றும், துரைத்தனத்தார்களுக்கு, **பலம், நாகரிகம், அனுபவம், கருணை, பெருந்தன்மை, நல்லொழுக்கம்** முதலான குணங்கள் அவசியமானவையென்றும் தெரிந்துகொள்ளுகிறோம்.

ஜனங்களை யடக்கியாளவும் அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்யவும் துரைத்தனமென்று ஒன்று இல்லாவிட்டால், உலகவாழ்க்கையே குடிகளுக்கு வருத்தமாகத் தோன்றும். நாலைந்து ஜனங்களடங்கிய ஒரு குடித்தனமானது தலைவனொருவனில்லாவிடின் இன்னபாடு படுமென்பதை முன்னமே காட்டியிருக்கிறோம். அன்றியும், ஒரு பாடசாலையில் மாணாக்கர்கள் உபாத்தியாயரில்லாத சமயத்திற் செய்யும் விநோதங்களைப் பார்ப்பவர்களுக்கு அரசனில்லாத தேசத்தின் நிலைமை நன்றாகப் புலப்படும். மாணாக்கர்களை அடக்கிப் போதிப்பதற்குத் தகுந்த தலைவரில்லாமற் போனால் அவர்கள் ஒருவரோடொருவர் சண்டை செய்து வீண்காலம் போக்கிக் கெட்டகுணங்களிற் பழகிப் புத்தியற்றவர்கள் ஆகிறார்கள். ஆனால், மாணாக்கர்களை அடக்கியாளும் வன்மையும், நன்றாகக் கற்பிக்கும் கல்வியறிவும் உள்ள ஆசிரியரின் முன் இந்தச் சிறுவர்களே மிக்க அமைதியை யடைந்து, வணக்கமாக

இருந்து தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களையும், நல்லொழுக்கங்களையும், நல்ல நூல்கள் மூகமாகக் கற்றுப் பிற்காலத்தில் தங்களுடைய ஜீவனோபாயத்துக்கு வேண்டிய வழிகளைத் தேடிக்கொள்ளுகிறார்கள். சட்டதிட்டங்கள் ஜனங்களால் அனுஷ்டிக்கப்படுவதற்கு எந்த இடங்களில் ஒருவிதமான ஏற்பாடு இருக்கிறதோ அந்த இடங்களிலெல்லாம் துரைத்தனம் இருக்கிறதென்று நன்கு தெரிந்துகொள்ளலாம். சென்னைமாநகரிலுள்ள அழகிய 'பீபில்ஸ்பார்க்' என்னும் சிங்காரத் தோட்டத்தில் கிறிஸ்ட்மஸ் பண்டிகை நாட்களில் வருஷந்தோறும் பலவகையான வேடிக்கைகள் நடப்பதுண்டு. அந்தக் காலங்களில் சென்னையிலுள்ளவர்களேயல்லாமல் வெளியூரார்களும் திரள் திரளாக வந்து கூடுவார்கள். இப்படியே, கும்பகோணத்தில் நடக்கும் மகாமகம் முதலிய உற்சவங்களிலும் கணக்கற்ற ஜனங்கள் கூடுகிறார்கள். இக்காலங்களில் ஜனங்களுக்கு ஒருவிதமான அபாயமும் நேரிடாமலிருக்கும்பொருட்டும், கொலை, களவு முதலிய தீச்செயல்கள் நடவாமலிருத்தற்பொருட்டும் பார்த்துக்கொள்வதற்குத் தகுந்த அதிகாரிகளைத் துரைத்தனத்தார் நியமித்து, அனுசரிக்கவேண்டிய விதிகளையும் ஏற்படுத்தி, ஜனங்களுக்கு சௌகரியத்தை விளைவிக்கிறார்கள். இவ்விதமான ஏற்பாடில்லாமல் அவரவர் இஷ்டப்படியே நடக்கலாமென்றிருந்தால் ஜனங்களின் கதி என்ன ஆகும்! சிங்காரத் தோட்டம் சீரழிந்துவிடும். கொலை, களவு முதலிய



வற்றைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை. ஆகையால் இத்தீங்குகளைத் தடுப்பதற்கே துரைத்தனம் அவசியமாகின்றது.

இவ்வித ஏற்பாடானது மனிதர்களுக்குமாத்திரம் உரியதென்று நினைக்கவேண்டாம். பறவைகளும், மிருகங்களும், ஒற்றுமை, இனப்பற்று, கீழ்ப்படிதலென்ற நற்குணங்களைப்பெற்று இயற்கை யறிவினால், சில ஏற்பாட்டின்படியே நடக்கின்றன. தங்களுடைய கடமைகளைச் சரிவரச் செய்கின்றன. எறும்புகள் மிகச் சிறியவைகளாக இருந்தாலும் அவை செய்யும் வேலையையும், அவற்றின் ஏற்பாடுகளையும், யுக்தி, ஒற்றுமை முதலான குணங்களையும் பார்த்தால், மிகவும் ஆச்சரியமாக இருக்கும். இதற்குக் காரணம் அவற்றின் இனக்கட்டுப்பாடுதான். தேனீக்களும் வியக்கத்தக்க குணங்களைப் பெற்றிருக்கின்றன. ஒரு தேன்கூட்டைச் சிறிய ராஜ்யத்திற்கு ஒப்பிடலாம். அதில் ராஜ்ய சின்னங்களையெல்லாம் பார்க்கலாம். மிக்க விநோதமாய் மெழுகினாற் செய்யப்பட்ட அதன் சிற்றறைகளில் தேனீக்கள் தங்கள் கடமைகளை இடைவிடாமற் செய்கின்றன. சில தேனீக்கள் கூட்டைக் கட்டிக்கொண்டே யிருக்கின்றன. வேறு சில, வெளியிற் சென்று புஷ்பங்களிலிருந்து தேனைத் தேடிக் கொண்டுவந்து சிற்றறைகளிற் சேர்க்கின்றன. மற்றும் சில, கூட்டைக் காத்து, நெருங்கி வருபவர்களை ஈட்டிகள்போன்ற தங்கள் முட்களாற் கொட்டித் துரத்திவிடுகின்றன. மேலும், எல்லா

ஈக்களுக்கும் தலைமையாகப் பெருந் தேனீ யொன்று ஒவ்வொரு கூட்டிலு மிருக்கின்றது. அதற்கு எல்லா மரியாதைகளும் செய்யப்படுகின்றன. ஆகையால் சிறந்த நாகரிகம் பெற்றவர்களுக்கும் ஒரு தேன் கூட்டிற் காணப்படும் ஒழுங்கும், ஏற்பாடும் வியப்பாகவேயிருக்கும். பெரிய மிருகங்களுக்கும் இவ்விதமான குணங்கள் இருக்கின்றன. யானைகள் காட்டில் கூட்டம் கூட்டமாகவே சஞ்சரிக்கும். எப்பொழுதும் வயதிலும் பலத்திலும் முதிர்ந்த யானையே கூட்டத்துக்குத் தலைமை யதிகாரியாக விளங்கும். அது போகிறவழியே மற்ற யானைகள் போகும். ஆபத்துவருகிற சமயத்தில் வயதில் முதிர்ந்த யானைகளெல்லாம் சுவர்போல நாலு பக்கமும் வளைந்துகொண்டு, குட்டிகளை மத்தியில் விட்டு வைத்து, உயிர் போமளவும் காக்கின்றன. இவ்விதமாக மிருகங்களுக்குக்கூட ஒருவிதமான ஆளுகை அவசியமாக இருந்தால், திரள் திரளாக வசிக்கும் மனிதர்களுக்குத் துரைத்தனம் அத்யவச்ய மென்பதைச் சொல்லவும் வேண்டுமா?

துரைத்தனம் வகிப்பது எளிதான காரியமன்று. மதம், ஜாதி, தொழில், குணம் இவற்றால் வேறுபட்டுள்ள ஜனக்கூட்டத்தை அடக்கி ஆளுவது சிரமமில்லையென்று யார்தான் நினைக்கக்கூடும்? கரை தெரியாத பெரிய சமுத்திரத்தின் நடுவே கப்பலைச் செலுத்திக் கொண்டு போகும் மாலுமிக்கு எவ்வளவு கவலை இருக்குமோ, அவ்வளவு மனோவிசாரம், துரைத்தனம் வகிப்



பவர்களுக்கும் இருக்கின்றது. ஜலத்துக்குள், கண்ணுக்குத் தெரியாத கற்பாறைகளில் மோதாமலும், திடீரென்று உண்டாகும் புயல்களுக்கு இரையாகாமலும், விரைந்துசெல்லும் கப்பல்களிலேறி மற்றக் கப்பல்களைக் கொள்ளையிடும் கடற்கொள்ளைக்காரர்களிடம் அகப்படாமலும் தன்னுடைய கப்பலைக் கப்பற்றலைவன் மிகவும் ஜாக்கிரதையாகச் செலுத்திக்கொண்டுபோய்த் துறைமுகத்திற் சேர்க்கிறான். அப்படியே அநேக கோடி ஜனங்களும் பலவகைத் திரவியங்களும் நிரம்பிய இத்தேசமாகிய பெருங்கப்பலைத் துரைத்தனத்தாரென்னும் கப்பற்றலைவர்கள், இத்தேசத்திற்குள்ளேயே ஒருவருக்குந் தெரியாமல் ஒளித்துக்கொண்டு வசிக்கும் பகைவரென்னும் கற்பாறையில் மோதாமலும், திடீரென்று உண்டாகும் பஞ்சம், நோய் என்னும் புயலுக்கு இரையாகாமலும், இத்தேசத்தைக் கொள்ளையிட ஆசைவைக்கும் அன்னிய நாட்டாரென்னும் கொள்ளைக்காரர்களிடம் அகப்படாமலும், நல்லவழியிற் செலுத்தி ஜனங்களுடைய சௌக்கியம் என்கிற துறைமுகத்திற் சேர்க்கிறார்கள்.

“நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்.” (புறநானூறு.)

## 3.—துரைத்தனத்தார் செய்யும் நன்மைகள்.

**கிராமத்தின் தேவைகளும் தேசத்தின் தேவைகளும்— கல்விப்பயிற்சி—பயிர்த்தொழிலுக்கு சாதனங்கள்—ஊர்ச் சண்டைகளும் அவற்றைத் தீர்க்கும் உபாயங்களும்—ஊர்க் காவலும் கொடியவர்களைக் கண்டிப்பதும்—சீட்டுத்தூக்கி வேலை—துரைத்தன தருமங்கள்—ஆங்கில அரசாட்சியின் நன்மைகள்—துரைத்தன முறை.**

மனிதர்களுக்கு ஆரசாட்சி இன்றியமையாததென்றும், அஃது இல்லையாயின், உயிர்ச்சேதம், பொருள் நஷ்டம், கலகம், சண்டை முதலான கஷ்டங்கள் மிகுதியாக நேரிடுமென்றும், தேசம் கெட்டுப்போமென்றும், நாகரிகத்தின் பெருக்கத்திற்குத் துரைத்தனமே முதற் காரணமென்றும் ஒருவாறு குறிப்பித்திருக்கிறோம். இப்பொழுது நம் துரைத்தனத்தாராகிய ஆங்கிலேயர்கள் நம்முடைய இன்ன கஷ்டங்களைப் போக்குகிறார்களென்றும் இன்ன குறைகளை இன்னவிதமாகத் தீர்த்துவைக்கிறார்களென்றும் விசாரித்தல் அவசியமே. பல குடித்தனங்கள் சேர்ந்து கிராமமாகிறதென்றும், கிராமங்கள் பல சேர்ந்து தேசமாகிறதென்றும் முன்னமே சொன்னோம். ஆகையால், கிராமவாஸிகளின் பொதுவான தேவைகளையும் கஷ்டங்களையும் தெரிந்துகொண்டால், இத்தேசத்தின் தேவைகளையும் கஷ்டங்களையும் அறிந்துகொண்டதுபோலாகும். கிராமவாஸிகளின் நிலைமையே



அரசாட்சியின் சிறப்பைக் கண்ணாடிபோலக் காண்பிக்கிறது. பட்டணத்து ஜனங்களைப்போலவே கிராமவாஸிகளும், கல்வி, செல்வம், நாகரிகம் முதலியவற்றில் விருத்தியடைந்து திருப்தியையும், அமைதியையும் பெற்று ராஜவிசுவாஸம் பாராட்டி வந்தால்தான் துரைத்தனமானது நல்ல நிலைமையிலிருக்கிறதென்று சொல்லலாம். ஆகையால் நத்தம் செழிக்க நகரம் செழிக்கும். நகரம் செழிக்கத் தேசம் செழிக்கும். தேசம் செழிக்கத் துரைத்தனம் செழிக்கும்.

கிராமவாஸிகளுக்கு வேண்டிய பொதுவான நன்மை
களில் முதன்மையானது கல்விப்பயிற்சி. சிறுவர்க
ளுக்குக் கல்வியையும் நல்லொழுக்கத்தையும் புகட்டு
வது மூத்தோர் கடமை. ஆனதுபற்றியே ஒவ்வொரு
கிராமத்திலும் பெரியவர்களால் ஏற்பட்டுள்ள வித்தியா
சாலையில், ஆசிரியரிடம் கிராமச் சிறுவர்கள் படிக்கவும்,
எழுதவும் கணக்குப்போடவும் கற்றுக்கொள்ளுகிறார்
கள். இவ்விதமான படிப்பு யாவருக்கும் இன்றியமை
யாதது. சிறுவர்களை அன்னமிட்டுக் காப்பாற்றி வருவ
தோடு படிப்பில் தேர்ச்சியடையும்படி செய்வதும் பிதா
வின் கடமை. சிறுவர்கள் தங்கள் வீட்டிலிருந்து
தனியாகப் படிக்காமல், கிராமத்தில் உள்ள பாடசாலை
யில் மற்றச் சிறுவர்களோடு கலந்து ஆசிரியரிடம் கற்
றுக்கொண்டால் படிப்பு சீக்கிரம் வரும். கிராமமென்றி
ருந்தால் பள்ளிக்கூடமில்லாமலிராது. அவ்வாறு பள்
ளிக்கூட மிருப்பது அதிலுள்ள பிள்ளைகள் போடும்

சத்தத்தால் ஒரூரிற் புதிதாகப் பிரவேசிப்பவனுக்கு விளங்கும்.

கிராமத்திலுள்ளவர்களுக்கு முக்கியமான தொழில் நிலத்தைப் பண்படுத்திப் பயிரிடுதல்; நிலத்தைக் கவனித்து பார்ப்போனுக்கு வருஷம் முழுவதும் ஏதாவது வேலை இருந்துகொண்டேயிருக்கும். சரியான காலங்களிற் குழிவெட்டி, நிலத்தைச் சமன்செய்து, நீரைத்



பெஜவாடா கால்வாய்கள்.

தேக்கி, உழுது, நாற்று நட்டு, களை பிடுங்கி, மிருகங்களும் பக்ஷிகளும் பயிரைத் தீண்டாமற் பாதுகாத்து, பக்குவகாலத்தில் அறுப்பறுத்துக் கண்டுமுதலை வீடு கொண்டுவந்து சேர்க்கவேண்டும். மேலும், கிராமவாஸிக



ளனைவரும் சேர்ந்து ஆறு, குளம், ஏரி முதலியவற்றின் கரைகளைப் பலப்படுத்தி, நீர் பாயும் கால்வாய்களைச் சரிவர வருஷந்தோறும் வெட்டிக் கண்ணிகளைச் செப்பனிட்டு வைத்துக்கொள்ளவேண்டும். இல்லாவிடின் நிலங்கள் மேடிட்டுப்போம்; அப்பொழுது ஜலம் சரியாகப் பாயாமையால் அவற்றின் செழிப்பு குன்றிவிடும். ஆகையால் எல்லாருடைய நிலங்களிலும் ஜலம் சரிவரப் பாயும்படி செய்வது கிராமத்தில் ஒரு முக்கியமான வேலை. ஜலக்குறைவுள்ள காலங்களில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் நிலங்களில் ஜலத்தைப் பாய்ச்சிவிட வேண்டுமென்ற ஆசையால், ஒருவரோடொருவர் சண்டைபோட்டுக் கொள்வார்கள். இச்சண்டைகளில்லாமல், ஜலத்தைக் கட்டி அளந்துவிடுவதற்காக, கிராமப் பொதுவில் நீராணிக்காரனென்ற ஒரு வேலைக்காரனை ஏற்படுத்துவதுண்டு. இவ்விதமான ஸ்தானங்களை அமைத்துக்கொள்வது ஜனங்களுக்கு அவசியமாகும்.

கிராமத்திலுள்ளோர் நீர்ச்சண்டையோடு நில்லார். அநேக ஜனங்கள் சேர்ந்துவாழும் நிலைமையில், தங்கள் கடமைகளும் பாத்தியங்களும் தெரியாமையினாலோ, அல்லது தெரிந்தே பிறருடைய பாத்தியதைகளைத் தாங்களே அனுபவிக்கவேண்டுமென்ற கெட்ட எண்ணத்தினாலோ, அவர்களுக்குள் அடிக்கடி விவாதங்களேற்படுவதை நாம் பார்க்கிறோம். நீர்ச்சண்டை, பொருட்சண்டை, மதச்சண்டை, தாயாதிச்சண்டை, வியாபாரச்சண்டை எனச் சண்டைகள் பலவிதமாக

இருக்கின்றன. இவற்றை எளிதாகத் தீர்ப்பதற்கு ஏற்பாடு செய்யாவிடின் உலகவாழ்க்கையே முடியாத காரியம் ஆகும். கொடியவர்களை அடக்கி நல்லவர்களைக் காப்பதற்கும், பலஹீனர்களின் பாத்தியதைகளை நிலைநிறுத்துவதற்கும் தகுந்த ஏற்பாடுகளில்லாவிட்டால் சண்டைகள் மிகுதியாகி, பலமுள்ளோர் செய்யும் தீமைகளுக்குப் பலமற்றவர்கள் இரையாவார்கள். ஆனது பற்றியே, கிராமத்தில் நடக்கும் சண்டைகளைத் தீர்ப்பதற்காக அவ்விடத்தில் செல்வாக்குள்ள நாலைந்து மனிதர்களைக் கிராமவாசிகள், **பஞ்சாயத்தாராக** நியமித்துக்கொள்ளுகிறார்கள். பஞ்சாயத்தார்கள் கிராமவாசிகளாக இருத்தலால் ஊர்வழக்கங்களை நன்றாகத் தெரிந்துகொண்டு கிராமச்சண்டைகளைத் தாமதமின்றித் தீர்த்துவைக்கிறார்கள்.

கிராமத்தின் அமைதி கிராமத்தில் நடக்கும் சண்டைகளாலும், வெளியிலிருந்துவரும் சில தீங்குகளாலும் கெட்டுப்போகிறது. கிராமவாசிகளை அடிக்கடி துன்பப்படுத்திப் பயப்படும்படி செய்பவர்கள் பிறருடைய பொருளைத் தம்முடையதாக நினைக்கிற கொள்ளைக்காரர்கள்; கொள்ளையிடுவதையே தங்கள் ஜீவனோபாயமாகக்கொண்ட பல ஜாதியார்கள் இத்தேசத்தில் வசிக்கிறார்கள். சில திருடர்கள் பிறரறியாமல் இரவிற் கன்னமிட்டு நுழைநரிபோல் வீட்டுக்குட்புகுந்து நகைகள், பாத்திரங்கள், வஸ்திரங்கள் முதலியவற்றை எடுத்துக்கொண்டு ஓடிவிடுகிறார்கள். வேறு சிலர் வெளிப்



படையாகத் தீவர்த்திகள் போட்டுக்கொண்டு திரள் திரளாகக் கிராமத்திற் பிரவேசித்துச் செல்வவான்களுடைய வீடுகளிற்புகுந்து ஆங்குள்ளோர்களைத் தூணிற் கட்டிவைத்து, நகை நாணயங்களைக் கொடுக்கும்படி செய்து, ஒருவரும் நெருங்காமல் கவண் சுழற்றிப் பொழுது விடியுமுன் ஓடிவிடுவார்கள். தென்னிந்தியாவில் சில ஜில்லாக்களில் மாடுபிடிப்பதில் தேர்ந்த சிலவகைத் திருடர்களும் இருக்கிறார்கள். இவ்விதமான பாதகர்களுக்குத் தப்பிக் கிராமத்திலுள்ளோர் பிழைக்கவேண்டியிருத்தலால், திருடர்களுடைய இயற்கை தெரிந்த காவற்கார னொருவனைக் கிராமவாசிகள் நியமித்துக்கொள்ளுகிறார்கள். திருடர்கள் அணுகாமலும், கிராமத்தின் எல்லைகளைப் பகைவர்கள் தீண்டாமலும், ஒருவருடைய நிலங்களின் கரைகளை மற்றவர்கள் தள்ளிப்போடாமலும், பயிர் செழித்திருக்குங் காலத்தில் ஆடுமாடுகள் பயிரை யழிக்காமலும், இவன் கவனித்துக்கொள்ளுகிறான். **பெல்லாரி, அனந்தப்பூர்** முதலிய சில ஜில்லாக்களில் ஒவ்வொரு கிராமத்துக்கும் வெளியே கோட்டைபோன்ற சுவரெழுப்பி, நாற்புறமும் சப்பாத்தி முதலிய முட்செடிகளை வளர்த்துத் தினந்தோறும் இரவு எட்டுமணிக்குமேல் கோட்டை வாயிலை மூடிவிடுகிறார்கள்.

காவற்காரனை நியமித்துக்கொள்வதுபோலவே, இன்னும் அநேக சௌகரியங்களைக் கிராமவாசிகள் பொதுவில் செய்துகொள்ளுகிறார்கள். ஒரு கிராமத்திலிருந்து

மற்றொரு கிராமத்துக்குச் சமாசாரம் அனுப்புவதற்காக, பொதுவில் சீட்டுத்தூக்கி என்ற ஒருவனை ஏற்படுத்திக்கொள்ளுகிறார்கள். ஒவ்வொருவரும் வெவ்வேறு தூதர்களை வைத்துக்கொள்வதைக் காட்டிலும் யாவரும் சேர்ந்து கிராமச்சேவக னொருவனைப் பொதுவில் வைத்துக்கொண்டு சமாசார ப்ரசுரம் செய்வது எவ்வளவு எளிதான காரியம்! நாகரிகம் எங்கும் பரவி வியாபாரம் மேலிட்டு, சமாசாரங்களை அனுப்புவதற்கு சௌகரியமான பல வழிகளேற்பட்டிருக்கும் இக்காலத்தில் வசிப்போர்களுக்கு, இச்சாதனங்களில்லாத முற்காலத்தில் மனிதர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார்களென்று தெரிவிப்பது அவசியமே. குறைந்த கூலிக்கு அதிக தூரம் செல்லும் உபாயங்கள் இல்லாமையாலும், திருட்டுப்பயம் மிகுந்திருந்தமையாலும், மனிதர்கள் அச்சமின்றி யாத்திரை செய்யத்தக்க ராஜபாட்டைகள் மிகக் குறைவாக இருந்தமையாலும், சமாசார ப்ரசுரம் முற்காலத்தில் மிகவும் சிரமசாத்தியமாக இருந்தது.

மேற்சொல்லிய விஷயங்களெல்லாம் கிராமவாஸிகளின் தேவைகளைப் பொதுவாகத் தெரிவிக்கின்றன. தேசத்தின் தேவைகளும் இத்தன்மையனவே. 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு பருக்கை பதம்' என்றபடி இத்தேசத்தின் குறைகளைப் பெரும்பாலும் கிராமத்தின் நிலைமையிலிருந்தே தெரிந்துகொள்ளலாம். எவ்விதமாகக் கிராமத்திலுள்ளோர் தங்களுடைய சிறுவர்களைப்



படிப்பிக்கவும் பொருள்களைக் காக்கவும், சண்டைகளைத் தீர்க்கவும், சமாசாரங்களை யனுப்பவும், நிலத்தைப் பண்படுத்திப் பயிரிடவும் வேண்டிய ஏற்பாடுகளைத் தேடிக்கொள்ளுகிறார்களோ அவ்விதமாகவே அநேக கோடி ஜனங்களடங்கிய இத்தேசத்திற்கு வேண்டிய நன்மைகளைத் துரைத்தனத்தார் செய்துவருகிறார்கள். குடிகளின் குறைகளைப் போக்கி, கல்விப்பயிற்சிக்கு வேண்டிய சாதனங்களை அமைத்து, திருட்டு, பொய், சூது, கொலை முதலிய குற்றங்கள் செய்யும் குற்றவாளிகளைக் கண்டித்து, அயல் தேசத்தார்கள் இத்தேசத்தைக் கைப்பற்றாமற் காத்து, ஜனங்களுடைய விவாதங்களைத் தீர்த்து, சமாசாரங்களை மிக விரைவாகப் பரவும்படி செய்து, அநேக விதிகளை ஏற்படுத்தி, எவ்விடத்திலும் சாந்தம், நல்லொழுக்கம், திருப்தி, செழிப்பு முதலிய செங்கோற் சின்னங்கள் இருக்கும்படி செய்கிறார்கள். கிராமத்திலுள்ள பள்ளிக்கூடங்களைப்போல் வித்தியாரம்பத்துக்குப் போதுமான சிறு பள்ளிக்கூடங்கள் பலவற்றைத் துரைத்தனத்தார் ஏற்படுத்துவதன்றி மேற்படிப்புக்குவேண்டிய பெரிய கலாசாலைகளையும் ஸ்தாபித்து, ஜனங்களாலேயே நடத்தப்படும் வித்தியாசாலைகளுக்கு அப்பொழுது அப்பொழுது பொருளுதவியும் செய்துவருகிறார்கள். நீர்ப்பாய்ச்சலுக்கு உபயோகமான கால்வாய்கள் வெட்டப்பட்டும், ஏரி, குளங்கள் முதலிய நீர் நிலைகளின் கரைகள் பலப்படுத்தப்பட்டும், ஆறுகளின் ஜலம் சிறிதே

னும் வீண்போகாமல் அணைக்கட்டுகளினால் தடுக்கப்பட்டுப் பக்கத்திலுள்ள நிலங்களிற் பாய்ச்சப்பட்டும் வருகின்றன. இவ்விதமாகத் துரைத்தனத்தார் கிராமத்து நீராணிக்காரன் வேலையையும் செய்துவருகிறார்கள். சேனைகளையும், ஊர்க்காவற் சேவகர்களையும் ஏற்படுத்திக் கிராமத்துக் காவற்காரனைப்போலவும் நம்மைப் பாதுகாக்கிறார்கள். அன்றியும் குடிகளுடைய சண்டைகளைத் தீர்க்கவும், குறைகளை நீக்கவும் நியாயஸ்தலங்கள் ஏற்பட்டுள்ளன. பிரயாணிகள் சிறிதும் திருட்டுப் பயமில்லாமல், செல்லும்படியான வழிநடைகளும், வணிகர்களும் மற்றவர்களும் அதிகப் பணச்செலவில்லாமல், நெடுந்தூரத்துக்கு அதிவிரைவிற் போகும்படியான இருப்புப்பாதைகளும், சமாசாரங்களை அதிக சுலபமாக அனுப்புவதற்குரிய தபாலும் தந்தியும், ஆறுகளைக் கடந்து செல்லத்தக்க பாலங்களும், வழிப்போக்கர்கள் அங்கங்கே தங்கியிருப்பதற்குரிய இடங்களும் அமைத்திருப்பது துரைத்தனத்தார் நமக்குச் செய்திருக்கும் சிறந்த உதவிகளாகும்.

அவர்களிடமிருந்து நாம் அடையும் நன்மைகள் இன்னும் பல உள. தனவான்கள் ஏழைகளைக் காப்பதுபோலவும், பலமுள்ளவர்கள் பலஹீனர்களை ரக்ஷிப்பதுபோலவும், நோயாளிகளை துரைத்தனத்தார் காக்கிறார்கள். பெரிய பட்டணங்களில் மாத்திரமேயல்லாமல் சிறிய நகரங்களிலும் தரும வைத்தியசாலைகள் ஏற்படுத்தப்பட்டு, பிணியுள்ள ஆண்பாலார், பெண்பாலார்



என்ற இருதிறத்தாருக்கும் அவரவர் வயதுக்கும் வியாதிக்கும் ஒத்தபடி மருந்துகள் கொடுக்கப்பட்டும், காயம் அடைந்தவர்களுக்குச் சஸ்திரசிகித்ஸை செய்யப்பட்டும் வருகின்றன. பிறரைத் துன்பஞ்செய்யும் பைத்தியக்காரர்களுக்கும், குஷ்டரோகம், அம்மை, வாந்திபேதி முதலிய தொத்து வியாதியுள்ளவர்களுக்கும் தனித்தனி வைத்தியசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. ஜனங்களுடைய வியாதிகளைத் தீர்ப்பதுபோலவே குதிரை, நாய், ஆடு, மாடு முதலிய ஜந்துக்களுடைய நோய்களைப் போக்குவதற்கும் தக்க ஔஷதசாலைகளை அமைத்திருக்கிறார்கள். இவ்விதமாகப் பிராணிகளுக்கும் மனிதர்களுக்கும் ஒரே மாதிரியாகத் தரும வைத்தியசாலைகளை முன்பு உண்டாக்கினவர் ஏறக்குறைய இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் இத்தேசத்தின் வடபுறத்தில் இருந்து பௌத்தமதத்தைப் பரவச்செய்து தரும பரிபாலனம் செய்துவந்த அசோகரென்னும் சக்கரவர்த்தியென்று நாம் சரித்திரங்களிற் படிக்கிறோம். அவருக்குப் பிறகு இப்பொழுதுதான் ஆங்கில அரசாட்சியில் இவ்விதமான நன்மைகள் கிடைத்திருக்கின்றன. வியாபாரம் ஒழுங்காக நடைபெறுவதற்கு இன்றியமையாத பலவிதமான அளவைகளை ஏற்படுத்துபவரும் துரைத்தனத்தாரே.

இத்தேசத்துக்கும் வேறு தேசத்துக்கும் விவாதங்கள் நேரிட்டால், ஜனங்களுக்கு ஒருவிதமான பொருள் நஷ்டம் உண்டாகாமலும், தேசத்துக் கௌரவம் கெட்டுப்

போகாமலும் பார்த்துக்கொள்ளுகிறார்கள். வியாபாரிகள் பொறாமையினால் ஒருவரோடொருவர் சண்டைபோட்டுக்கொள்வதுபோலவும், கிராமவாஸிகள் பொழினிமித்தமாக வாதாடுவதுபோலவும், மரியாதைக்குறைவு ஏற்பட்டால் ஜனங்கள் விரோதித்துக்கொள்ளுவதுபோலவும் ஒரு துரைத்தனத்தார் வேறொரு துரைத்தனத்தாருடன், வியாபார நிமித்தமாகவும், ராஜ்ய எல்லையைப் பற்றியும், ஒருவர்க்கொருவர் செய்துகொள்ளவேண்டிய மரியாதையின் பொருட்டும் போர்புரிவதுண்டு. ஜனங்களுக்குள் விவாதமிருந்தால் நியாயாதிகாரிகள் தீர்ப்பார்கள். துரைத்தனத்தார்களுடைய சண்டைகளை யார் விலக்க முடியும்? ஆதலால் அவர்களே ஒருவகையாக சமாதானப்படுத்திக்கொண்டு பாத்தியங்களை ஸ்தாபித்துக்கொள்ளவேண்டும். இவ்வாறு சமாதானம் செய்துகொள்ளாவிடின் ஜனங்களுக்குப் பலவிதமான கெடுதிகள் நேரிடும். துரைத்தனத்தாருக்குத் தயையும், பொறுமையும், முன் யோசனையுமிருந்தால் சமாதானம் ஏற்படும். இந்த உத்தமமான குணங்கள் யாவும் நம்முடைய துரைத்தனத்தாரிடம் நிரம்பியிருக்கின்றன என்பதற்கு இத்தேசத்திற் சென்ற நூறு வருஷங்களாக இருக்கும் அமைதியே போதுமான சாக்ஷி. அன்றியும், இத்தேசத்துப் பாத்தியதைகள் விட்டுப்போகாமலும், வீண்சண்டைகளில்லாமலுமிருப்பதால் இந்தத் துரைத்தனத்துக்குக் கௌரவம் வரவர அதிகரித்து வருகிறது.



மேற்கூறிய பலவகையான நன்மைகளைச் செய்து, இமயகிரி முதல் கன்னியாகுமரிவரையில் வசிக்கும் ஜனங்களையும், மதம், ஜாதி, குலம், வர்ணம், செல்வம் முதலியவற்றை உத்தேசித்துப் பக்ஷபாதத்தைக் காட்டாமல் ஒரேவிதமாக நடத்தி ஆள்வது எவ்வளவு வியக்கத்தக்கது? மனத்தைக் கவருகிற ஒரு நாடகத்தில், சபையோர்களுடைய கண்ணுக்குத் தோன்றும் பதுமைகளை, ஒருவருக்கும் தெரியாமல் திரைக்குள் இருந்து ஸூத்திரதாரர்கள் திறமாக ஆட்டிவைப்பதுபோல், நமக்கு வேண்டிய காரியங்களைச் செய்து கொடுத்து வெளிப்படையாக நம்மை சந்தோஷப்படுத்தும் உத்தியோகஸ்தர்களை, துரைத்தனத்தார் தாங்கள் இருக்கும் இடத்தைக் காட்டிக்கொள்ளாமல் ஒழுங்கான வழிகளில் நடத்துகிறார்கள். இப்பொழுது நமக்கு ஏற்பட்டிருக்கும் ஸௌகரியங்களை ஒவ்வொன்றாக எடுத்துக்காட்டி அவற்றை விரிவாகச் சொல்லுதல் இனி அவசியமாகும்.

“முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்.” (திருக்குறள்.)

# 4.—துரைத்தனமும், பாலபோதமும்

பாலபோதத்தின் அவசியம்—பாலபோதமும் துரைத்தனத்தின் மேல்விசாரணையும்—துரைத்தனத்தின் உதவிப் பொருள்—இதைத் தீர்மானிக்கும் முறைகள்—இதனை உபயோகிக்கும் வழிகள்—ஆதாரப்படிப்பின் தற்கால நிலைமை—இப்பொழுது பாலபோதத்தில் செய்திருக்கும் சீர் திருத்தங்கள்—பாடசாலைகளை நடத்தும் தலைவர்கள்-பெண் கல்வி-இக்காலத்திய கல்விப் பெருக்கம்.

எந்தத் தொழிலுக்கும் படிப்பு அவசியமாக இருத்தலால், அது விஷயத்தில் துரைத்தனத்தார் செய்யும் உதவியைச் சிறந்ததாகவே கொள்ளவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும், சிறுவர்கள் எழுதவும், படிக்கவும், கணக்குப் போடவும் கற்றுக்கொள்வதற்குத் தக்க பால பாடசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. சிறுவர்கள் ஜாதிபேதமில்லாமல் ஒரேவிதமாக நடத்தப்பட்டு உபயோகமான ஆதாரப்படிப்பை உபாத்தியாயர்களிடமிருந்து கற்றுக்கொள்ளுகிறார்கள். அவர்கள் வயது வந்தபிறகு மேற்படிப்பை வருத்தமின்றி எளிதாகக் கற்றுக்கொள்வதற்கும், ஜீவனத்துக்காகத் தேடிக்கொள்ளும் வர்த்தகம், கைத்தொழில், உத்தியோகம் முதலியவற்றில் நன்றாக விளங்குவதற்கும், இந்த ஆதாரப் படிப்பே சிறந்த கருவியாக இருக்கிறது. எவ்வளவுக் கெவ்வளவு ஆதாரப் படிப்பு ஜனங்களுக்குள்



பரவி அவர்களை மேற்சொல்லிய தொழில்களுக்கு உபயோகமாகச் செய்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு நாகரிகமும் பெருகும், குடிகளும் மேன்மையடைவார்கள். ஜனங்களுக்குக் குணங்களமைவது, அவரவர்களுக்குச் சிறுவயதில் ஏற்படும் படிப்பையும், பழக்கத்தையும் பொறுத்திருக்கிறது. கெட்டகுணமுள்ளவனாக இருந்தாலும் ஒருவனைச் சிறுவயதில் முறையான படிப்பால் திருத்தி நல்ல குணவானாகச் செய்துவிடலாம். வயது வந்தபிறகு செய்வது கஷ்டம். சிறு செடியின் கோணலை நிமிர்த்துவது எவ்வளவு எளிதாக இருக்கிறது! ஆதலால் துரைத்தனத்தார் பாலபோத விஷயத்தை நன்றாகக் கவனித்துத் தக்க ஏற்பாடுகள் செய்துவருகிறார்கள்.

பட்டணங்களிலும், கிராமங்களிலும் ஏற்பட்டுள்ள வித்தியாசாலைகளில், ஆசிரியர்கள் சிறுவர்களுக்கு ஆதாரப்படிப்பை ஒழுங்காகக் கற்பித்து வருகிறார்களா என்பதை அடிக்கடி கவனிப்பதற்கும் நன்றாகக் கற்பிக்கும் முறைகளை அவர்களுக்குக் காட்டுவதற்கும் பள்ளிக்கூடங்களை நடத்துகிறவர்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்கிறார்களாவென்று தெரிந்துகொள்ளுவதற்கும் இன்ஸ்பெக்டர் (Inspector) என்று சொல்லும் மேல் விசாரணைக்காரர்களையும், ஸூபர்வைஸர் (Supervisor) என்று சொல்லும் மேற்பார்ப்போர்களையும் துரைத்தனத்தார் நியமித்திருக்கிறார்கள். மேற்சொல்லிய ஸூபர்வைஸர்கள் ஆதாரப் படிப்புக்கு ஏற்

பட்டிருக்கும் பள்ளிக்கூடங்களைத் திடீரென்று அடிக்கடி போய்ப் பார்த்து, அவற்றின் வரவு செலவு கணக்குகளையும் பிள்ளைகளின் நாமாவலிப் புஸ்தகங்களையும் பரிசோதனை செய்து, திறமையான போதனாவழிகளையும், உபாத்தியாயர்களுக்குக் காண்பிக்கிறார்கள். இன்ஸ்பெக்டர்களும் வருஷத்திற்கு ஒருமுறை அல்லது இரண்டுமுறை இவ்விதமாகவே வித்தியாசாலைகளைப் பரிசோதிக்கிறார்கள். ஒரு பாடசாலையின் சரித்திரத்திலிருந்து, இவ்விதமாகப் பரிசோதனை நடக்கும் நாட்கள் முக்கியமான நாட்களாக இருந்தனவென்று தெரிந்துகொள்ளலாம். அத்தினங்களில் பள்ளிக்கூடங்களில் நடக்கும் ஆரவாரங்களும், ஆசிரியர்களின் ஊக்கமும், மாணாக்கர்களின் உற்சாகமும், கிராமத்தார்களின் சந்தோஷமும் சிறுவர்களுக்குத் தெரிந்திருக்கலாம். மேலதிகாரிகள் வித்தியாசாலைகளைப் பரீக்ஷை செய்து உடனே எழுதும் அபிப்பிராயங்களால் அவற்றின் நிலைமைகள் விளங்கும்.

இவ்விதமான மேல்விசாரணையோடு நில்லாமல் அந்த அந்தப் பாடசாலையின் நிலைமைக்குத் தக்கபடி துரைத்தனத்தார் பொருளுதவியும் செய்து வருகிறார்கள். ஒரு வித்தியாசாலையை வைத்து நடத்துவது மிகவும் சிரமமான காரியம். உபாத்தியாயர்களுக்குச் சம்பளமளிக்கவும், பள்ளிக்கூடத்துக்குத் தகுந்த கட்டிடமமைக்கவும், நாற்காலிகள், உட்காரும் பலகைகள், மேஜைகள் முதலியன செய்யவும் மிகுந்த பணம் செல



வாகும். இச்செலவை, மாணாக்கர்களிடமிருந்து கிடைக்கும் சம்பளத்தைக் கொண்டாவது, பள்ளிக்கூடத் தலைவரிடமிருந்து கிடைக்கும் நன்கொடையைக் கொண்டாவது செய்துகொள்ளவேண்டும். ஆனால், மாணாக்கர்கள் கொடுக்கும் சம்பளம் மிகக் குறைவாக உள்ளது. அவர்களிடம் அதிகம் எதிர்ப்பார்ப்பது முடியாத காரியம். மனிதர்கள் பெரும்பாலும் ஏழைகளாக இருப்பதாலும், அவர்களுக்கு இயற்கையின் ஆதாரப்படிப்பின் நன்மை தெரியாமையாலும், மாணாக்கர்களின் சம்பளங்களை வரவரக் குறைத்தே இப்படிப்பைப் பரவச் செய்யவேண்டும். ஆதலால், மாணாக்கர்களின் சம்பளத்தைக்கொண்டே பாடசாலைகளை நடத்துவது சாத்தியமன்று. அன்றியும், அவற்றை வைத்து நடத்தி வரும் யஜமானர்களும் வேண்டிய பொருளுதவி செய்து கல்வியைப் பரவச்செய்யும் பிரபலமான சிந்தையுடையவர்களாகப் பெரும்பாலும் இருப்பதில்லை. அநேகமாகக் கிராமப் பள்ளிக்கூடங்களெல்லாம் அவற்றின் ஆசிரியர்களாலேயே பரிபாலிக்கப்படுகின்றன. இவர்களிடம் வறுமையே மிகுதியாகக் குடிகொண்டிருக்கும். இவர்கள் ஜீவிக்கும் தொழிலே சீவனோபாயமாகக்கொண்டவர்கள். இத்தொழில் லாபகரமன்றென்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். பள்ளிக்கூடம் வைத்து ஸ்ரீமான் ஆவது, இவ்வுலகில் அசாத்தியமான விஷயம்; மனிதப் பூண்டுக்குச் சிறுவர்களாகிய புஷ்பங்கள் கல்வியாலும், ஒழுக்கத்தாலும் பரிமளம் அளிக்

கும்படி செய்கிற ஆசிரியரின் வேலையானது எல்லாத் தொழில்களிலும் சிறந்ததாக இருந்தாலும், அதனால் உண்டாகும் வருமானத்தைப் பார்க்குங்கால், மிகவும் தாழ்ந்ததென்றே தோன்றும். ஆகையால், பள்ளிக்கூடம் வைப்பதில் நஷ்டமிருக்கக் கூடாதென்று துரைத்தனத்தார் ஒவ்வொரு பாடசாலைக்கும் உதவிப்பொருள் (Grant-in-aid) அளித்து வருகிறார்கள். இவ்வுதவியைப் பெறும் பாடசாலைகள் அனுசரிக்கவேண்டிய விதிகள் சில உண்டு. இவ்வித உதவியைப் பெறாத பள்ளிக்கூடங்களும் பின்பு துரைத்தனத்தாருடைய உதவியைப் பெறும்பொருட்டு அவர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளை அநுஷ்டித்து வருகின்றன.

மேற்சொல்லிய உதவியானது, உபாத்தியாயர்களுக்குத் தகுந்த சம்பளமளிக்கவும், பள்ளிக்கூடங்கள் கட்டவும், நாற்காலிகள், மேஜைகள், பலகைகள், புஸ்தகங்கள் முதலியவற்றை வாங்கவும், ஏழைப் பிள்ளைகளைச் சம்பளமின்றிப் படிப்பிக்கவும் உபயோகப்படுகிறது. சில வருஷங்களுக்கு முன்வரையில் இத்தேசத்திலும், இங்கிலாந்திலும் உபாத்தியாயர்களுடைய சம்பளத்திற்காகத் துரைத்தனத்தார் செய்துவந்த உதவியானது வருஷந்தோறும் மேல்விசாரணைக்காரர்கள் மாணாக்கர்களைப் பரீக்ஷித்துச் செய்யும் முடிவுக்குத் தக்கபடியிருந்தது. இதனால், உபாத்தியாயர்கள், பரீக்ஷை நெருங்குங்காலத்தில் மட்டும் மாணாக்கர்களுக்கு அவசியமானவற்றை மிக்க ஊக்கத்துடன் போதித்துப் பரீ



க்ஷைகளில் அவர்கள் நன்றாக விடை பகரும்படி பழக்கி வந்தார்களேயன்றி, நற்குணங்களையும் நல்ல பழக்கத்தையும் எப்போதும் கல்விப்பயிற்சி செய்துவருதலையும் கருதவில்லை. அன்றியும், பரீக்ஷையின் முடிவு பரீக்ஷகர்களுடைய குணவிசேஷத்துக்கும் மாணாக்கர்களுடைய யோக்கியதைக்கும் தக்கபடி வருஷந்தோறும் மாறிக்கொண்டே வருமாகையால், துரைத்தனத்தாருடைய உதவியும் மாறிக்கொண்டே வந்தது. இம்மாறுபாட்டால், உபாத்தியாயர்கள், கல்வி கற்பிக்கும் விஷயத்தில் நிலையான முறையொன்றையும் அனுசரிக்கக்கூடவில்லை. ஆகையால் இப்போது வேறோர் ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். கலாசாலையிலிருக்கும் மாணாக்கர்களின் தொகை, கலாசாலைக் கட்டிடம், உபாத்தியாயர்களுடைய யோக்கியதைகள், மாணாக்கர்களை அவர்கள் கற்பிக்கும் முறை, வரும்படி வகைகள், பள்ளிக்கூடம் இருக்கும் இடத்தின் நிலைமை முதலிய எல்லாவற்றையும் நன்றாகத் தெரிந்துகொண்டு, ஒரு வித்தியாசாலைக்கு வருஷந்தோறும் இவ்வளவு சாச்வதமான பொருளுதவி செய்வதென்று பல விதிகளை அமைத்திருக்கிறார்கள். மத்தியமாகாணம் முதலிய சில இடங்களில் மட்டும் புதிய ஏற்பாட்டையும் பழைய ஏற்பாட்டையும் கலந்த சில விதிகளை அனுசரித்துப் பாடசாலைகளுக்கு உதவிசெய்து வருகிறார்கள்.

சென்னையில் வழங்கிவரும் விதிகளின்படி, ஆசிரியர்களுக்குச் சம்பளம் அளிக்கவும், உபாத்திமைத்

தொழிலைப் பயின்றுவருபவர்களுக்கு உபகாரச்சம்பளம் கொடுக்கவும், பாடசாலைக்குக் கட்டிடங்கள், மாணுக்கர்களுக்கு விடுதிகள், போஜனசாலைகள் முதலியவற்றைக் கட்டவும், புஸ்தகங்கள், கற்பலகைகள், உட்காரும் பலகைகள், மேஜைகள், நாற்காலிகள், ரஸாயன பதார்த்தங்கள், தையல் முதலிய தொழிற் பாடங்களுக்கு வேண்டிய கருவிகள் முதலியவற்றை வாங்கவும், புதிதாக ஆசிரிய பீடங்களை ஏற்படுத்தவும், மாணுக்கர்களுக்குப் பொருளுதவி செய்யவும், விநோத சாலை, சிற்பசாலை, ரஸாயனசாலை முதலிய கல்விச் சாலைகளுக்காக நன்கொடை செய்பவர்களுக்கு ஊக்கம் அளிக்கவும் துரைத்தனத்தார் பொருளுதவி செய்கிறார்கள். ஒவ்வோர் உபாத்தியாயருக்கும் முப்பத்தாறு ரூபாயும், குறிப்பிட்ட தினங்களுக்குமேல், பள்ளிக்கூடத்துக்கு வரும் மாணுக்கர்களைக் கணக்கிட்டுத் தலைக்கு எட்டணு வீதமும் வருஷத்திற்கு ஒரு முறை வெகுமதி அளிக்கப்படுகின்றது. மாணுக்கர்களைப் போதிப்பதிலும், தேகப்பயிற்சி, சித்திரம் எழுதுதல் முதலியவற்றைப் பழக்குவதிலும் திறமையுள்ள பாடசாலைகளுக்கு மேற்குறித்த தொகைக்குக் காற்பங்கு அதிகமாக வெகுமதி யளிக்கவும் உபயோகமற்ற பாடசாலைகளுக்குக் காற்பங்கு குறைத்துக் கொடுக்கவும் மேல்விசாரணைக்காரர்கள் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். கட்டிடச் செலவில் மூன்றில் ஒருபங்கும், சாமான்களுடைய விலையில் அரைப்பங்கும், வித்தியா



சாலையின் அபிவிருத்தியைக் கருதிக் கனவான்கள் அளிக்கும் நன்கொடையிற் பாதிக்கு மேற்படாத தொகையும் உதவிசெய்யப்படுகின்றன. இவ்விதமாகப் பொருளுதவி செய்வதல்லாமல், எந்த உத்தேசத்துக்காக வித்தியாசாலை ஏற்பட்டதோ, அந்த உத்தேசம் நன்ருக நிறைவேறுகின்றதா வென்பதையும் கவனிக்கிறார்கள். பொருளுதவியைப்பற்றிய விதிகளெல்லாம் மற்ற மாகாணங்களிலும், இம்மாதிரியே மாறுபாடு அடைந்துகொண்டு வருகின்றன.

எவ்வளவோ உதவிகளைத் துரைத்தனத்தார் செய்து வந்தும், இத்தேசத்தில், படிப்பின் அபிவிருத்தி குறைவாகத்தான் இருக்கின்றது. 1901–ம் வருஷம் நடந்த ஜனசங்கியைக் கணக்கின்படி, ஆண்பாலார்களில் 1000–த்துக்கு 98–பேர்களும், பெண்பாலார்களில் 1000–த்துக்கு 7–பேர்களும், இத்தேசத்தில் படிக்கவும் எழுதவும் தெரிந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். ஏறக்குறைய 30–கோடி ஜனங்களடங்கிய இத்தேசத்தில் 1900–ம் வருஷத்தில் 1½–லக்ஷம் வித்தியாசாலைகள் இருந்தனவென்றும் மாணுக்கர்களின் தொகை 45–லக்ஷம் என்றும் தெரிகிறது. 1858–ம் வருஷத்தில், இரண்டு லக்ஷம் மாணுக்கர்களே 2000–துரைத்தனப் பாடசாலைகளிற் படித்துவந்தார்கள். சென்ற 50–வருஷங்களில் ஆதாரப் படிப்பானது வரவரப் பெருகிவந்தும், இன்னும் விரைவாகவும் விஸ்தாரமாகவும் அது பாவவேண்டுமென்பது துரைத்தனத்

தாரின் அளவற்ற ஆசை. ஆகையால் இப்பொழுது, இங்கிலாந்து, ஜர்மனி முதலிய தேசங்களிலிருப்பது போல இத்தேசத்திலும் ஆதாரப் படிப்பை எல்லாச் சிறுவர்களும் சம்பளமில்லாமல் அவசியம் கற்றுக் கொள்ளும்படி செய்யவேண்டுமென்று எண்ணியிருக்கிறார்கள். இதற்குப் போதுமான செல்வபலம் அவர்களுக்கு உண்டானவுடன் இப்படி நடக்குமென்பதிற் சிறிதேனும் சந்தேகமில்லை. இப்பொழுது பல மாகாணங்களிலும் படிப்பவர்கள் இவ்வளவின ரென்பது கீழே காட்டப்பட்டிருக்கிறது:—

| மாகாணம் | ஆயிரத்துக்கு எவ்வளவுபேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர் | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| பர்மா | 378 | 45 |
| திருவாங்கூர் | 215 | 31 |
| பரோடா | 163 | 8 |
| சென்னை | 119 | 9 |
| பம்பாய் | 116 | 9 |
| வங்காளம் | 104 | 5 |
| மைசூர் | 93 | 8 |
| பஞ்சாப் | 64 | 3 |
| ஹைதராபாத் | 55 | 3 |
| காச்மீரம் | 38 | 1 |



பொதுவாக ஜனங்களுக்குக் கல்வியின் உபயோகம் தெரிந்திருப்பதால் ஆதாரப் படிப்பின் நிலைமை கிராமங்களில் இருப்பதைக்காட்டிலும் பட்டணங்களில் திருப்திகரமாக இருக்கின்றது. அநேக கிராமங்களில் கையெழுத்துப் போடத் தெரிந்தவர்களே விசேஷமாக இரார். இத்தேசத்தில், கிராமவாஸிகளெல்லாம் பெரும்பாலும், பயிர்த்தொழிலையே ஜீவனோபாயமாக வைத்துக்கொண்டிருப்பதால், படிப்பைச் சிறிதும் கவனிப்பதில்லை. அவர்களுக்குப் பயிர்த்தொழிலோடு, படிப்பும் கலந்திருந்தால், தங்கள் நிலங்களைச் சிறந்த உபாயங்களாற் பயிரிட்டு விசேஷமான விளைபொருள்களை அடையவும், சுகாதார நல்வழிகளை அறிந்து தங்களுடைய வீடுகளையும், கிராமங்களையும் தொத்துநோய் பரவாமல் சுத்தமாக வைத்துக்கொள்ளவும், தங்கள் தேகத்தை நன்றாகக் கவனித்துக்கொள்ளவும், இருப்புப் பாதையின் உபயோகத்தைத் தெரிந்துகொள்ளவும், நாகரிகமான வழக்கங்களை அனுசரிக்கவும், நல்ல விஷயங்களிற் பணத்தைச் செலவிடவும் அனுகூலமாக இருக்கும். ஆயினும், இதுவரையில் வழங்கிவந்த பாலபோத முறையினால், சிறுவர்கள் எழுதவும், படிக்கவும் கற்றுக்கொண்டார்களே யல்லாமல், பிற்காலத்திற் கைக்கொள்ளவேண்டிய தொழில்களின் வழிகளைத் தெரிந்துகொள்ளவில்லை. ஆகையால் இப்போது கிராமப் பள்ளிக்கூடங்களில் படிக்கவும், எழுதவும், கணக்கிடவும் கற்றுக்கொடுப்பதல்லாமல், அந்த அந்த இடங்களுக்

குரிய மாவகைகள், மிருகவகைகள், விளைபொருள்கள் முதலியவற்றைப் பற்றியும், இத்தேசத்திற்குரிய கணக்கு வழக்குகள், கொள்ளல் கொடுத்தல் முதலிய விஷயங்களைப்பற்றியும், சுகாதாரம், ப்ரகிருதி சாஸ்திரம் இவற்றைப்பற்றியும் பொருட்பாடத்தாலும், சித்திரப்படங்கள் முதலிய கருவிகளாலும், சொல்லிக்கொடுக்கிறார்கள். சில சமயங்களில் மாணுக்கர்களை வெளியிடங்களுக்கு அழைத்துக்கொண்டுபோயும் வேண்டிய விஷயங்களைக் கற்பிக்கிறார்கள். தகுந்த தொழில் தெரிந்த ஆசிரியர்கள் மிகுதியாக இல்லாமையால், இவ்விதமான ஆதாரப் படிப்பைப் பெருகச்செய்வது, துரைத்தனத்தாருக்குக் கஷ்டமாக இருக்கின்றது. இப்பொழுது இத்தேசத்தில் முப்பது லக்ஷம் சிறுவர்கள் துரைத்தனப் பாடசாலைகளில் ஆதாரப் படிப்பைப் பயின்று வருகிறார்கள். இவர்களுக்குப் போதிப்பதற்கு அளவற்ற ஆசிரியர்கள் வேண்டும். ஒழுங்காகச் சம்பளம் கொடுத்தாலும் தொழிற்பயிற்சியுள்ளவர்கள் அதிகமாக அகப்படுவது அருமையாக இருக்கிறது.

ஆதாரப் படிப்புக்காக இராஜாங்கத்தாராலேயே ஸ்தாபிக்கப்பட்ட பள்ளிக்கூடங்கள் சிலவே. அநேக வித்தியாசாலைகள், நகர விசாரணைச் சங்கங்களாலும், ஜில்லா விசாரணைச் சங்கங்களாலும், மேற்றிசைப் படிப்பையும், நாகரிகத்தையும் முதல் முதல் இத்தேசத்திற் பரவச் செய்த கிறிஸ்தவப் பாதிரிகளாலும், கிறிஸ்தவச் சங்கங்களாலும், பொது ஜனங்களாலும், பொதுச் சங்கங்களாலும்



பரிபாலிக்கப்பட்டு வருகின்றன. வங்காளம், பர்மா முதலான இடங்களில் பொது ஜனங்களால் ஏற்படுத்தப்பட்ட பாடசாலைகளே அநேகம் உண்டு. பம்பாய் மாகாணத்தில் அநேகமாக நகர விசாரணைச் சங்கங்களாலும், ஜில்லா விசாரணைச் சங்கங்களாலுமே வித்தியாசாலைகள் நடத்தப்படுகின்றன. நம்முடைய மாகாணத்தில் இரண்டுவிதங்களும் இருக்கின்றன. துரைத்தனப் பள்ளிக்கூடங்களுக்கும் சங்கப் பள்ளிக்கூடங்களுக்கும் அதிக வித்தியாசமில்லை.

இவ்வாறு சிறுவர்களைப் படிப்பிப்பதோடு, ஆசிரியர்கள் உபாத்திமைத்தொழிலை நன்றாகக் கற்றுக்கொள்ளும்படியான பல கல்விச்சாலைகளையும் துரைத்தனத்தார் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இக்காலத்தில் மாணுக்கர்களைப் பிரியத்துடன் நடத்தவேண்டுமேயல்லாமல் தண்டப்பிரயோகத்தால் கற்பிக்கக்கூடாதென்பது விதி. முற்காலத்தில் 'அடியாத மாடு படியாது' என்ற கொள்கையைக்கொண்டு, உபாத்தியாயர்கள் சிறுவர்களைக் கைதிகள்போலவும், காட்டுமிருகங்கள்போலவும் நடத்தி, கோதண்டம், விலங்கு, பிரம்பு முதலிய ஸாதனங்களால் அடக்கி, வாய்ப்பாடு, கீழ்க்கணக்கு முதலியவற்றைச் சொல்லிக்கொடுத்து வந்தார்கள். ஆனால், இப்பொழுது வித்தியாசாலைகளில் சிறுவர்கள் மிக்க அன்பாக நடத்தப்பெற்று, படங்கள், சித்திரங்கள், விளையாட்டுக்கள், தேகப்பயிற்சி, பாட்டுக்கள், பொருட்பாடம், அப்பியாஸபாடம், களிமண்ணுருவங்கள்

செய்தல் முதலிய நல்லவழிகளால் சிறிதேனும் கஷ்ட
மின்றிக் கல்விப்பயிற்சி செய்விக்கப்படுகிறார்கள். பெண்
பாலார்களுக்கும் இவ்விதமாகவே பிரத்தியேகமான பள்
ளிக்கூடங்கள் ஏற்படுத்தி, எழுத்து, கணக்கு முத
லியவற்றைக் கற்பித்துக் குடும்பத்துக்கு மிகவும் பிர
யோசனமான தையல்வேலை, பாட்டு முதலியவற்றை
யும் சொல்லிக்கொடுக்கிறார்கள். ஆயினும், இந்நாட்டில்
பெண்பாலார்களின் படிப்பு பல காரணங்களால் பரவ
வில்லை. சில மனிதர்களுக்குப் பெண்கல்வியில் நம்
பிக்கையில்லை. நம்பிக்கை யிருந்தபோதிலும் பெண்
களை விவாகத்திற்குப்பிறகு பாடசாலைகளுக்கு அனுப்
பமாட்டார்கள். விவாகமும் சற்றேறக்குறைய பதி
னொரு வயதிற்குமுன் முடிந்துவிடுகின்றது. மகம்மதி
யர்கள், ராஜபுத்திரர்கள் முதலிய ஜாதியார்கள் அனு
சரித்துவரும் கோஷா முறைகளில் பெண்கள் வெளி
வருவதே அருமை. ஆதலால் அவர்களுக்குப் பள்ளிக்
கூடப் படிப்பிற்கு இடமேயில்லை. அன்றியும், ஆண்
பிள்ளைகளையே படிப்பிக்க முடியாதவர்களுக்கு, பெண்
பிள்ளைகளைப் படிப்பித்தல் எப்படி சாத்தியமாகும்?
பெண்கல்வியானது இந்நாட்டு ஸ்திரீகளுக்கு அலங்கார
மாகிய அமைதிக்கும் நாணத்திற்கும் நாசத்தை விளை
விக்குமென்றும் சில மனிதர்கள் நினைக்கிறார்கள். இக்
காரணங்களால் பெண்கல்வி சற்றேறக்குறைய ஒரே
நிலையிலேதான் காணப்படுகின்றது. இந்நாட்டில் விவா
கத்திற்குப்பிறகு, பெண்கள் வித்தியாசாலைக்குப் பெரும்



பாலும் போகாமையால், அவர்களுடைய வீடுகளுக்
குப் போய்ப் போதிக்கச் சில பாதிரிச் சங்கத்தாரும்
**நாஷனல் இண்டியன் அஸோஸியேஷன்** என்ற சங்கத்
தாரும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இவ்விதமான
ஏற்பாட்டைத் துரைத்தனத்தார் தாங்களே செய்யாவிடி
னும் இந்தச் சங்கங்களுக்குப் பொருளுதவி செய்து
வருகிறார்கள். கற்பிக்கும் முறைகளில் உபாத்தியா
யினிகளைப் பழக்குவதற்காகவே, **பிரஸிடென்ஸி டிரே
யினிங் ஸ்கூல்** என்ற தொழிற்பயிற்சிச் சாலையைச்
சென்னைநகரில் ஏற்படுத்தியிருக்கின்றார்கள்.

அளவற்ற சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் இவ்
வாறு படிப்பளிக்க முயன்றது சென்ற ஐம்பது வருஷ
காலமாகத்தான். இத்தேசமானது உலகத்துக்குத் தாய்
போன்ற **விக்டோரியா** மஹா சக்கரவர்த்தினியார் அவர்க
ளின் சிறந்த அரசாட்சிக்கு உட்பட்டபிறகுதான், இத்
தேசத்தார்களுக்கு மேற்றிசைப்படிப்பையும் ஞானத்
தையும் புகட்டத் துரைத்தனத்தார் பலவகையான ஏற்
பாடுகளைச் செய்துவருகிறார்கள். ஆங்கில அரசாட்
சிக்குமுன், மாணாக்கர்கள், படிப்பிலும், ஞானத்திலும்,
ஒழுக்கங்களிலும் சிறந்த ஆசாரியர்களிடம் சிலகால
மிருந்து அவர்களுக்குப் பணிவிடைகள் செய்து இயன்
றமட்டும் கல்விப்பயிற்சி செய்துவந்ததாகத் தெரிகின்
றது. மகம்மதியச் சிறுவர்கள், பள்ளிவாசல்களிலும்,
செல்வவான்களுடைய வீடுகளிலும் ஏற்பட்டிருந்த சிறு
பாடசாலைகளில் கோரான் முதலிய சமய நூல்களை

'மௌல்விகள்' என்ற மகம்மதிய பண்டிதர்களிடம் படித்துவந்தார்கள். ஆயினும், இக்காலத்தில் ஆயிரக் கணக்காகச் சிறுவர்கள் படிப்பதுபோல் முன்பு எந்தக் காலத்தும் கண்டதில்லை. ஆங்கில அரசாட்சியினால் உண்டான நன்மைகளுள் அஞ்ஞானமென்ற இருளைப் போக்கும் கல்வியறிவு மிகச் சிறந்ததென்றே சொல்ல வேண்டும்.

"இளமையிற்கல்." (ஆத்திசூடி.)
"இளமைப்பருவத்துக் கல்லாமைகுற்றம்."
(நான்மணிக்கடிகை.)

## 5.—துரைத்தனத்தாரும், மேற்படிப்பும்

**உயர்தரக் கலாசாலைகள் — இவற்றின் அமைப்பு—மாதிரி வித்தியாசாலைகளின் உபயோகமும் அவசியமும்—பழைய முறைகளும் புதிய ஏற்பாடுகளும்—இப்பொழுது செய்யும் சீர்திருத்தங்கள்—கல்லூரிகளும், சர்வகலா சபைகளும்—இவற்றின் தற்கால நிலைமை—இவற்றிற்குத் துரைத்தனத்தார் செய்யும் உதவி—தொழிற் கல்விச்சாலைகள்—கல்விச்சாலைகளின் மேல்விசாரணையும், தற்கால நிலைமையும்—கல்வி இலாகாவின் அமைப்பு.**

சிறுவர்கள் பெரும்பாலும் ஏழ்மைத்தனம், புத்திக் குறைவு முதலிய காரணங்களால், ஆதாரப்படிப்போடு நின்றுவிடுகிறார்கள். புத்தியும், செல்வமும், படிப்பில் ஊக்கமும் உடையவர்கள் மேன்மேலும் படிப்பை விருத்



திசெய்து கொள்ளுவதற்காகப் பட்டணங்களில் உயர்
தரக் கலாசாலைகளும் (High Schools), கல்லூரிகளும்
(Colleges) ஏற்பட்டிருக்கின்றன. உயர்தரக் கல்விச்
சாலைகள், சுதேசபாஷா பாடசாலைகளென்றும், ஆங்கில
பாடசாலைகளென்றும் இரண்டுவகையாக உள்ளன.
சுதேசபாஷா பாடசாலைகள் மூன்று உட்பிரிவுகளை
உடையன. இம்மூன்றிலும், இலக்கிய இலக்கணநூல்
களும், கணிதமும், பூகோளசாஸ்திரமும், இந்துதேச
சரித்திரமும் சுதேச பாஷையிலேயே போதிக்கப்படு
கின்றன. மேற்கூறியவற்றோடு மாணாக்கர்கள் ஆங்கில
சரித்திரம் (English History) அளவுநூல் (Geo-
metry), அட்சரகணிதம் (Algebra), சார்புநூல்கள்
(Technical Subjects) இவற்றுள், ஏதாவது ஒன்றை
யும் சேர்த்துக் கற்றுக்கொள்ளலாம்.

ஆங்கில பாடசாலைகளில் ஆறு வகுப்புக்கள் உண்டு.
அவற்றுள் முதல் மூன்று வகுப்புக்களை யுடையன,
லோயர் ஸகண்டரி பாடசாலைகள் என்றும், ஆறு வகுப்
புக்களையுமுடையன, அப்பர் ஸகண்டரி பாடசாலைகள்
என்றும் வழங்கப்படுகின்றன. ஆயினும், இந்த இரண்டு
பாடசாலைகளும், ஒரேமுறையைச் சேர்ந்தனவென்றே
கொள்ளவேண்டும். ஆங்கிலக் கல்வியில் ஜனங்களுக்கு
அவா இருப்பதால், இப்பாடசாலைகளில் மாணாக்கர்கள்
அதிகரித்துவருகிறார்கள். இப்பொழுது இத்தேசத்
தில் ஏறக்குறைய $4\frac{1}{2}$-லக்ஷம் சிறுவர்கள் படித்துவரு
கிறார்கள். இவ்விஷயத்தில் நம்முடைய மாகாணமே

முதன்மையாக உள்ளதென்பது, ஜனத்தொகையையும், படிப்பவர்களின் தொகையையும் கவனித்துப் பார்ப்பவர்களுக்குத் தெரியும்.

மேற்சொல்லிய பாடசாலைகளுக்குப் பொருளுதவி மட்டும் செய்தாற் போதுமென்று துரைத்தனத்தார் எண்ணிக்கொண்டிருப்பதால், இவை பெரும்பாலும் பொது ஜனங்களாலும், பொதுஜனச் சங்கங்களாலும், பாதிரிச் சங்கங்களாலுமே நடத்தப்படுகின்றன. ஆயினும், நன்ருகக் கற்பிக்கும் முறையைக் காண்பிக்க ஒவ்வொரு ஜில்லாவிலும் மாதிரி வித்தியாசாலை (Model School) ஒவ்வொன்றை இப்பொழுது ஏற்படுத்தி அவற்றைத் தங்கள் விசாரணையிலேயே வைத்துக்கொள்ளவேண்டுமென்று துரைத்தனத்தார் உத்தேசித்திருக்கிருர்கள். இவ்விதமான பள்ளிக்கூடங்களில் விசேஷமான பொருளைச் செலவுசெய்து போதனுமுறை தெரிந்த ஆசிரியர்களை நியமித்து, சிறந்த படிப்புக்குவேண்டிய சாஸ்திர சாதனங்களை அமைத்துச் சிறுவர்களுக்கு ஞானஅமுதைப் புகட்டினல், மற்ற வித்தியாசாலைகளும் ஒழுங்குபடுமென்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை.

அப்பர் ஸெகண்டரி பாடசாலைகளில் ஆங்கில நூல்கள், கணிதம், சரித்திரம், பூகோளசாஸ்திரம், பூர்வீக பாஷைகளில் ஏதாவதொன்று, தேச பாஷை, மூலாதார சாஸ்திரம் (Elementary Science) முதலியன ஓதுவிக்கப்படுகின்றன. ஆறுவருஷப் படிப்பு ஆனபிறகு எல்லா மாணுக்கர்களும் "மெட்ரிகுலேஷன்" என்று சொல்லும்



சர்வகலா சங்கப் பிரவேச பரீக்ஷைக்குப் பணம் கட்டி வெற்றிபெற முயலுகிருர்கள். இந்த வெற்றியைத் துரைத்தனத்தாரும் மற்றவர்களும் இத்தேசத்தில் எல்லா வேலைகளுக்கும் யோக்கியதையாக ஒப்புக்கொள்வதால் மாணுக்கர்களுக்குப் பிற்காலத்தில் உபயோகப்படக் கூடியதையும், கூடாததையும் போதித்து எப்படியாவது பரீக்ஷையில் தேறும்படி உபாத்தியாயர்கள் செய்துவருகிருர்கள். 1901-ம் வருஷத்தில் இப்பரீக்ஷைக்குப் போனவர்களின் தொகை கிட்டத்தட்ட 23,000 இருக்கும். அதி பாலியத்திலேயே தங்களுடைய அருமைப் பிள்ளைகள் இந்த பரீக்ஷையைக் கடந்து, மேற்பதவிக்கு வந்து குடும்பபாரத்தை வகிக்கவேண்டுமென்ற மூடத்தனமான எண்ணங்கொண்டு, அவர்களுடைய தேகப்பயிற்சிக்கு இடங்கொடாமல் அவர்களை பிஞ்சிலேயே பழுக்கும்படி சிலர் செய்துவந்தனர். இதை ஒருவாறு தடுப்பதற்காகவே இப்பொழுது பதினைந்து வயதுக்கு உட்பட்ட எவரும் இப்பரீக்ஷைக்குப் போகக் கூடாதென்ற விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இப்பாடசாலைப் படிப்பானது மாணுக்கர்களுக்குக் கல்லூரிகளுக்குப் போக வழியைக் காட்டியதேயன்றி பிறகு உலகநடையில் கைக்கொள்ளவேண்டிய வர்த்தகம், கைத்தொழில் முதலிய உபயோகமான வேலைகளுக்குத் தக்கவர்களாக அவர்களைச் செய்யவில்லை. இக்காரணம்பற்றியே 1882-ம் வருஷத்தில் நியமிக்கப்பட்ட கல்வி விசாரணைச் சங்கத்தார் (Educational

Commission) நம்முடைய பாடசாலைகளின் மேல் வகுப்புக்களில் இரண்டுவிதமான படிப்பும் இரண்டுவிதமான பரீக்ஷைகளும் இருக்கவேண்டுமென்று தீர்மானித்தார்கள். ஒருவிதமான படிப்பு கல்லூரிப் படிப்புக்கு வழிகாட்டியாகவும், மற்றொன்று வாழ்நாளில் கைக்கொள்ளவேண்டிய தொழில்களுக்கு உபயோகப்படும்படியாகவும், இருக்கவேண்டுமென்பது அவர்களுடைய நோக்கம். இந்த அபிப்பிராயத்தின்படி பம்பாய் முதலான மாகாணங்களில் பிரவேச பரீக்ஷையைத்தவிர, பள்ளிக்கூட முடிவுப் பரீக்ஷை என ஒரு பரீக்ஷையும் (School-Final Examination) நம்முடைய மாகாணத்தில் அப்பர் ஸெகண்டரி பரீக்ஷை (Upper Secondary Examination) என ஒன்றும் ஏற்படுத்தப்பட்டன. ஆனால், நம்முடைய மாகாணத்தில் துரைத்தன வேலைக்குப் பிரவேச பரீக்ஷையும் அப்பர் ஸெகண்டரி பரீக்ஷையும், சமமாகப் பாவிக்கப்பட்டிருந்தாலும், கல்லூரிப் படிப்பில் அவா மிகுதியாக இருப்பதால் கல்லூரிப் படிப்புக்கு வழிகாட்டியாகிய பிரவேச பரீக்ஷைக்கே சிறுவர்கள் பெரும்பாலும் பயின்றுவருகிறார்கள். ஆனது பற்றியே சிறுவர்களுக்குப் பிரவேச பரீக்ஷையில் உள்ள மோகத்தை எப்படியாவது போக்கப் பிற்காலத்துக்கு உபயோகமான பள்ளிக்கூட முடிவுப் பரீக்ஷையில் ஆசையை உண்டாக்கிச் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்பது இப்பொழுது துரைத்தனத்தாரின் நோக்கமாக இருக்கிறது. உயர்தரக் கலாசாலைப் படிப்பானது, கல்லூரிப்



படிப்புக்கு அஸ்திவாரமாகமட்டும் இருக்கிறதென்று நினைப்பது தவறு. ஆதாரப் படிப்பானது ஜனங்களுடைய சிறு தொழில்களுக்கும் வேலைகளுக்கும் உபயோகப்படுவதுபோல், மேற்சொல்லிய பாடசாலைப் படிப்பும் எவ்விதமான வியாபாரத்திலும் ஜனங்கள் வெற்றியும் லாபமும் அடையும்படி செய்யவேண்டும்.

இந்தப் படிப்போடு துரைத்தனத்தார் நம்மை விட்டுவிடவில்லை. இத்தேசத்துப் படிப்பையும், மேற்றிசைக் கல்வியையும் பூரணமாகச் சிறுவர்களுக்குப் புகட்டி, குறைவற்ற அந்தக் கல்வியாலுண்டாகும் புகழுக்கும் பயனுக்கும் அவர்களைப் பாத்திரர்களாகச் செய்யவேண்டுமென்று பல கல்லூரிகளை (Colleges) ஏற்படுத்தியிருக்கின்றார்கள். மேற்படிப்புக்கு உதவியான இவ்வித்தியாசாலைகள் சற்றேறக்குறைய 50 வருஷகாலமாகத்தான் இத்தேசத்தில் இருந்து வருகின்றன. அவற்றிற் பல, துரைத்தனத்தாராலும், பல, பாதிரிச் சங்கங்களாலும், சில, இத்தேசத்தாராலும், மிகச் சில, நகர விசாரணைச் சபையாராலும் நடத்தப்பட்டு வருகின்றன. இக்கலாசாலைகளிற் படிக்கும் மாணாக்கர்களுக்குக் கல்விமுறையை ஏற்படுத்தவும், அவர்களைப் பரீக்ஷித்துப் பரிசளிப்பதற்கும் யோக்கியதாபத்திரம் கொடுப்பதற்கும் (Universities) ஸர்வகலா சபைகளென்று சொல்லும் கல்விச்சங்கங்கள், கல்கத்தா, சென்னை, பம்பாய், அலகாபாத், லாகூர், டாகா முதலிய இடங்களில் ஏற்பட்டிருக்கின்றன. இச்சபையார்கள் கல்விமுறைகளை



பம்பாய் சர்வகலாசபையின் கட்டிடங்கள்.

ஏற்படுத்துவதல்லாமல், வித்தியாசாலைகளிற் சிறந்த ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு, வித்தியார்த்திகளை நல்லவழியிற் கொண்டுவருகிறார்களா என்பதையும் கவனிக்க வேண்டும். ஆகையால், கல்வியின் தராதரந்தெரிந்தவர்களே இச்சபையின் அங்கத்தினராக இருத்தல் வேண்டும். ஆயினும், 1904-ம் வருஷம் வரையில் நல்ல கல்விப்பயிற்சி யில்லாதவர்கள்கூட, தேர்ந்த கலாநிபுணர்களுடன், கௌரவத்துக்காகவும் மரியாதைக்காகவும் இச்சபையில் இருந்தார்கள். ஆகையால், மேற்



சொல்லிய சபைகள் மிக விரிவாகவும் கல்வி விஷயங்களில் திறமையற்றவைகளாகவும் இருந்தன. இவற்றைத் தடுக்கும்பொருட்டே 1904-ம் வருஷத்தில் இச்சபைகளை அடியோடு மாற்றிச் சிறியவைகளாகவும் கல்வித்திறமுடையவைகளாகவும் செய்வதற்கு இராஜாங்கத்தாராற் சட்ட நிர்மாணம் செய்யப்பட்டது. இப்போது நூதனமாக ஏற்பட்டிருக்கும் சபைகள், மாணாக்கர்களைப் பரீக்ஷித்து யோக்கியதாபத்திரம் கொடுப்பதோடு அவர்களுக்குக் கல்விமார்க்கத்தில் நல்ல பிரசங்கங்கள் செய்யச் சிறந்த ஆசிரியர்களை எல்லா வித்தியாசாலைகளுக்கும் உபயோகமாக நியமிக்கவும், வித்தியார்த்திகள் பெரிய நகரங்களில் நெறிதவறாமல் வசிக்கும்படி, விடுதிகளேற்படுத்தவும், புத்தகசாலைகளையும், ரஸாயனத் தொழிற்சாலைகளையும் அமைக்கவும் முயலுகிறார்கள். இப்பொழுது வடஇந்தியாவில் அலிகர் என்னும்பட்டணத்தில், மகம்மதியர்களுக்கென்றே பிரத்தியேகமாக ஏற்பட்டிருக்கிற கல்லூரியில்மட்டும் மேற்சொல்லிய சாதனங்கள் யாவும் அமைந்திருக்கின்றன. மற்ற இடங்களில், நடை உடை பாவனைகளில் வேறுவேறான கொள்கைகளையுடைய பல ஜாதியார்கள் இருப்பதால் மேற்சொல்லிய சாதனங்கள் அனைத்தையும் ஒவ்வொரு கலாசாலையிலும் அமைப்பது அசாத்தியமாக இருக்கின்றது. ஆயினும், வித்தியார்த்திகளுக்கு வேண்டிய சௌகரியங்களை அநேகமாகக் கவனிக்க வரவர முயலுகிறார்கள்.

இத்தேசத்தில், இப்பொழுது 145 கல்லூரிகள் இருப்பதாகவும் அவற்றில் ஏறக்குறைய 18,000 மாணாக்கர்கள் பயின்றுவருவதாகவும் தெரிகின்றது. இவை, முதல்தரக் கல்லூரியென்றும் (First Grade Colleges) இரண்டாந்தரக் கல்லூரியென்றும் (Second Grade Colleges) இருவகைப்படும். முதல்தரக் கலாசாலைகளில் 4 வருஷப் படிப்பும் இரண்டாம்தரக் கலாசாலைகளில் இரண்டுவருஷப் படிப்பும் உள்ளன. இம்மாகாணத்தில் உள்ள கலாசாலைகளுள், துரைத்தனத்தாரால் வகிக்கப்படும் மாகாணக் கலாசாலையும், பாதிரிச்சங்கத்தாரால் நடத்தப்படும் கிறிஸ்தவக் கலாசாலையும், காலஞ்சென்ற ஸ்ரீமான் பச்சையப்பமுதலியாருடைய தர்மசொத்தைக்கொண்டு சென்னையில் நடத்தப்படும் பச்சையப்பக் கலாசாலையும், மைசூர் ராஜாங்கத்தாரால் ஸ்தாபிக்கப்பட்ட மத்திய கலாசாலையும் முக்கியமானவைகளென்று சொல்லலாம்.

மேற்படிப்புக்கு உபயோகமான ஆங்கில பாடசாலைகள், கல்லூரிகள் இவற்றின் தேவைகளையும், வரவு செலவு கணக்குகளையும், மூன்று வருஷத்திற்கு ஒருமுறை பார்வையிட்டுத் தாங்கள் செய்யக்கூடிய திரவிய சகாயத்தைத் துரைத்தனத்தார் செய்துவருகிறார்கள். இந்த உதவியானது வருஷந்தோறும் வித்தியாசாலையின் நிலைமைக்குத் தக்கபடி மாறிக்கொண்டிருக்கும். மேற்சொல்லிய உதவியைத்தவிர கட்டிடத்திற்காகவும், புஸ்தகங்கள் வாங்குவதற்காகவும் உதவிபுரிகிறார்கள்.




OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 NOV 1912
MADRAS.

சென்னை மாகாணக் கலாசாலை.

பயிர்த்தொழில், வர்த்தகம், வைத்தியம், சட்டம், சிற்பம், சித்திரம் முதலிய பல கலைகளையும் கற்பிக்கத் தொழிற் கல்விச்சாலைகள் (Professional Colleges) பல ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், உபாத்திமைத் தொழிலைக் கற்பிக்க இம்மாகாணத்தில் ஜில்லாவுக்கு ஒரு தொழிற்சாலையை வைத்து, கற்பிக்கும் முறையைக் கற்றுக்கொள்ளும் உபாத்தியாயர்களுக்குப் பொருளுதவி செய்து அவர்களுக்குச் சிறந்த போதனாமுறைகளைப் பயிலுவிக்கிறார்கள். இப்போதனாமுறைத் தொ

ழிற்சாலைகளெல்லாம் இராஜாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட ஒருமேலதிகாரியின் அதிகாரத்திற்கு (Inspector of Training and European Schools) உட்பட்டவை. 1909-ம் வருஷம் ஏப்ரில்மாசம் முதல் இத்



சென்னை சட்ட கலாசாலை.

தொழிற்சாலைகள் அந்த அந்த மாகாணப்பிரிவு இன்ஸ்பெக்டருடைய விசாரணையிலும் இருக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆகையால், இப்பொழுது இத்தொழிற்சாலைகள் பெரிய அதிகாரிகள் இருவருடைய விசாரணையிலிருக்கின்றன. அடிக்கடி மேல்



விசாரணை நடக்கவேண்டுமென்றே இவ்விதம் செய்திருக்கிறார்கள். ஜனங்களுடைய கல்விக்கும், நாகரிகத்துக்கும் பெரும்பாலும் ஆசிரியர்களே காரணமாதலாலும், அவர்களுடைய கல்விக்கும், படிப்பிக்கும் முறைக்கும் மேற்சொல்லிய தொழிற்சாலைகளே காரணமாதலாலும், குடிகளை நல்வழிப்படுத்துவதே துரைத்தனத்தாரின் எண்ணமாகையாலும், இத்தொழிற்சாலைகள் யாவும், துரைத்தனத்துக்குச் சொந்தமாயிருப்பது பொருந்தும். இப்பொழுது, இத்தேசத்தில் ஏறக்குறைய 110 உபாத்திமைத் தொழிற்சாலைகளிருப்பதாகவும், அவற்றில் ஏறக்குறைய 4,500 உபாத்தியாயர்கள் படித்துவருவதாகவும் தெரிகிறது. இவற்றுள் 60 தொழிற்சாலைகள் உபாத்தியாயினிகளுக்காக ஏற்பட்டுள்ளன. அவற்றில், பெண்களைக் கற்பிக்கும் முறைகள் போதிக்கப்படுகின்றன. மாணாக்கர்களாக இருக்கும் உபாத்தியாயினிகள் ஏறக்குறைய 1,250 பேர்கள் இருக்கலாம். பெரும்பாலும், உபாத்தியாயினிகளுக்காக அமைக்கப்பட்ட பாடசாலைகளைப் பாதிரிகளே நடத்திவருகிறார்கள். நம்முடைய மாகாணத்தில், தொழிற்சாலை விஷயமாகச் செய்திருக்கும் ஏற்பாடுகள் மற்ற மாகாணங்களிலிருப்பதைக்காட்டிலும் சிறந்தவை. போதனாமுறைகளைத் தெரிவிக்கும் உபாத்திமைத் தொழிற்சாலையொன்று (Teachers' College) சென்னைக்கருகில் சைதாப்பேட்டையில் துரைத்தனத்தாரால் அமைக்கப்பட்டிருக்கிறது. இத்தொழிற்சாலை இத்தே

சத்துக்கே முதன்மையானதென்று சொல்லலாம். இவ்விதமாகவே மற்ற மாகாணங்களிலும் தொழிற்சாலைகளை அமைக்கவேண்டுமென்பது துரைத்தனத்தாருடைய கொள்கை. பெண்பாடசாலை உபாத்தியாயினிகள் படிப்பதற்குச் சென்னையில் ஒரு தொழிற்சாலையை நடத்துகிறார்களென்று முன்னமே சொல்லியிருக்கிறோம். கணவரை இழந்து துயரக்கடலில் முழுகியிருக்கும் பரிதாப நிலைமையிலுள்ள கைம்பெண்களும் கல்விகற்றுப் போதனாமுறைகளைத் தெரிந்துகொண்டு உபாத்தியாயினிகளாக இருந்தால் ஒருவாறு தங்களுடைய காலத்தை எளிதாகக் கழிக்கலாமென்பது துரைத்தனத்தாருடைய நோக்கமாதலின் இதிற் படிக்கும் கைம்பெண்களுக்கு வேண்டிய திரவிய சகாயத்தைச் செய்கிறார்கள். துரைத்தனத்தார் இவ்வளவு செய்தும் இவ்வுதவியைப் பெற்றுக்கொண்டு இனத்தார்களுக்கும் தங்களுக்கும் ஆறுதலைத் தரக்கூடிய வழிகளைக் கைம்பெண்கள் தேடிக்கொள்ளவில்லை.

மேற்சொல்லிய எண்ணிறந்த கல்விச்சாலைகள் யாவும் சரிவர நடந்துவருகின்றனவாவென்று கவனிப்பது எவ்வளவு கஷ்டமான வேலை? இவற்றை அடிக்கடி போய்ப் பரிசோதிப்பதற்காக அநேக மேல்விசாரணைக்காரர்களைத் துரைத்தனத்தார் நியமித்திருக்கிறார்கள். 1901-ம் வருஷத்து ஜனசங்கியைக் கணக்கின்படி இத்தேசத்தில் உள்ள பாடசாலைகளைக் கவனிப்பதற்கு 35 மேல்விசாரணைக்காரர்களும் (Inspectors), 6 மேல்



விசாரணைக்காரிகளும் (Inspectresses), 36 உதவி விசாரணைக்காரர்களும் (Assistant Inspectors) 660 தாழ்ந்த அதிகாரிகளும் இருப்பதாகத் தெரிகின்றது. மேலும், ஒவ்வொரு மாகாணத்திலும், ஆதாரப் படிப்பைக் கவனிப்பதற்கும் கிராமப் பள்ளிக்கூடங்களை அடிக்கடி போய்ப் பார்த்துச் சீர்திருத்தம் செய்வதற்கும் ஸுபர்வைஸர் (Supervisor) என்று சொல்லும் அநேகம், சிறு அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள். இம்மாகாணத்தில் மட்டும் 260 ஸுபர்வைஸர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் இதுவரையிலும் ஜில்லா விசாரணைச் சபையாரின் ஆதீனத்தில் இருந்து வந்தார்கள். இப்பொழுது அவர்களைத் துரைத்தனத்தார் தங்களுடைய ஆதீனத்திலேயே கொண்டுவந்துவிட்டார்கள். கல்வியை நிலைநாட்டுவதற்கு இவ்வளவு மேலதிகாரிகள் வேண்டுமோவென்று சிலர் நினைக்கலாம். ஆயினும் இப்பெரிய தேசத்திலிருக்கும் வித்தியாசாலைகளையும், மாணாக்கர்களையும் கணக்கிட்டால், உத்தியோகஸ்தர்களின் தொகை குறைவென்றே தோன்றும்.

மேற்கூறிய விசாரணை உத்தியோகஸ்தர்களைத் தவிர தங்களுடைய சொந்தத்தில் இருக்கும் வித்தியாசாலைகளுக்குத் தகுந்த ஆசிரியர்களையும், குமாஸ்தாக்களையும் துரைத்தனத்தார்கள் நியமிக்கிறார்கள். இந்த உத்தியோகஸ்தர்கள் மூன்றுவகைப்பட்டவர்கள். 500 ரூபாய்க்குமேல் 2.500 ரூபாய்வரையில் சம்பளம்

உள்ள வேலைகளுக்கு இங்கிலாந்திலேயே நியமனம் பெற்று இங்குவரும் ஆங்கிலேயர்கள் முதல் வகையார். 200 ரூபாய்க்குமேல் 700 ரூபாய்வரையில் சம்பளமுள்ள வேலைகளுக்கு இத்தேசத்திலேயே நியமனம் பெறுபவர்கள் இரண்டாவது வகுப்பினர். மற்றவர்களெல்லாம் மூன்றாவது வகுப்பினர் ஆவர். கணக்கற்ற இவ்வளவு உத்தியோகஸ்தர்களும் அநேக வித்தியா சாலைகளும் அடங்கிய வித்தை யிலாகாவுக்கு மாகாணத் தலைமை யதிகாரியாக டைரக்டர் ஆப் பப்லிக் இன்ஸ்ட்ரக்ஷன் (Director of Public Instruction) என்பவர் துரைத்தனத்தாரால் நியமிக்கப்பெற்றிருக்கிறார். இவரே மாகாணத்தின் கல்வி நிலைமைக்குப் பாத்தியப்பட்டவர். அந்த அந்த இடங்களிலிருக்கும் அதிகாரிகளின் சுவாதீனத்தை அதிகமாகக் குறைக்காமலே, இத்தேசம் முழுவதும் கல்வி நிலைமையை ஒழுங்குபடுத்தும் சிறந்த உபாயங்களைத் துரைத்தனத்தார் இவ்விதமாகச் செய்துவருகிறார்கள். அவர்கள் இவ்வளவு ஏற்பாடுகள் செய்தும், நமது தேசத்தில் கோடிக்கணக்கான ஜனங்கள் அஞ்ஞானமாகிய இருளால் மூடப்பட்டிருப்பதால் தேசாபிமானிகளும் துரைத்தனத்தாரும் கல்விப் பெருக்கத்துக்குச் செய்யவேண்டிய வேலைகள் இன்னும் எவ்வளவோ உள்ளனவென்றே சொல்லவேண்டும். எவ்வளவு விரைவில், பரோபகார சிந்தையுள்ளவர்களும், கல்வியறிவிற் சிறந்த பண்டிதர்களும் இவ்விஷயமாகத் துரைத்தனத்தாருக்கு உதவி



செய்கின்றார்களோ, அவ்வளவு சீக்கிரத்தில் அஞ்ஞானமாகிய இருளானது நீங்குமென்பதற்குச் சந்தேகமேயில்லை. ஆங்கில அரசாட்சியினால் இத்தேசத்தின் புராதனக் கல்வியும், மேற்றிசைக் கல்வியும் கலந்து இவ்வாறு ஒழுங்காகக் கற்பிக்கப்பெற்று வருவது தெய்வானுகூலமென்றே சொல்லவேண்டும்.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு" (திருக்குறள்.)

## 6.—துரைத்தனமும் நியாய விசாரணையும்

**மனிதர்களின் விவாதங்களும் அவற்றின் காரணங்களும்—மத்தியஸ்தர்களாகிய துரைத்தனத்தார் செய்யும் உதவி—கிராமப் பஞ்சாயத்தின் அமைப்பும் அதிகாரமும்—மேற்பட்ட நியாயஸ்தலங்களின் அமைப்பு — நியாயவிசாரணை முறைகள்—முற்காலத்திய ஏற்பாடுகளும் இக்காலத்திய முறைகளும்.**

தின்பண்டமொன்றைத் தெருவில் எறிந்தால் உடனே பல திக்குகளிலிருந்தும் நாய்கள் ஓடிவந்து அதனை உண்பதற்காக ஒன்றோடொன்று சண்டைபோடுவதை யாவரும் பார்த்திருக்கலாம். இம்மாதிரியே மனிதர்களும் ஏதாவது லாபமுள்ள பொருளைக் கண்டால், தங்களுடைய பெருந்தன்மையை மறந்து,

சுற்றத்தாரென்றும் சிநேகிதரென்றும் பாராமல் ஒருவரோடொருவர் சண்டைபோடுவதுண்டு; ஒரு சிறுவன் கையில் விநோதமான ஒரு பிரதிமையையாவது படத்தையாவது மற்றொருவன் கண்டால் இரண்டுபேருக்கும் அது சம்பந்தமாகச் சண்டைநேர, முடிவில், பலமுள்ளவன் கையில் அப்பொருளையும் பலமற்றவன் கண்ணில் நீரையும் பார்க்கிறோம். பல சமயங்களில் சண்டை முடியுமுன், பிரதிமை உடைந்துபோக, சண்டையும் அடியுமே மிச்சமாகின்றன. சண்டையினால் வரும் கேடுகள் அநேகருக்குத் தெரிந்திருந்தும், மனக்கொதிப்புங் கோபமும் வருகிற சமயத்தில், முடிவான லாபநஷ்டங்களைப் பாராமலே வீணாக வாதிக்கிறார்கள். சிறுவர்கள் தின்பண்டங்களுக்காகச் சண்டைபோடுவதுபோலவே பெரியோர்கள் நிலம், நீர், பொருள், மதம், வியாபாரம் முதலியவற்றிற்காகச் சண்டைபோடுகிறார்கள்.

கேவலம் பலத்தாலேயே பாத்தியத்தை நிலைநிறுத்துவது மிகப் புராதனமான வழக்கம். இந்த விஷயத்தில் ஜனங்கள் மிருகங்களை ஒத்திருக்கிறார்கள். இப்பொழுதுகூட நாகரிகமற்ற ஜாதியார்கள் கைச்சண்டைபோட்டே தங்களுக்கு வேண்டியவற்றை அடைகிறார்கள். ஏதாவது ஒரு விஷயமாக விவாதம் நேர்ந்தால் அதில் ஸம்பந்தமுள்ளவர்கள் தமக்குத் தெரிந்த வேறொருவரிடம் தம் குறைகளைத் தெரிவித்து அவர்கள் சொற்படி தம் விவாதத்தைத் தீர்த்துக்கொள்ளும் வழக்



கம் நாகரிகத்தின் மிகுதியால் ஏற்படுகிறது. இவ்விதம் செய்யாவிட்டால், பலமுள்ளவன் செய்யும் கொடுமையெல்லாம் நியாயமாகிவிடும். அமைதியான வாழ்க்கையும் அசாத்தியமாகிவிடும். ஆகையால், குடிகளின் அமைதியையும் க்ஷேமத்தையும் எவ்விதத்திலும் கவனிக்கவேண்டிய துரைத்தனத்தார் அவர்களுடைய சண்டைகளை மத்தியஸ்தர்களாக இருந்து தீர்த்துவைப்பது முக்கியமான கடமையாகும்.

சில ஊர்களில் அவ்வூராருக்குள் உண்டாகும் சிறு விவாதங்களை அவ்வூரிலுள்ள முக்கியமான நாலைந்துபேர்களே தீர்க்கிறார்கள். இவர்களுக்குப் **பஞ்சாயத்தார்** என்று பெயர். இன்னாரின்னார் பஞ்சாயத்தாராக இருக்கவேண்டுமென்பதைக் கட்சிக்காரர்களே நிச்சயித்துக் கொள்ளலாம். பஞ்சாயத்தார் எவ்வித முடிவு செய்தாலும் அதற்குக் கட்சிக்காரர்கள் உடன்பட்டு நடப்பார்கள். இவ்வேற்பாட்டிற் பொருட்செலவு ஒன்றுமில்லை. இதைப் பலர் அறிந்திருக்கலாம். பஞ்சாயத்தாருக்குக் கிராம வழக்கங்களும் கிராமத்தார் குணங்களும் நன்றாகத் தெரிந்திருக்குமாகையால், அவர்கள் ஜனங்களின் குறைகளை விசாரித்து நியாயமாகவே தீர்ப்புச் சொல்லக்கூடிய நிலைமையிலிருக்கின்றார்கள். மேலும், சிறு விவாதங்களை இவ்வளவு எளிதாகத் தீர்க்குமுபாயம் வேறொன்றுமில்லை. ஆனதுபற்றியே இவ்வுபாயமானது இராஜாங்கத்தாராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. 20 ரூபாய்க்கு மேற்படாத பொருள் அல்லது தொகை



ஹைகோர்ட், சென்னை.

விஷயமாக வரும் எல்லா விவாதங்களிலும், கட்சிக்கா ரர்கள் சம்மதித்தால், 20 ரூபாய்க்கு மேற்பட்டு 200 ரூபாய்க்கு மேற்படாத தொகை அல்லது பொருள் ஸம் பந்தமாக ஏற்படும் விவாதங்களிலும் பஞ்சாயத்தார் செய்யும் தீர்ப்பைத் துரைத்தனத்தார் ஒப்புக்கொள்ளு கிறார்கள். பஞ்சாயத்தார் இல்லாத விடங்களில் அவர் கள் வேலையைக் கிராம முனிசீப் என்னும் அதிகாரி செய் துவருகின்றார். பெரும்பாலும் கிராமத்திற் செல்வாக் குள்ளவரையே இந்த வேலைக்கு நியமிப்பதால், இவரு டைய தீர்ப்புக்கு மதிப்பு இருக்குமென்றே துரைத்தனத்



தார் நம்புகிறார்கள். கிராமாதிகாரி, தன் ஊராரின் விவா தங்களை ஒழுங்காக விசாரித்துத் தீர்த்துவந்தால், அவ னைச் சிறந்த நியாயாதிகாரியென்றே சொல்லலாம்.

மேற்சொல்லிய ஏற்பாடானது ஸாமானிய விவாதங்க ளுக்கும் கிராமங்களி லேற்படும் சிறு சண்டைகளுக்கும் போதுமானதே. நாகரிகமும் சட்டதிட்டங்களும் அதி கரித்திருப்பதனால், பெருத்த தொகை ஸம்பந்தமான வழக்கு வரும்பொழுது, இன்னுஞ் சிறந்த உபாயங்க ளைத் துரைத்தனத்தார் தேடவேண்டியிருக்கின்றது. பல ஜாதியார்கள் அடங்கிய இத்தேசத்தில் கிராமத்தலைவன் எவ்வளவு நிஷ்பக்ஷபாதியாக இருந்தபோதிலும், தன்னு டைய ஜாதியாரிடத்தில் அபிமானமும், மற்றவரிடத்தில் கொஞ்சம் விரோதமும் பாராட்டக்கூடும். அன்றியும், கிராமத்தலைவர் செய்யும் பிழையைத் திருத்த மேலதி காரிகள் வேண்டும். ஆனதுபற்றியே அநேகமாக ஒவ் வொரு தாலூகாவிலும் ஒவ்வொரு நியாஸ்தலம் துரைத் தனத்தாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது; அதற்கு அதிபதி ஜில்லா முனிசீப் என்பவர். அவர் 1,000 அல் லது 2,000 ரூபாய்வரையிற் பெறக்கூடிய பொருள் களின் சம்பந்தமான வழக்குக்களைத் தீர்த்துவைக் கிறார். ஜில்லா நியாயஸ்தலங்களையே அடிப்படை யான நியாயஸ்தலங்களென்று கொள்ளவேண்டும். மிகுந்த தொகைபெறும் ஆஸ்திகளைப்பற்றிய வியாஜ் யங்களைத் தீர்ப்பதற்காக ஜில்லா நியாயாதிபதிகளையும் அவர்களுக்கு அடுத்தபடியாக சப்ஜட்ஜிகளையும் நிய

மித்திருக்கிறார்கள். கீழ் நியாயஸ்தலங்களிலிருந்து வரும் வியாஜ்யங்களை மறுவிசாரணை செய்யவும், பிரதான பட்டணத்தின் வியாஜ்யங்களைக் கவனிக்கவும்,



ஹைகோர்ட், கல்கத்தா.

ஹைகோர்ட் என்னும் பெரிய நியாயஸ்தலம் ஒவ்வொரு மாகாணத்திலும் ஏற்பட்டிருக்கின்றது. இவ்விதமான நியாயஸ்தலங்கள் பம்பாய், சென்னை, கல்கத்தா, அலாகாபாத் என்னும் நான்கு நகரங்களிலு மிருக்கின்றன. பர்மாவிலும், பஞ்சாப்பிலும் உள்ள இம்மாதிரியான நியாயஸ்தலங்களுக்குச் சீப்கோர்ட் (Chief Court) அல்லது முக்கிய நியாயஸ்தலம் என்று பெயர்.



இப்பெருந்தேசத்தில் இவ்வாறு சற்றேறக்குறைய 2,200 நியாயஸ்தலங்களை ஏற்படுத்தி, ஜாதிவர்ணாச்ரம பேதத்தைப் பாராமற் குடிகளுக்குத் துரைத்தனத்தார் மத்தியஸ்த வேலையைச் செய்துவருகின்றனர். மேலும் இங்கிலாந்தின் நவீன நாகரிகத்தைச் சேர்ந்த சட்டதிட்டங்களை இத்தேசத்தில் திடீரென்று ஏற்படுத்தாமல் காணியாட்சி, ஸ்வீகாரம், சொத்தின் விபாகம் முதலிய விஷயங்களில், இந்நாட்டின் புராதன வழக்கங்களையே கைக்கொண்டு நியாயவிசாரணை செய்துவருகிறார்கள். பெரும்பாலும் இந்தியர்களே கீழ்நியாயஸ்தலங்களுக்கு அதிகாரிகளாக நியமிக்கப்படுவதன்றிப் பெரிய நியாயஸ்தலமாகிய ஹைகோர்ட்டிலும் மேற்றிசையாருடன் ஏற்படுத்தப்படுகிறார்கள்; கூடியவரையில் ஊர்வழக்கம் தெரிந்தவரே நியாயம் சொல்லவேண்டுமென்ற கொள்கையினால், நம்மினத்தார்களைக் கொண்டே துரைத்தனத்தார் நம்முடைய விவாதங்களைத் தீர்த்துவைக்கிறார்கள். பெரியோன் சிறியோனென்ற வித்தியாசம் பாராமல் தேசம்முழுவதும் ஒரே மாதிரியாகவும் ஒழுங்காகவும் இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கும் நியாயவிசாரணைமுறை வேறு எந்தக் காலத்திலும் இருந்ததாகத் தெரியவில்லை.

முன்பு கூறியபடி ஆயிரக்கணக்கான நியாயஸ்தலங்களை இத்தேசத்தில் ஸ்தாபித்து, ஆயிரக்கணக்கான இந்தியர்களைக்கொண்டே நம்முடைய வழக்குக்களைத் தீர்த்து வீண் வழக்கிடுவோர்களைக் கண்டிப்பதல்லாமல்,



ஹைகோர்ட், பம்பாய்.

பெரும் பொருளைப்பற்றிய விவாதங்களையும் அபிப்பிராய பேதத்தை உண்டாக்கக்கூடிய சங்கடமான வழக்குகளையும் மேல்விசாரணை செய்வதற்காக இங்கிலாந்தில் நம்முடைய சக்கரவர்த்தியின் மந்திராலோசனைச் சங்கத்தை (Privy Council) ச் சேர்ந்த நியாயசபை (Judicial Committee) யில் வேண்டிய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இங்கிலாந்திலிருக்கும் மேற்சொல்லிய நியாயசபைமுதல், நம்முடைய கிராமப் பஞ்சாயத்து வரையில், ஆயிரக்கணக்கான நியாயஸ்தலங்களிருந்தபோதிலும், அவைகளெல்லாம் ஒரு சங்கிலியின் வளை



யங்கள்போல ஒன்றோடொன்று தொடர்ச்சியுள்ளன. இவ்விதமான ஏற்பாடு இத்தேசத்திற்குப் புதுமையென்றே சொல்லலாம். முற்காலத்தில் கிராமவாசிகள் தங்கள் குறைகளைத் தாங்களே கூடுமானவரையிற் போக்கிக்கொண்டார்கள். பிரதான நகரங்களில்மட்டும், அரசர்கள் நியாயமண்டபத்துக்கு வரும் சமயத்தில் ஜனங்களுடைய சில குறைகளைக் கேட்டுத் தங்களுடைய மனம் போனவாறு தீர்ப்புச்சொல்லி வந்தார்களென்று தெரிகிறது. நாடுமுழுவதும் நியாயவிசாரணை செய்வதற்கு ஒரேவிதமான ஏற்பாடு இருந்ததாகத் தெரியவில்லை. ஜனங்களுக்குள் சமாதானமும் பொருளின் பாதுகாப்பும் ஆங்கிலேய அரசாட்சியால் ஏற்பட்ட முக்கியமான நன்மைகளென்று சொல்லலாம். இவற்றிற்குக் காரணம் அவர்கள் அமைத்திருக்கும் நியாயவிசாரணையின் ஒழுங்கே.

*"சமன் செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்*
*கோடாமை சான்றோர்க் கணி."* (திருக்குறள்.)

## 7.—துரைத்தனமும் ஊர்க்காவலும்

**குற்றவாளிகளைக் கண்டிக்கும் அதிகாரிகளும் முறைகளும்—ஜூரர்கள்—ஊர்க்காவலும் அதன் நன்மைகளும்—இந்த வேலையைச் செய்வோர்களின் நிலைமை—இவர்களுடைய கடமைகள்—இந்த இலாகாவிற் புதிய சீர்திருத்தங்கள்.**

கொள்ளல், கொடுத்தல், வியாபாரம் முதலிய விஷயங்களைப்பற்றிய வழக்குக்களைக் கவனிக்கிற மேற்சொல்லிய நியாயஸ்தலங்களுக்கு ஆங்கிலபாஷையில் **ஸிவில் கோர்ட்டு**களென்றும், தடியடி, சண்டைகள், திருட்டு, பொய், கொலை, கலகம், மோசம் முதலியவற்றை விசாரித்துக் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு ஏற்பட்டிருக்கின்ற நியாயஸ்தலங்களுக்கு, **கிரிமினல்கோர்ட்டு**களென்றும் சொல்லுகிறார்கள். உயிர்க்கேட்டையும் மானபங்கத்தையும் விளைவிக்கின்ற பாதகங்களைத் தடுப்பதற்கு ஒவ்வொரு ஜில்லா அல்லது இரண்டு மூன்று ஜில்லாவடங்கிய ஒவ்வொரு பிரிவில் **ஸெஷென்ஸ் ஜட்ஜ்** என்று சொல்லப்படும் ஒவ்வொரு அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு அடுத்தபடி **மாஜிஸ்திரேட்** என்று சொல்லப்படும் ஊர்க்காவலதிகாரிகள் பலர் நியமிக்கப்பெற்றிருக்கிறார்கள். இந்த அதிகாரிகள் மூன்று வகுப்பினர் ஆவர். இரண்டு வருஷத்திற்கு மேற்படாத காவல் சிக்ஷையும் ஆயிரம் ரூபாய்வரையில் அபராதமும் விதிக்கக்கூடியவர்கள் **முதல் வகுப்பினர்.** ஆறுமாதம் காவல்



தண்டனையும் இருநூறு ரூபாய் அபராதமும் விதிப்பதற்கு அதிகாரம்பெற்றவர்கள் **இரண்டாவது வகுப்பினர்.** ஒருமாதம் காவல் சிக்ஷையும் நூறுரூபாய் அபராதமும் விதிக்கக்கூடியவர்கள் **மூன்றாவது வகுப்பினர்.** இன்ன இன்ன குற்றங்களை இன்ன இன்ன அதிகாரிகளே விசாரணை செய்யலாமென்றும், குற்றத்துக்குத் தகுந்த தண்டனை விதிக்க அதிகாரமற்ற கீழதிகாரிகள் கூட மேல் அதிகாரிகளுடைய உத்தரவின்மேல் அக்குற்றங்களை விசாரித்துத் தகுந்த தண்டனை விதிப்பதற்காக ஜில்லா ஸெஷன்ஸ் கோர்ட்டுக்குத் தெரிவிக்கலாமென்றும் விதித்திருக்கிறார்கள். அன்றியும், பட்டணங்களில் அசுத்தம் செய்தல், சிறு சண்டைகள் போடுதல், வண்டிக்காரர்கள் செய்யும் தவறுகள் முதலிய அற்பக் குற்றங்களை விசாரிப்பதற்குச் சம்பளமின்றிக் கௌரவ மாஜிஸ்திரேட் (Honorary Magistrates) என்னும் அதிகாரிகளையும், சொற்பச் சம்பளத்திற் சில குற்ற விசாரணைச் சங்கங்களையும் (Stipendiary Benches of Magistrates), தலைநகரில் சிறு குற்றங்களைக் கண்டிக்கவும், பெரிய குற்றங்களை விசாரித்துப் பெரிய நியாயஸ்தலத்திற்கு அனுப்பவும் பிரஸிடென்ஸி மாஜிஸ்திரேட் என்று சொல்லும் அதிகாரிகளையும் துரைத்தனத்தார் நியமித்திருக்கின்றார்கள்.

இம்மாதிரியான குற்றவிசாரணை ஸ்தலங்கள் இத்தேசத்தில் சற்றேறக்குறைய 6,300 இருக்கின்றன. பெரிய நியாயஸ்தலத்திற்கு மேல்விசாரணைக்காகப் போக

வேண்டிய வழக்குக்களெல்லாம் கீழ் நியாயஸ்தலங்கள் எல்லாவற்றிலிருந்தும் அனுப்பப்படுகின்றன. ஜில்லா நியாயாதிபதிகள் எவ்விதமான தண்டனையும் விதிக்கக்கூடுமானாலும் அவர்கள் விதிக்கும் மரணதண்டனையானது பெரிய நியாயாதிபதிகளால் அங்கீகரிக்கப்பட வேண்டும். இந்தத் தண்டனையால் உயிரே போய்விடுகிறபடியாலும், கூடுமானவரையில் இந்தத் தண்டனையை மாற்ற முயல்வதே நாகரிகத்தின் முறைமையானபடியாலும், மேற்சொல்லிய நிபந்தனை ஏற்பட்டிருப்பது மிகவும் அவசியமென்றே தோன்றும். மேலும் மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதியைத் தகுந்த காரணங்கள் இருந்தால் மேற்படி தண்டனையினின்றும் விடுவிப்பதற்கு இந்தியாதேசத்துப் பிரதிநிதியாகிய **கவர்னர்ஜனரலும்**, மாகாணத்துத் தலைமை யதிகாரியாகிய **கவர்னரும்** அதிகாரம்பெற்றிருக்கிறார்கள். ஆயினும், இவ்வதிகாரத்தை அவர்கள் மிகவும் ஜாக்கிரதையாகவே உபயோகித்துவருகின்றார்கள்.

மேலும், குற்றவாளிகள் பெரிய நியாயஸ்தலத்திலும், ஜில்லா நியாயஸ்தலங்களிலும் விசாரிக்கப்படும்போது, சாமானிய ஜனங்களில் தக்க நிலைமையுள்ள 9 பேர்களுக்கு மேற்படாதவர்கள் நியாயாதிபதிகளுடன்கூட இருந்து விசாரணையைக் கவனித்துவருகிறார்கள். இவர்களுக்கு **ஜூரர்கள்** அல்லது **யோசனைத் துணைவர்களென்று** பெயர். விசாரணை முடிந்ததும் இவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டே



நியாயாதிபதிகள் தண்டனை விதிக்கிறார்கள். இவர்களுக்கும் நியாயாதிபதிகளுக்கும் அபிப்பிராயபேதம் உண்டாகும்போது பெரிய நியாயாதிபதிகளுடைய தீர்மானப்படியே தண்டனை விதிக்கப்படும். இவ்வித ஏற்பாட்டினால் குற்றவாளிகளுக்கு எல்லாவித செளகரியமும் நியாயமும் கிடைக்குமென்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. ஜூரர்களைப் போலவே அஸெஸர் என்ற ஒரு வகுப்பார் உண்டு. ஜூரர்களுக்குள்ள அதிகாரத்தை இவர்கள் பெற்றிருக்கிறார்கள். ஆனால், இவர்களுடைய அபிப்பிராயம் விரோதமாயிருப்பினும் நியாயாதிபதி தன்னிஷ்டம்போல் நடத்தலாம்.

குற்றவாளிகளைக் கண்டித்துக் குடிகளைக் காப்பது துரைத்தனத்தாரின் முக்கியமான கடமையென்று சொன்னோம். வியாதி வந்தபிறகு வைத்தியம் பண்ணுவதைக் காட்டிலும், வியாதிவாராமலே தேகத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுவது மிகச் சிறந்ததன்றோ! இம்மாதிரியே குற்றம் செய்தபிறகு குற்றவாளியைப் பிடித்துக் கண்டிப்பதைவிடக் குற்றம் நேரிடாமலே காவல் வைத்துக் குடிகளைக் காப்பது மிகச் சிறந்த வழியென்று கூறவேண்டும். இக்காரணம்பற்றியே இத் தென்னிந்தியாவிலுள்ள அநேக கிராமங்களில் ஊர்க்காவலுக்காகக் கிராமப்பொதுவில் ஒரு காவலாளை நியமித்திருக்கிறார்கள். இவன் கிராமத்திலுள்ள நிலங்களையும் வீடுகளையும் காப்பதல்லாமல், திருட்டுப்போன பொருளைக் கண்டுபிடிக்கவும் வேண்டும். முற்காலத்திற் சில விடங்

களிற் காவற்காரன் திருட்டைக் கண்டுபிடிக்கத் தவறினால் அவனிடமிருந்தே கெட்டுப்போன பொருளின் விலை வாங்கப்பட்டுவந்தது. இவ்விதமான ஏற்பாடு மிகச் சிறந்ததென்றே யாவரும் தெரிந்துகொள்ளக் கூடும். சீனதேசத்தில் அரண்மனை வைத்தியனுக்கு அரசன் சௌக்கியமாயிருக்குங் காலத்தில்மட்டும் சம்பள மளிக்கப்பட்டு வந்ததேயன்றி அவன் பிணியினால் வருந்துங் காலங்களிற் சம்பளமே கொடுக்கப்பட்டதில்லை. இதனால், தனக்கு நஷ்டம் வராமலிருக்க வேண்டுமேயென்ற கவலையினால் அரசனுடைய தேக சௌக்கியத்தைச் சீனவைத்தியன் நன்றாகக் கவனித்துக்கொண்டான். இம்மாதிரியே, பழைய கிராம வழக்கப்படி காவற்காரன் கிராம நஷ்டத்திற்குப் பாத்தியப்பட்டவனாக இருந்தபடியால் மிக ஜாக்கிரதையாக வீடுகளையும் நிலங்களையும் காத்துவந்தான்.

ஆயினும், மேற்சொல்லிய வழக்கத்தைக் கிராமங்களில்மட்டும் அனுஷ்டிக்கக் கூடுமேயன்றி, பெரிய பட்டணங்களில் அனுசரிப்பது அசாத்தியமாகும்; ஏனெனில் ஆங்கில அரசாட்சியினாற் பட்டணங்கள் விஸ்தீரணத்திலும், ஜனத்தொகையிலும் விருத்தியடைந்து கொண்டு வருகின்றன. ஜனங்கள் அதிகமாக அதிகமாகப் புதுமையான திருட்டுக்களும், சூதுகளும் அதிகரிக்கின்றன. ஆகையால், பட்டணங்களிலும் ஜில்லாக்களிலும் மேலேசொன்ன தவறுகளைத் தடுப்பதற்காகவே போலீஸார் என்ற காவற்காரர்களைத் துரைத்-



தனத்தார் நியமித்திருக்கிறார்கள். பல வீதிகள் கூடுமிடங்களிலும், கடைவீதிகளிலும், சந்தையிலும், உத்ஸவம் நடக்கும் இடங்களிலும், கோடைக்காலங்களில் வெள்ளைச்சட்டைகளையும் மழைக்காலங்களில் கறுப்புச்சட்டைகளையும், செந்நிறமான தலைப்பாகைகளையும், கட்டை மாட்டிய காற்சட்டைகளையும் அணிந்துகொண்டு கனமான கருஞ்செருப்புக்களைக் காலிற் போட்டுக்கொண்டு முறுக்கிய மீசையுடன் இருக்கும் வீரர்களை யாவரும் பார்த்திருக்கலாம். இவர்களே “**போலீஸ்**” என்ற ஊர்க்காவற் சேவகர்கள். கூட்டத்தில் அசுசியான காரியம் செய்து இவர்களிடத்தில் அகப்பட்டுக்கொண்டவர்களுக்கும் வீதிகளிற் பக்கம் விட்டுப் பக்கத்தில் வண்டிகளை ஓட்டியதற்கு இவர்களாற் கண்டிக்கப்பட்ட வண்டிக்காரர்களுக்கும், இவர்கள் கொடுமைக்காகவே ஏற்பட்டவர்கள்போல் தோன்றுவார்கள். ஏனெனில், இவர்கள் செலுத்தும் கடுமையான அதிகாரம்மட்டும் வெளிப்படையாய்த் தெரியுமேயொழிய இவர்களுடைய கடுமையால் உண்டாகும் பலவிதமான நன்மைகள் நன்றாகப் புலப்படுவதில்லை. நிழலிலிருப்போனுக்கு நிழலருமை தெரியுமா? ஜனநெருக்கமுள்ள பட்டணங்களில் இச்சேவகர்கள் இல்லாவிடின் மானமுள்ளவன் வாழ்வது அசாத்தியமாகிவிடும். கூட்டங்களில் திருட்டும் மோசமுமில்லாமலும் வீதிகளில் வண்டிகளினால் அபாயமில்லாமலும் ஜனங்களைப் பாதுகாத்துத் திசைகெட்டுத் தடுமாறுங்

குழந்தைகளை அவற்றின் வீடுகளிற் சேர்த்தும், நெருப்பினால் அபாயம் நேரிட்ட இடம் சென்று வேண்டிய உதவிசெய்தும், இராக்காலங்களில் ஊர்சுற்றி வீட்டுக் கதவுகளைத் தட்டி வீட்டிலுள்ளவர்களுக்கு எச்சரிக்கை கொடுத்தும், பழங்குற்றவாளிகளின் நிலைமையை நன்றாகக் கவனித்தும், ஜனங்களுக்கு அளவற்ற நன்மையைச் செய்பவர்கள் சொற்பச்சம்பளம் பெற்று உழைக்கும் இந்தக் காவற்சேவகர்களன்றோ? ஏறக்குறைய 1½ லக்ஷம் மனிதர்களை இவ்விதமான ஊர்க்காவலுக்காகத் துரைத்தனத்தார் இத்தேசத்தில் நியமித்திருக்கின்றார்கள். இவர்களையல்லாமல் சிறு கிராமங்களின் காவலுக்காக 7 லக்ஷம் பேர்கள் இருக்கிறார்கள்.

ஒவ்வொரு கிராமத்திலும் போலீஸ்ஸ்டேஷன் என்று சொல்லும் காவற்சேவக விடுதிகளைக் கட்டி, அந்த அந்த இடங்களுக்குத் தக்கபடி, இவ்வளவு இவ்வளவு காவற்சேவகர்கள் இருக்கவேண்டுமென்று வரையறை செய்திருக்கிறார்கள். இந்த விடுதிகளுக்கு அதிகாரிகளாகத் தலைமைக் காவற்சேவகரென்பவரும் (ஹெட் கான்ஸ்டெபில்) உள் விசாரணைக்காரர் (ஸப் இன்ஸ்பெக்டர்) என்பவரும் ஏற்பட்டிருக்கிறார்கள். இவ்வேலைகளைப் பெற விரும்புவோர், வேலூர், பக்கல்பூர், மூர்ஷிடாபாட் என்னும் இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள காவற்றொழிற் கல்விச்சாலைகளில் (Police Training Schools) சிலகாலமிருந்து தாங்கள் செய்யவேண்டிய வேலைமுறைமையைக் கற்றுக்கொள்ளவேண்டும். எவ்



வளவுக்கெவ்வளவு இந்த அதிகாரிகள் நெறிதவறாமல் தங்களுடைய கடமைகளைச் செலுத்துகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு ஊர்க்காவல் பலப்படும். ஆகையால் இவர்களைக் கவனித்துவர இன்ஸ்பெக்டர் என்று சொல்லும் விசாரணைக்காரர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு ஜில்லாவிலுள்ள எல்லா விசாரணைக்காரர்களும் ஜில்லா சூப்பரின்டென்டெண்டு என்று சொல்லப்படும் மேல்விசாரணைக்காரருடைய அதிகாரத்துக்கு உட்பட்டவர்கள். ஒவ்வொரு மாகாணத்திலும் இந்த இலாகாவின் தலைமை யதிகாரியாக இருப்பவருக்கு இன்ஸ்பெக்டர் ஜெனரல் என்று பெயர். தலைநகரில், பொலீஸ் உத்தியோகஸ்தர்களையெல்லாம் கமிஷனர் என்று சொல்லும் மேலதிகாரி கவனித்துவருகிறார்.

ஊர்க்காவற் சேவகத்தொழில் மூன்றுவகைப்படும். அவையாவன:—(1) பழைய குற்றவாளிகளைக் கவனித்து அவர்களால் ஜனங்களுக்கு மறுபடி கெடுதி நேரிடாமற் பார்த்துக்கொள்வது (2) புதிய குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பது (3) நியாயாதிபதிகளிடம் குற்றவாளிகளைக் கொண்டுபோய்விட்டுத் தண்டனை விதிக்கும்படி செய்வது. சிறைச்சாலைகளினின்றும் கைதிகள் வெளியே போகாமல் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள (Jail Police) சிறைச்சாலைக் காவற்காரர்கள் நியமிக்கப்பெற்றிருக்கிறார்கள். கொலை, களவு, வஞ்சகம் முதலிய தீச்செயல்களையே குலத்தொழிலாகக்கொண்டு பிழைத்துவரும் பல ஜாதியார்கள் இத்தேசத்திலுண்டு.

மற்றவர்களுக்கு நல்லகாரியங்களுக்காக உபயோகப்பட்டுவரும் புகைவண்டியும், தந்தியும், தபாலும், இவர்களுடைய தீச்செயல்களுக்குப் பயன்பட்டு வருகின்றன. இக்கொடியவர்களைக் கண்டுபிடிப்பது வரவாக் கஷ்டமாக இருக்கிறபடியால், இவர்களை அடக்குவதற்காகவே அநேக உத்தியோகஸ்தர்களை எல்லா மாகாணங்களிலும் நியமித்திருக்கின்றார்கள்.

இவ்வாறு பல ஏற்பாடுகளைச் செய்தும், ஊர்க்காவல்வேலையிற் சில குறைகள் காணப்படுகின்றன. காவற்சேவகர்களுக்குச் சம்பளம் குறைவாக இருப்பதால் அவர்கள் உண்மையாக இருந்து ஊக்கத்துடன் குற்றங்களைக் கண்டுபிடிப்பதில்லை; சொற்பச் சம்பளத்திற்குப் புத்திசாலிகள் அகப்படுவதில்லை.

இவ்விதமான குறைகளை நோக்கி, அவற்றைப் போக்கு முபாயங்களைத் தெரிந்துசொல்வதற்காக, 1902-ம் வருஷத்தில் ஒரு விசாரணைச்சபையை (Police Commission) த் துரைத்தனத்தார் நியமித்தார்கள். அச்சபையார்களுடைய அபிப்பிராயப்படி சேவகர்களின் சம்பளம் உயர்த்தப்பட்டதல்லாமல், அவர்கள் உண்மையாக இருந்து வேலைபார்க்கும்படி செய்யவேண்டிய உபாயங்கள் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன. 1905-ம் வருஷத்தில்மாத்திரம் பொலீஸ் சீர்திருத்தத்திற்காக 50 லக்ஷம் ரூபாயைத் துரைத்தனத்தார் செலவிட்டார்கள். இனிமேல், படித்தவர்களையே காவற்சேவக உத்தியோகங்களில் நியமித்து அவர்களைக்கொண்டே குற்றங்களை விசாரித்து, குற்றவாளிகளைக் கண்டித்துக் குடிகளுக்கு நன்மை செய்யவேண்டுமென்பது இராஜாங்கத்தாரது நோக்கமாக இருக்கிறது. எவ்வளவு சிறந்த திருத்தம் ஏற்பட்டாலும் குற்றங்களைக் கண்டுபிடிக்கும் விஷயத்தில் ஜனங்கள் அதிகாரிகளுக்கு வேண்டிய சகாயம் செய்தாலன்றி, துரைத்தனத்தார் செய்யும் உபாயங்கள் யாவும் அவர்கள் எண்ணுமளவு பயன்படா. ஆதலால், துரைத்தன அதிகாரிகளுக்குக் குற்றவிசாரணை விஷயத்தில் வேண்டிய சகாயம் செய்வது நம்முடைய கடமையாகும்.



"பரிசனம் பகைவர் கள்வர் படர்தரு முயிர்க டமென்
றரைசெயப் பிடத்தி ஞறு முலைவிடை மிடைபூ நெய்தா
வரிசையிற் காத்து நீதி வழுக்கினுர் நம்மை யொத்திக்
கரிசறப் பொருளுங் கோடல் காவலர் தரும மைந்த."

([illegible])

## 8.—துரைத்தனமும் தேசக்காவலும்

முற்காலத்தில் இத்தேசத்துக்கு உண்டான அபாயங்களும், இப்போது உள்ள அமைதியும்—இதற்குக் காரணம் தேசக்காவலுக்கு உபயோகமான சாதனங்கள் ஏற்பட்டிருப்பதே-நிலப்படையும் கப்பற்படையும்-இவற்றின் அமைப்பு-இவற்றிற்குச் செய்யும் செலவு வீண் அன்றென்பது.

பொருள் நஷ்டமும் மானக்கேடும் உண்டாகாமற் குடிகள் ஊர்க்காவலாற் பாதுகாக்கப்படுவதுபோல் பேராசைபிடித்து இந்நாட்டைக் கைப்பற்ற விருப்பமுடைய அயல்தேசத்தார் அணுகாவண்ணம் நம்முடைய அருமைநாடானது தேசக்காவலாற் காப்பாற்றப்படுகின்றது. செல்வமும், வளமும் மிகுந்த இந்நாடானது போர்புரியும் பற்பல ஜாதியார்களுக்குத் தொன்றுதொட்டுப் பேராசையை யுண்டாக்கி அவர்களுடைய கொடிய செய்கைகளாற் குடிகளுக்கு அளவற்ற பொருள் நஷ்டத்தை விளைவித்திருக்கின்றது. சென்ற 2,000 வருஷங்களாக, பாரஸீகர், கிரேக்கர், யவனர், துருக்கியர், ஆப்கானியர், மகம்மதியர், ஐரோப்பியர் முதலிய அன்னியர்கள் ஒருவர்பின் ஒருவராக இத்தேசத்தில் ஆசைவைத்து இதைக் கைப்பற்ற முயன்றுவந்ததில் இந்நாடானது அமைதியற்று இருந்தது. அமைதியில்லாவிடின் உபயோகமான தொழில் ஒன்றும் நடவாதன்றோ? அல்லாமலும் கல்வி, கைத்தொழில், வர்த்





சண்டைக்கப்பல்.

தகம், நல்லொழுக்கம், நாகரிகம் முதலியவை யெல்லாம் குறைந்துவிடும்; அநேக நூற்றாண்டுகளாகச் சிறுகச் சிறுக உண்டான பெருமையெல்லாம் யுத்தக்கிளர்ச்சியினால் அதிசீக்கிரத்திற் பறந்துவிடும். ஆகையால், இவ்விதமான குறைகள் நேரிடாமல், நிலப்படை, கப்பற்படை முதலிய சிறந்த சாதனங்களால் தேசத்தைக் காத்து அமைதியை உண்டாக்கிக் குடிகளுக்கு நன்மை புரிவது துரைத்தனத்தின் கடமையாகும்; இக்கடமையானது சென்ற நூறு வருஷங்களில் நன்றாகக் கவனிக்கப்பட்டுவருகிறது என்பதற்குச் சிறிதும் சந்தேக

மில்லை. அமைதியுள்ள இந்நாட்டில் வசிக்கும் நமக்கு சண்டைகளாலுண்டாகும் உயிர் நஷ்டமும் செல்வ நஷ்டமும் நன்கு விளங்கா. சில வருஷங்களுக்குமுன் நடந்த ஜப்பான் சண்டையிலும் ஆபிரிக்கா சண்டையிலும் லட்சக்கணக்கான வீரர்கள் மாண்டார்கள். கோடிக்கணக்கான செல்வமும் அழிந்தது. ஜப்பான் சண்டையில்மட்டும் சுமார் ஐந்து லக்ஷம் மனிதர்கள் இருகக்ஷியிலும் மாண்டார்கள். ருஷியர்களுக்கு முப்பது கோடி பவுனும் நஷ்டமாயிற்று. மேலும் சண்டையினால் ஒழுங்கான நாகரிகமும் சீரழிந்துவிடும். ஆகையால் தேசத்தின் நல்வாழ்வுக்கு அமைதி இன்றியமையாதது.

தேசக்காவலுக்கு முக்கியமான கருவிகள் நிலப்படையும், கப்பற்படையும். இங்கிலாந்தின் கப்பற்சேனையே இவ்வுலகத்திலுள்ள எல்லாக் கப்பற்சேனைகளிலும் சிறந்தது; ஆங்கிலேயர்களுக்கு இப்பூமியின் எல்லாப்பாகங்களிலும் ராஜ்யங்கள் இருக்கின்றமையால், அவர்களுடைய துரைத்தனத்தை நிலைநாட்டுவதற்கும் குடிகளுக்கு அமைதியை உண்டாக்குவதற்கும் கப்பற்சேனை மிகவும் உபயோகமாகின்றது. இந்நாட்டிற்கும் மேற்கூறிய கப்பற்சேனையே சிறந்த பக்கபலமாக இருக்கின்றது. இச்சேனையை வைத்து நடத்துவதில் ஏறக்குறைய 32 கோடி பவுனை ஆங்கிலேயர்கள் செலவிடுகிறார்கள். நாம் இந்தச் செலவுக்காக ஒன்றும் கொடாவிட்டாலும் கப்பற்சேனையாலுண்டாகும் நன்மைகளை மட்டும் அடைகிறோம். இத்தேசத்திற்கென்றே பிரத்தி





இந்திய வீரர்கள்.

யேகமான சேனை ஏற்பட்டிருக்கின்றது. இதில் 75,000 ஆங்கிலேய வீரர்களும், 1,55,000 இந்திய வீரர்களும் இருக்கின்றார்கள். முற்காலத்தில் ரத, கஜ, துரக, பதாதிகளென்ற நான்கு வகையான சேனைகள் இருந்ததுபோல் இக்காலத்திலும் காலாள், குதிரைவீரர், பீரங்கிப்பட்டாளம், சிப்பந்திகள் என்ற நான்கு வகையான வீரர்கள் இருக்கின்றனர். சேனையைப் பல வகுப்புகளாகப் பிரித்து, ஒவ்வோர் அணிவகுப்புக்கும் தகுந்த அதிகாரிகளை நியமித்திருக்கின்றார்கள். 1895-ம் வருஷம்வரையில் அந்த அந்த மாகாணங்களிலிருந்த சேனைகள் அந்த அந்த இடங்களிலிருந்த மேலதிகாரிகளுக்



நிலப்படை வீரர்கள்.

குக் கீழ்ப்பட்டிருந்தன. ஒரே அதிகாரத்துக்கு உட்பட்டால்தான் சேனை தேர்ச்சியடையுமாதலால் சென்ற 10 வருஷங்களாக, இத்தேசத்தில் உள்ள சேனைகளையெல்லாம் சேர்த்து அவற்றின் தலைமையதிகாரியாக, முக்கிய சேனாதிபதி ஒருவரை நியமித்திருக்கிறார்கள். சில காரியங்களை உத்தேசித்து ராணுவத்தை வடக்கு சேனையென்றும் தெற்கு சேனையென்றும் பிரித்து, இச்சேனைகளின் பற்பல பகுதிகளை பற்பல ராணுவஸ்தலங்களில் வைத்திருக்கிறார்கள். பர்மாவிலுள்ள சேனையும் தெற்கு சேனையின் ஒரு பகுதியாகின்றது. மேற்சொல்லிய சேனைவீரர்களுக்கெல்லாம் மாதச்சம்பள முன்





கப்பற் படைவீரர்கள்.

இவர்களையல்லாமல், பற்பல தொழிலைச் செய்யும் ஐரோப்பியரும், இத்தேசத்திற் பிறந்த வெள்ளைக்காரர்களும், தங்கள் ஓய்வுநேரங்களில், யுத்தமுறையைக் கற்றுக்கொண்டு துறைமுகம், இருப்புப்பாதைகள், படைவீடுகள், ஐரோப்பியர்கள் மிகுதியாக இருக்குமிடங்கள் முதலியவற்றைக் காப்பதன்றி, ஆபத்துக்காலத்தில் துரைத்தனத்தாருக்கு வேண்டிய உதவியைச் செய்து கொண்டும் இருக்கிறார்கள். இவர்கள் சம்பளம் பெற்றுக்கொள்வதில்லை. இவர்களுடைய சேனைக்குச் சம்பளமில்லாப் படை, வாலண்டியர் கோர் என்று பெயர்.

இவ்விதமாகத் தங்களுடைய இனத்தார்களின் க்ஷேமத்தின்பொருட்டுத் தாமாகவே வலிந்து சேனையைச் சேர்ந்தவர்கள் இத்தேசத்தில் ஏறக்குறைய 34,000 பேர்கள் இருக்கலாம்.

மேலும், வெகுகாலமாக நம்முடைய இந்திய அரசர்களுக்கும் சிற்றரசர்களுக்கும் சொந்தமான இடங்களில் அலங்காரமாக வைக்கப்பட்டிருந்த உபயோகமற்ற சேனைகளை நமது துரைத்தனத்தார் ஆங்கிலேய அதிகாரிகளைக்கொண்டு யுத்த முறையில் நன்றாகப் பழக்கித் தங்களுக்கும் தேசக்காவலுக்கும் உபயோகமாகும்படி செய்திருக்கிறார்கள். இங்ஙனம் பழக்கப்பட்ட 20,000 வீரர்கள் (Service corps) பற்பல மாகாணங்களிலும் இருக்கின்றார்கள். இந்தச் சேனைகளுக்குத் தலைவர்களாக இந்தியரே இருக்கவேண்டுமென்று கருதி, சில வருஷங்களுக்குமுன் இத்தேசத்தில் ராஜப்ரதிநிதியாக இருந்த லார்ட் கர்ஸன் என்பவர் உயர்ந்த குலத்தைச்சேர்ந்த இருபது இந்தியச் சிறுவர்களைப் பொறுக்கி அவர்களுக்கு யுத்த முறையைக் கற்பிக்கும்படி செய்தார். மைசூர், ஹைதராபாத் முதலிய சுதேச ராஜாங்கங்களுக்கு உட்பட்ட மாகாணங்களில் அந்த அந்தத் துரைத்தனத்திற்கு உபயோகமாகும்படி ஏறக்குறைய 93,000 போர்வீரர்கள் நியமிக்கப்பெற்றிருக்கிறார்கள். இப்போதுள்ள சேனைத்தொகையின் விவர முதலியன அடுத்துவரும் அட்டவணையால் விளங்கும்:—



| அணிவகுப்புக்கள் | தலைவர்கள் | வீரர்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| **ஆங்கிலேயர்கள்** | | | |
| குண்டுப்பட்டாளங்கள் | 547 | 14,116 | 14,663 |
| குதிரைவீரர் | 261 | 5,391 | 5,652 |
| காலாட்கள் | 1,508 | 52,238 | 53,746 |
| சிற்பவீரர்கள் | 365 | 215 | 580 |
| ஆங்கிலேயர்களின் மொத்தம் | 2,681 | 71,960 | 74,641 |
| **இந்தியர்கள்** | | | |
| குண்டுப்பட்டாளங்கள் | 53 | 3,493 | 3,546 |
| குதிரைவீரர் | 544 | 24,450 | 24,994 |
| காலாட்கள் | 1,845 | 115,138 | 116,983 |
| சாங்கமறுப்போர் முதலிய சேவகர்கள் | 947 | 8,777 | 9,724 |
| இந்தியர்களின் மொத்தம் | 3,389 | 151,858 | 155,247 |
| சம்பளமில்லாச்சேனைவீரர் | ...... | ...... | 34,000 |
| ஸர்விஸ்கோர் | ...... | ...... | 20,000 |
| இந்திய ராஜாக்களின் சேனைகள் | ...... | ...... | 93,000 |
| சேனைகளின் மொத்தம் | ...... | ...... | 176,888 |



ஒட்டகப் பட்டாளம்.

இவ்வாறு பலவிதமான ஏற்பாடுகளினாலும் தேசக் காவலென்ற சிறந்த தர்மத்தைத் துரைத்தனத்தார் செய்துவந்தும், சேனைவிஷயமாகச் செய்யும் செலவெல்லாம்



வீணென்றும், அழகான ஆடை யணிந்து, கொழுத்த தீனியைத் தின்று, தேகத்தை வளர்த்து, துப்பாக்கியைத் தாங்கி, சத்தமிடும் பாதரக்ஷைகளைப் போட்டுக்கொண்டு விசையாக நடக்கும் போர்வீர னெவ்வொருவனும் தேசத்தின் வறுமைக்குக் காரணமென்றும் சிலர் நினைக்கலாம். ஆயினும், இத்தேசத்து ஜனத்தொகையின் மிகுதியையும், இதைச் சுற்றி நான்கு பக்கங்களிலு மிருக்கின்ற சத்துருக்களையும், அவர்களாற் சிறிது காலத்துக்கு முன்வரையில் இந்நாட்டிற்கு விளைந்த நஷ்டங்களையும் நோக்குங்கால், இப்பொழுது இந்நாட்டிலிருக்கும் சேனையும், அதற்கு ஆகும்செலவும் வீணென்று தோன்றா. வேட்டைநாய்க்குப் போடுகிற தீனி நஷ்டமென்று நினைத்து அதைத் துரத்திவிட்டால் புலியும், ஓநாயும் ஆட்டுமந்தையைச் சூறையாடிவிடும். அம்மாதிரியே தேசக் காவலில்லாவிடின், கொடிய சத்துருக்கள் பலர் இந்நாட்டைக் கைப்பற்றிக்கொள்வார்கள். இங்குள்ள பல ஜாதியாரும், பல நாட்டாரும், பல மதஸ்தர்களும் ஒருவரோடொருவர் சண்டை போடுவார்கள். அப்போது தேசத்தின் அமைதி கெட்டுப்போம். சில நூற்றாண்டுகளுக்கு முன் தைமூர், நாதர்ஷாவென்னும் கொடுங்கோல் அரசர்கள் இத்தேசத்தைப் படையெடுத்து மிகுதியான பொருளைக் கொள்ளையிட்டுக்கொண்டு போனார்களென்றும், இந்த வரும்படியின் மிகுதியால் தங்களுடைய குடிகளிடமிருந்து ஒருவிதமான தீர்வையையும் பல வருஷகாலம்வரையில் வாங்காமலிருந்தார்களென்றும்

கேள்வியுறுகிறோம். அன்றியும், உலகத்தில் திருட்டிருக்கும் வரையில் காவலாளிக்குக் கட்டணமளித்தே ஆகவேண்டும். நாகரிகமும், நல்லொழுக்கமும்எப்போது நிலைபெறுமோ, தெருவில் ஒருவனால் தவறி விடப்பட்ட மோகராவானது மறுபடி சில தினங்களுக்குப் பின் அவனால்தேடப்படும்போது ஒருவராலும் அபகரிக்கப்படாமல் இருந்த விடத்திலேயே இருக்கும் நிலைமை எப்போது நம்தேசத்துக்கு வருமோ, மண்ணாசையென்ற பேயின் வாயினின்றும் அயல்நாட்டார் எப்போது விடுபடுகிறார்களோ, அந்தக் காலம்வரையில் தேசக்காவல் இருக்கவேண்டியது அவசியமே. வேண்டியதில்லையென்று சொல்வது அறியாமையாகும்.



தைமூர்.

சண்டை வரும்போது, போர்வீரர்களைத் தெரிந்தெடுப்பது அசாத்யமாகும். யுத்தமுறைமை தெரியாத வீரர்களைக் காக்கைக் கூட்டமென்றே சொல்லலாம். முன்னொருகாலத்தில், ஓர் அரசன் சேனையினால் பணநஷ்டமுண்டாகிறதென்று நினைத்துக் காட்டிலிருக்கும் குரங்கு



களைப் பிடித்துவந்து சண்டைபோடும் வழிகளை அவற்றிற்குக் கற்பித்தான். அவை யாவும் துப்பாக்கி முதலியவற்றைத் தாங்கிக்கொண்டு மிக்க ஊக்கத்துடன் தேசத்தைக் காத்துவந்தன. புத்திசாலியான ஒரு விரோதி இந்தக் குரங்குச்சேனையை ஜயிப்பதற்குச் சுலபமான வழியொன்றைக் கண்டுபிடித்தான். தேங்காய்க் கீற்றுக்களை மிகுதியாக வண்டிகளில் ஏற்றிக்கொண்டு சில ஆட்களுடன் குரங்குகள் இருக்குமிடம் வந்து அவற்றின் முன்னே அந்தக் கீற்றுக்களை வாரி இறைத்தான். உடனே குரங்குகள் துப்பாக்கிகளைக் கீழே எறிந்துவிட்டுத் தேங்காய்க் கீற்றுக்களை எடுக்க ஆரம்பிக்கவே அந்தப் புத்திசாலி துப்பாக்கிகளைப் பொறுக்கிக்கொண்டு, குரங்குகளைத் துரத்திவிட்டு, ராஜ்யத்தையும்கைபற்றிக்கொண்டான். இம்மாதிரி பணலாபத்தையே உத்தேசித்து, தேசத்தைக் கெடுத்துவிடலாகாது. அவசியமில்லாமல் ஒரு நொடிப்பொழுதேனும் சேனையை வைத்துக்கொள்ள வேண்டுமென்று எந்தத் துரைத்தனத்தாரும் எண்ணுவதில்லை. சேனைச் செலவென்ற பெரும்பாரத்தைக் குடிகளின் முதுகிலிருந்து எப்படி எடுத்துவிடலாமென்று நாகரிகம் மிகுந்த ஐரோப்பா கண்டத்திலும் துரைத்தனத்தார்கள் யோசித்துக்கொண்டிருக்கின்றார்கள். ஒரு வழியும் தெரியவில்லை. ஏனெனில், மண்ணாசை, பொன்னாசையென்ற வலையிற் சிக்கிக்கொண்ட மனிதர்களும் ஜாதியார்களும் இவ்வுலகத்தின் அமைதியைக் கெடுக்கிறவரையில் மேற்சொல்லிய பாரத்தைக் குறைப்பது

அசாத்தியமானகாரியம். ஜனங்களுக்கு மிருகத்தன்மை நீங்கி நற்குணங்கள் உண்டாக உண்டாக, இப்பாரம் குறைந்துகொண்டே வரும்.

"மன்னவன் வலிசெங் கோலினலன்றி
 வாளினாற் சேனையா லில்லை
நன்னெறி வழுவா மன்னவன் றனக்கு
 நாடெலாம் பேரா னுலகின்
மன்னுயி ரெல்லா மவன்படை யன்னோர்
 மனமெலா மவனுறை பீட
மின்னதன்மையனு யரசளிப் பவனை
 யிகல்செயுந் தெறுநரு முளரோ." (நீதிநூல்.)

"உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
 வெறுக்கையு ளெல்லாந் தலை." (திருக்குறள்.)

## 9.—துரைத்தனமும், தபாலும், தந்தியும்

சீட்டுத்தூக்கிவேலையின் உபயோகம்—இஃது எவ்விதம் துரைத்தனத்தாரால் செய்யப்படுகின்றது?—நாம் போடும் கடிதத்தின் விருத்தாந்தம்—தபால் தலைகளின் உபயோகம்—தபால் இலாகாவினால் நமக்குக் கிடைக்கும் மற்ற நன்மைகள்—இந்த இலாகாவின் அமைப்பும் அதிகாரிகளும்—தந்திகொடுக்கும் முறைகள்—தந்தியுள்ள இடத்தின் விஸ்தீரணம்—இதன் வரவு செலவு—இந்த ஸாதனங்களின் நன்மைகள்.

இத்தேசத்தில், மூலையிலிருக்கும் கிராமத்திலும் பொழுது விடிந்தவுடன் தபாற்காரன் வரவை மிக்க ஆவ





தபாற்காரன்.

லோடு ஜனங்கள் எதிர்பார்க்கின்றார்கள். இராஜாங்கத்தார் அளித்திருக்கும் மற்ற நன்மைகள் ஜனங்களுக்குப் பெரும்பாலும் தெரியாவிட்டாலும் அவர்கள் ஏற்படுத்தியிருக்கும் தபால், தந்தி, இருப்புப்பாதை இவற்றின் உபயோகம் நன்றாகத் தெரியும். முற்காலத்தில் இவ்விதமான ஸௌகரியங்கள் இத்தேசத்தில் இப்போது இருப்பதுபோல இருந்ததாகத் தெரியவில்லை. சொற்பப் பணத்தைப் பெற்றுக்கொண்டு, வேறு இடங்களுக்கு ஸௌகரியமாகச் சமாசாரங்களை அனுப்ப அமைத்தி

ருக்கும் உபாயங்கள் யாவும் இத்தேசத்திற்குப் புதிய வையென்றே சொல்லவேண்டும்.

சமாசாரங்களை யனுப்புவதற்காகத் **தபால்** என்றும், **தந்தி** என்றும் இரண்டு பிரிவுகள் உள்ளன. கடிதமூலமாக, தூரதேசத்திலிருக்கும் ஸ்நேகிதர்களோடும், பந்துக்களோடும் சிறிதும் சிரமமில்லாமல் ஸம்பாஷிக்கிறோம். காலணா இருந்தால் காசியில் உள்ளவனுக்குச் சமாசார மனுப்பலாம். ஓரணா இருந்தால், சீமையிலுள்ளவருடன் பழக்கம் வைத்துக்கொள்ளலாம். நாம் செய்யும் செலவு சொற்பமாயினும் அடையும் பயன் மிகுதியாக இருக்கிறது. அந்தரங்கமான சமாசாரம் எழுதவேண்டுமானால் அரைஅணா போதுமானது. கடிதம் அனுப்புதல், பணம் அனுப்புதல், பணத்தைப் பாதுகாத்தல், ஸாமான்கள் அனுப்புதல் முதலிய வேலைகளைக் கவனிப்பதற்குப் பட்டணங்களிலும், முக்கியமான சில கிராமங்களிலும் தபால் ஆபீஸ்களை ஏற்படுத்தி, அவற்றில், உத்தியோகஸ்தர்களையும், சேவகர்களையும் நியமித்திருக்கிறார்கள். ஆபீஸ்கள் இல்லாத கிராமங்களிலும் ஜனங்கள் ஸௌகரியமாகச் சமாசாரம் முதலியவற்றை யனுப்பவும், பெற்றுக்கொள்ளவும் வழிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். கடிதம் எழுதுவதற்கு உபயோகமாகக் காலணாமுதல் 26 ரூபாய்வரையில் விலையுள்ள பல வகையான கடிதச் சீட்டுக்களும், உறைகளும், தலைகள் என்று வழங்கும் சிறு துண்டுக் கடிதங்களும் ஒவ்வொரு தபால் ஆபீஸிலும் விற்கப்படுகின்றன. இவை ஒவ்





ஜெனரல் போஸ்டாபீஸ், சென்னை.

வொன்றிலும் சக்கரவர்த்தியின் தலையுருவம் அச்சிடப்பட்டிருப்பதையும், கடிதச் சீட்டைத்தவிர மற்றவற்றிற் பதை தடவப்பட்டிருப்பதையும் யாவரும் பார்த்திருக்கலாம். கடிதம் எழுதுவதற்கு அவர்கள் விற்கும் சீட்டையும், உறையையுமே உபயோகிக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை. நமக்கு அழகாகத் தோற்றும் வேறு சீட்டுக்களையும், உறைகளையும் உபயோகித்து அவர்கள் விற்கும் தலைகளை வாங்கி ஒட்டி வெளியூர்களுக்கு அனுப்பலாம். கடிதம் அனுப்புகிறவர்கள் முன்னாடியே பணங் கொடுத்துச் சீட்டுக்களையோ, உறைகளையோ, தலைகளை

யோ வாங்கி எப்படி அனுப்பவேண்டுமோ அப்படி அனுப்பவேண்டும். இல்லாவிட்டாற் பெற்றுக்கொள்பவர்கள், ஏற்பட்டிருக்கும் விகிதத்தைப்போல் இரண்டு பங்கு விகிதம் கொடுத்தே கடிதங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும். நாம் கொடுக்கும் பணம், துரைத்தனத்தார் நமக்குச் செய்யும் வேலைக்கு முன்கூலியேயன்றி, தபாற்சீட்டு முதலியவற்றின் கிரயம் என்று நினைத்தல் தவறு. ஏனெனில், காலணாவுக்கு வாங்கும் சீட்டைக் காட்டிலும், 1 ரூபாய், 8 அணு இவற்றிற்கு வாங்கும் தலைகள் கனத்திற் குறைவாகவே இருக்கும். தலைகள் விலைக்குத் தக்கபடி பல நிறங்களில் உள்ளன. ஒவ்வொன்றிலும், ஏற்பட்டுள்ள விலை அச்சிடப்பட்டிருக்கிறது. தலைகள் பலவற்றை வரிசையாகச் சேர்த்து அச்சிட்டு, கிழிப்பதற்குச் சௌகரியமாக இடையிடையே துளையிட்டிருக்கிறார்கள். தபால் ஆபீஸ்களிலும் முக்கியமான தெருக்களிலும் கடிதங்களைப் போடுவதற்குப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. இன்ன இன்ன பெட்டிகளிற் போடும் கடிதங்களை இன்ன இன்ன காலங்களில் எடுப்பதென்ற வரையறையுண்டு.

காலணாச் சீட்டைக்கொண்டே கடிதப் போக்குவரவு வேலை இவ்வளவு விரைவாகவும் ஒழுங்காகவும் நடந்து வருகிறதென்பதைத் தெரிந்துகொள்ளலாம். அச்சீட்டில், சக்கரவர்த்தியின் தலை உருவம் அமைந்த பக்கத்தில் மேல்விலாஸத்தையும் மற்றொருபக்கத்திற் சமாசாரத்தையும் எழுதிக் குறித்த காலத்துக்குள் தபாற்



கடிதத்தின் யாத்திரை.

பெட்டியிற் போட்டுவிட்டால், தபால் உத்தியோகஸ்தர்கள் மற்றக் கடிதங்களோடு அதனை எடுத்து, ஆபீஸின் பெயரும், தேதியும் அடங்கிய முத்திரையிட்டுத் துணிப்பையிற் போட்டுக் கட்டி, முடிப்பில் அரக்குமுத்திரை வைத்துச் சமீபத்திலுள்ள ரயில்வே ஸ்டேஷன்களுக்கு அனுப்பிவிடுவார்கள். கடிதங்கள் அடங்கிய மூட்டை அதிகக் கனமாக இருந்தால், ஆள் இழுக்கும் கை வண்டியிலாவது குதிரை வண்டியிலாவது கொண்டுபோகப்படுகிறது. இல்லாவிட்டால் ஆளே தலையில் தூக்கிக்கொண்டு சலங்கைகள் கட்டிய தடியுடன் சப்தஞ் செய்துகொண்டு போவான். தபால் வண்டியைக் கண்டாலும், தபால் மூட்டையைக் கொண்டுபோகும் ஆளைக் கண்டாலும் எல்லாரும் விலகிக்கொள்வார்கள். புகைவண்டிகளில் மெயில்வான் என்னும் தனியான தபால் வண்டியொன்று உண்டு. அந்த வண்டியில் இருக்கும் உத்தியோகஸ்தர்களிடம் தபால் மூட்டை ஒப்புவிக்கப்படுகிறது. அவர்கள் இந்த மூட்டையைப் பிரித்து அதில் அடங்கிய கடிதங்களைச் சேரவேண்டிய ஊர்களுக்குத் தக்கபடி வகுத்துக்கொண்டு ஊர் வந்தவுடன் ஸ்டேஷனிற் காத்துக்கொண்டிருக்கும் சேவகனிடம் அந்த ஊர்க் கடிதங்களை ஒரு பையிற் கட்டி முத்திரையிட்டுக் கொடுத்துவிடுகிறார்கள். அவன் அந்த ஊர்த் தபாற்சாலையில் அதைச் சேர்க்கிறான். அவ்விடத்திலுள்ள அதிகாரிகள், பையை அவிழ்த்துக் கடிதங்களை எடுத்து, அந்த ஆபீஸின் பெயரும் தேதியும் அடங்கிய



முத்திரையைப் போட்டுத் தபாற் சேவகர்களிடம் கொடுத்துவிடுகிறார்கள். அச்சேவகர்கள் தெருத்தெருவாகப் போய்க் கடிதங்களைக் குறிப்பிட்ட விலாஸமுள்ளவர்களிடம் சேர்ப்பிக்கிறார்கள். இருப்புப்பாதையை விட்டு விலகியிருக்கும் கிராமங்களுக்கும் தபாற்சேவகர்கள் ஓடிப்போய்க் கடிதங்களைச் சேர்ப்பிக்கிறார்கள்.

ஒரு கடிதத்தைப் பார்த்தால் அது போடப்பட்ட ஊரின் பெயரும் தேதியும், சேர்ந்த ஊரின் பெயரும் தேதியும் விளங்கும். கடிதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய மனிதர் குறிப்பிட்ட ஊரில் இல்லாமல் வேறு ஊருக்குப் போயிருந்தால் அந்த ஊருக்கு அக்கடிதம் ஒருவிதமான கூலியும் இல்லாமல் அனுப்பப்படுகின்றது. தபால் ஸம்பந்தமான வேலைகள் மிகுதியாக இருந்தாலும், ஆயிரக்கணக்கான உத்தியோகஸ்தர்களையும், சேவகர்களையும் துரைத்தனத்தார் நியமித்திருப்பதாற் கடிதங்கள் சரியான காலங்களில் தவறாமல் அநேகமாக வந்துவிடுகின்றன. ஜனங்கள் போடுந் தபால்களை வெளியிடங்களுக்கு அனுப்பும் தொழிலை மட்டும் செய்யும் தபால் ஆபீசுகளும், அதனோடு வெளியிடங்களிலிருந்து வரும் கடிதங்களை ஜனங்களுக்கு அனுப்பும் வேலையையும் கவனிக்கும் தபாலாபீசுகளும் உள்ளன.

கடிதங்களைப் பெட்டியிற் போட்டபிறகு தபாலுத்தியோகஸ்தர் முத்திரை போடுவது, சக்கரவர்த்தியின் தலையுருவம் அச்சிடப்பட்டுள்ள இடத்திலேதான். ஏன்

அழகான உருவத்தை முத்திரை போட்டுக் கொடுத்துவிட வேண்டுமென்று சிலர் எண்ணக்கூடும். அந்தத் தலைகள் நாம் கொடுக்கும் பணத்துக்குச் செல்லுச் சீட்டாக இருப்பதால் பிறர் அவற்றை மறுபடி உபயோகித்துத் துரைத்தனத்தாருடைய வரும்படியைக் கெடுக்காமலிருக்கும்பொருட்டே யென்று எண்ணவேண்டும். முத்திரைபோட்ட தலைகளை ஒட்டினால் அவற்றை ஒட்டியவர்களுக்கு அபராதம் இவ்வளவென்று விதிக்கப்பட்டிருக்கிறது. துரைத்தனத்தார் தங்களுடைய ஸமாசாரப் போக்கு வரவுக்காகத் தனியான சீட்டுக்கள், தலைகள் முதலியவற்றை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவற்றை மற்றவர் உபயோகித்தால், கடுந்தண்டனையடைவார்கள்.

தபால் விகிதங்கள் எடைக்குத் தக்கபடி ஏற்பட்டிருக்கின்றனவேயன்றி, தூரத்திற்குத் தக்கபடி இல்லை. ஆனால் 1837-ம் வருஷத்தில் இத்தேசத்தின் தபால் வேலையை துரைத்தனத்தார் ஏற்றுக்கொள்ளும் காலத்தில் முத்திரைபோட்ட தலைகளை ஏற்படுத்தவில்லை. தூரத்திற்கும் எடைக்கும் தக்கபடி முன் கூலியைக் கொடுத்துவந்தார்கள். அக்காலத்தில் பம்பாயினின்றும் கல்கத்தாவிற்கு ஒரு ரூபாய் எடையுள்ள கடிதத்தை அனுப்ப ஒரு ரூபாய் கட்டணம் கொடுக்கும்படியிருந்தது. பிறகுதான் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் எடைக்குத் தக்கபடியே கட்டணங்கள் ஏற்பட்டன. எடைக்குத் தக்கபடி வைத்துக்கொள்வதுதான் துரைத்



தனத்தாருக்கும் ஜனங்களுக்கும் எளிதான வழியாகும். பத்து மைலுக்குக் காலணாவென்று வைத்துக்கொண்டபோதிலும் 2,000 மைலுக் கப்பால் இருக்கும் மனிதனுக்குக் கடிதம் எழுத 3 ரூபாய்க்குமேல் ஆகும். அப்போது பலர் கடிதம் எழுதுவதையே நிறுத்திவிடுவார்கள். "காலணாதானே கடிதம் எழுதுவோம்" என்று எழுதுவோர் எத்தனையோபேர்கள் இருக்கிறார்கள். விகிதம் அதிகமாக இருந்தால் அத்யவசியமான காரணம் ஏற்பட்டாலன்றி அநேகர் கடிதம் எழுதமாட்டார்கள். அன்றியும் நாம் எவ்வளவு தூரத்திற்குக் கடிதம் எழுதிப்போட்டாலும் தபால் உத்தியோகஸ்தர்களுக்குச் சற்றேறக்குறைய வேலை ஒன்றுதான். ஒருவனுக்கென்று துரைத்தனத்தாரால் எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. ஆகையால், மிக்க ஏழைகள் தபாலுக்கு எவ்வளவு செலவு செய்யக்கூடுமென்பதையே ஒரு நிதானமாக வைத்துக்கொண்டு இந்த விகிதங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள்; ஜனங்களுக்கு இதில் இருக்கும் உபயோகம் மிகுதியே. விகிதங்களை மிகக் குறைவாக ஏற்படுத்தியும் துரைத்தனத்தாருக்கு விசேஷமான லாபம் கிடைக்கிறது. 'எடைக்குத் தக்கபடி விகிதம் ஏற்பட்டிருக்கிறது' என்று சொன்னோம். கடிதங்களுக்கு, ஒரு ரூபாய் எடைவரையில் $\frac{1}{2}$ அணாவும், 10 ரூபாய் எடை வரையில் 1 அணாவும், மேற்பட்ட ஒவ்வொரு 10 ரூபாய் எடைக்கும் 1 அணா வீதமும் விகிதங்கள் ஏற்பட்டுள்ளன. சமாசாரக் கடிதங்களையல்லாமல் சமா

சாரப் பத்திரிகைகளும், புஸ்தகங்களும், வஸ்திரங்களும், நகைகளும், பணமும், மற்றச் சாமான்களும், தபால்மூலமாக உள்நாட்டிலுள்ள பல இடங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றன. உள்நாட்டிலிருப்பதைவிட வெளிநாட்டுக்குத் தபால் விகிதங்கள் அதிகமாக உள்ளன.

தபால் உத்தியோகஸ்தர்கள் தபால் இலாகா சம்பந்தமான கடிதங்களை மற்ற உத்தியோகஸ்தர்களுக்கு அனுப்பவும், தபால் அதிகாரிகள் செய்யும் அக்கிரமத்தைப்பற்றி மேலதிகாரிகளுக்கு ஜனங்கள் தெரிவிக்கவும் தபால்தலைகளைக் கடிதங்களில் ஒட்டவேண்டியதில்லையென்ற விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

நம்முடைய பந்துக்களுக்காவது ஸ்நேகிதர்களுக்காவது பணம் அனுப்பவேண்டுமானால் கூலியைப் பெற்றுக்கொண்டு தபால் உத்தியோகஸ்தர் குறிப்பிட்டவர்களுக்கு அனுப்பிவிடுவார்கள். ஒரு சாமானைப் பிறருக்குத் தபால்மூலமாக அனுப்பி அதன் கிரயத்தையும் தபாற்கூலியையும் நாம் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இதற்குக் கூலி கொடுக்கவேண்டும். விலையுள்ள சாமான்களையும், நாணயச் சீட்டுக்களையும், தபால்வழியாக அனுப்பவேண்டுமானால், நன்றாகக் கட்டி அரக்கு முத்திரையிட்டு அனுப்புகிறவர் பெயரையும் விலாசத்தையும் எழுதி, ஏற்பட்ட கூலியைத் தபால்தலை ரூபமாக ஒட்டி அவற்றைத் தபால் உத்தியோகஸ்தரிடம் கொடுக்கிறோம். அவர் அவற்றைப் பெற்றுத் தம்மு

120754



டைய புஸ்தகத்திற் பதிந்துகொண்டு நமக்குச் செல்
லுச்சீட்டுக் கொடுத்துவிட்டு உரிய இடங்களுக்கு
அனுப்பிவிடுவார். வழியில் எந்தவிதமாகவாவது அவை
தவறிப்போனால், துரைத்தனத்தார் நன்றாக விசாரணை
செய்து அவற்றிற்கு ஈடாகப் பணத்தைப் பாத்தியமுள்
ளவர்களிடம் கொடுத்துவிடுகிறார்கள். இந்த ஏற்பாட்
டிற்கு 'இன்ஷ்யூரன்ஸ்' என்று பெயர். தபால்வழியாக
அனுப்பும் ஸாமான்களில் அனுப்புகிறவருடைய பெய
ரும், விலாஸமும் எழுதப்பெற்றிருந்தால், பெற்றுக்
கொள்பவரிடம் அவை சேராமற்போனாலும் அனுப்
பினவரிடம் எப்படியும் வந்து சேரும்.

துரைத்தனத்தார் இந்த இலாகாவில் நமக்குச் செய்
திருக்கும் நன்மைகள் இன்னும் சில உள. ஒவ்வொரு
வரும் ஆபத்தனமாகச் சேர்க்க விரும்பி அப்போதப்
போது கொடுக்கும் பணத்தை வைத்துக் காப்பாற்றி
நூற்றுக்குக் கால்வீதம் வட்டி சேர்த்து அவர்கள் வேண்
டும்போது கொடுக்கிறார்கள். இவ்விஷயத்தில் அவர்
கள் ஒருவிதமான கூலியையும் பெற்றுக்கொள்வதில்லை.
ஆனால், இவ்வளவுக்கு மேற்பட்ட தொகை ஒருவனு
டைய கணக்கில் இருக்கக்கூடாதென்றும் ஒரு வாரத்தில்
ஒரு தடவையேயன்றி நினைத்தபோதெல்லாம் பணம்
திரும்பி வாங்கக்கூடாதென்றும் நிபந்தனையுண்டு. சேனை
யிலிருந்து நீங்கிய போர்ச்சேவகர்களுக்கு மாதந்தோ
றும் உபகாரச்சம்பளம் கொடுக்கவும், ஜ்வரத்தைத் தீர்க்
கும் மருந்தாகிய 'கொயினா'வை விற்கவும் தபாலாபீ

வில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். துரைத்தன உத்தியோகத்தில் இருப்பவர்கள் தங்களுடைய தள்ளாத பருவத்திற் செலவிடவோ, பிற்காலத்தில் தங்களுடைய மனைவிகளும், மக்களும் வருத்தமின்றி ஜீவிப்பதற்கு ஸௌகரியப்படுத்தவோ உத்தேசமாகச் சேர்த்துவைக்க வேண்டுமென்று தாங்கள் எண்ணும் தொகைக்குத் தக்கபடி மாதந்தோறும் தங்கள் சம்பளத்தில் ஒரு பகுதியை மிகுத்து முன்பணமாகக் கொடுத்துவந்தால் அவர்கள் குறிப்பிடுங்காலத்தில் அவர்களிடமாவது, அவர்கள் இறந்தபிறகு அவர்கள் சந்ததியாரிடமாவது, குறிப்பிட்ட தொகையைத் துரைத்தனத்தார் கொடுக்கிறார்கள். அநேக குடும்பங்களுக்கு இவ்விதமாகக் கிடைக்கும் ஆபத்தனமானது பேருபகாரமாக இருக்கிறது.

சில இடங்களிற் பள்ளிக்கூட உபாத்தியாயர்களும், ஸ்டேஷன்மாஸ்டர்களும் தபால்வேலைகளைக் கவனித்து வருகிறார்கள். சாதாரணமாக ஒவ்வொரு தபாலாபீஸிலும் **போஸ்மோஸ்டர்** என்ற அதிகாரியும் அவருக்கு அடுத்தபடி சில குமாஸ்தாக்களும் தபாற்சேவகர்களும் இருப்பது யாவருக்குந் தெரியும். தபாலாபீஸ்களின் மேல்விசாரணைக்காக இத்தேசத்தை 11 பிரிவு அல்லது ஸர்கில்களாகச் செய்து ஒவ்வொரு பிரிவையும், பல வகுப்பு அல்லது டிவிஷன்களாக வகுத்து, அந்த அந்தப் பிரிவுகளுக்கும், வகுப்புக்களுக்கும் தக்கபடி மேலதிகாரிகளை நியமித்திருக்கின்றார்கள். இந்த அதிகாரிகளுக்கு முறையே போஸ்ட்மாஸ்டர் ஜனரலென்



றும், தபால் மேல்விசாரணைக்காரரென்றும் பெயர். எல்லாருக்கும் மேற்பட்ட அதிகாரிக்கு **டைரக்டர் ஜனரல்** என்று பெயரிட்டிருக்கிறார்கள். சூபரின்டென்டென்டுக்கு அடுத்தபடியாக ஒவ்வொரு தபாலாபீஸையும் சுற்றிப் பார்க்கும்பொருட்டு **இன்ஸ்பெக்டர்கள்** என்ற அதிகாரிகள் இருக்கிறார்கள். 1904-ம் வருஷத்தில் தபாலிலாகா இருந்த நிலைமையானது பின்வரும் அட்டவணையால் விளங்கும்:—

| | |
|---|---|
| தபாலாபீஸ்கள் .... .... .... | 15,403. |
| தபாற்பெட்டிகள் .... .... .... | 34,005. |
| கடிதங்கள் .... .... .... | 286,822,556. |
| சமாசாரப் பத்திரிகைகள் .... .... | 34,262,838. |
| மூட்டைகள் (Parcels) .... .... | 3,941,809. |
| தலைமை அதிகாரிகளும், அவர்களுக்கு அடுத்தவர்களும்.... .... .... | 25. |
| சூபரின்டென்டென்டுகளும் இன்ஸ்பெக்டர்களும் .... .... .... | 536. |
| போஸ்ட்மாஸ்டர்கள் .... .... | 6,229. |
| தபால் வேலைசெய்யும் ஸ்கூல்மாஸ்டர்களும், ஸ்டேஷன்மாஸ்டர்களும் .... | 9,371. |
| குமாஸ்தாக்கள் .... .... .... | 10,222. |
| தபாற்சேவகர்கள் .... .... .... | 28,073. |
| தபால்மூட்டையைத் தூக்கிக்கொண்டு ஓடும் சேவகர்கள் .... .... | 20,419. |

| | |
|---|---|
| தந்தியடிப்போர்கள் .... .... | 2,715. |
| இலாகா வேலைக்காரர்களின் மொத்தம்.. | 77,590. |
| சென்ற மூன்று வருஷங்களிற் கிடைத்த ஆதாயம் ரூ. .... .... .... | 41,00,000. |
| ஒரு வருஷத்திற் குற்றத்திற்காகத் தள்ளப்பட்டவர்கள் .... .... .... | 534. |
| சேமப்பொருள் நிதியில் (Savings Bank) சேர்ந்தவர்கள் .... .... | 9,87,635. |
| சேமப்பொருள் ரூ. .... .... | 12,33,00,000. |
| மேற்படி தொகையின் வட்டி ரூ. .... | 35,00,000. |

மேற்காட்டிய விஷயங்களால் இந்த இலாகாவின் பெருமையும், உபயோகமும், அளவும் நன்கு புலப்படும். வரும்படி பெருகப் பெருகத் தபாலுத்தியோகஸ்தர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுத்து அவர்களைச் சுகமாக வைப்பது தருமமென்று துரைத்தனத்தார் நினைக்கிறார்கள். 1907-ம் வருஷம் வரையில் தபாற் சீட்டுக்களையும், தலைகளையும், தபாலுத்தியோகஸ்தர்களுக்குத் தாகு கொடுத்து விற்றுவந்தனர். இப்பொழுது தாகில்லாமல் விற்பனை செய்கிறார்கள். இதனால் எஞ்சிய தொகையைத் தபாலுத்தியோகஸ்தர்களின் சம்பளத்தை அதிகப்படுத்த உபயோகிக்கிறார்கள்.

அநேக இடங்களில் தபாலாபீஸ்களோடு தந்தி ஆபீஸ்களும் சேர்ந்திருப்பதை நாம் பார்க்கிறோம். தந்தியென்பது தபாலைக்காட்டிலும் மிக விரைவாகச் சமா



சாரத்தை அனுப்புதற்குரிய சிறந்த உபாயமாகும். கடிதங்களைப் புகைவண்டியிலேற்றிச் சீக்கிரம் அனுப்புவது போலச் சமாசாரங்களை மின்சாரக்கம்பிகள் வழியாக அனுப்புகிறார்கள். அவஸரத் தந்தியென்றும், சாதாரணத் தந்தியென்றும், தந்தி இரண்டுவகைப்படும். இரண்டிற்கும் தனித்தனி கூலிகள் ஏற்பட்டுள்ளன. தந்தி ஆபீஸ்களில் விலையின்றிக் கிடைக்கும் அச்சிட்ட கடிதத்தை வாங்கிச் சமாசாரத்தையும், பெற்றுக்கொள்பவர் விலாஸத்தையும் சுருக்கமாக ஆங்கிலத்தில் எழுதி, ஏற்பட்ட கூலியைத் தபால்தலைகள் ரூபமாக அதில் ஒட்டித் தந்தி ஆபீஸிற் கொடுத்துவிட்டால், ஆபீஸிலுள்ளவர்கள் ஸமாசாரத்தைக் குறிப்பிட்ட இடத்துக்கு அனுப்பிவிடுவார்கள். நாம் தந்தி கொடுத்ததற்கு அறிகுறியாகச் செல்லுச்சீட்டுக்களைக் கொடுக்கிறார்கள். சாதாரணமான தந்திகளுக்கு 12 வார்த்தைகள் வரையில் 6 அணுவும், மேற்பட்ட வார்த்தை யொன்றுக்கு ½ அணுவும், அவஸரத் தந்திகளுக்கு 12 வார்த்தைகள் வரையில் ஒரு ரூபாயும், மேற்பட்ட வார்த்தை யொன்றுக்கு 2 அணுவுமாக விகிதங்கள் இப்போது ஏற்பட்டுள்ளன. சமாசாரத்தை ஒரு கடிதத்தில் எழுதி அதைச் செந்நிறமான ஓர் உறையிற் போட்டு, மேல் விலாஸத்தை அதில் எழுதிக் குறிப்பிட்டவருக்குத் தந்தி யுத்தியோகஸ்தர்கள் அனுப்புகிறார்கள். மேல் விலாஸமும் 12 வார்த்தைகள் என்ற கணக்கிற் சேரும்; தந்தி போய்ச் சேரவேண்டிய ஊர் தந்தி ஆபீஸிலிருந்து

7 மைலுக்கு அப்பால் இருந்தால் தந்தி விகிதத்துடன் எடுத்துக்கொண்டு போவதற்காக ஆட்கூலியும் கொடுக்க வேண்டும்.

1904-ம் வருஷத்தில் 2,127 தந்தி ஆபீஸ்கள் இருந்தன. அவற்றுள் 1,859 தபாலாபீஸ்களோடு சேர்ந்திருந்தன. மற்றவை தனித் தந்தி ஆபீஸ்களே. வருஷந்தோறும் சில தந்தி ஆபீஸ்கள் துரைத்தனத்தாரால் நூதனமாக ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. இத்தேசத்தில் 1855-ம் வருஷம் முதல்தான் தந்தி போடுவதற்குத் துரைத்தனத்தார் ஆரம்பித்தனர். முதலில் சற்றேறக்குறைய 3,000 மைல் விஸ்தீரணத்திற்குத் தந்தி போடப்பட்டது. இப்பொழுது இத்தேசத்தில் தந்தி பாவியிருக்கும் விஸ்தீரணம் 69,000 மைல் இருக்கும். தந்திவேலை செய்வதால் துரைத்தனத்தாருக்கு 125 லக்ஷம் ரூபாய் வரவும், 96 லக்ஷம் ரூபாய் செலவும் ஆகின்றன. வருஷந்தோறும் ஏறக்குறைய ஒருகோடித் தந்திகள் அனுப்பப்படுகின்றன.

இவ்விதமாகத் துரைத்தனத்தார், தந்திமூலமாகவும், தபால்மூலமாகவும் ஜனங்களுக்குப் பல நன்மைகளைச் செய்கிறார்கள். சமாசாரங்களை அனுப்புவதில் ஜனங்களுக்கு அதிகப் பணச்செலவில்லை. ஆயிரக்கணக்கான ஏழை ஜனங்கள் இந்த இலாகாக்களில் துரைத்தனத்தாரால் நியமிக்கப்பட்டுத் தக்க சம்பளம் பெற்றுப் பிழைக்கிறார்கள். இச்சாதனங்களால் வர்த்தகமும், கைத்தொழிலும், கல்வியும், நாகரிகமும் விருத்தியடைகின்றன. இத்தேசத்திலும் அயல்தேசத்திலும் நடக்கும் விஷயங்களை யாவரும் நன்றாகத் தெரிந்து கொள்ளக்கூடிய சமாசாரப் பத்திரிகைகள், தந்தியும், தபாலு மில்லாவிட்டால், ஒழுங்காக நடைபெறா. அல்லாமலும், இச்சாதனங்கள் துரைத்தனத்திற்கும், தேசக்காவலுக்கும் இன்றியமையாதவை. இத்தேசத்திற் கலகம் நேரிட்டாலும் அயல்தேசத்தாரால் விரோதமுண்டானாலும் சிறந்த இவ்வுபாயங்களாற் பல சேனைகளை உடனே வருவித்துச் சேர்த்து வைத்துக்கொண்டு நன்றாகக் காக்கலாம். இந்நாட்டுப் பெருக்கத்துக்குக் காரணமான அயல்நாட்டு வர்த்தகமானது இச்சாதனங்களில்லாவிடின் மிகக் குறைந்துவிடும். சமாசாரப் போக்குவரவுக்காக முற்காலத்தார் செய்துவந்த ஏற்பாட்டிற்கும், இப்போது ஆங்கிலேய துரைத்தனத்தார் அமைத்திருக்கும் ஸாதனங்களுக்குமுள்ள வித்தியாசங்கள் இன்னவை யென்பதை யாவரும் இப்போது தெரிந்து கொள்ளக்கூடும்.



"வகையாமின் னஞ்சலினு லெத்திசையுள் ளோரோடும்
வார்த்தை சொல்வோம்." (நீதிநூல்.)

# 10.—துரைத்தனமும் இருப்புப்பாதைகளும்

**இருப்புப்பாதைகளின் உபயோகம்—துரைத்தனத்தாருக்கும் இவற்றிற்கும் உள்ள சம்பந்தம்—பாதைகளின் விவரம்—இவற்றால் ஜனங்களுக்கு உண்டாகும் நன்மை—துரைத்தனத்தார் மேல்விசாரணைக்காகச் செய்திருக்கும் ஏற்பாடுகள்.**

தபால், தந்தியிலாகாக்களின் உபயோகங்கள் முன் அத்தியாயத்தில் தெரிவிக்கப்பட்டன. தபால்வேலைக்கு இன்றியமையாததாக இருப்பது இருப்புப்பாதை. முற்காலத்தில் டில்லி ஸுல்தான்களிற் சிலர் தபால்களுக்காகக் குதிரைவண்டிகளை ஏற்படுத்திக் குடிகளுக்கு உதவி செய்ததை ஜனங்கள் புகழ்ந்து பேசுகிறார்கள்; அப்படியானால் இப்பொழுது மணிக்கு 50 மைல் வீதம் வேகமாக ஓடும் புகைவண்டிகளை எவ்வளவு சிறப்பித்துச் சொல்லவேண்டும். இவ்வண்டிகள் தபால்கள் அடங்கிய மூட்டைகளை இழுப்பதல்லாமல் பிரயாணிகளையும், சாமான்களையும், ஆடுமாடுகள், குதிரைகள் முதலிய மிருகங்களையும் ஏற்றிக்கொண்டு மிக்க வேகமாகச் செல்லுகின்றன.

இவற்றிற்காகப் பெற்றுக்கொள்ளும் கூலியானது, செய்யும் வேலையை உத்தேசிக்கும்போது குறைவென்றே தோன்றும். புகைவண்டி செல்வது நீராவியின் பலத்தால்தான். மாடுகள் பூட்டிய பாரவண்டிகள், வில்வண்டிகள், குதிரைவண்டிகள், பல்லக்குகள் முதலிய வாகனங்களைக்காட்டிலும் புகைவண்டிகள் எவ்விதத்திலும் சிறந்தவைகளே. எவ்வளவு கூட்டமாக இருந்தாலும், ஜனங்கள் மற்ற வாகனங்களில் ஏறிச் செல்லாமல் இப்போது இவற்றிற் பெரும்பாலும் வெளியிடங்களுக்கு ஏறிச் செல்வதே இவற்றின் சிறப்பை விளக்கும்.



இப்போது இந்நாட்டிலுள்ள இருப்புப்பாதைகளின் மொத்த நீளம் ஏறக்குறைய 31,000 மைல் இருக்கும்; இதற்கு 360 கோடி ரூபாய் வரையிற் செலவு பிடித்திருக்கும். இருப்புப்பாதை போடுவது மிகவும் கஷ்டமான வேலை. ஒரு மைல் தூரம் போடுவதற்கு லக்ஷ ரூபாய்க்கு மேற் செலவாகின்றமையாலும், இத்தேசத்தார்கள் பெருந்தொகையைச் செலவுசெய்யச் சக்தியற்றவர்களாயிருந்தமையாலும், இங்கிலாந்திலுள்ள தனவான்களையும், கம்பெனிகளென்ற வர்த்தகச் சங்கத்தார்களையும், இத்தேசத்தில் இருப்புப்பாதை வேலையை ஏற்றுக்கொள்ளும்படி துரைத்தனத்தார் செய்தார்கள். அவர்கள் ஒப்புக்கொள்ளும்பொருட்டு இருப்புப்பாதைகளுக்கு வேண்டிய நிலங்களைத் தாங்களே விலைகொடுத்து வாங்கிக்கொடுப்பதாகவும், செலவிடும் தொகையில் நூற்றுக்குக் குறிப்பிட்ட லாபம் கிடைக்காவிட்டால் அதற்குக் குறையும் தொகையைத் தாங்கள் கொடுப்பதாகவும், அதற்கு மேற்பட்டுவரும் லாபத்திற் பாதியைமட்டும் எடுத்துக்கொள்ளலாமென்றும், சில வருஷங்களுக்குப் பிறகு தாங்களே இருப்புப்பாதைகளையும் வண்டிகளை




இந்தியாவின் இருப்புப்பாதைகள்.



யும், சொந்தத்தில் விலைக்கு எடுத்துக்கொள்வதாகவும் வாக்குறுதி செய்தார்கள். இந்த ஏற்பாட்டிற்கு ஆங்கிலத்தில் "காரண்டி விஸ்டம்" என்று பெயர். இதனால் முதலில் இராஜாங்கத்தாருக்கு நஷ்டம் உண்டாயிற்று. ஆயினும், இப்போது சில இருப்புப்பாதைகளை தாங்கள் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி ஸொந்தத்தில் வாங்கிக்கொண்டு விட்டபடியாலும், வரவர வரும்படி அதிகமாக இருப்பதாலும் வருஷந்தோறும் 3 கோடி ரூபாய்வரையில் லாபம் கிடைக்கிறது. துரைத்தனத்தாரையல்லாமல் இந்நாட்டிற் சில சுதேச ராஜாக்கள் தங்களுக்குச் சொந்தமான ராஜ்யங்களில் தங்களுடைய வரும்படியைக்கொண்டோ, துரைத்தனத்தாரிடம் கடன் வாங்கியோ சில இருப்புப்பாதைகளைப் போட்டிருக்கிறார்கள். இம்மாதிரி போடப்பட்ட இருப்புப்பாதைகளின் மொத்த நீளம் 3,472 மைல் இருக்கும். அன்றியும், சில ஜில்லாக்களில் இப்பாதைகளைப் போடுவதற்காகத் துரைத்தனத்தார் டிஸ்ட்ரிக்ட் போர்ட் என்ற ஜில்லா விசாரணைச் சபையாருக்குக் கடன் கொடுத்திருக்கிறார்கள். ஜில்லா ஸபையார்களால் தஞ்சாவூர் ஜில்லாவில் 105 மைல் நீளத்துக்கும் வங்காளத்தில் 168 மைல் நீளத்துக்கும் இருப்புப்பாதைகள் போடப்பட்டிருக்கின்றன. தாங்களே ஸொந்தத்தில் இருப்புப்பாதைகள் போடும்படியான நிலைமைக்கு இத்தேசத்தார் இன்னும் வரவில்லை. இதற்கு வெகுகாலம் பிடிக்குமென்று தோன்றுகிறது.

இத்தேசத்தில் இப்போது அமைக்கப்பட்டிருக்கும் பலவகையான இருப்புப்பாதைகளும் ஒரேவிதமான அகலமுள்ளவைகளாக இல்லை. தென்னிந்தியா இருப்புப்பாதையைப்போலச் சில குறுகலாகவும், சென்னை இருப்புப்பாதையைப்போலச் சில அகலமாகவும் உள்ளன. பாதைகளின் அகலத்துக்குத் தக்கபடியே வண்டிகளின் அகலமும் இருக்கும். ஓர் இருப்புப்பாதை வழியாகச் செல்லும் வண்டிகள் அகலக் குறைவுள்ள வேறோர் இருப்புப்பாதை வழியாகச் செல்லா. பாதை அதிக அகலமாக இருந்தால், புயற்காற்றின் உபத்திரவம் அதிகமாகத் தெரியாது. இங்கிலாந்திலுள்ள இருப்புப்பாதையின் அகலம் 4 அடி $8\frac{1}{2}$ அங்குலம். புயற்காற்றினால் நேரிடும் அபாயம் இங்கிலாந்தைவிட இந்தியாவில் அதிகமாக இருப்பதால் இருப்புப்பாதைகளின் அகலம் $5\frac{1}{2}$ அடி இருக்கவேண்டுமென்று முதல் முதல் எண்ணி அவ்வாறே செய்தார்கள். ஆயினும், நாளடைவிற் செலவை உத்தேசித்துக் குறுகலான பாதைகளையும் போடலாமென்று 3 அடி $3\frac{3}{8}$ அங்குலம் அகலமுள்ள வழிகளை உண்டாக்கினார்கள். இருப்புப்பாதைகளின் அகலம் ஒரேமாதிரியாக இல்லாவிட்டாற் பஞ்சகாலத்திற் பஞ்சமுள்ள இடங்களுக்கு உணவுப்பொருள்களை விரைவாகக் கொண்டுபோய்ச் சேர்த்தலும், கலகமுள்ள காலங்களிற் சேனைகளைப் பல இடங்களிலிருந்தும் அபாயமுள்ள விடத்திற்குச் சீக்கிரமாக அனுப்புதலும் சிரமமாக இருக்கும். ஆகையால், இந்



நாட்டிற் பல இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும் குறுகலான இருப்புப்பாதைகளையெல்லாம் ஒரேவிதமான அகலமுள்ளவைகளாகச் செய்து ஒன்றோடு மற்றொன்றைச் சம்பந்தப்படுத்தி நாளடைவில் அதிகப் பணம் கிடைக்கும்போது அவற்றை அதிக அகலமுள்ளவைகளாகச் செய்யவேண்டுமென்று துரைத்தனத்தார் உத்தேசித்திருக்கிறார்கள். சில விடங்களில் 2 அல்லது $2\frac{1}{2}$ அடி அகலமுள்ள கிளைப்பாதைகளும் போடப்பட்டிருக்கின்றன.

முதலில் இருப்புப்பாதைகள் போடும்போது இத்தேசத்திற் பிரயாணிகள் மூலமாக அதிக வரும்படி வாராதோ என்று பயந்தார்கள். ஆயினும், ஸ்தலயாத்திரை செய்பவர்களும், தீர்த்தயாத்திரை செய்பவர்களும் விசேஷமாக இங்கு இருப்பதாலும், அதிகமான கூலியையும் வேலையையும் உத்தேசித்து ஜனங்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு அடிக்கடி சென்று வருவதாலும், பிரயாணிகள் மூலமாகக் கிடைக்கும் வரும்படி அதிகரித்துக்கொண்டேவருகிறது. வண்டிகளில் கூலிக்குத் தக்கபடி, முதல் வகுப்பென்றும், இரண்டாவது வகுப்பென்றும், மூன்றாவது வகுப்பென்றும் மூன்று வகுப்புக்கள் உள்ளன. இப்பொழுது பிரயாணிகளாற் கிடைக்கும், 1,176 லக்ஷம் ரூபாய் வரும்படியில், 990 லக்ஷம் ரூபாய் மூன்றாவது வகுப்பில் ஏறிச்செல்லும் பிரயாணிகளாற் கிடைக்கின்றமையால் அவர்களுக்கு வேண்டிய ஸௌகரியங்களை இருப்

புப்பாதைச் சங்கத்தாரைக்கொண்டு நன்றாகச் செய்விக்கத் துரைத்தனத்தார் முயன்றுவருகிறார்கள்.

பிரயாணிகளைக்காட்டிலும் சாமான்களை ஏற்றிச் செல்வதாற் கிடைக்கும் வரும்படி அதிகமாக இருக்கும். இருப்புப்பாதை வண்டிகளில் ஏறாதவர்களும், அவற்றைப் பார்த்தறியாதவர்களும் அநேகர் இருக்கக்கூடுமாயினும், அவற்றில் வந்த சாமான்களை உபயோகித்துக்கொள்ளாதவர் இரார். தானியம், விதைகள், நிலக்கரி, பருத்தி, உப்பு, சர்க்கரை, மரம் முதலியவற்றை எடுத்துச் செல்வதினாலேயே 25 கோடி ரூபாய்க்குமேல் வரும்படி கிடைக்கின்றது. ஓரிடத்தில் அதிகமாகக் கிடைக்கும் விளைபொருள்கள் அவை அகப்படாத மற்ற இடங்களுக்கு இருப்புப்பாதைகளால் விரைவாகக் கொண்டுபோகப்படுகிறபடியாற் சாமான்களின் விலை சற்றேறக்குறைய எல்லாவிடங்களிலும் ஒரேவிதமாக இருக்கின்றது. "ரயிலும் வந்தது, விலையும் ஒன்றுபட்டது" என்ற வசனத்தை யாவரும் கேட்டிருக்கலாம். இத்தேசத்திற் பெரும்பாலும் குடிகள் நிலத்தைப் பயிரிட்டே ஜீவிப்பதால் சரியான காலங்களில் மழையில்லாவிட்டால் உண்டாகும் தீமைகள் மிகுதியாக உள்ளன. ஆகையால், பயிர்த்தொழிலைத்தவிர வேறுவகையான பல தொழில்களும் இருந்தாற் பஞ்சத்தினால் நேரிடும் அபாயம் குறையும். இருப்புப்பாதைகளே பலவிதமான தொழில்களுக்கு இடம் கொடுத்திருக்கின்றன. புகைவண்டிகளை ஓட்டவும், கட்டிடங்களமைக்கவும், தொழிற்சாலைகளில் வேலைசெய்யவும், பணம்பெற்றுக்கொண்டு பிரயாணிகளுக்குச் சீட்டுக்கொடுத்துக் கணக்குகளை எழுதியனுப்பவும் லக்ஷக் கணக்கான மனிதர்களை நியமித்திருக்கிறார்கள். ஏறக்குறைய $5\frac{1}{4}$ லக்ஷம் உத்தியோகஸ்தர்கள் இருப்புப்பாதை ஸம்பந்தமான வேலைகளில் இருக்கிறார்கள். கூலிக்காரர்களுக்கும், சேவகர்களுக்கும் கணக்கில்லை. பற்பல ஜாதியார்களையும், பற்பல நாட்டாரையும் பிரயாணங்களில் ஒன்றுசேர்த்து அவர்களுடைய அறிவையும், அன்பையும் விருத்திசெய்வது இருப்புப்பாதைகளே.



இப்போது இத்தேசத்திலுள்ள இருப்புப்பாதைகளின் பெயர்முதலிய விவரங்கள் இதன் அடுத்த இரண்டு பக்கங்களிற் காட்டப்பட்டுள்ளன:—

| இருப்புப்பாதையின் பெயர். | புகைவண்டிகள் ஓடும் இடம். | பாதையின் நீளம் இத்தனை மைல் என்பது | போடுவதற்கு ஆரம்பித்த வருஷம். | உடன்படிக்கை முடியும் வருஷம். | அகலம் அல்லது குறுகல். | லாபம் அல்லது நஷ்டம். | விசேஷக் குறிப்பு. |
|---|---|---|---|---|---|---|---|
| 1. தென்னிந்தியா இருப்புப்பாதை (S. I. R.) | தென்னிந்தியா | 1353 | 1861 | 1891 | குறுகல் | லாபம் | பிரயாணிகள் அதிகம் |
| 2. தென் மஹாராஷ்டிர இருப்புப்பாதை (S. M. R.) | பம்பாயின் தென்பாகம் | 1687 | 1884 | 1907 | குறுகல் | நஷ்டம் | பிரயாணிகள் குறைவு |
| 3. சென்னை இருப்புப்பாதை (M. R.) | சென்னையின் வடபாகம் | 1493 | 1856 | 1908 | அகலம் | நஷ்டம் | முன் இரண்டுடன் சேர்ந்துவிட்டது |
| 4. கிரேட் இந்தியன் பெனின்ஸுலர் இருப்புப்பாதை (G. I. P. B.) | பம்பாய்முதல் ரெய்ச்சூர் வரையில் | 3009 | 1870 | 1900 | அகலம் | நஷ்டம் | முதல் வகுப்புப் பிரயாணிகளும் பருத்திச் சரக்கும் அதிகம் |
| 5. வங்காள நாகபுரி இருப்புப் பாதை (B. N. B.) | மத்திய தேசம் | 2170 | 1891 | 1913 | அகலம் | கொஞ்ச லாபம் | |



| இருப்புப்பாதையின் பெயர். | புகைவண்டிகள் ஓடும் இடம். | பாதையின் நீளம் இத்தனை மைல் என்பது | போடுவதற்கு ஆரம்பித்த வருஷம். | உடன்படிக்கை முடியும் வருஷம். | அகலம் அல்லது குறுகல். | லாபம் அல்லது நஷ்டம். | விசேஷக் குறிப்பு. |
|---|---|---|---|---|---|---|---|
| 6. மத்திய இந்தியா இருப்புப் பாதை (C. I. B.) | பம்பாய் மாகாணம் | 3192 | 1872 | 1905 | 868—அகலம்; மீதி குறுகல் | நஷ்டம் | சாமான்கள் அதிகம் |
| 7. கீழ் வங்காள இருப்புப்பாதை (E. B. R.) | கீழ் வங்காளம் | 1272 | 1862 | 1884 | 495—அகலம்; மீதி குறுகல் | லாபம் | |
| 8. கீழ் இந்திய இருப்புப்பாதை (E. I. R.) | கங்காதீரம் | 2225 | 1854 | 1880 | அகலம் | அதிகலாபம் | நிலக்கரி மிகுதி |
| 9. வடமேற்கு வங்காள இருப்புப்பாதை (N. W. B. R.) | கங்கைக்கு வடபாகம் | 1468 | 1874 | 1932 | குறுகல் | லாபம் | வளமுள்ள இடம் |
| 10. வடமேற்கு ஸர்கார் இருப்புப் பாதை (N. W. S. R.) | வட மேற்கு இந்தியா | 4426 | 1861 | 1886 | அகலம் | லாபம் | கோதுமை மிகுதி |
| 11. அயோத்தி ரோஹில்கண்ட் இருப்புப்பாதை (O. R. R.) | கங்கைக்கு வடக்கு | 1277 | 1867 | 1889 | அகலம் | கொஞ்ச லாபம் | வளமுள்ள இடம் |
| 12. அஸ்ஸாம் வங்காள இருப்புப் பாதை (A. B. R.) | ... | 775 | 1895 | 1921 | குறுகல் | அதிக நஷ்டம் | தனியான பாதை |

இருப்புப்பாதைகளை அமைப்பதற்கு அந்த அந்தச்
சங்கத்தார்கள் போடும் முதலுக்குக் குறிப்பிட்ட
வட்டியிற் குறைவாக லாபம் கிடைத்தாற் குறையும்
தொகையைத் தாங்களே கொடுப்பதாகவும், குறித்தகா
லத்தில் இருப்புப்பாதைகளைச் சொந்தத்தில் வாங்கிக்
கொள்வதாகவும் துரைத்தனத்தார் உடன்படிக்கை செய்
திருப்பதால் அவற்றை அமைக்கும்போதும் அமைத்த
பிறகும் செய்யப்படும் செலவு கிரமமாக இருக்கிறதா
என்பதை நன்ருகக் கவனிக்கும்பொருட்டு ரெயில்வே
கன்ஸல்டிங்-எஞ்சினியர் என்ற அதிகாரியை ஒவ்வொரு
மாகாணத்திலும் நியமித்தார்கள். புதிய பாதைகள்
போடும்போதும், பெரிய பாலங்களைக் கட்டும்போதும்,



யமுனை நதியில் இருப்புப்பாதைக்கென்றே கட்டிய பாலம்.

மலைகளைக் குடைந்து வழிகளை யுண்டாக்கும்போதும்,
குறித்த அளவுக்கு மேற்பட்ட தொகையைச் செலவி
டும்போதும் இந்தியா துரைத்தனத்தாரின் சம்மதத்தை
இருப்புப்பாதைச் சங்கத்தார் ஒவ்வொருவரும் பெற்றுக்



கொள்ளவேண்டுமென்று விதித்திருக்கிருர்கள். அவர்
கள் அபிப்பிராயப்படி செலவுகள் ஒழுங்காக நடந்
தனவா என்று மேலேசொன்ன கன்ஸல்டிங்-எஞ்சினி
யர்கள் கவனித்துவந்தார்கள். ஆயினும், இந்த ஏற்
பாட்டினுல் இத்தேசமுழுவதும் உள்ள இருப்புப்பாதை
களைப்பற்றிய விஷயங்கள் ஒரேமுறையாக நடத்
தப்படவில்லையென்றும், வரவர அதிகரித்துவரும் இப்
பாதைகளின் விசாரணையை நடத்தத் தேர்ந்த நிபுணர்
களையே மேலதிகாரிகளாகச் செய்யவேண்டுமென்றும்
லார்ட் கர்ஸன், ராஜப்பிரதிநிதியாக இருந்தகாலத்தில்
துரைத்தனத்தார் நினைத்து, 1901-02-ம் வருஷத்தில்
இத்தேசத்து இருப்புப்பாதைகளையும் அமெரிக்காகண்
டத்திலுள்ளவற்றையும் ஆராய்ந்துபார்த்து இவ்விடத்
திற் செய்யவேண்டிய திருத்தங்கள் இன்னவையென்
பதைச் சொல்லும்படி தேர்ந்த நிபுணர் ஒருவரை நியமித்
தார்கள். மூன்று நிபுணர்களடங்கிய ஒரு சங்கத்தார்
இத்தேசத்து இருப்புப்பாதைகளின் மேல்விசாரணையை
வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், உபயோகமற்ற
நிபந்தனைகளாலும் சட்டதிட்டங்களாலும் அவர்களு
டைய அதிகாரத்தைக் குறைக்கக்கூடாதென்றும் வற்
புறுத்தியவர் இவரே. இவருடைய அபிப்பிராயப்படி,
1905-ம் வருஷம் மார்ச்சுமாசத்தில் இருப்புப்பாதைச்
சங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு வர்த்தகத்தொழில்
இலாகாவின் (Department of Commerce and
Industry) விசாரணையில் வைக்கப்பட்டது. இச்சங்

கத்தார் பொதுவாக எல்லா இருப்புப்பாதைகளைப்பற்றிய வரவு செலவு முதலிய விஷயங்களைக் கவனித்துத் துரைத்தனத்தாருக்கு யோசனை சொல்லவும், துரைத்தன இருப்புப்பாதைகளைத் தகுந்த அதிகாரிகளைக் கொண்டு அமைக்கவும், அப்பொழுதப்பொழுது ஏற்படும் விவாதங்களைத் தீர்க்கவும், சங்கத்தார்களின் செலவுகளை ஆராய்ந்துபார்க்கவும் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். இந்தச் சிறந்த ஏற்பாட்டினாலும், துரைத்தனத்தார்களின் ஊக்கத்தாலும் இருப்புப்பாதைகளின் விசாரணை தேசம் முழுவதும் ஒழுங்குப்படுவதன்றி, துரைத்தனத்தாருக்கு நாளடைவில் அதிக வரும்படி கிடைக்குமென்றும் நிச்சயமாகச் சொல்லலாம். குடிகளுக்கு அதிக வருத்தமின்றித் துரைத்தன லாபத்தைப் பெருக்கக்கூடிய உபாயங்களுள் இருப்புப்பாதைகளைச் சிறந்தவையென்று சொல்லலாம்.

புகைவண்டிகளில் ஏறிச்செல்லும் பிரயாணிகள் ஒருவரோடொருவர் சண்டைபோடாமலிருக்கும்பொருட்டும், இவ்வண்டிகளையே தங்களுடைய திருட்டுக்கு ஸாதகமாக வைத்துக்கொண்டிருக்கும் திருடர்களைக் கண்டுபிடிப்பதற்கும், சீட்டில்லாமல் ஏறிச்செல்லும் பிரயாணிகளைக் கண்டிப்பதற்கும், வண்டிகள் ஓடும்போது துஷ்டர்களால் ஒருவித அபாயமும் பிரயாணிகளுக்கு நேரிடாமற் பார்த்துக்கொள்ளும்பொருட்டும் துரைத்தனத்தார் காவற்சேவகர்கள் பலரை (Railway Police) நியமித்திருப்பதல்லாமல், ஜனங்கள் விசேஷமாகச் செல்லும் சமயங்களில், அவர்களுடைய சௌகரியத்தின்பொருட்டுச் செய்யவேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்யும்படி இருப்புப்பாதைச் சங்கத்தாரை வற்புறுத்துகிறார்கள்.



ஜனங்களுக்கு எந்தக்காரணத்தினாலாவது அசௌகரியம் நேரிட்டால் அவர்கள் துரைத்தனத்தாருக்குத் தெரிவிப்பார்களாயின் உடனே அதனைப் போக்கவேண்டிய வழிகள் தேடப்படுகின்றன.

"புகைவண்டி யூர்ந்துலகை நொடிக்குள்ளே
சுற்றுவோம் புகைக்கூண்டேறிக்
ககனமிசைப் பறவையெனப் பறப்போமோர்
புகைக்கலத்தாற் கடல் கடப்போம்." (நீதிநூல்.)

## 11.—துரைத்தனமும், கட்டிடமும், ஜலவசதியும்

**துரைத்தனத்திற்குக் கட்டிடங்கள் அவசியம் என்பது—கட்டிட இலாகாவின் வரலாறு—இந்த இலாகாவின் வேலைகள் இவ்வகைப்பட்டன என்பது—சாலைகள்—பாலங்கள்—கால்வாய்கள்—அணைக்கட்டுகள்—கட்டிடங்கள்—முற்காலத்திய கட்டிடங்களும் இக்காலத்தவைகளும்.**

அநேகம் பெரிய கட்டிடங்களைத் துரைத்தனத்தார் கட்டுகிறார்களென்பது யாவருக்குந் தெரிந்தவிஷயம். பொதுவான காரியங்களுக்காக, குடிகள் சேர்ந்தாவது

துரைத்தனத்தாராவது கட்டடம் அமைக்கவேண்டும். கிராமங்களில் சத்திரம் சாவடிகளைக் கிராமத்தோர் சேர்ந்து கட்டுவதுபோல், உத்தியோகஸ்தர்கள் வேலை பார்ப்பதற்குக் கட்டடங்களையும், சேனைகள் தங்கி யிருப்பதற்குப் படைவீடுகளையும், கோட்டைகளையும், பிரயாணத்திற்கு உபயோகமான சாலைகளையும், ஆறு களைக் கடந்து செல்வதற்குப் பாலங்களையும், நீர்ப் பாய்ச்சலுக்கு வேண்டிய கால்வாய்களையும், நியாயஸ் தலங்களையும், வைத்தியசாலைகளையும், பலவகைத் தொழிற்சாலைகளையும் துரைத்தனத்தார் உண்டாக்கு கிறார்கள். இம்மாதிரியான வேலைகள் மிகுதியாக இருப் பதால் இவற்றைக் கவனிப்பதற்காக இந்த வேலைகளிற் பயிற்சியுள்ள சிறந்த உத்தியோகஸ்தர்களை நியமித்து அவர்களுக்கென்றே தனியான இலாகா ஒன்றை அமைத்திருக்கிறார்கள்.

ஐம்பது வருஷ காலமாகத்தான் இந்த இலாகா இருந்துவருகிறது. முதலிற் சேனைகளுக்கு உபயோக மான கட்டிடங்களைமாத்திரமே துரைத்தனத்தார் கட்டி வந்தார்கள். பிறகு லார்ட் டால்ஹௌஸி என்னும் கவர்னர்-ஜெனரலின் காலத்தில் இவ்விலாகா உண் டாக்கப்பட்டது. அதுமுதலாக எஞ்சினியர் என்ற அதிகாரிகள் நியமிக்கப்பெற்றார்கள். அவர்கள் அதி காரத்திற்குத் தக்கபடி சீப் எஞ்சினியர் என்றும், சூப ரின்டேன்டிங் எஞ்சினியர் என்றும், எக்ஸகடிவ் எஞ் சினியர் என்றும், அஸிஸ்டேண்ட் எஞ்சினியர் என்



றும், எஞ்சினியர் ஸபார்டினேட் என்றும் பெயர்பெற் றிருக்கிறார்கள். இவர்களுக்கு வேலைகளைக் கற்பிக்கவே எஞ்சினியரிங் காலேஜ் என்ற கலாசாலைகள் பல ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. நாளடைவில் சேனைகளு க்குரிய கட்டிடவேலைக ளைப் பிரித்துச் சேனை அதிகாரிகளிடம் ஒப்பு வித்து விடுவது அவசிய மென்று தோன்றவே, இ ராஜாங்கத்திற்கு வேண் டிய கட்டிடங்கள் அமைத் தலையும், மார்க்கங்கள் போடுதலையும், கால்வாய் கள் வெட்டுதலையும் கவ னித்தாற் போதுமென்று மாகாண அதிகாரிகளுக்குத் துரைத்தனத்தார் கட்டளையிட்டிருக்கின்றார்கள். இந்த வேலைகளுக்காக ஏறக்குறைய 1,000 எஞ்சினியர்க ளும், அளவிறந்த கீழுத்தியோகஸ்தர்களும் நியமிக்கப் பெற்றிருக்கிறார்கள். கீழதிகாரிகள் பெரும்பாலும் சே ன்னை, பூனா, ஸிப்பூர், ரூர்கீ என்ற இடங்களிலிருக்கிற துரைத்தனக் கலாசாலைகளிற் படித்துத் தேறியவர்கள். இவ்விலாகாவின் வேலைகளை 6 வகையாகப் பிரிக்க லாம். அவையாவன:—(1) சாலைகள் போடுதல் (2)



லார்ட் டால்ஹௌஸி.

பாலங்கள் கட்டுதல் (3) கால்வாய்கள் வெட்டுதல் (4)
அணைகளும், அணைக்கட்டுகளும் கட்டுதல் (5) கட்
டிடங்கள் கட்டல் (6) பழைய வேலைகளைப் புதுப்
பித்தல்.

1. **சாலைகள்:** — இம்மாகாணத்தில்மட்டும் உள்ள
சாலைகளின் மொத்த நீளம் 25,000 மைல்களுக்கு மேற்
படுகிறது. அவற்றைச் செப்பனிட்டு இரண்டு பக்
கங்களிலும் மரங்களை உண்டாக்கிச் சுமைதாங்கிகள்
கட்டி, தங்குமிடங்கள் அமைத்து, திருடர்களாலுண்
டாகும் பயத்தை ஒழிப்பதனால் வர்த்தகத்திற்கு உள்ள
ஸௌகரியத்தை யாவரும் எளிதில் தெரிந்துகொள்ளக்
கூடும். இருப்புப்பாதைகள் ஏற்பட்டும் சாலைகளின்
உபயோகம் குறையவில்லை. ஏனெனில், இருப்புப்
பாதைகள் வழியாகக் கொண்டுபோகப்படும் பொருள்
களை ஊர்களுக்குக் கொண்டுபோவதற்குச் சாலைகள்
அவசியமாகின்றன. இவற்றுட் பல சாலைகள் கற்க
ளாற் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன. இம்மாகாணத்
தில் இங்ஙனம் உள்ள சாலைகளின் மொத்த நீளம் ஏறக்
குறைய 20,000 மைலிருக்கும். பஞ்சாப் மாகாணத்தி
லும் சிறந்த சாலைகள் பல இருக்கின்றன.

2. **பாலங்கள்:**—இத்தேசத்திற் பெரும்பாலும் நதி
கள் மேற்குமலைகளில் உண்டாகிக் கிழக்கு ஸமுத்திரத்
திற் கலக்கின்றன. ஆகையால், ஒருவன் கன்னியா
குமரியிலிருந்து கங்காதீரம்வரையிற் போகவேண்டு
மானால் **காவேரி, கிருஷ்ணா, கோதாவரி, மஹாநதி** முத





கிருஷ்ணாவின் பாலம்.

லிய பல ஆறுகளைக் கடந்தே செல்லவேண்டும். இவற்
றிற்குப் பாலங்களில்லாவிடின் பிரயாணத்திற்குக்
குறைவு ஏற்படும். ஆகையால், பாட்டைசாரிகள்
கடந்து செல்லுவதற்கும், புகைவண்டிகள் ஓடுவதற்
கும், கற்பாலங்களும், இருப்புப்பாலங்களும் பல
விடங்களிற் கட்டப்பட்டிருக்கின்றன. பழைய பாலங்
களும் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஜீவநதிகளுக்
குப் பாலங் கட்டுவதில் மிகுதியான பணச்செலவு
ஆகும். அப்படியிருந்தும், பணச்செலவைச் சிறிதும்
பாராமல் துரைத்தனத்தார், கங்கை, ஸிந்து, கோதா

வரி, கிருஷ்ணா முதலிய ஜீவநதிகளுக்குப் பாலங்கள் கட்டியிருக்கின்றனர்.

3. **கால்வாய்கள்:**—நிலத்தைப் பயிரிட்டுப் பிழைக்கும் ஜனங்கள் விசேஷமாக உள்ள இந்நாட்டில் நீர்ப் பாய்ச்சலுக்கு வேண்டிய சாதனங்கள் பல உள்ளன. செம்பரம்பாக்கம், கம்பம் முதலிய ஏரிகளாலும், கிருஷ்ணா கால்வாய் முதலிய கால்வாய்களாலும், நீர்வறண்ட இடங்களிற் கிணறுகளாலும் நீர்ப்பாய்ச்சல் வேலை நடந்து வருகிறது. முற்காலத்தில் ஜனங்களாலேயே ஏரிகளும், குளங்களும், கிணறுகளும் வெட்டப்பட்டு வந்தன. இந்த மாகாணத்தில்மட்டும் 40,000 குளங்களுக்கு மேலிருந்தன. ஆயினும், ஜனங்கள் அவற்றின் உபயோகத்தைக் கவனியாமல் நாளடைவில் அவற்றைப் பாழாக்கிவிட்டனர். ஆகையால், இப்போது அவற்றைப் பண்படுத்துவதல்லாமல் நீர்வறண்ட இடங்களிற் கிணறுகள் வெட்டுவதற்கு வேண்டிய பணத்தைத் துரைத்தனத்தார் கடனாகக் கொடுக்கிறார்கள். கால்வாய்கள் வெட்டுவதிலும் பணம் மிகுதியாகச் செலவிடப்படுகின்றது. முற்காலத்தில் ஆக்பரைப்போன்ற சில டில்லி சக்கரவர்த்திகளே வடதேசத்திற் கால்வாய்கள் வெட்டி நன்மை செய்தார்களென்று தெரிகிறது. அவர்களுக்குப் பின்பு இருந்தவர்கள் அவற்றைக் கவனியாமல் தூரும்படி விட்டுவிட்டார்கள். இப்பொழுது துரைத்தனத்தார் அவற்றைச் செப்பனிட்டதல்லாமற் புதிய கால்வாய்களையும் வெட்டியிருக்கிறார்கள்.



இங்ஙனம் புதிதாக வெட்டப்பட்ட கால்வாய்களின் பெயர்கள் முதலியன கீழே காட்டப்பட்டுள்ளன:—

| பெயர் | நீளம் மைல் | நீர்பாயும் பரப்பளவு | வெட்டியதற்குச் செலவு ரூ. |
|---|---|---|---|
| கங்கைக் கால்வாய் | 4,935 | 10 லக்ஷம் ஏகர் | 3 கோடி |
| ஸர்ஹிண்ட் கால்வாய் | 3,040 | .... .... | 2¼ ,, |
| சீனாப் கால்வாய் | 2,430 | 20 லக்ஷம் ,, | 2¼ ,, |
| கோதாவரிக் கால்வாய் | 2,408 | } | 134 லக்ஷம் |
| கிருஷ்ணா கால்வாய் | 1,997 | } 24 லக்ஷம்,, | 144 ,, |
| காவேரி | 2,094 | } | 31 ,, |

கால்வாய்கள் வெட்டுவதில் 43 கோடி ரூபாய்க்கு மேற் செலவு ஆயிருக்கிறது. பஞ்சகாலங்களிற் சோற்றுக்குத் தவிக்கும் கூலியாட்களைக்கொண்டு சில கால்வாய்களை வெட்டி அவர்களுக்கு அன்னமளித்துக் காப்பாற்றுகிறார்கள். இப்பொழுது இத்தேசத்தில் 220 லக்ஷம் ஏகராவுக்கு மேற்பட்ட நிலங்கள் இவ்விதமான கால்வாய்ப் பாய்ச்சலாற் பயிரிடப்படுகின்றன. சுமார் 60 கோடி ரூபாய் மதிப்புள்ள தானியப் பொருள்கள் இவ்விதமான நிலத்தினின்றும் ஒவ்வொரு வருஷமும் பயிராகின்றன. சென்னை மாகாணத்தில்மட்டும் 6,000 கால்வாய்களிருக்கின்றன. சுமார் 30 லக்ஷம் ஏகராவுக்கு இவை பாய்கின்றன. இம்மட்டிலும் குளங்களுக்கும் கால்வாய்களுக்கும் மூன்று கோடி பவுனை

ஸர்காரார் செலவிட்டிருக்கிறார்கள். இதற்கு நூற்றுக்கு எட்டுவீதம் ஸர்காருக்கு வட்டி கிடைக்கின்றது.



அணைகளின் குறுக்குவெட்டுப் பார்வை.

**4. அணைக் கட்டுகள்:** — கால்வாய்களை வெட்டுவதற்காகப் பெரும்பாலும் நதிகளை அணைகளால் தடுக்கிறார்கள். அணை கட்டியிருந்தால் ஜலம் தேங்கி எழும்பிக் கால்வாய்களிற் பிரவேசித்து மேட்டுநிலங்களிலும் பாயும். இம்மாகாணத்தில் நதிகளின் முகத்துவாரத்தின் அருகிலும் கங்காதீரத்தில் ஆறுகளின் உற்பத்தியின் அருகிலும் அணைகள் கட்டப்பட்டிருக்கின்றன. வேகமாக ஓடும் ஆழமான ஜீவநதிகளில் அணை கட்டுவது எளிதன்று. ஆயினும், அதிகப் பணத்தைச் செலவிட்டு ஆச்சரியமான பல கருவிகளைக்கொண்டு துரைத்தனத்தார் **கங்கை, கோதாவரி, கிருஷ்ணை** முதலிய ஆறுகளில் அணைகள் கட்டியிருக்கிறார்கள். இம்மாகாணத்தில், மேற்கு சமுத்திரத்திற் போய் விழும் **பெரியாறு** என்ற நதியை ஒரு பெரிய அணைக்கட்டினால்





பெரியாற்றின் அணை.

தடுத்து அதன் ஜலத்தை மதுரை ஜில்லாவிலுள்ள நிலங்களிற் பாய்ச்சுகிறார்கள். இம்மாதிரியே மைசூர் ராஜ்யத்தில் மாரி கணவாயென்ற ஒரு வியக்கத்தக்க அணையைக் கட்டி, ஜலத்தைத் தேக்கி நிலத்திற்குப் பாய்ச்சுகிறார்கள். இந்த அணைக்கட்டுவேலை பார்ப்பதற்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கும்.

அணைகளைத்தவிர வேறு உபாயங்களாலும் மேட்டு நிலங்களுக்கு ஜலம் பாய்கின்றது. கிருஷ்ணை நதியின் முகத்துவாரத்தில் **திவி** என்ற தீவில் விஸ்தாரமான நிலங்கள் நீர்ப்பாய்ச்சலில்லாமல் உபயோகமற்றிருந்



பெரியாற்றுப் பாய்ச்சலை விளக்குவது.



இயந்திரசாலை, திவி.



ஜலம் இறைக்கும் நீராவியந்திரம், திவி.




திவியில் நீர்பயும் முறையைக் காட்டுவது.

தன. இப்பொழுது பெரிய யந்திரங்களின் உதவியால் நீரை ஆற்றினின்றும் எழுப்பி அந்நிலங்களுக்குப் பாய்ச்சுகிறார்கள். விளைவின்றி உபயோகமற்றுக்கிடந்த



நிலங்களெல்லாம் இவ்விதமான உபாயங்களால் இப்பொழுது பயிரிடப்பெற்று உபயோகமான தானியங்களைக் கொடுத்துவருகின்றன.

5. **கட்டிடங்கள்:**— துரைத்தனத்திற்கு வேண்டிய கட்டிடங்கள் எல்லாம் இந்த இலாகாவினாற் கட்டப்படுகின்றன. அவையாவன: கலாசாலைகளும், உத்தியோகசாலைகளும், வைத்தியசாலைகளும், நியாயஸ்தலங்களும், சிறைச்சாலைகளும், பொருட்காட்சிச் சாலைகளுமாம். இவற்றைக் குத்தகைக்காரர்களைக்கொண்டு கட்டுவித்தபோதிலும், எஞ்சினியர்களுடைய மேற்பார்வை இருப்பதால் இவை ஒழுங்காக நடக்கின்றன.

6. **பழைய வேலைகளைப் புதுப்பித்தல்:**—இவ்வேலையானது மற்ற ஐந்து வேலைகளுக்கும் பொதுவாக இருக்கிறது; இதனைத் துரைத்தனத்தார் நன்றாகக் கவனித்துவருகிறார்கள். பழைய கட்டிடங்களை அப்போது அப்போது செப்பனிடுவதல்லாமல், முற்காலத்தில் இந்திய அரசர்களாற் கட்டப்பெற்ற சிறந்த அரண்மனைகள், கோபுரங்கள், ஸபாமண்டபங்கள் முதலிய கட்டிடங்களையும் புதுப்பித்துவருகிறார்கள். முற்காலத்து நாகரிகத்தைக்குறிக்கும் இவ்விதமான கட்டிடங்களைத் தகுந்த நிலைமையில் வைக்கவேண்டுமென்று வற்புறுத்தியவர் சில வருஷங்களுக்குமுன் இந்தியாவில் ராஜப்ரதிநிதியாக இருந்த லார்ட் கர்ஸன் என்பவரே.

முற்காலத்திய அரசர்கள் செய்த வேலைகளையும், நம்முடைய துரைத்தனத்தார் செய்யும் வேலைகளையும் ஒப்



தாஜ்மஹால், ஆக்ரா.

பிட்டுப்பார்த்தால் சில வித்தியாசங்கள் வெளிப்படையாகத் தோன்றும். முற்காலத்திலும் பலமுள்ள பாலங்களும் உயரமான கோபுரங்களும், தாஜ்மஹாலையும், திருமலைநாயகன் மஹாலையும்போன்ற ஆச்சரியமான கட்டிடங்களும், விநோதமான மண்டபங்களும் அமைக்





திருமலைநாயகன் மஹால், மதுரை.

கப்பட்டன. ஆயினும், இப்பொழுதிருப்பதுபோலத் தேசம்முழுவதும் கட்டிடவேலைக்கென்றே தனியான ஏற்பாடு ஒன்றும் செய்யப்படவில்லை. பணத்தையெல்லாம் தலைநகரங்களைச் சிங்காரிப்பதற்கே உபயோகித்தனர். நாடுகளிலும், கிராமங்களிலும், குடிகளே நடைவழிகளையும், குளங்களையும் உண்டாக்கிக்கொண்டார்கள்.

இப்பொழுது நமது துரைத்தனத்தார் திறமைக்குத் தக்க கூலியும், சுவாதீனமும் வேலைக்காரர்களுக்குக் கொடுத்துக் கட்டிடங்களின் அழகை முக்கியமாகக் கருதாமல் அவற்றைப் பொதுஜனங்களுக்கு உண்டாகும்

உபயோகத்தையும் நன்றாகக் கவனித்து எல்லா இடங்களிலும் உபயோகமான பல கட்டிடங்களை அமைத்துப் பணத்தை மிகுதியாகச் செலவிடுகிறார்கள்.

"சத்திரஞ்சோலை சாலைகள்குளங்க டண்ணதி மதகொடா
லயங்கள்
வித்தியாசாலை மாடகூடங்கள் வேறு வேறமைத்து*
*வித்திசைபுரக்கு நிருபனே நிருபனா மன்றே." (நீதிநூல்.)

## 12.—துரைத்தனமும் அளவைகளும்

**அளவைகளின் வகைகளும் உபயோகமும்—நாணயங்களின் அமைப்பு—ஆதார நாணயமும் குறிப்பு நாணயங்களும்—இந்திய நாணயங்களின் வரலாறு—நாணயங்கள் செய்யும் விதம்—நாணயச் சீட்டுக்கள்.**

அளவைகள் எங்கும் ஒரேமாதிரியாக இருந்தாலன்றி வியாபாரம் ஒழுங்காக நடைபெறாதென்பதை யாவரும் அறிந்திருக்கலாம். கடைக்குக்கடை வெவ்வேறான எடைகளும், படிகளும், அளவுகோல்களுமிருந்தால் மோசத்திற்கு இடமாகி வியாபாரம் குறைந்துவிடும். ஆனதுபற்றியே, ஒரேவிதமான அளவைகளை ஏற்படுத்துவதும், அவற்றையே எல்லா இடங்களிலும் உபயோகப்படும்படி செய்து வியாபாரத்தை மோசமில்லாமல் நடத்துவதும் துரைத்தன முறைமையாகும். அளவைகள், எண்ணலளவை, எடுத்தலளவை, முகத்



தலளவை, நீட்டலளவை, நாணயஅளவை எனப் பல வகைப்படும். வியாபாரத்துக்கு வேண்டிய அளவுகோல்களையும், படிகளையும், எடைகளையும் துரைத்தனத்தார் நன்றாகப் பரிசோதித்து முத்திரைபோட்டு அப்பால் வியாபாரிகளிடம் கொடுக்கிறார்கள். 1871-ம் வருஷத்தில் எடுத்தலுக்கும், முகத்தலுக்கும், சேர் என்பதையே பரிமாணமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று விதித்தார்கள். அதுமுதல், சேரை ஆதாரமாகக்கொண்டு, நிறுத்துப்பார்ப்பதற்குப் படிக்கல்லுகளையும், தானியம் முதலியவற்றை அளப்பதற்கு ஒருசேர் ஜலம் பிடிக்கக்கூடிய படியை ஆதாரமாகக்கொண்டு மரக்கால், ஆழாக்கு, உழக்கு முதலிய பலஅளவு கருவிகளையும் செய்து உபயோகித்துவருகிறார்கள். சரியல்லாத அளவு கருவிகளை உபயோகப்படுத்துவோர்கள் துரைத்தனத்தாரால் தண்டிக்கப்படுவார்கள்.

மேற்சொல்லிய அளவைகளைப்பார்க்கிலும் முக்கியமானவை நாணயங்கள். இவையின்றி ஒரு வியாபாரமும் நடவாது. வியாபாரத்தைத் தாமதமின்றி நடத்துவதற்குப் பொருள்களின் விலையளவாகிய நாணயங்களைச் சிறந்த ஸாதனங்களென்று சொல்லவேண்டும். இவை இல்லாவிட்டால், நெய்யை வைத்துக்கொண்டு புஸ்தகத்தை வேண்டுவோன் புஸ்தகத்தை வைத்துக்கொண்டு நெய்யை வேண்டுவோனைத் தேடிச் செல்லவேண்டிவரும். இவை இருந்தால், நெய்யை விற்றுப் பணமாக்கி, அப்பணத்தைக்கொண்டு தாமதமின்றிப்

புஸ்தகத்தை வாங்கலாம். ஆதலால், வியாபாரத்தைப் பரவச்செய்வதற்குப் பலவிதமான நாணயங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

இப்பொழுது நாம் கையாளும் ரூபாய் முதலிய நாணயங்களையே பொருள்களின் விலையளவாக வைத்துக் கொள்ளவேண்டுமென்பது அவசியமில்லை. ஆதிகாலத்தில் இத்தேசத்திற் சோழிகளும், சீனதேசத்தில் தேயிலைப் பெட்டிகளும், இத்தாலிதேசத்தில் மாடுகளும் நாணயங்களாக உபயோகப்பட்டுவந்தன. ஆயினும், இவற்றைச் சிறந்த நாணயங்களென்று சொல்லக்கூடாது. நாணயங்களே விலைமதிப்பாகிறபடியால், அவை அளவிலும், மதிப்பிலும் குறையாமல் இருக்கவேண்டுவதன்றிச் சீக்கிரம் அழிந்துபோகாமல் எப்போதும் கையாளக் கூடியவைகளாகவும், எளிதாக மாற்றத்தக்கவைகளாகவும், யாவரும் சந்தோஷமாகப் பெற்றுக்கொள்ளுதற்கு ஏற்றவைகளாகவும் இருக்கவேண்டும். இதுபற்றியே, அவற்றைத் தங்கம், வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களில் வில்லை வில்லையாகச் செய்து ஒரு பக்கத்திற் சக்கரவர்த்தியின் தலை யுருவத்தையும், மற்றப் பக்கத்திற் பெறுமானத்தையும் அமைத்துச் சிங்காரமான வரம்புகட்டி, அரும்புவைத்து, பதக்கங்கள்போல் அழகாகச் செய்கிறார்கள். வெள்ளி நாணயங்களையும், தங்க நாணயங்களையும் இப்படிச் செய்வது அவற்றைப் பிறர் கத்தரித்தும், தேய்த்தும் திருடாமலிருப்பதற்குக்கூட அனுகூலமாகின்றது. முற்காலத்தில் வழங்கிவந்த அழகற்ற நாணயங்களையும் இக்காலத்து வழங்கும் அழகான நாணயங்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பவர்களுக்கு இவை எவ்விதத்திலும் சிறந்தவையென்றே தோன்றும்.



ஒரே நாணயமிருந்தாற் போதுமே; பல நாணயங்கள் நம்முள் ஏன் வழங்கிவரவேண்டும்? சிறு பண்டங்களை அளக்கப் பல சிறிய அளவைகள் வேண்டியிருப்பதுபோல், குறைந்த தொகைகளைக் குறிப்பதற்கும் பல சிறிய நாணயங்கள் அவசியமாகின்றன. இத்தேசத்தில், நாணய அளவைகளுக்கு ஆதாரமாக இருப்பது 15 ரூ. மதிப்புள்ள பவுனென்றே; இதனை ஆதாரமாகக்கொண்டு வெள்ளி, செம்பு, நிகலென்னும் உலோகங்களிற் பல சிறு நாணயங்கள் துரைத்தனத்தாராற் செய்யப்படுகின்றன. ஆதார நாணயமாகிய பவுனின் சிறு பாகங்களைக் குறிப்பித்தலால் இவற்றைக் குறிப்பு நாணயங்கள் என்று சொல்லல் தகும். இவற்றிற்குத் துரைத்தனத்தார் ஏற்படுத்தியிருக்கும் பெறுமானத்திற்கும், இயற்கையாக உள்ள மதிப்புக்கும் வித்தியாசமுண்டு. நாம் ஒரு பவுனைக் கடையிற் கொடுத்தால், அதற்குச் சரியான எடையுள்ள தங்கத்தைமட்டும் வாங்கலாம். ஆனால், ஒரு ரூபாயைக் கொடுத்தால் அதன் எடைக்கு மேற்பட்ட வெள்ளியை வாங்கலாம். ஆகையால் இந் நாணயத்திலுள்ள வெள்ளியானது ஒரு ரூபாய் விலையுள்ளதன்றென்று தெரிகிறது; செம்புநாணயமும் இப்படியே; ஆதலால் வெள்ளி நாணயங்களையும், செம்பு நாணயங்களையும் ஜனங்கள் அழித்து நகைகளாகவும்,

பாத்திரங்களாகவும் செய்வது அவர்களுக்கு நஷ்டத்தை விளைவிக்கும்; ஆகையால் இந்த நாணயங்கள் அழிக்கப்படுவதில்லை. இல்லாவிடின், நாணயங்கள் வியாபாரங்களுக்கு உதவாமல் நகைகளுக்காகவும், பாத்திரங்களுக்காகவும் சீக்கிரம் அழிக்கப்படும். பவுன் எடைக்கெடை தங்கத்திற்குச் சமமாக இருப்பதால், எவ்வளவு தங்கநாணயங்களைத் துரைத்தனத்தார் வெளிப்படுத்தினாலும் அவ்வளவும், நகைகளில் அளவற்ற பிரியமுள்ள ஜனங்களிருக்கும் இந்நாட்டில் அதிசீக்கிரத்தில் மறைந்துவிடுகின்றன. இப்போது பவுன் கிடைப்பது குதிரைக்கொம்பாக இருப்பதற்குக் காரணம் இதுவே.

ஆங்கில துரைத்தனத்திற்குமுன் பற்பல விடங்களிற் பற்பல நாணயங்கள் வழங்கிவந்தன. 1835—ம் வருஷத்திற் பழைய நாணயங்களுக்குப் பதிலாகச் சென்னையில் வழங்கிவந்த வெள்ளி ரூபாயை மற்ற இடங்களிலும் முக்கிய நாணயமாகச் செய்தனர். 1873-வது வருஷத்திற்குப் பிறகு சுரங்கங்களில் அதிக வெள்ளி அகப்பட்டதாலும், மற்றத் தேசங்களில் வெள்ளி நாணயங்களுக்குப் பதிலாகத் தங்க நாணயங்களே ஏற்பட்டுவிட்டபடியாலும், வெள்ளி மலிந்துவிட்டது; ரூபாயின் மதிப்பும் வரவரக் குறைந்துவிட்டது. ஆகையால், சீமையில் அரை ரூபாய்க்குக் கிடைக்கும் புஸ்தகங்களுக்கு இவ்விடத்தில் நாம் முக்கால் ரூபாய் கொடுக்கும்படியாயிற்று. இதை உத்தேசித்தே துரைத்தனத்தார் 1893-ம் வருஷத்தில் ஒரு பவுனுக்கு 15 ரூபாயே பெறு



மானமென்று விளம்பரஞ்செய்து 1899-ம் வருஷத்திற் பவுனையே இந்நாட்டுஅளவு நாணயமாகச் செய்தார்கள். இந்நாணயம் இங்கிலாந்திலேயே செய்யப்படுகின்றது. 1906—ம் வருஷத்திற் செம்பின் விலை வரவர உயர்ந்துவிட்டபடியால் செம்புநாணயங்களுக்குப் பதிலாக வெண்கலநாணயங்களைச் செய்யவேண்டுமென்றும்; நிகலென்ற வெண்மையான உலோகத்தால் அணாவைக் குறிப்பதற்கு நக்ஷத்திரம்போன்ற நாணயங்களை நூதனமாக உண்டாக்கவேண்டுமென்றும் தீர்மானித்து அங்ஙனமே செய்தனர்.

பவுனைத்தவிர மற்ற நாணயங்கள் பம்பாய், கல்கத்தா என்னும் இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நாணயச்சாலைகளிற் செய்யப்படுகின்றன. 1906-ம் வருஷத்தில்மட்டும் இவ்விடங்களிற் செய்யப்பட்ட நாணயங்களின் மதிப்பு ஏறக்குறைய 26 கோடி ரூபாய் இருக்கும். உலோகங்களை முதலில் உருக்கிக் கழிகளாக வார்த்துக்கொண்டு பின்பு சட்டங்களாக்கி அப்பால் அச்சட்டங்களையே சிறு வில்லைகளாக வெட்டி அவற்றில் அழகான உருவங்களையும் எழுத்துக்களையும் அமைத்து வாம்புகட்டிச் சரியான மதிப்பும் எடையுமுள்ள நாணயங்களைமட்டும் வெளியிடுகிறார்கள்; அநேக வருஷகாலம் உபயோகப்பட்டுத் தேய்ந்துபோன நாணயங்கள் திரும்பத் தங்களிடம் வந்தவுடன் அவற்றை அழித்துவிடுகிறார்கள். ஒழுங்கான நாணயங்களே வழங்கிவரவேண்டுமென்பது துரைத்தனத்தாரின்

நோக்கமாதலால் இவ்விதமான முறைகள் அனுசரிக்கப்படுகின்றன.

வியாபாரமும், நாகரிகமும் வரவர விருத்தியடைந்து வருவதாற் பலவகையான நாணயங்களைத் துரைத்தனத்தார் மிகுதியாக வெளியிட்டிருந்தபோதிலும், நாணயங்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எடுத்துச் செல்லுதலும், அனுப்புதலும் சிரமமாகத்தோன்றவே, 5, 10, 20, 50, 100, 500, 1,000, 10,000 இந்த ரூபாய்களுக்குப் பதிலாகத் தனித்தனி நாணயச் சீட்டுக்களை (Currency Notes) அச்சிட்டு வெளியிடுகிறார்கள். இவற்றைச் சிறிதும் சிரமமில்லாமல் இடம் விட்டு இடம் அனுப்பலாம். நாணயங்களைப்போலவும் உபயோகிக்கலாம். இவ்விதமான நாணயச் சீட்டுக்கள் 1906-ம் வருஷத்தில் 46 கோடி ரூபாய்க்கு மேற்பட்டு வழங்கிவந்தன. தற்செயலாக இவை கெட்டுப்போனால் நன்றாக விசாரித்து இவற்றின் மதிப்புத் தொகையைத் துரைத்தனத்தார் உரியவரிடம் கொடுத்துவிட்டு இவற்றிற்குக் கொடுத்திருக்கும் எண்களைத் தங்கள் கணக்குப் புஸ்தகங்களிற் பதிந்துகொண்டு எல்லாப் பொக்கிஷசாலைகளுக்கும் அச்செய்தியைத் தெரிவித்து விடுகிறார்கள்.

"சத்தியமகலா வாணிகமாதி சகலநற்
றொழிலவரவர்க
ணித்தியமுயல வித்திசைபுரக்கு நிருபனே
நிருபனாமன்றே." (நீதிநூல்.)

---



# 13.—துரைத்தனமும் தேசச் செழிப்பும்

**செழிப்பும் அதனது குறிகளும்—இந்தியத் தொழில்களின் பதிகள்—புதிய தொழில்களும் அவற்றின் சாதனங்களும்—துரைத்தனத்தார்களின் கடமை—இயந்திர ஸாதனங்களும் செல்வவிருத்தியும்—வறுமைத் துன்பமும் அதனைப் போக்கும் உபாயங்களும்.**

தேசம் செழித்தோங்குவதற்கு அங்குள்ளோர்க
ளிடத்து பல நற்குணங்கள் இருத்தல் வேண்டுமல்
லவா? ஊக்கம், அமைதி, நாணயம், தைரியம், கட்டுப்
பாடுமுதலிய குணங்கள் இன்றியமையாதவை. இக்
குணங்கள் இளமையிலுள்ள பழக்க வழக்கத்தாலும்
உயர்ந்த நோக்கங்களாலும் ஏற்படுகின்றன. இயன்ற
மட்டும் துரைத்தனத்தார்கள் இத்தேசத்தின் செழிப்
பையும் இத்தேசத்தார்களின் க்ஷேமத்தையும் நிலை
நாட்ட முயன்றுவருகிறார்கள். ஆயினும் நம்முடைய
முயற்சியும் ஊக்கமுமின்றி நிலையான செல்வவிருத்தி
ஏற்படாது. மேலும் தொழில், வர்த்தகம், நாகரிகம்
முதலிய விஷயங்களில் பின்வாங்கிவிட்ட தேசமானது
நாளடைவில்தான் ஊக்கமும் செழிப்புமுள்ளதாக மே
ன்மை யடையக்கூடும். சென்ற ஐம்பது வருஷங்க
ளாக இங்குள்ள அமைதியாலும் மேற்றிசை நாகரிகத்
தின் சேர்க்கையாலும் வர்த்தகம், கைத்தொழில்முத
லிய செல்வப்பெருக்கத்தின் குறிகள் நன்கு புலப்பட்டு
வருகின்றன.

மூலதனமும் ஒழுங்குபடுத்தி நிர்வாகம்செய்யுந் திறமையும் செல்வவிருத்திக்கு இன்றியமையாதவை. இவற்றின் இன்மையே இத்தேசத்தின் வறுமைக்குக் காரணமாயிற்று. இப்போதுள்ள அமைதியாலும் சிறந்த துரைத்தனத்தின் நன்கொடைகளாலும் அயல்நாட்டிலுள்ள செல்வவான்களும் இங்குள்ள மேன்மக்களும் புதிய தொழில்கள் பலவற்றை ஏற்படுத்தி லட்சக்கணக்கான உழைப்பாளிகளுக்கு உதவுகிறார்கள். இவ்விதம் இங்கிலாந்தினின்றும் சுமார் 750 கோடி ரூபாய் இத்தேசத்தில் வியாபாரத்திலும் தொழில்களிலும் செலவிடப்பட்டிருக்கிறது. 1861-ம் வருஷத்தில் 55 கோடி ரூபாய் பெறுமானமாயிருந்த இத்தேசத்தின் ஏற்றுமதிகள் இப்போது சுமார் 183 கோடியாயிருக்கின்றன. இறக்குமதியும் 47 கோடியிலிருந்து இப்போது சுமார் 180 கோடியாயிருக்கின்றது. செல்வப்பெருக்கத்தில் ஆங்கிலேயர்களுக்குள்ள ஊக்கத்தால் அநேகத் தங்கச் சுரங்கங்களும், நிலக்கரிக் கனிகளும், காபி தேயிலைத் தோட்டங்களும், இருப்புப்பாதைகளும், பருத்தி சணல் முதலியவற்றை வேலைசெய்யும் யந்திரசாலைகளும் இந்நாட்டில் இப்போது ஏற்பட்டு, அநேக ஜனங்களுக்கு நிலையான வேலையும் கிடைத்திருக்கிறது. சில யந்திரசாலைகளை இந்தியர்களும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். நாளடைவில் இன்னும் அநேகர் இப்படிச் செய்யக்கூடும்.

நம்முடைய தொழில்கள் நான்கு வகைப்படும்: (1) நிலத்தைச் சேர்ந்தவை; (2) நெசவுமுதலிய தொழி



லைச் சேர்ந்தவை; (3) காட்டுச் சரக்குகளைச் சேர்ந்தவை; (4) சுரங்கப் பொருள்களைச் சேர்ந்தவை. தொழில்களுக்கு வேண்டிய சரக்குகளைப் பின்வருமாறு பிரிக்கலாம்: (1) பிசின் குங்கிலியம் முதலிய பொருள்கள்; (2) விதை, எண்ணெய், கொழுப்பு முதலியவை; (3) சாயத்திற்கும் பதம் செய்வதற்கும் உபயோகமானவை; (4) தோலைப்போன்ற பிராணிகளின் சரக்குகள்; (5) சணல், பருத்தி, பட்டு முதலியவை; (6) மருந்துகளும் மருந்துச் சரக்குகளும்; (7) மரவகைகள்; (8) போஜனபதார்த்தங்கள்; (9) உலோகங்கள்.

முன்னமேயே சொல்லியபடி இத்தேசத்தில் பெரும்பாலும் அநேகர் வேளாண்மைத் தொழிலையே நடத்தி வருகிறார்கள். சிலர்தான் மற்றத் தொழில்களை நாடுகிறார்கள். சற்றேறக்குறைய புதிய தொழில்க ளனைத்தும் அயல்நாட்டு செல்வத்தைக்கொண்டே நடைபெறுகின்றன. ஆயினும் இங்குள்ளோர்கள் வேலை செய்து கூலியைப் பெற்று நன்மையடைகிறார்கள். உபயோகமற்ற மலைநாட்டு நிலங்களெல்லாம் காபி, தேயிலை, கொயினா முதலியன பயிரிடுவதற்கு இப்போது உபயோகமாகின்றன. தேயிலைப் பயிருக்கு 5 லக்ஷம் ஏகராக்களும், காபிப் பயிருக்கு சுமார் லக்ஷம் ஏகராக்களும் உபயோகமாகின்றன. மேலும் 200 பருத்தி யந்திர சாலைகளும், 40 சணல் யந்திர சாலைகளும், 70 அரிசி யாலைகளும், 90 மரமறுக்கும் சாலைகளும், 65 தோல் பதனிடுஞ் 9 காகிதம் செய்யுமிடங்களும்,

சாலைகளும், 76 இரும்பு வார்ப்பிட சாலைகளும், 54 மாவரைக்கும் சாலைகளும், 56 எண்ணெயெடுக்கும் சாலைகளும், 108 அச்சுயந்திர சாலைகளும், கம்பளம், துணி, நகை, கண்ணாடி, சட்டிப்பானைமுதலிய செய்வதற்கு அநேக சாலைகளும் இப்போது இருக்கின்றன. இருப்புப்பாதைகள், பாலங்கள், பாதைகள், தபால், தந்தி, பரவிய கல்வி முதலியன மேற்சொல்லிய தொழில் விருத்திக்குச் சாதனங்களென்றே கொள்ளவேண்டும். மேலும் வியாபாரத்திற்கு இடையூறான வரிகளை துரைத்தனத்தார் போக்கினதும், இங்கிலாந்தின் வர்த்தகக் கிளர்ச்சியும் கப்பற் சாதனங்களும் இத்தேசத்திற்கும் அயல் நாடுகளுக்குமுள்ள வியாபாரத்தை ஓங்கும்படி செய்திருக்கின்றன.

வியாபாரம் அதிகரிக்க அதிகரிக்க சில தலைநகரங்களில் வியாபாரச் சங்கங்க ளேற்பட்டு அதனைச் சேர்ந்தவர்கள் துரைத்தனத்தார்களுக்கு வியாபாரவிஷயமாகச் செய்யவேண்டி சட்டதிட்டங்களைப்பற்றி ஆலோசனைகள் சொல்லி உதவுகிறார்கள். அவசியமில்லாத சட்டதிட்டங்களைச் செய்து வியாபாரத்தைக் கட்டுப்படுத்தவேண்டுமென்பது துரைத்தனத்தாரின் நோக்கமல்ல. வியாபாரப் பெருக்கத்திற்கு சுவேச்சை அவசியமென்று நன்குணர்ந்து, சட்டதிட்டங்கள் வேண்டும்போதுதான் அவர்கள் குறுக்கிடுகிறார்கள். வேலைக்காரர்களுக்கு தேக அசௌக்கியமும் அபாயமும் உண்டாகாமல் யந்திரசாலைகள் நடத்தப்படுகின்றனவாவென்று கவனிப்ப





வியாபாரக் கப்பல்.

தற்குச் சில சட்டங்களைச் செய்திருக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமை விடுமுறைநாளா யிருக்கவேண்டுமென்றும், குழந்தைகளைக் கூலிவேலைக்கு அமர்த்தக்கூடாதென்றும், அபாயமான யந்திரங்களுக்குக் கிராதி அல்லது மறைவுகட்டி வேலைக்காரர்களுக்கு அபாயமில்லாமல் செய்யவேண்டுமென்றும் சட்டதிட்டங்களை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். யந்திரசாலைகளைப் பரிசோதிப்பதற்குத் தகுந்த அதிகாரிகளையும் நியமித்திருக்கிறார்கள்.

சிலகாலத்திற்கு முன்வரையில் இங்கிலாந்திலிருந்ததுபோலவே, இத்தேசத்திலும் யந்திரங்களின் உப

யோகத்தையும் பயனையும்பற்றி ஜனங்களுக்கு ஒரு விதமான அச்சமும் தப்பெண்ணமும் இருந்துகொண்டுவந்தன. பல வருஷங்களுக்குமுன் இங்கிலாந்தில் காலுறை செய்வதற்கு ஒரு யந்திரத்தை ஒருவன் கண்டுபிடித்தபோது, இந்தத் தொழிலை செய்துகொண்டிருந்தவர்கள் தங்களுடைய பிழைப்பு கெட்டுப்போமென்று கூக்குரலிட்டார்கள். ஆனால் யந்திரத்தைக் கொண்டு காலுறையின் மேல்பாகம்மட்டும் செய்யப்பட்டது. மற்ற பாகத்தை கையால்தான் செய்யவேண்டியிருந்தது. யந்திர ஸகாயத்தால் உறைகள் செய்ய செய்ய அவை மலிந்துவிட்டன. அவை மலிய மலிய உறைகளின் கீழ்பாகத்தைக் கைகளால் செய்வதற்கு முன்னிருந்ததைக்காட்டிலும் ஏராளமான வேலைக்காரர்களை நியமிக்கலாயிற்று. இவ்வண்ணமே சில வருஷங்களுக்கு முன் தையல் யந்திரங்கள் இந்நாட்டிற்கு வரவே தையற்காரர்களுக்கு பிழைப்புப் போய்விடுமென்று பயந்தார்கள். இதனால் உடுப்புக்களின் விலை குறைந்து, அனைவரும் அதனை உபயோகிக்க ஆரம்பிக்கவே முன்விட பதின்மடங்கு தையற்காரர்களுக்கு பிழைப்பு ஏற்பட்டுவிட்டது. யந்திரங்களை உபயோகிப்பதால் சில வேலைக்காரர்களுக்குச் சிறிது காலத்திற்கு நஷ்டம் விளைந்தாலும், சரக்கின் விலைகுறைவதால் முடிவில் உழைப்பாளிகளுக்கு நன்மை உண்டாகின்றது. இங்கிலாந்தினின்றும் யந்திரத்தினால் செய்யப்பெற்ற மலிவான உடைகள் இங்கு வரவே, இத்தேசத்தில் வெகுகால



மாக நெசவுதொழிலையே ஜீவனோபாயமாய் கொண்டவர்கள் சிலர் நஷ்டமடைந்து தொழிலையும் இழந்தார்கள். ஆயினும் நாளடைவில் ஆங்கிலேயர்களைப்போல் நாமும் யந்திரமுறைகளை நாடினால், ஆதிகாலத்தைப்போல் இக்காலத்திலும் இத்தேசத்தின் சரக்குக்களும் வெளிதேசங்களுக்கு அனுப்பப்படுமென்பதற்குச் சந்தேகமில்லை. வியாபாரமுறைகளில் செல்வ விருத்திக்குச் சாதகமான புதிய யந்திர ஸகாயங்களை நாடுவதில் நாம் அயல்நாட்டார்களுக்குப் பின்வாங்குவதினால் இத்தேசத்திற்குச் சில வழிகளில் நஷ்டம் விளைந்து, பழைய முறைகளையே கைக்கொண்ட தொழிலாளிகள் கஷ்டமடைவது இயல்பே. நாகரிகக் கிளர்ச்சியில் புதிய வழிகளைக் கைக்கொள்வதே லாபகரமானது. அயல்நாட்டார்கள் நம்மை ஸந்தோஷப்படுத்துவதற்காக யந்திர ஸாதனங்களை உபயோகித்து ஏராளமான செல்வப்பொருள்களை உண்டாக்காமலிருப்பார்களா?

வியாபாரமும் செல்வமும் பெருகுவதினால், அனைவரும் முன்காலத்தைவிடச் செல்வவான்களாய் ஆய்விட்டார்களென்று நினைப்பது தவறு. வறுமைத் துன்பத்தைப் போக்குவது துரைத்தனத்தார்களாலும் முடியாத காரியம். ஏனெனின் பெரும்பாலும் ஜனத்தொகையின் பெருக்கமும், ஸாமான்ய மனிதர்களின் அறியாமை, அவநம்பிக்கை, டாம்பீகம், செட்டின்மை முதலிய கெட்டகுணங்களே வறுமைத் துன்பத்திற்குக் காரணமென்று சொல்லவேண்டும். இக்காரணங்கள்பற்றியே

காலைமுதல் மாலைவரை நாணயமாய் உழைக்கும் குடியானவன் இளைக்க இளைக்க கடின வட்டிவாங்கும் ஸாவகாரி பலமடைகிறான். பயிர் கதிர்வாங்குவதற்கு முன் ஸாவகாரியிடம் கிடைக்கப்போகிற தானியத்தை ஈடுகாட்டிக் குடியானவன் கடின வட்டிக்குக் கடன் வாங்கிவிட்டால் இவன் தீன ஸ்திதியிலிருப்பது வியக்கத்தக்கதோ? இவ்விதம் ஸாவகாரிக்கு இரையாவது ஜனங்களுள் கட்டுப்பாடில்லாமையாலே. இந்தத் தீங்கை விலக்க 1904-ம் வருஷத்தில் ஐக்ய நாணயச் சங்கச் சட்டத்தை (Co-operative Credit Societies Act) துரைத்தனத்தார் செய்து, கொடுக்கல் வாங்கல் செய்வதற்குக் கிராமச் சங்கங்களையும் நகரச் சங்கங்களையும் அந்தந்த விடத்திலுள்ளோர் ஏற்படுத்திக்கொள்ளலாமென்றும், தகுந்த அதிகாரிகளைக்கொண்டு அச்சங்கங்களை தாங்கள் மேல்விசாரணை செய்துவருகிறோமென்றும் தெரிவித்திருக்கிறார்கள். சென்ற ஐம்பது வருஷகாலமாக மேற்றிசை நாடுகளில் இச்சங்கங்களைப்போன்ற பல சங்கங்கள் குறைந்த விலைக்குச் சரக்குக்களை விற்பனை செய்வதற்கும் நியாயமான வட்டிக்குக் கடன் கொடுத்து உதவுவதற்கும் ஏற்பட்டு செழித்தோங்கியிருக்கின்றன. இவ்வண்ணமே இப்புதிய சட்டத்தின்படி சங்கங்களேற்பட்டு ஜனங்கள் பயனடைந்து வறுமைத் துன்பமும் ஒருவாறு அகற்றப்படலாம்.

மேற்சொல்லிய சங்கங்களை மேல்விசாரணை செய்வதற்கும், தகுந்த கூட்டுறவு முறைகளைப் போதிக்கவும்



ரிஜிஸ்ட்ரார் என்று சொல்லப்படும் ஒரு அதிகாரியை ஒவ்வொரு மாகாணத்திற்கும் நியமித்திருக்கிறார்கள். தேசம் முழுதும் ஒரே ஒழுங்காய் சட்டதிட்டங்களேற்படவேண்டுமென்று வருஷத்திற்கு ஒருமுறை எல்லா ரிஜிஸ்ட்ரார்களும் ஓரிடத்தில் கூடி யோசனை செய்கிறார்கள். இவ்விதமான சட்டதிட்டங்களேற்பட்டு ஐந்தாறு வருஷங்களேயாயினும், கூட்டுறவுச் சங்கங்கள் பல ஸ்தாபிக்கப்பட்டு தேர்ச்சியடைந்து வருகின்றன. இப்போது 80 லக்ஷம் ரூபாய் மூலதனத்தோடு 2,000 சங்கங்கள் வேலை செய்துகொண்டிருக்கின்றன. இரண்டு லக்ஷம் ஜனங்கள் இச்சங்கங்களைச் சேர்ந்திருக்கிறார்கள். கிராமவாஸிகள் பலர் இதனைச் சேர்ந்து, சங்கங்களின் லாப நஷ்டங்களுக்குத் தாங்களே பாத்தியப்பட்டுத் தங்களுடைய நாணயத்தைப் பெருக்கிக்கொண்டு ஸ்வல்ப வட்டிக்குப் பணத்தை அடைகிறார்கள். இச்சங்கங்களால் ஒற்றுமையும் நம்பிக்கையும் பெருகுகின்றன. நகரச் சங்கங்களில் சில ஆகாரப் பொருள்களைத் தாழ்ந்த விலைக்கு அங்கத்தினர்களுக்கே விற்று, கிடைக்கிற லாபத்தை வாங்குவோர்களுக்கே பிரித்துக் கொடுக்கிறார்கள். இச்சங்கங்கள் நகரவாஸிகளுக்கு வெகு லாபகரமாயிருந்தும் எம்மட்டில் அவை விருத்திக்கு வரவேண்டுமோ அவ்வளவு வரவில்லை. நாளடைவில் இச்சங்கங்களும் கிராமச் சங்கங்களைப்போல் விருத்தியடைந்து செழித்தோங்குமென்பதற்குச் சிறிதேனும் சந்தேகமில்லை. தொழிலாளிகள் பலர் சேர்ந்து, வேண்

டிய மூலதனத்தைத் தாங்களே செலவிட்டு வருகிற லாபத்தைத் தாங்கள் பெறும் கூலிக்குத் தக்கபடி பிறித்துக்கொள்வதுண்டு. இவ்வகையான கூட்டுறவுச் சங்கங்களை ஐக்கிய தொழிற் சங்கங்களென்று சொல்லலாம். 1904-ம் வருஷத்தில் ஏற்பட்ட சட்டம் நாணயச் சங்கங்களுக்கே உரியது. மேற்சொல்லிய வியாபாரச் சங்கங்களும் தொழிற் சங்கங்களும் ஜனங்களுக்கு லாபகரமாகையால் இச்சங்கங்களை ஏற்படுத்தி நல்ல நிலைமைக்குக் கொண்டுவருகிறதற்கு 1912-ம் வருஷத்தில் மேற்சொல்லிய சட்டத்தை சீர்திருத்தம் செய்திருக்கிறார்கள். வறுமைத் துன்பத்தை அகற்றுவதற்கு வேண்டிய உதவிகளை துரைத்தனத்தார் செய்துவருகிறார்களென்பதற்குச் சிறிதேனும் சந்தேகமில்லை. ஆயினும் இதனை முற்றிலும் ஒழிப்பதற்கு ஜனங்களின் ஊக்கமும் கட்டுப்பாடும் அவசியமன்றோ?

# இரண்டாம் பாகம்

## 14.—துரைத்தனத்தாருக்கு நாம் செய்யு முதவி

**வரிகளை ஏன் போடவேண்டும்—வரி தண்டும் முறைகள்—அரசாட்சி முறைமை துரைத்தன விருத்திக்குக் காரணமாகும் என்பது.**

துரைத்தனத்தார் நமக்குச் செய்துவரும் உதவிகளைப்பற்றி இதுவரையிற் சொல்லிவந்தோம். துரைத்தனத்தார் அளவற்ற பொருளைச் செலவுசெய்தே ஜனங்களுக்கு நன்மைகளைச் செய்யக்கூடுமென்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். ஜனங்களைக் காப்பது துரைத்தனத்தின் கடமைபோல் துரைத்தனத்தாருடைய உதவியைப்பெற்றுக்கொள்ளும் ஜனங்கள் தங்களுடைய வரும்படிக்குத் தக்கபடி அவர்களுக்குப் பிரதியாகப் பொருளுதவி செய்வதும் முக்கியமான கடமையாகும். இஷ்டமிருப்பினும் இல்லாவிடினும் ஒருவன் இக்கடமையைச் செய்தே தீரவேண்டும். இவ்வகையாகச் செய்யும் பொருளுதவிக்கே வரி என்று பெயர். வரி செலுத்தவேண்டுவது முறையென்று தெரிந்திருந்தும் அதைச் செலுத்துங்காலத்திற் சிலருக்கு மிகவும் வருத்தமாக இருக்கும். இங்ஙனம் வருத்தப்படுபவர்கள், சாலைகள் எல்லாம்

அழகாக அமைக்கப்படவேண்டுமென்றும், ஜலவசதியும், இரவில் நல்ல வெளிச்சமும் பூரணமாக இருக்கவேண்டுமென்றும், சிறுவர்கள் சம்பளமின்றிப் படிப்பதற்குத் தகுந்த சௌகரியங்கள் ஏற்படவேண்டுமென்றும், உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளங்களை உயர்த்தவேண்டுமென்றும், நூதனமான பல வேலைகளை உண்டாக்கி உத்தியோகஸ்தர்களை நியமித்துச் சம்பளமளிக்கவேண்டுமென்றும் சொல்லுதல் நியாயமா! இவ்வளவுக்கும் பணம் எங்கிருந்து கிடைக்கும்? துரைத்தனத்தாரே தங்களுடைய ஜன்மதேசத்திலிருந்து வேண்டிய திரவியத்தைக் கொண்டுவந்து இத்தேசத்தாருக்கு வேண்டிய நன்மைகளைச் செய்தல் சாத்யமா? ஜனங்கள் கொடுக்கும் பகுதிகளைச் சேர்த்து நல்லவழியிற் செலவிட்டு அவர்களுக்கு நன்மையைச் செய்துவருவதுதான் துரைத்தனத்தாருக்கு சாத்யமாகும்.

வரி தண்டுவதில் சில நியாயங்கள் உள்ளன. வரும்படிக்குத் தக்கபடியே வரிகள் போடவேண்டுமென்பதை யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடும். ஏழைகள் சொற்ப வரியையும் பணக்காரர்கள் அதிக வரியையும் கொடுப்பது நியாயமே. வரியை ஒருவன் கொடுக்க அதனால் வேறொருவன் நஷ்டமடையலாம். வஸ்திர வரியினாற் பெரும்பாலும் வியாபாரி நஷ்டமடைவதில்லை. அவன் வஸ்திரத்தின் விலையில் வரியைச் சேர்த்துவிடுவதால், நஷ்டம் அடைபவன் அதை வாங்குபவனாகிறான். இப்படியே வீட்டுவரி பெரும்பாலும் குடியிருப்போனுக்கு



நஷ்டத்தை விளைவிக்கின்றது. ஆகையால் வரியினால் உண்மையில் நஷ்டம் அடைவோர்களுடைய நிலைமைக்குத் தக்கபடி துரைத்தனத்தார் தீர்வையை விதிக்கவேண்டும். அன்றியும், ஜனங்களிடமிருந்து வரிகளைத் தண்டல் செய்வதற்காக அதிகச் செலவு செய்தல் கூடாது. வரி லக்ஷ ரூபாயாக இருந்தால் அதைத் தண்டுவதற்கு ஐம்பதினாயிரம் ரூபாய் செலவிடுவதைச் சிறந்த வழியென்று சொல்லக்கூடாது. ஏற்பட்ட வரி முழுவதும் கூடுமானவரையில் துரைத்தனத்துக்கு உபயோகப்படவேண்டும். வரிவிஷயத்தில் துரைத்தனத்தார் தங்களுடைய வரும்படியையே முக்கியமாகக் கருதாமல் ஜனங்களுடைய நன்மையையும் கருதுவது அவசியமானாலும், கள்ளுண்ணல் முதலிய கெட்ட வழக்கங்களைத் தடுப்பதற்காகக் கடுமையான வரிகளை ஏற்படுத்தித் தங்களுக்கு அதிக வரும்படியைச் செய்துகொண்டாலுங் குற்றமில்லை.

வருமானத்தைவிட அரசாட்சி முறைமையையே துரைத்தன விருத்திக்குச் சிறந்த காரணமென்று கூறவேண்டும். வரி வாங்குவதற்கும், வாங்கும் வரியைச் சரிவரச் செலவிடவும், பொதுவான துரைத்தன அதிகாரங்களை வகிப்பதற்கும், சிறந்த அதிகாரிகளை நியமித்து உரிய கடமைகளை அவர்கள் ஒழுங்காகச் செலுத்தும்படி செய்வதே துரைத்தனத்துக்கு அழகு. கடமையைச் செய்வதே அதிகாரத்தின் லக்ஷணம். பெரிய தொழிற்சாலைகளில் ஒவ்வொரு வேலைக்காரனும் அவனவனுடைய வேலையைச் செய்யாவிட்டால், யந்திரம் அசை

வற்று நின்றுவிடும். ஆதலால், துரைத்தனமென்ற பெரிய யந்திரத்தை நடத்துவதற்கு அதிகாரிகள் குறித்த வேலைகளைச் சரிவரச் செய்யவேண்டும். இப்பொழுது நாம் துரைத்தனத்தாருக்குக் கொடுத்துவரும் வரிகள் இன்னவை, அவை இவ்விதம் தண்டப்படுகின்றன, அவற்றைக்கொண்டு துரைத்தனம் இன்னவாறு நடத்தப்படுகிறது என்னும் விஷயங்கள் இனி கூறப்படும்.

"கொற்றவர் நரர்க்குழைத்துக் கூலியா விறையைக் கொள்வர்."
(நீதிநூல்.)

"நன்றிமறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று." (திருக்குறள்.)

## 15.—வரி மூலங்களும், வரி தண்டலும்.

**வரிகள் பலவாக இருப்பதற்குக் காரணம்—நிலவரியும் அதன் வரலாறும்—ஜமீன்தாரி, குடிவாரி, கிராமவாரி முறைகள்—நிலவரியை ஏற்படுத்தும் முறைகள்—உப்புவரியும் அதன் வரலாறும்—உப்புவரி குறைக்கப்பட்டதில் உண்டான நன்மைகள்—சாராயத் தீர்வையின் பயன்கள்—ஏற்றுமதி இறக்குமதித் தீர்வை—வரும்படிவரி—காட்டுவரி—முத்திரைச் சீட்டுக்களின் ஆதாயம்—தந்தி, தபால், இருப்புப்பாதை, நாணயச்சாலை முதலியவற்றல், கிடைக்கும் வரும்படி—மேற்சொல்லிய வரிகளைத் தண்டும் முறைகளும், அதிகாரிகளும்.**

மனிதர்கள், வரும்படியை யுத்தேசித்துத் தேடிக்கொள்ளும் வழிகள் பல. பலர் பயிர்த்தொழில் செய்யலாம். சிலர் கைத்தொழில் வேலைகளில் அமர்ந்திருக்கலாம். வேறு பலர் வர்த்தகத்தினுல் ஜீவிக்கலாம். மற்றுஞ் சிலர் முன்னோர் தேடிவைத்த பொருளைக்கொண்டு சுகஜீவனம் செய்துவரலாம். வரும்படிக்குத் தக்கபடி வாங்கவேண்டுமாதலால் வரிகளும், அவற்றின் காரணங்களும் பலவாருக இருக்கின்றன. இன்னவரிகள் இத்தேசத்தில் வழங்கிவருகின்றனவென்றும் அவை இன்னவாறு கிடைக்கின்றனவென்றும் இனிச் சொல்லுவோம்.



**நிலத்தீர்வை:**—இத்தேசத்து ஜனங்களுள் மூன்றில் இரண்டுபங்குக்கு மேற்பட்டவர்கள் நிலத்தைப் பயிரிட்டுப் பிழைப்பதால் **நிலத்தீர்வை**யே துரைத்தனத்தாருடைய வருவாய்க்கு முக்கியமான காரணமாகிறது. 1906-ம் வருஷத்தில் நிலவரியால் துரைத்தனத்தாருக்குக் கிடைத்த தொகை சற்றேறக்குறைய 28 கோடி ரூபாய் இருக்கும். வங்காள மாகாணத்தில் 1793-ம் வருஷத்தில் நிலவரி எப்படி ஏற்பட்டதோ அப்படியே இன்னும் இருந்துவருகிறது. துரைத்தனத்தார் அதனை **ஜமீன்** ராஜ்யமாகச் செய்ததும், அப்பொழுது இருந்த நிலவளத்தையும் வரும்படியையும் மதிப்பிட்டு ஜமீன்தார்கள் கட்டவேண்டிய தீர்வையை (பேரீஜ்) இவ்வளவென்று தீர்மானித்ததல்லாமல் அதை ஒருபோதும் மாற்றக்கூடாதென்று சட்டம் ஏற்படுத்தியதுமே மேற்சொல்லிய ஒரே நிலைமைக்குக் காரணமாகின்றன. இம்மாதிரியாகவே **சென்னை, ஆக்ரா** முதலான மாகாணங்களுட் சில விடங்களில் நிலவரி ஏற்பட்டிருக்கின்றது.

சென்ற நூறு வருஷங்களாக இந்த இடங்களில் நிலங்கள் அதிகமாகப் பயிரிடப்பட்டு வருவதாலும் விளைபொருள்களின் விலை அதிகரித்து வருவதாலும் ஜமீன்தார்களுக்கு நல்ல லாபம் கிடைக்கிறதேயன்றி, துரைத்தனத்தாருக்குமட்டும் வரும்படி பெருகவில்லை.

மற்றவிடங்களில் 10 வருஷங்களுக்குமேல் 30-க்குள்ளாக ஒருமுறை தீர்வையைத் தீர்மானிக்கிறார்கள். கிராமங்களுக்கே சொந்தக்காரர்களாகிய பெருத்த நிலக்காரர்களுடைய விஸ்தாரமான நிலங்களைக் கிராமவாரியாகக் கணக்கெடுத்து அப்பொழுது இருக்கும் பயிர்களின் செழிப்பையும் நிலங்களின் அளவையும் கவனித்து வரிகளை ஏற்படுத்துகிறார்கள். அடுத்தமுறை இம்மாதிரியான கணக்கெடுக்கும்வரையில் இத்தீர்வை மாற்றப்படுகிறதில்லை. ஆனால், ஒரு கிராமத்திலுள்ள நிலங்கள் பலருக்குச் சொந்தமாக இருந்தால், 20 அல்லது 30 வருஷங்களுக்கு ஒருமுறை பெயர்வழிக் (குடிவாரி) கணக்கெடுத்து வரியின் திட்டத்தை ஏற்படுத்தி, ஒவ்வொரு நிலக்காரரும் இவ்வளவு இவ்வளவு தீர்வை செலுத்தவேண்டுமென்று தீர்மானிக்கிறார்கள். எல்லாச் செலவும் போகக் கிடைக்கும் ஆதாயத்தில் ஏறக்குறைய பாதியளவு துரைத்தனத்தாருக்குத் தீர்வையாகச் செலுத்தப்படுகின்றது. நீர்வறண்டு விளைவில்லாத பஞ்சகாலங்களில் தீர்வையைத் தள்ளிக் கொடுக்கவும் நீர்வளமுள்ளகாலத்திற் புதிதாகப் பயிரிடப்படும் நிலங்களைக் கணக்கிட்டு வரிபோடவும்



ஜில்லா அதிகாரிகளுக்குத் துரைத்தனத்தார் அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். இவர்கள் ஜனங்களைச் சில விடங்களில் அழைத்து அவர்கள் குறைகளைக் கேட்டுக் கணக்கர்களை வைத்துக்கொண்டு நிலவரி விஷயங்களைத் தீர்மானிக்கிறார்கள். இதற்குத்தான் ஜமாபந்தி என்று பெயர்.

உப்புவரி:—நிலமில்லாதவர்கள் அநேகர் இந்நாட்டில் இருக்கிறார்கள். ஆனால், உப்பை உபயோகியாதவர் பெரும்பாலும் இல்லை. ஆகையால், இத்தேசத்தில் யாவரும் கொடுக்கின்ற வரி உப்புவரியென்றே சொல்லலாம். இந்த வரியை ஏழைகளும் கொடுக்கிறார்கள்; பணக்காரர்களும் கொடுக்கிறார்கள். ஏழைகள்கூடத் தங்களால் இயன்றஅளவு துரைத்தனத்திற்குப் பொருளுதவி செய்யவேண்டுவது நியாயமல்லவா! ஆகையால், இத்தேசத்தில் அந்த உதவியை அவர்கள் உப்புவரி ரூபமாகச் செய்துவருகின்றார்கள். ஆயினும், இதுவும் வரவரக் குறைக்கப்பட்டு வருகின்றது. 1903-ம் வருஷம் வரையில் மணங்குக்கு $2\frac{1}{2}$ ரூபா வீதம் வரி வாங்கிவந்தார்கள். அதேவருஷத்தில் 2 ரூபாய்க்குக் குறைத்துப் பிறகு $1\frac{1}{2}$ ரூபாயாக மாற்றினார்கள். 1907-ம் வருஷத்தில் ஒரு ரூபாயாகவே செய்துவிட்டார்கள். இப்படிச் செய்தும் துரைத்தனத்தாருடைய வரும்படி அதிகமாகக் குறையவில்லை. ஏனெனில், உப்பு மனிதர்களுடைய உணவுக்கும், மிருகங்களுடைய தீனிக்கும், நிலங்களின் எருவுக்கும், மீன் முதலியவற்றைப் பக்குவப்

படுத்துவதற்கும் மிகுதியாக உபயோகிக்கப்படுகிறது. இப்போது வருஷந்தோறும் ஏறக்குறைய 4 கோடி மணங்குகளுக்குமேல் அது செலவாகின்றது. 6 கோடி ரூபாய்க்குமேல் இராஜாங்கத்தாருக்கு லாபம் கிடைக்கிறது.

இந்நாட்டில் உள்ளவர்களுக்கு உப்பு நான்குவிதமாகக் கிடைக்கிறது: (1) சென்னையின் அருகே கடலோரமாகப் பாத்திகள் கட்டி உப்பு ஜலத்தைத் தேக்கிச் சூரிய வெப்பத்தினால் நீர் சுண்டியவுடன் உப்பை வாரி முட்டிட்டுச் சிலகாலம் வைத்துப் பிறகு உபயோகத்துக்கு வெளிவிடுகிறார்கள். (2) ராஜபுதனத்திலுள்ள ஸாம்பார் முதலான உப்பேரிகளினின்றும் உப்பு எடுக்கப்படுகின்றது. (3) பஞ்சாப் மாகாணத்திலுள்ள சில குன்றுகளிலும் உப்பு அகப்படுகின்றது. (4) இங்கிலாந்து, ஏடன் முதலான அயல் இடங்களிலிருந்தும் இத்தேசத்திற்கு உப்பு அனுப்பப்படுகின்றது. சில விடங்களில் துரைத்தன அதிகாரிகளாலும், வேறு சில விடங்களில் அவர்களிடம் உத்தரவு பெற்றுக்கொண்ட ஜனங்களாலும் உப்பு செய்யப்படுகின்றது. வடஇந்தியாவிற் பெரும்பாலும் துரைத்தன அதிகாரிகளே இந்த வேலையைச் செய்கிறார்கள். சென்னையில், துரைத்தன அதிகாரிகள் 22 உப்பளங்களையும் அவர்களுடைய அனுமதி அல்லது லைசென்ஸ் பெற்றுக்கொண்ட ஜனங்கள் 45 உப்பளங்களையும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். உப்புவரி வாங்குவதற்கு எவ்வளவு அதிகாரம்



செலுத்தலாமோ அவ்வளவே செலுத்தப்படுகின்றது. திருட்டுத்தனமாக உப்பு எடுப்பதைத் தடுக்கும்பொருட்டுத் தகுந்த அதிகாரிகள், சேவகர்கள், காவலாட்கள் முதலியவர்களை நியமித்திருப்பதன்றி அன்னிய துரைத்தனத்தைச்சேர்ந்த மாகாணங்களிலிருந்து திருட்டுத்தனமாக உப்பு இவ்விடம் வராமல் இருப்பதற்குத் தகுந்த ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார்கள்.

**சாராயத் தீர்வை:** — தங்களுடைய சொந்த லாபத்தைக் கவனிப்பதல்லாமல், கள்ளுண்ணல் முதலிய சில கெட்ட வழக்கங்களைத் தடுப்பதற்காகவும் துரைத்தனத்தார் தீர்வைகள் போடுகிறார்களென்று முன்னமே சொன்னோம். இந்தத் தீர்வைகளுள் கள்வரி யொன்றாகும். மயக்கத்தைத் தரக்கூடிய கள், கஞ்சா, அபினி முதலிய பதார்த்தங்கள் வெகுகாலமாக இந்நாட்டில் உபயோகப்பட்டு வருகின்றன. இவற்றை யுண்பவர்களுக்கு மனம், வாக்கு, காயம் இம்மூன்றும் தம் வசப்படாமையால் நாணம் அழியும். அழியவே அறிவுடையோரும் இனத்தோரும் அவர்களைக் காணுதற்கு அஞ்சி அவர்களிடம் நெருங்கார். அல்லாமலும், தம்முடைய செல்வமெல்லாம் இழந்து வறியவராகித் தெருத்தோறும் அலைந்து திரிந்து விழுந்துகிடந்து பலராலும் பழிக்கப்படுவார்கள். கள்ளுண்ணல் மிகுந்த பாவமென்று எல்லா நீதிநூல்களிலுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆயினும், இந்தக் கெட்ட வழக்கம் வரவர அதிகரித்து வருகின்றது. இதைத் தடுக்கும்பொருட்டே கடுமையான

தீர்வையை விதித்துப் பல சட்டதிட்டங்களைச் செய்திருக்கிறார்கள்.

வெளிநாடுகளிலிருந்துவரும் பானங்களுக்குத் தக்கபடி துறைமுகங்களில் ஒரு காலன் அல்லது 2½ படிக்கு ஓர் அணாமுதல் ஏழு ரூபாய்வரையில் தீர்வை வாங்கப்படுகின்றது. கள் வியாபாரிகள் ஒரு வருஷத்திற்கு ஏற்பட்ட வரியை முன்னதாகச் செலுத்தியோ, தீர்வைகள் ஏலத்தில் விடப்படும்போது அதிகத் தொகையைக் கொடுத்தோ பானங்களை விற்பனை செய்ய அதிகாரம் பெறுகிறார்கள். வரியைச் செலுத்தாதவர் வியாபாரம் செய்தல் கூடாது. இந்நாட்டில், சாராயத்தைக் காய்ச்சுவோர்கள் அதன் பலத்திற்கும் அளவுக்கும் தக்கபடி காய்ச்சுமிடத்திலேயே தீர்வை கொடுக்கவேண்டும். துரைத்தன அனுமதிபெற்ற கடைக்காரர்களே சாராயம் விற்கவேண்டுமென்றும் குழந்தைகளுக்கும், மயக்கமுற்றவர்களுக்கும் அதனைக் கொடுக்கக்கூடாதென்றும், கடனாக விற்பனை செய்யக்கூடாதென்றும், கடைகளைக் குறிப்பிட்ட நேரத்திற்குள் சாத்திவிடவேண்டுமென்றும், அனுமதிச் சீட்டுக்களை (லைசென்ஸ்களை) வருஷந்தோறும் புதுப்பித்து வரவேண்டுமென்றும், சட்டமிட்டிருக்கிறார்கள். கஞ்சா அபினி முதலியவற்றைப் பயிரிடுவோரிடமிருந்து இராஜாங்கத்தாரே வாங்கி வைத்துக்கொண்டு அதிகத் தொகை கொடுத்து அனுமதி பெற்றுக்கொள்ளும் வியாபாரிகளிடம் அவற்றைக் கொடுத்து ஜனங்களுக்கு விற்கும்படி செய்கிறார்கள். இப்படி



அநேக நிபந்தனைகள் ஏற்பட்டும் ஜனங்களுக்கு இந்த வஸ்துக்களில் அதிக விருப்பமிருப்பதால் அதிக விலையைக் கொடுத்தாவது வாங்கிவிடுகிறார்கள். ஆதலால், 1905-ம் வருஷத்தில் துரைத்தனத்தாருக்கு ஏறக்குறைய 8 கோடி ரூபாய் வரும்படி கிடைத்தது.

**ஏற்றுமதி இறக்குமதித் தீர்வை:**— இந்த நாட்டில் மிகுதியாக விளையும் பொருள்களை அயல்நாட்டுக்கு அனுப்பவும், இத்தேசத்திற்கு வேண்டியவற்றை அயல் தேசத்தினின்றும் வருவிக்கவும் வேண்டிய சௌகரியங்களை நமக்குச் செய்துகொடுப்பது துரைத்தனத்தாரின் கடமை. ஆகையால், ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களுக்குப் போடும் தீர்வைகளை நாளடைவில் தள்ளிவிடவேண்டுமென்றே துரைத்தனத்தார் நினைக்கிறார்கள். 1860-வது வருஷம் வரையில் இறக்குமதிக்கு நூற்றுக்குப் பத்துவீதமும், ஏற்றுமதிக்கு மூன்றுவீதமும் தீர்வை போடப்பட்டது. 1875-ம் வருஷத்தில் இறக்குமதித் தீர்வையை நூற்றுக்கு ஐந்தாகக் குறைத்துவிட்டார்கள். 1876-ம் வருஷத்திற் பருத்திப்பொருள்களுக்கு இறக்குமதித் தீர்வையைத் தள்ளிவிட்டார்கள். 1882-ம் வருஷத்தில் உப்பு, சாராயம், வெடிமருந்து முதலியவற்றைத் தவிர மற்ற வஸ்துக்களுக்குத் தீர்வையையே எடுத்துவிட்டார்கள். 1888-ம் வருஷத்தில் மண்ணெண்ணெய்க்குமட்டும் சொற்பத் தீர்வையை விதித்தார்கள். 1894-ம் வருஷத்தில் வெளிநாட்டிலிருந்துவரும் பருத்திப்பொருள்களுக்கும், இந்நாட்டு

யந்திரசாலைகளில் நெய்யப்படும் வஸ்திரங்களுக்கும் நூற்றுக்கு ஐந்துவீதம் தீர்வை வாங்கினார்கள். 1896-ம் வருஷத்தில் இந்தத் தீர்வையை மூன்றரையாகக் குறைத்துப் பருத்திநூல்களுக்குத் தீர்வையையே நீக்கிவிட்டார்கள். ஆகையால், இப்போது சீமை வஸ்திரம், வெள்ளி, துப்பாக்கி, வெடிமருந்து, மண்ணெண்ணெய், சாராயம், சர்க்கரை இவற்றிற்குமட்டும் தீர்வை வாங்குகிறார்கள். புஸ்தகம், அச்சிடும் கருவிகள், யந்திரங்கள், தங்கம், நிலக்கரி, கப்பல், மிருகங்கள் முதலியவற்றிற்குத் தீர்வையே வேண்டாமென்று விதித்திருக்கிறார்கள். ஏற்றுமதி, இறக்குமதித் தீர்வையால் 1907-ம் வருஷத்தில் துரைத்தனத்தாருக்குக் கிடைத்த வரும்படி ஏறக்குறைய 8 கோடி ரூபாய் இருக்கும்.

வரும்படி வரி:—முதல் முதல் 1860-ம் வருஷத்தில் இத்தேசம் கம்பெனியாரிடமிருந்து ஆங்கிலேயர்களுடைய அரசாட்சிக்கு வர, துரைத்தனமுறையிற் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. அக்காலத்தில், துரைத்தனத்தாருக்குச் செலவு அதிகமாக இருந்தபடியால் ஜனங்களுடைய வருஷ வரும்படிக்குத் தக்கபடி வரும்படி வரி என்னும் இவ்வரியை ஏற்படுத்தினார்கள்; முதலில், 200 ரூபாய்க்குமேற் கிடைக்கும் வருஷ வரும்படிக்கு வரி வாங்கினார்கள். 1862-ம் வருஷத்தில் 500 ரூபாய்க்கு மேற்பட்ட வரும்படிக்குமட்டும் வரி போட்டார்கள். இப்பொழுது 1000 ரூபாய்க்கு மேற்பட்ட வரும்படிக்குமட்டுமே வரி ஏற்பட்டிருக்கிறது.



ஆகையால், ஏழை ஜனங்கள் இந்த வரியினால் ஒரு விதமான நஷ்டத்தையும் அடைவதில்லை. ஏறக்குறைய 3 லக்ஷம் தனவான்கள் இந்நாட்டில் இந்த வரியைக் கொடுக்கிறார்கள். 1000 ரூபாய்க்குமேல், 2000 ரூபாய்க்கு உட்பட்டு ரூபாய்க்கு 4 பை வீதமும், 2000 ரூபாய்க்கு மேற்பட்டு ரூபாய்க்கு 5 பை வீதமும் வரி வாங்கப்படுகிறது. இந்தவகையில் வருஷந்தோறும் துரைத்தனத்தாருக்கு ஏறக்குறைய இரண்டு கோடி ரூபாய் கிடைக்கிறது.

காட்டு வரும்படி: — காடுகளையும் இந்நாட்டிற்குச் சிறந்த மூலதனமென்று சொல்லவேண்டும். அவற்றில் உபயோகமான பல மரங்களும், செடிகளும் இருப்பதல்லாமல், மற்ற நாடுகளிற் காணப்படாத அபூர்வமான மிருகங்களும் இருக்கின்றன. மழை பெய்வதற்கும் காடுகள் முக்கியமான காரணமென்று சொல்கிறார்கள். ஆகையால், ஜனங்கள் மரங்களை இஷ்டப்படி வெட்டிக் காடுகளை அழிக்காமல் இருக்கும்பொருட்டுத் துரைத்தனத்தார் பல விதிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்களால் விடப்படும் காடுகளில், அனுமதி பெற்றுக்கொண்டபிறகே மரம் வெட்டலாம்; வேட்டையுமாடலாம். காட்டிற் கிடைக்கும் பொருள்களைக் குறைவான விலைக்கே குடிகளுக்குத் துரைத்தனத்தார் கொடுக்கிறார்கள். இந்நாட்டில் 92,000 சதுரமைல்கள் பரப்பளவுள்ள காடுகளால், வருஷந்தோறும் ஏறக்குறைய $2\frac{3}{4}$ கோடி ரூபாய் துரைத்தனத்தாருக்குக் கிடைக்கிறது.

**முத்திரைக் கடிதங்கள்:**—தபால் தந்தி இலாகாக்களில் முத்திரைச் சீட்டுக்கள் இவ்விதம் உபயோகப்படுகின்றனவென்றும், துரைத்தனத்தார் நமக்குச் செய்து வரும் வேலைகளுக்காக நாம் கொடுக்கும் கூலிக்கு அவை செல்லுச்சீட்டுக்கள் என்றும் முன்னமே சொல்லியிருக்கிறோம். இம்மாதிரியே நாம் நியாயஸ்தலங்களில் வியாஜ்யம் செய்யும்போதும், பத்திரங்களெழுதும்போதும் பொருளுடைய மதிப்புக்குத் தக்கபடி பணங்கொடுத்து முத்திரைக்கடிதங்கள் வாங்கி அவற்றில் விருத்தாத்தங்களை எழுதுகிறோம்; இந்தப் பணமானது துரைத்தனத்தார் நியாயஸ்தலங்களையும், நியாயாதிபதிகளையும் ஏற்படுத்தி, நம்முடைய வழக்குக்களைத் தீர்த்துவைப்பதற்காக நாம் கொடுக்கும் தீர்வையென்று நினைக்கவேண்டும். நியாயஸ்தலங்களில் ஆகவேண்டிய காரியங்கள் யாவும் முத்திரைக் கடிதங்களாலேயே ஆகின்றன. இவ்வாறு முத்திரைக் கடிதங்களாற் கிடைக்கும் வரும்படியினாலேயே நியாய இலாகா நடந்து வருகிறது. பத்திரங்களில் திருட்டுத்தனமாகத் திருத்தங்கள் செய்து ஒருவரை யொருவர் மோசஞ்செய்யாமலிருக்கும்பொருட்டு "ரேஜிஸ்ட்ரார்" என்று சொல்லும் பத்திரப்பதிவு அதிகாரியிடம் ஜனங்கள் சென்று பத்திரத்திலுள்ள விஷயங்களைத் துரைத்தனத்தாருடைய புஸ்தகங்களிற் பதிந்துகொள்ளும்படி செய்கிறார்கள். இதற்கும் கூலியளிக்கவேண்டும். முத்திரைக்கடிதவிற்பனையால் வருஷந்தோறும் 6 கோடி ரூபாயும் பத்



திரப்பதிவினால் $57\frac{1}{2}$ லக்ஷம் ரூபாயும் துரைத்தனத்தாருக்குக் கிடைக்கின்றன.

**தபால், தந்தி, இருப்புப்பாதை, நாணயச்சாலை இவற்றின் வரும்படி:—**

இவற்றையெல்லாம் துரைத்தனத்தார் குடிகளுக்கு மிகவும் நயமாகச் செய்திருந்தபோதிலும் கோடிக்கணக்கான ஜனங்கள் இச்சாதனங்களை உபயோகிக்கின்றமையால், துரைத்தன வரும்படி பெருகிக்கொண்டே வருகின்றது. மேற்சொல்லிய இலாகாக்களையெல்லாம் ஒரே இலாகாவாகச் செய்து (Department of Commerce and Industry) இந்தியா துரைத்தனத்தாரே கவனித்து வருகிறார்கள். இப்பொழுது சில இருப்புப்பாதைகள் துரைத்தனத்தாருக்கே சொந்தமாகிவிட்டன. நாளடைவில் மற்ற இருப்புப்பாதைகளும் உடன்படிக்கையின்படி அவர்களுடைய ஸ்வாதீனத்துக்கு வந்துவிடும். ஆகையால், இருப்புப்பாதைகளால் துரைத்தனத்தாருக்கு வரவர வரும்படி அதிகமாகும். 1907-ம் வருஷத்திற் கிடைத்த வரும்படி ஏறக்குறைய 20 கோடி ரூபாயும், ஆன செலவு 17 கோடி ரூபாயும் இருக்கும். ஆகையால், ஆதாயம் ஏறக்குறைய 3 கோடி ரூபாய் ஆகிறது. தபால், தந்தி, நாணயம் முதலியவற்றால் துரைத்தனத்தாருக்கு வரும் படி $4\frac{3}{4}$ கோடி ரூபாயும், செலவு $4\frac{1}{2}$ கோடி ரூபாயுமாகின்றன.

மேற்சொல்லிய வழிகளைத்தவிர துரைத்தன வரும்படிக்கு வேறு சில வழிகளுமுள்ளன. மைஸூர், திரு

வாங்கூர் முதலிய சுதேச ராஜ்யங்களிலிருந்து கிடைக்கும் **கப்பமும்**, துரைத்தனக் கால்வாய்களை உபயோகிப்பதற்கு ஜனங்கள் கொடுக்கும் தீர்வையும், வேறு சில வரும்படியும் சேர்ந்து துரைத்தனத்தாருக்கு வருஷத்தில் ஏறக்குறைய 12 கோடி ரூபாய் கிடைக்கின்றது.

இவ்வாறு பலவிதமாகக் கிடைக்கும் மிகுதியான தீர்வைகளைக் கணக்கிட்டு ஜனங்களிடமிருந்து வாங்குவதற்கு ஒவ்வொரு கிராமத்திலும், தாலூகாவிலும், ஜில்லாவிலும், மாகாணத்திலும் அதிகாரம்பெற்ற உத்தியோகஸ்தர்களை நியமித்து, ஒவ்வொரு பொக்கிஷசாலைக்கும் தகுந்த அதிகாரிகளை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். கிராமங்களில் **மணியம்** என்றும், **கர்ணம்** என்றும் சொல்லப்படும் அதிகாரிகளையும், சில கிராமங்கள்சேர்ந்த பிர்காவுக்கு **ரேவினியூ இன்ஸ்பெக்டரையும்** தாலூகாவிற்குத் **தாசில்தார்**, அல்லது **டிப்டி தாசில்தார்** என்னும் அதிகாரியையும், இவர்களுக்குமேல் **டிப்டி கலெக்டர்களையும்**, ஜில்லாவிற்கு அதிகாரியாகக் **கலெக்டரையும்** நியமித்து, பொக்கிஷசாலைகளுக்குத் தகுந்த காவலேற்படுத்தி இவ்விதமான வரியை வாங்குகிறார்கள். ஜில்லாவுக்குத் தலைமை அதிகாரியாக இருப்பதால் வரி வாங்குவதோடு நிலங்களையும், குடிகளையும்பற்றித் துரைத்தனத்தாருக்குச் சமாசாரங்கள் அனுப்பவும், நிலக்காரர்களுக்கும் குடியானவர்களுக்குமுள்ள விவகாரங்களைத் தீர்க்கவும், கிணறு முதலியவற்றை வெட்டி நிலங்களைச் செழிப்பாக்கக் கடன்





ரேவினியூ போர்ட், சென்னை.

கொடுக்கவும், ஜில்லா பொக்கிஷசாலைகளை விசாரிக்கவும், ஜில்லா கலெக்டர் அதிகாரம் பெற்றிருக்கிறார். இவ்விதமான அதிகாரிகள் இவ்வழியிற் செய்யும் வேலையை மேல்விசாரணை செய்வதற்கு இந்த ராஜதானியில் **ரேவினியூ போர்ட்** என்ற சங்கத்தை ஏற்படுத்தி, ஜில்லா அதிகாரிகளாக இருந்து தேர்ச்சியடைந்த நான்கு சிறந்த உத்தியோகஸ்தர்களை அதன் அங்கத்தினராக அல்லது கமிஷனர்களாக நியமித்து

ரெவினியூ இலாகாவைத் தனிமையாக நடத்திவருகிறார்கள். இம்முறைகளே வங்காளம் ஆக்ரா முதலான மாகாணங்களிலும் உள்ளன. ஆனால், பம்பாய் மாகாணத்தில்மட்டும் ரெவினியூ போர்ட் என்ற சங்கத்தை ஏற்படுத்தாமல் இரண்டு கமிஷனர்களைக்கொண்டு ரெவினியூ விஷயங்களைக் கவனித்துவருகிறார்கள். புதிய மாகாணங்களிலும் ரெவினியூ போர்டுகளில்லை.

ரெவினியூ இலாகாவைத் துரைத்தனத்திற்கு வரும்படியைக் கொடுக்கும் இலாகாவென்று சொல்லவேண்டும். தேகத்தின் உறுப்புக்கள் அனைத்தும் வயிற்றிற்கு ஈயப்படும் உணவைக்கொண்டு பலப்படுவதுபோல, செலவுசெய்யும் இலாகாக்கள் யாவும் ரெவினியூ இலாகாவின் வரும்படியைக்கொண்டே பலப்படுகின்றன. ஆகையால், ரெவினியூ இலாகாவின் சட்ட திட்டங்களும், கணக்குக்களும், வரிதண்டும் முறைகளும், அதிகாரிகளும் மிகவும் ஒழுங்காக இருப்பது துரைத்தனத்திற்கு மிகவும் அவசியம். இம்மாதிரி இருக்கும்படி செய்வதிலேயே நம்முடைய துரைத்தனத்தார் ஊக்கமுடையவர்களாகக் காணப்படுகிறார்கள். முற்காலத்தில் ஜனங்களிடமிருந்து வாங்கப்பட்ட வரியெல்லாம் துரைத்தனத்தாரிடம் சேர்வதில்லை. ஏனெனில் வரிதண்டல் செய்யும் அதிகாரிகள் தீர்வையின் சில பாகத்தைத் தாங்களே உபயோகித்துக்கொண்டு வந்ததாகத் தெரிகின்றது. இப்பொழுதோ ஒரு பைசா அளவுகூடத் தவறுவதற்கிடமில்லை. குடிகள் கொடுக்கும் வரிகள் யாவும் ஒழுங்காகத் தண்டப்பட்டுத் துரைத்தனவிஷயத்தில் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. மேலும் கணக்குவிஷயத்தில் துரைத்தனத்தார் செய்திருக்கும் ஏற்பாடுகள் யாவும் வியக்கத்தக்கனவே. இவ்வளவு பெரிய நாட்டை ஆங்கிலேயர் அடைந்ததைவிட அவர்கள் 4000 மைலுக்கு அப்பாலிருந்துகொண்டு இத்தேசத்தின் மூலையிலிருக்கும் சிறிய பொக்கிஷசாலையில் ஒரு காசு தவறிப்போனாலும் அதனை அப்பொழுதே கண்டுபிடிக்கக்கூடிய வழிகளை அமைத்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது.



"வேருறுநீர் மரமெங்கும் விரவுமுதரங் கொள்சுவை
யாருணவு தேகமெலா மண்ணுறுங்கோன் கொள்ளுமிறை
பாருயிர்க்கெ லாம்பின்பு பயன்படலாற் றகும்பருவத்
தேருறவே தக்கவிறை யினிதீவர் குடிகளரோ" (நீதிநூல்.)

## 16.—நகர பரிபாலனம் முதலியன

**குடிகளுக்குத் துரைத்தனத்தார் கொடுத்திருக்கும் ஸ்வாதீனம்—கொடுக்கப்பட்ட காலம்—நகரவிசாரணை ஜில்லா விசாரணைச் சங்கங்களின் அமைப்பு—அவற்றின் வரும்படியும் செலவும்—அவற்றாற் செய்யப்படும் பொது நன்மைகள்—மேற்கூறிய ஸ்வாதீனத்தாற் குடிகளுக்கும் துரைத்தனத்துக்கும் உள்ள நன்மைகள்.**

குடும்பத்திற்குத் தகப்பன் எப்படியோ அப்படியே நாட்டிற்குத் துரைத்தனத்தாரென்று முதலிற் சொல்லி

யிருக்கிறோம். சிலர் தங்களுடைய பிள்ளைகளுக்கு ஒரு விதமான ஸ்வாதீனமும் கொடாமற் குடும்ப வேலைகள் எல்லாவற்றையும் தாங்களே கவனித்துத் தங்களுடைய அதிகாரம் முழுவதையும் அவர்களிடத்திற் செலுத்திவிடுவார்கள். ஆனால், கல்வியும், விவேகமுமுள்ளவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் குடும்ப தர்மங்களை நன்றாகப் போதித்து அவர்களிடம் சில வேலைகளை ஒப்புவித்து, அவர்களுக்கு ஸ்வாதீனம் கொடுத்து, அவர்களுடைய அன்பையும் நம்பிக்கையையும் பெற்றுத் தாங்கள் தலைவர்கள் என்ற விஷயத்தைக் காட்டிக்கொள்ளாமலே மிக்க திறமையுடன் குடும்பங்களை நடத்துவார்கள். இந்த இரண்டு வழிகளுட் சிறந்தது இன்னதென்பதை யாவரும் எளிதில் தெரிந்துகொள்ளலாம். எவ்வளவுக்கெவ்வளவு ஒருவன் தன் பிள்ளைக்குச் சுவாதீனம் கொடுக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு பிள்ளை தேர்ச்சியடைவதோடு அவனும் மரியாதையாக நடத்தப்படுகிறான். ஆகையால், நம்முடைய துரைத்தனத்தார் எந்த வேலைகளைக் குடிகளே சரிவரச் செய்துகொள்ளலாமோ, அவற்றையெல்லாம் அவர்களிடம் ஒப்புவித்து அவ்வேலைகள் ஒழுங்காக நடக்கும்வரையில் ஒதுங்கி நின்று பார்த்து வருகிறார்கள். கொடுக்கப்பட்ட சுவாதீனத்தை எப்பொழுதாவது கெட்ட வழியிற் செலுத்தி ஒருவரோடொருவர் சண்டை போட்டுக்கொண்டால் அப்பொழுது குடிகளிடமிருந்து சுவாதீனத்தைச் சிறிதுகாலம் பிடுங்கி அவர்களுக்குப் புத்திவரும்படி செய்கிறார்கள்.



தேசத்தைக் காத்து, நியாயம் செலுத்திக் கல்வியைப் பரவச்செய்து, இந்நாட்டுக்குப் பொதுவான தருமங்களைத் துரைத்தனத்தாரே நடத்திவருகிறார்கள். ஆனால், நகரம், தாலூகா, ஜில்லா முதலிய இடங்களில் அந்த அந்த இடங்களுக்கு வேண்டிய வழிநடைகள், வைத்தியசாலைகள் முதலியவற்றை அமைக்கவும், தெருக்களில் வெளிச்சம் போடவும், அசுத்தங்களைப் போக்கவும், சத்திரம் சாவடிகளைக் கவனிக்கவும், இவ்வேலைகளுக்கெல்லாம் வேண்டிய சிறு தீர்வைகளைப் போடவும், ஜனங்களுக்கே அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். 1884-ம் வருஷத்தில் லார்ட் ரிப்பன் என்பவர் ராஜப்ரதிநிதியாக இருந்தபோது நம்முடைய காருண்ய துரைத்தனத்தாரால் இஃது இந்நாட்டாருக்குக் கிடைத்தது. அப்பொழுது நகர விசாரணைக்காகவும், ஊர் விசாரணைக்காகவும் சில சட்டங்களை ஏற்படுத்தி, நகரங்களையும், ஜில்லாக்களையும் பரிபாலித்துவரும்படி ஜனங்களுக்கு ஒருவாறு ஸ்வதந்தரம் கொடுத்தார்கள்.



லார்ட் ரிப்பன்.
1880–1884.

மேற்சொல்லிய சட்டங்களினால், பெரிய கிராமங்களில் யூனியன் என்றும், நகரங்களில் முனிஸிபாலிடி என்றும், தாலூகாக்களில் டாலுக் போர்ட் என்றும், ஜில்லாக்களில் டிஸ்திரிக்ட் போர்ட் என்றும், விசாரணைச்சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. யூனியன்களில், கிராமவாஸிகள், சிலரைப் பஞ்சாயத்தாராக நியமித்து, சொற்பமான வீட்டுவரி வாங்கிக் கிராமங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ளும்படி அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். முனிஸிபாலிடி யென்னும் நகரபரிபாலன சங்கத்திற்கு அங்கத்தினராக இத்தனைபேர்களே இருக்க வேண்டுமென்ற நியமமுண்டு. இவர்களுள், பாதிப் பேர்களைத் துரைத்தனத்தாரும், மற்றவர்களை ஜனங்களும் நியமிக்கிறார்கள். ஊரார்க்கு வேண்டிய சௌகர்யங்களைக் கவனிப்பவர்கள் இவர்களே. தாலூகா விசாரணைச் சபையாரெல்லாரும் இராஜாங்கத்தாரால் நியமிக்கப்படுகிறார்கள். ஜில்லா போர்டு அங்கத்தினருட் சிலர் துரைத்தனத்தாராலும், மற்றவர்கள் சங்கத்தாராலும் நியமிக்கப்படுகிறார்கள். இச்சங்கங்களுடைய அங்கத்தினரின் தொகை ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொருவிதமாக இருக்கின்றது. பின்வருவன இச் சங்கங்களுடைய ஆதீனத்திற்கு உட்பட்டவை:—(1) சாலைகள் (2) சாலகங்களும், கால்வாய்களும், பாலங்களும் (3) குப்பை, சாலகநீர், அசுத்தங்கள் முதலியன (4) வைத்தியசாலைகள், சத்திரங்கள், பாடசாலைகள், கடைகள், குளங்கள், கிணறுகள் முதலியன.





ஆகாரப்பொருள் விற்குமிடம், சென்னை.

நகர பரிபாலன சபைக்குக் கீழே காட்டிய பலவகையான வரிகள் கிடைக்கின்றன.

1. தொழில் வரி.

2. வருஷ வரும்படியில் நூற்றுக்கு $7\frac{1}{2}$-க்கு மேற்படாத நிலவரியும் வீட்டுவரியும்.

3. வருஷ வரும்படியில் நூற்றுக்கு நாலுக்கு மேற்படாமல் வீடுகளுக்கும் நிலங்களுக்கும் ஏற்படும் தண்ணீர்த் தீர்வை.

4. பலவகை வண்டிகள், பல்லக்குகள், மாடு, குதிரை முதலிய மிருகங்கள் ஆகிய இவற்றை வைத்துக்

கொண்டிருப்பவர்கள் 6 மாதத்திற் கொருமுறை செலுத்தவேண்டிய வரி.

5. அயலிடங்களிலிருந்து பட்டணத்துக்குள் வரும் வண்டிகளுக்கும், வாகனங்களுக்கும் வாங்கும் சுங்கம்.

இந்த வரும்படியைக்கொண்டு நகர பரிபாலன சங்கத்தார்கள் பிரயாணிகளுக்கு உபயோகமான சாலைகளையும், பாலங்களையும், வியாதிகளை நீக்கத்தக்க பல வைத்தியசாலைகளையும், பாடசாலைகளையும், ஏழைகளுக்கு உபயோகமான விடுதிகளையும், சத்திரங்களையும், சாவடிகளையும், வியாபாரத்திற்கு அவசியமான கடைகளையும், அசுத்தநீர் ஓடுவதற்குரிய சாலகங்களையும், கோடைக்காலங்களில் உபயோகப்படத்தக்க குளங்களையும், கிணறுகளையும் அமைப்பதல்லாமல் வருஷந்தோறும் அவற்றின் நிலைமையைக் கவனித்துச் செய்ய வேண்டிய திருத்தங்களையும் செய்துவருகிறார்கள். அன்றியும் வீதிகள் குப்பையில்லாமல் சுத்தமாக இருப்பதும், இராக்காலங்களில் தெருக்களில் விளக்குகள் போடப்படுவதும், ஓய்வுநேரங்களில் ஜனங்கள் சந்தோஷமாக உலாவுதற்குரிய சிங்காரத்தோட்டங்கள் ஏற்பட்டிருப்பதும், தொத்துநோய் பரவாமல் இருப்பதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்வதும் இவர்களுடைய விசாரணையாலேயே. மேற்சொல்லிய வேலைகளைச் செய்வதற்குப் பலவகையான வேலைக்காரர்களையும் அதிகாரிகளையும் நியமித்திருக்கிறார்கள். தொத்துநோய்கள் வருங்காலத்தில் நோயாளிகளைத் தனியிடங்களில் இருக்கச்



செய்து அவர்களுக்குத் தகுந்த வைத்தியம் செய்வதல்லாமல் அவர்களுடைய வீடுகளில் தகுந்த திராவகங்களைத் தெளித்து நன்றாகச் சுத்தம் செய்து வியாதி பரவாமலிருக்கும்படி ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளுகிறார்கள். பின்வரும் அட்டவணையால் 1901-ம் வருஷத்தில் முனிசிபாலிடிகள் இருந்த நிலைமையானது விளங்கும்:—

| விவரம் | எண் |
|---|---|
| முனிசிபாலிடிகள் .... .... .... | 742 |
| அவற்றின் ஜனத்தொகை .... .... | 1,38,71,218 |
| முனிசிபல் மெம்பர்கள் .... .... | 9,797 |
| ஜனங்களால் நியமிக்கப்பட்ட மெம்பர்கள். | 4,937 |

முனிசிபாலிடிகளைப்போலவே போர்டுகளுக்கும் கீழே காட்டிய வரும்படிகள் கிடைக்கின்றன:—

1. குறித்த அளவுக்கு மேற்படாத வீட்டுவரி.

2. சாலைகளிற் செல்லும் வண்டிகள், வாகனங்கள், மிருகங்கள் முதலியவற்றிற்குச் சுங்கம்.

3. பந்தல், கொட்டகை முதலியன போடுவதற்காக ஒரு சதுரகஜத்திற்குத் தினம் காலணாவுக்கு மேற்படாத அனுமதித் தீர்வை அல்லது லைசென்ஸ் தீர்வை.

4. சந்தை கூடுங்காலங்களிலும், உத்ஸவங்களிலும் வண்டிப்பேட்டைகளையும், ஸாமான் விற்கும் இடங்களையும், கிராமப் பொதுவிடங்களையும் உபயோகப்படுத்துவதற்காக ஏற்பட்டுள்ள சிறு தீர்வைகள்.

5. மலையாளம், தென்கன்னடம், நீலகிரி முதலிய இடங்களிலுள்ள நிலங்களுக்கு வருஷ வரும்படியில் ரூபாய்க்கு இரண்டணுவும் மற்ற இடங்களில் ரூபாய்க்கு ஓரணுவும் ஆகிய நிலவரி.

இந்த வரும்படியைக்கொண்டு சாலைகளை உண்டாக்கி, அவற்றில் நிழலுக்காக மரங்களைப் பயிராக்கி, வைத்தியசாலைகள், பாடசாலைகள், சத்திரங்கள், சந்தைகள், சாலகங்கள், கிணறுகள், குளங்கள் முதலியவற்றை ஜனங்களின் சௌகரியத்துக்காக அமைத்து, வருஷந்தோறும் அவற்றைக் கவனித்துப் பஞ்சகாலங்களில் ஏழைகள் பிழைப்பதற்காக வேலைகள் கொடுத்து, வைத்தியத்திற்கும், அம்மை குத்துவதற்கும் தகுந்த ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்கள். பின்வரும் அட்டவணையில் 1901–ம் வருஷத்திய போர்டுகளின் நிலைமையானது காட்டப்பட்டிருக்கிறது:—

| விவரம் | | | | எண் |
|---|---|---|---|---|
| போர்டுகள் .... | .... | .... | .... | 1,073 |
| ஜனத்தொகை | .... | .... | .... | 19,36,00,005 |
| மெம்பர்கள்.... | .... | .... | .... | 15,648 |
| ஜனங்களால் நியமிக்கப்பட்ட மெம்பர்கள். | | | | 5,216 |

இவ்வண்ணமே துறைமுகங்களைக் காப்பதற்கும் அதனைச் சார்ந்த விஷயங்களை கவனிப்பதற்கும் "போர்ட் ட்ரஸ்ட்" என்று சொல்லும் பஞ்சாயத்துக்களை நியமித்திருக்கிறார்கள். இவற்றின் அங்கத்தினர்களாக சில ஐரோப்பியர்களும் இந்தியர்களும் துரைத்தன வதிகாரிகளு மிருக்கின்றார்கள். இச்சங்கங்கள் ஏற்றிறக்குமதித் துறைகளையும், கப்பல் செப்பனிடுந் துறைகளையும், தீபமண்டபங்களையும், பொதுவாய் துறைமுக விஷயங்களையும் கவனித்து வருகின்றன. கல்கத்தா, பம்பாய், சென்னை, கராச்சி முதலிய விடங்களில் இந்தச் சங்கங்க ளேற்பட்டிருக்கின்றன.



இவ்விதம் குடிகளையே அந்த அந்த இடத்துக் காரியங்களைக் கவனிக்கும்படி செய்வதால், துரைத்தனத்திற்கும், ஜனங்களுக்கும் உண்டாகும் நன்மைகள் பல. அந்த அந்த இடத்திற்கு வேண்டிய தேவைகளும் குறைகளும் அந்த அந்த இடத்திலுள்ளவர்களுக்கே நன்கு தெரிந்திருக்கும். மேலும் பணச்செலவு செய்வதில் துரைத்தனத்தாரைவிட, நகரவாஸிகளும் முனிசிபல் அதிகாரிகளும் மிக்க கவனத்தையும் செட்டையும் காண்பித்துத் துரைத்தனமுறையிலும் தேர்ச்சியடைந்து பல விதத்தில் துரைத்தனத்தாருக்கு வேண்டிய உதவிபுரியலாம். ஒரு நகரத்தைப் பரிபாலிப்பதனுல் உண்டாகும் கஷ்டங்களாலேயே ஒரு பெரிய தேசத்தைப் பரிபாலித்துவருவது துரைத்தனத்தாருக்கு இவ்வளவு கஷ்டமாக இருக்குமென்று ஜனங்கள் தெரிந்துகொண்டு அவர்களிடம் அன்பை நன்றாகச் செலுத்தக்கூடும். இவ்விதமான அதிகாரத்தைக் குடிகளுக்குக் கொடுத்

திருப்பதால், ஊக்கமும் விவேகமுமுள்ள மனிதர்கள் இந்நாட்டிலுள்ளவர்களுக்குப் பலவிதத்தில் நன்மைசெய்யும் வழிகளைத் தெரிந்துகொண்டு அவர்களுக்கு வேண்டிய உதவிபுரிகிறார்கள். தங்களுக்கு இட்ட நகர பரிபாலனவேலையை ஜனங்கள் எவ்வளவுக் கெவ்வளவு சரிவர நடத்துகிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு துரைத்தனத்தில், மேல் அதிகாரங்களுக்கும், சுவாதீனத்திற்கும் தகுதியுடையவர்களாக ஆவார்கள்.

> "கோவரிய சிவன் குடிகளுட லாவார்
> சிவன்சும் மாவிருக்கத் தேகமுழைத் தோம்புதல்போற்
> பூவலய மீதினிற்றம் பூச்சிகளி னுலுழைத்துக்
> காவலனைக் காக்கக் கடனுங் குடிகளுக்கே." (நீதிநூல்.)

> "............அறவழி நிற்கு மறிஞரை
> யறிந்தவர்க் குரிய
> தேயவா திக்கந் தந்துநன் நீதி செலுத்தியெங்
> கணுமருந் தினுக்குந்
> தீயவ ரிலரென் றிசையுற வடக்குந் திறலுளோன்
> பூதல வேந்தே." (நீதிநூல்.)

# மூன்றும் பாகம்

## 17.—மாகாண அரசாட்சி

**கிராம அதிகாரிகளும் ஜில்லா அதிகாரிகளும்—ஜில்லாவுக்குத் தலைவர் கலெக்டர்—இவருக்கு மேற்பட்டவர் இன்னு ரென்பது—மாகாண அரசாட்சியின் அமைப்பு—கவர்னரும் அவரது சபையும்—சட்டநிர்மாண சபையின் அமைப்பு—அதன் அதிகாரமும் வேலையும்—அதனால் ஜனங்களுக்கு உண்டாகும் நன்மைகள்.**

துரைத்தனத்தாரிடமிருந்து நாம் பெற்றுவரும் உதவிகளைப்பற்றியும் அவர்களுக்கு நாம் செய்யும் பிரதியுபகாரத்தைப்பற்றியும் இதுவரையிற் சொல்லிவந்தோம். இவ்வுதவிகளைத் துரைத்தனத்தார் இன்னசாதனங்களை வைத்துக்கொண்டு செய்துவருகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளுதல் அவசியமாகும்.

ஆயிரக்கணக்கான அதிகாரிகளைக்கொண்டும் சேவகர்களைக்கொண்டுமே நமக்கு வேண்டியவற்றைச் செய்விக்கிறார்கள். கிராமங்களில் கர்ணம், பட்டாமணியம், ஊர்க்காவற் சேவகர் முதலிய வேலைக்காரர்களும், தாலுகாக்களில் அவர்களுக்கு மேற்பட்ட அதிகாரிகளும், ஜில்லாக்களில் தாலூகா அதிகாரிகளுக்கு மேற்பட்ட

வர்களும் நியமிக்கப் பெற்றிருக்கிறார்கள். ஜில்லாவிலுள்ள தலைமை அதிகாரிக்குக் **கலெக்டர்** என்று பெயர். ஜில்லாவைச் சிறிய ராஜ்யமென்று சொல்லலாம். இந்த இராஜ்யத்திற்கு அரசர் **கலெக்டர்** ஆவார். துரைத்தன அங்கங்கள் எல்லாவற்றையும் ஜில்லாவிற் பார்க்கலாம். இந்தியாவை 250 ஜில்லாக்களாகப் பிரித்துத் தக்க அதிகாரிகளைக்கொண்டு ஆண்டுவருகிறார்கள். சற்றேறக்குறைய ஒரு ஜில்லாவின் விஸ்தீரணம் 4,500 சதுர மைலும் ஜனத்தொகை லக்ஷமும் இருக்கும்.

லக்ஷக்கணக்கான ஜனங்களைப் பாதுகாக்கும் அதிகாரிகளுக்கு, **ஊக்கம்**, **நல்லொழுக்கம்**, **கல்வியறிவு**, **தயை**, **தைரியம்**, **நடுவுநிலைமை**, **உண்மையுடைமை** முதலிய சிறந்த குணங்கள் இன்றியமையாதவை. ஆகையால், இங்கிலாந்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள **இந்தியன் ஸிவில் ஸர்விஸ் பரீக்ஷை** என்ற கடினமான பரீக்ஷையில் தேறி, மேற்சொல்லிய குணங்கள் யாவும் நன்றாக அமையப் பெற்று ஜில்லா வேலைகளில் நல்ல திறமையும் அனுபவமும் உள்ளவர்களே கலெக்டர்களாக நியமிக்கப்படுகிறார்கள். குடிகளிடமிருந்து தீர்வை வாங்குவதும், நியாயாதிபதிகளாக இருந்து குற்றவிசாரணை செய்வதும், தலைவர்களில்லாச் சிறுவர்களுடைய பொருளைக் காப்பாற்றித் தகுந்த வயது வந்தவுடன் அவர்களிடம் ஒப்புவிப்பதும், ஜனங்களுடைய குறைகளைக் கேட்டு அவர்களுக்கு வேண்டிய நன்மைகளைக் கூடியவரையிற் செய்வதும் இவர்களுடைய கடமையாகும்.



சென்னை மாகாணத்தில் ஜில்லாத் துரைத்தனத்திற்கு மேற்பட்டது மாகாணத் துரைத்தனமாகும். சில மாகாணங்களில் நாலைந்து ஜில்லாக்களை ஒரு பெரும்பிரிவாக்கிக் கமிஷனர் என்ற அதிகாரியை அதற்குத் தலைவராக நியமித்திருக்கிறார்கள்.

சென்னை மாகாணத்தின் தலைவர் **கவர்னர்** ஆவார். அவருக்கு மந்திரிகள் அல்லது கௌன்ஸிலர்கள் மூவர். இவர்கள் நால்வரும் 5 வருஷகாலம் அதிகாரம் செலுத்தும்படி சக்கரவர்த்தியால் நியமிக்கப்படுகின்றனர். இந்தியாவில் முன்னர் ஒரு வேலையிலும் இராத ஆங்கிலேயர்களே கவர்னர்களாக நியமிக்கப்பெற்று இங்கிலாந்திலிருந்து வருகிறார்கள். ஆனால், மந்திரிகள் இருவர் இத்தேசத்திலேயே ஜில்லா உத்தியோகங்களை வகித்துத் தேர்ச்சியடைந்து முதிர்ந்த அனுபவமுடைய ஆங்கிலேயர்கள். ஒரு இந்திய கனவானை மூன்றாவது மந்திரியாக இப்போது நியமித்துவருகிறார்கள். கவர்னரும் அவருடைய மந்திரிகளும் எல்லா இலாகாக்களையும் தங்களுக்குள் ஒருவகையாகப் பிரித்துக்கொண்டு மாகாணத் துரைத்தனத்தைக் கவனித்து வருகிறார்கள். யாதேனும் ஒரு விஷயத்தில் ஒருவருக்குச் சந்தேகம் உண்டானால் வாரந்தோறும் கூடும் ஆலோசனை ஸபையில் மற்றவர்களோடு கலந்து அவர் அதனைத் தீர்த்துக் கொள்வார். இம்மாதிரியே, பம்பாய் மாகாணத்திலும் துரைத்தனம் நடந்துவருகின்றது. மற்ற மாகாணங்களில், தலைமையதிகாரிகள் இந்தியா துரைத்தனத்தா

ரால் நியமிக்கப்பட்டு வருகிறார்களேயன்றி, சக்கரவர்த்தியால் நியமிக்கப்படவில்லை. ஆனாலும், அரசாட்சி முறைமை இம்மாதிரியாகவேயிருக்கிறது. சில மாகாணப் பிரிவுகளிலுள்ள தலைமை யதிகாரிகளுக்கு லெப்டினென்ட் கவர்னரென்று பெயர்.

ஆங்கில துரைத்தனத்திற்கு உட்பட்ட இந்தியாவானது, 8 பெரிய மாகாணங்களாகவும் 5 சிறிய மாகாணங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றது. கவர்னர்களுக்கு உட்பட்ட சென்னை பம்பாய் வங்காள இராஜதானிகளும், லெப்டினென்ட் கவர்னர்களுக்கு உட்பட்ட ஆக்ராவும் அயோத்தியும் சேர்ந்த பிரிவு, பஞ்சாப், பர்மா, கீழ்வங்காளம் ஆகிய இவைகளும், சீப் கமிஷனருக்கு உட்பட்ட மத்திய மாகாணங்களும் பெரிய மாகாணங்களாகும். வடமேற்கு எல்லை மாகாணம், பிரிடிஷ் பெலுசிஸ்தான், குடகு, ஆஜ்மீர் மேர்வாரா, அண்டமான் தீவுகள் ஆகிய ஐந்தும் சிறிய மாகாணங்கள். லெப்டினென்ட் கவர்னர்களும் சற்றேறக்குறைய கவர்னர்களைப்போலவே அதிகாரமும் கௌரவமும் உடையவர்கள். கவர்னர்கள் இருக்குமிடங்களில் மந்திராலோசனை ஸபைகளும் சட்டநிர்மாண சபைகளு மிருக்கின்றன. ஆனால், லெப்டினெட் கவர்னர் இருக்குமிடத்தில் சட்டநிர்மாண சபைமாத்திரம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

ஜனங்களின் அபிப்பிராயங்களைத் தெரிந்துகொள்ளாமலும், அவர்களிற் சிறந்தவர்களோடு யோசனை செய்யா



பம்பாய் ஸெக்ரிடேரியட், அல்லது கவர்னரின் உதவி அதிகாரிகளின் ஆபீஸ்.

மலும் துரைத்தனத்தார் சட்டதிட்டங்களை ஏற்படுத்துவதில்லை. பழைய சட்டங்களைத் திருத்துவதற்கும் புதிய சட்டங்களை ஏற்படுத்துவதற்கும் சென்னை ராஜதானியில் நியாயசபை அல்லது சட்டநிர்மாண சபை என ஒரு சபை ஏற்பட்டிருக்கின்றது. இச்சபைக்குக் கவர்னரும், அவருடைய மந்திரிகளும், அட்வொகேட் ஜனரல் என்பவரும், துரைத்தன அதிகாரிகள் ஒன்பது பேரும், துரைத்தன உத்தியோகத்தில் இல்லாத பதினொருபேர்களும் 1909–வருஷம் வரையில் அங்கத்தினர்களாக இருந்தார்கள். இந்தப் பதினொருபேர்களுள் 4 பேர்கள் துரைத்தனத்தாராலும் மற்றவர்கள் மாகாணத்திலுள்ள பற்பல சபையார்களாலும் நியமிக்கப்பட்டார்கள். ஆனால், சபையார்களுடைய நியமனத்தைத் துரைத்தனத்தார் அங்கீகரித்துவந்தார்கள். நகர பரிபாலன சபையார்களும் ஜில்லா ஸபையார்களும் சேர்ந்து 4 பிரதிநிதிகளையும் சென்னை சர்வகலா சங்கத்தார் ஒருவரையும், சென்னை நகர பரிபாலன சபையார் ஒருவரையும், சென்னை வர்த்தகச் சங்கத்தார் ஒருவரையும் தேர்ந்தெடுத்தார்கள். துரைத்தன அதிகாரிகளாக உள்ள அங்கத்தினர் துரைத்தனத்தாராலேயே நியமிக்கப்பட்டார்கள். ஜனப்பிரதிநிதிகள் முகமாக ஜனங்களுடைய மனோபாவங்களையும் குறைகளையும் நன்றாகத் தெரிந்துகொண்டே சட்டதிட்டங்களை ஏற்படுத்தவேண்டுமென்று கருதி 1861–ம் வருஷம் முதல் ஜனங்களுடைய பிரதிநிதிகளைத் துரைத்தனத்தார் இச்சபைகளில் அதிக



மாக நியமித்துவருகிறார்கள். இதற்கேற்ப, 1909–ம் வருஷத்தில் ராஜ்யபாரத்தை வகித்த இந்தியா துரைத்தனத்தின் பிரதம காரியதர்சியாகிய ஜான் மார்லே என்னும் பிரபு இந்தியா துரைத்தனத்திற் பல சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்றும், அவற்றுள் முக்கியமாக குடிகளின் எண்ணங்களைத் தெரிவிக்கக்கூடிய பிரதிநிதிகளை எல்லாச் சபைகளிலும் மிகுதியாக நியமிக்கவேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டார். இம்மஹானுடைய எண்ணங்கள் நிறைவேறியபின் மந்திராலோசனை ஸபைகளிலும் பல மாறுபாடுகள் உண்டாயின. இப்பொழுது அவருடைய ஆலோசனைகள் உருவெடுத்து வந்திருக்கின்றன. சற்றேறக்குறைய மூன்று வருஷகாலம் பெருமையும் அறிவும் வாய்ந்த அநேக சங்கங்களையும் பற்பல ஜாதியார்களின் நோக்கங்களை நன்கு தெரிவிக்கக்கூடிய பெரியோர்களையும் கலந்து அவர்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிந்துகொண்டே, இந்தியா கவர்ன்மெண்டாரும் இந்தியாவின் காரியதரிசியும் சென்ற 1909–ம் வருஷம் நவம்பர் மாதம் 15–வது தேதியில் சட்ட நிர்மாண ஸபைகளைத் திறமைப்படுத்த இந்தியன் கௌன்ஸில்ஸ் ஆக்ட். 1909, என்று சட்ட நிரூபணம் செய்து பிரசாப்படுத்தியிருக்கிறார்கள்.

இதுவரையில் சட்ட நிர்மாண ஸபைகளில் ஸர்க்காருத்தியோகஸ்தர்கள் அதிகமாகவும், மற்றவர்கள் குறைவாகவும் இருந்துவந்தார்கள். புதிய ஏற்பாட்டின்படி

மாகாணச் சட்ட நிர்மாண ஸபைகளில் ஸர்க்காருத்தியோகஸ்தர்கள் குறைவாகவும் ஸர்க்காருத்தியோகமில்லாதவர்கள் அதிகமாகவும் ஆவார்கள். கவர்னர் ஜெனரலுடைய சட்ட நிர்மாண சபையில்மட்டும் உத்தியோகஸ்தர்கள் அதிகமாகவே இருப்பார்கள். மேலும் அநேக தொழில்கள், பெரிய மிராசுதார்கள், மகமதியர்கள், இந்திய வர்த்தகர்கள், ஐரோப்பிய வர்த்தகர்கள் முதலான பகுதிகளின் குறைகளையும் நோக்கங்களையும் தெரிவிக்க அவரவர்களுடைய பிரதிநிதிகளைப் புதிய ஸபைகளில் அங்கத்தினர்களாகச் செய்ய சட்டமிட்டிருக்கிறார்கள். இச்சபையோர்கள் மூன்று வருஷத்திற்கொருமுறை நியமனம் பெறவேண்டும்.

பின்வரும் அட்டவணையால் ஸபைகளின் அமைப்பு காட்டப்படும்:—

| மாகாணம் | உத்தியோகஸ்தர்கள் | உத்தியோகமில்லாதவர்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| சென்னை .... .... | 19 | 26 | 45 |
| பம்பாய் .... .... | 17 | 28 | 45 |
| வங்காளம் .... .... | 17 | 31 | 48 |
| யுனைடெட் ப்ராவின்ஸ். | 20 | 26 | 46 |
| கிழக்கு வங்காளம் .... | 17 | 23 | 40 |
| பஞ்சாப் .... .... | 10 | 14 | 24 |
| பர்மா .... .... | 6 | 9 | 15 |



அந்தந்த விடத்துத் தலைமை அதிகாரியும் மந்திராலோசனை ஸபையாரும் இச்சபைகளில் அங்கத்தினராகச் சேருவார்கள்.

கவர்னர் ஜெனரலின் ஸபை பின்வருமாறு அமைக்கப்படும்:—

**இந்திய கவர்ன்மெண்டு சட்ட நிர்மாண ஸபை**

| | |
|---|---|
| கவர்னர் ஜெனரல் .... .... .... .... | 1 |
| மந்திராலோசனை ஸபையார்கள்.. .... .... | 7 |
| மாகாணப் பிரதிநிதிகள் .... .... .... | 8 |
| 20 உத்தியோகஸ்தர்களுக்கு மேற்படாமல் நியமிக்கப்பட்ட அங்கத்தினர்கள் .. .... .... | 28 |
| ஜனங்களின் பிரதிநிதிகள், தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் .... .... .... .... .... | 25 |
| மொத்தம் .... | 69 |

எல்லா சட்ட நிர்மாண ஸபைகளும் சற்றேறக்குறைய ஒரேவிதமாய் அமைக்கப்பெற்றிருக்கிறபடியால் சென்னையிலுள்ள ஸபையின் அமைப்பைமட்டுமே இங்கே பின்வருமாறு காட்டியிருக்கிறது:—

**சென்னை சட்ட நிரூபண ஸபை**

| | |
|---|---|
| கவர்னர் .... .... .... .... .... | 1 |
| கௌன்ஸிலர்கள் .... .... .... .... | 3 |
| அட்வொகேட் ஜெனரல் .... .... .... | 1 |
| 16 உத்தியோகஸ்தர்களுக்கு மேற்படாமல் ஸர்க்காரால் நியமனம் பெறுகிறவர்கள் .... | 23 |
| நிபுணர்கள் (Experts) .... .... .... | 2 |

தெரிந்தெடுக்கப்படுகிறவர்கள் (Elected members)

| | | | |
|---|---|---|---|
| 1. | சென்னை நகர நிர்வாக ஸபையாரால் (Corporation) .... .... .... | 1 | 19 |
| 2. | மற்ற நகர நிர்வாக ஸபைகளாலும் போர்டுகளாலும் .... .... .... | 8 | |
| 3. | ஸர்வகலா ஸபையார்களால்.... .... | 1 | |
| 4. | மிராசுதார்களால் .... .... .... | 4 | |
| 5. | காபி தேயிலை பயிரிடும் முதலாளிகளால். | 1 | |
| 6. | மகமதியர்களால் .... .... .... | 2 | |
| 7. | சென்னை வர்த்தகர் ஸபையாரால் (Chamber of Commerce) .... | 1 | |
| 8. | சென்னை வர்த்தகச் சங்கத்தால் (Trades Association) .... .... .... | 1 | |
| | மொத்தம்.... | | 49 |

பழைய ஏற்பாட்டின்படி சட்ட நிரூபண ஸபைகளனைத்திலும் சேர்ந்து 126 அங்கத்தினர்கள்தாம் இருந்தார்கள். புதிய ஏற்பாட்டின்படி 370 அங்கத்தினர்கள் ஆகிறார்கள். இவர்களில் ஜனங்களாலும் சங்கத்தார்களாலும் நியமனம் பெறுகிறவர்கள் 135. மேலும் இதுவரையில் ஜனங்களால் நியமிக்கப்பட்டவர்கள் ஸர்க்காரால் ஆமோதிக்கப்பட்ட பிறகுதான் ஸபைகளுக்கு அங்கத்தினர்களாக ஏற்படவேண்டியிருந்தது. ஆனால் இப்பொழுதோ ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டவுடன் ஜனப்பிரதிநிதிகளாக உடனே ஸபைகளிற் பிரவேசிக்க அதிகாரம் பெறுகிறார்கள். மேலும் சட்ட



நிரூபண விஷயத்தைத்தவிர பொதுவாய்த் துரைத்தன முறைகளைப்பற்றியும் துரைத்தன வரவு செலவு விவரங்களைப்பற்றியும் வரி மூலங்களையும் நன்கு விசாரிக்கவும், குற்றங்குறைகளை விவரிக்கவும், தகுந்த யோசனைகள் சொல்லவும், புதிய சட்டத்தால் அதிகாரம் பெறுகிறார்கள்.

மேற்சொல்லிய சட்ட நிர்மாண சபைகளில் சட்டதிட்டங்கள் செய்வதல்லாமல் துரைத்தனத்தின் வரவு செலவு கணக்குக்களைப்பற்றி விசாரித்துத் தங்களுடைய அபிப்பிராயங்களை வெளியிடவும், மதம், தீர்வை, சேனை, மற்றத் துரைத்தனத்தாருக்கும் இந்தியா துரைத்தனத்தாருக்குமுள்ள விவகாரங்கள் ஆகிய இவ்விஷயங்களைத்தவிர மற்றவற்றைப்பற்றிக் கேட்பதற்கும் அங்கத்தினர்களுக்கு அதிகாரம் உண்டு. இக்காரணம்பற்றியே, ஜனங்களுடைய பிரதிநிதிகள் குடிகளுடைய எண்ணங்களையும் தேவைகளையும் வெளியிட்டுத் துரைத்தனம் நன்றாக நடைபெறும்படி செய்கிறார்கள். இவ்வாறு துரைத்தனத்தார் பலவகையான உபாயங்களால் குடிகளுடைய குறைகளைத் தீர்த்து அவர்களுடைய அன்பைக் கைக்கொள்வதால் துரைத்தனம் நிலைபெறுமென்பதிற் சந்தேகமில்லை.

"தம்முயிர்க் குறுதி யெண்ணார்
தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி
விடாதுநின் றுரைக்கு மெய்யர்

செம்மையிற் றிறம்பல் செல்லாத்
தேற்றத்தார் தெரியுங் கால
மும்மையு முணர வல்லா
ரொருமையே மொழியு நீரார்." (கம்பராமாயணம்.)

## 18.—தேச அரசாட்சி

**கவர்னர் ஜெனரலும் அவருடைய மந்திராலோசனை ஸபையும் — துரைத்தன இலாகாக்கள் — சட்ட நிர்மாண ஸபையின் அமைப்பு—மந்திராலோசனை ஸபையாரின் அதிகாரங்கள்—தேசத்தலைவர்களுக்குக் கொடுத்திருக்கும் அதிகாரமும் ஸ்வாதீனமும்.**

இத்தேசம் 13—மாகாணங்களாகப் பகுக்கப்பட்டுத் தனித்தனியாகத் துரைத்தனம் நடத்தப்படுகிறதென்பது முன் அத்தியாயத்திற் சொல்லப்பட்டது. மாகாண அரசாட்சிகளை மேல்விசாரணை செய்வதற்கும், எல்லாத் துரைத்தனங்களும் சற்றேறக்குறைய ஒரேவிதமாகவும் ஒழுங்காகவும் நடக்கும்படி பார்த்துக்கொள்வதற்கும், இத்தேசத்திற்கும் மற்றத் தேசங்களுக்குமுள்ள பொதுவான விஷயங்களைக் கவனிப்பதற்கும், தேசத்தலைவர்கள் இருக்கவேண்டுவது அவசியமல்லவா! ஆகையால் பெரிய இத்தேசத்தை ஆளுவதற்கு ஐந்து வருஷங்களுக்கு ஒருமுறை ஆங்கிலேய கனவான் ஒருவர் சக்கரவர்த்தியால் நியமிக்கப்பெற்று ராஜப்ரதிநிதியாக இந்நாட்டிற்கு இங்கிலாந்திலிருந்து வருகிறார். அவருக்குக் கவர்னர் ஜெனரல் என்று பெயர். இத்தேசத்துத் துரைத்தனவிஷயத்தில் தேர்ச்சியடைந்த 6 கனவான்கள் அவருடைய யோசனைத் துணைவர்களாக ஐந்து வருஷங்களுக் கொருமுறை நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் ஆறுபேரும் சேர்ந்த ஸபைக்கு மந்திராலோசனை ஸபையென்று பெயர். இத்தேசத்து முக்கிய சேனாதிபதியும் இச்சபையின் அங்கத்தினராவர்.



இந்தியா துரைத்தனமானது 8 இலாகாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு இலாகாவுக்கும் ஒவ்வொரு காரியதரிசியை நியமித்து, கவர்னர்ஜெனரலும் அவருடைய மந்திரிகளும் தாங்களே பிரிவுக்குத் தக்கபடி காரியங்களைக் கவனித்துவருகிறார்கள். பிரிவுகள் எட்டும் பின் வருமாறு:—

1. அன்னிய துரைத்தன விசாரணை இலாகா (Foreign Department.)
2. இந்தியா சம்பந்தமாக இங்கிலாந்தில் நடக்கும் அரசாட்சி இலாகா (Home Department.)
3. விவசாயத் தீர்வை இலாகா (Department of Revenue & Agriculture and Public Works.)
4. பொக்கிஷ இலாகா (Finance Department.)
5. வர்த்தகக் கைத்தொழில் இலாகா (Department of Commerce and Industry.)
6. சட்ட நிர்மாண இலாகா (Legislative Department.)

7. கல்வி நகர பரிபாலனம் முதலியவற்றைக் கவனிக்கும் இலாகா (The Education and Local Self-Government Department.)

8. ஸைன்னிய இலாகா [(i) Army and (ii) Military Supply Department.]

இந்நாட்டில், ஆங்கிலேய துரைத்தனத்துக்கு உட்பட்ட இடங்களில் வசிக்கும் எல்லா ஜனங்களுக்கும், உட்படாத விடங்களில் வசிக்கும் இந்தியர்களுக்கும், சுதேச ராஜ்யங்களில் வசிக்கும் ஆங்கிலேயர்களுக்கும் சட்ட நிர்மாண இலாகாவிற் சட்டங்கள் செய்யப்படுகின்றன. இதற்காக, மந்திராலோசனை ஸபையானது சட்ட நிர்மாண ஸபையாக மாறுவதோடு 16 புதிய அங்கத்தினர்களை 1909-ம் வருஷம் வரையில் உதவியாக அடைந்தது. இவர்களுள் 8 அங்கத்தினராவது துரைத்தன வேலையில் இல்லாதவர்களாக இருக்க வேண்டுமென்றும், இந்த 8 பேர்களில், நால்வரை, சென்னை, பம்பாய், கல்கத்தா, அல்லஹாபாத் என்னும் மாகாணங்களிலுள்ள சட்ட நிர்மாண ஸபையார்களுள் துரைத்தன வேலையிலில்லாதவர்களும், ஒருவரை, கல்கத்தா வர்த்தகச் சங்கத்தாரும் நியமிக்கவேண்டுமென்றும் விதித்திருந்தனர். மற்றவர்களையெல்லாம் கவர்னர்ஜெனரலே தம்முடைய இஷ்டப்படி நியமித்துவந்தார். 1909-ம் வருஷத்தில் இந்தியன் கௌன்ஸில்ஸ் ஆக்டின்படி இந்த ஸபை பல மாறுபாடுகளை அடைந்தது. இவற்றை முன்னமே சொல்லியிருக்கிறோம்.



கவர்னர்ஜெனரலும் அவருடைய ஆலோசனை ஸபையின் மந்திரிகள் 6 பேர்களுமே இந்நாட்டுக்குத் தலைவர்கள் என்று சொல்லவேண்டும். துரைத்தன உத்தரவுகள் யாவும் இவர்களுடைய பெயராலேயே வெளியாகின்றன. இத்தேசத்துத் துரைத்தன விஷயங்களையும், இந்நாட்டுக்கும் மற்ற நாடுகளுக்குமுள்ள வர்த்தமானங்களையும் சட்ட நிர்மாணத்துக்கு வேண்டிய ஆதாரங்களையும் கவனிப்பதற்காகச் சில தினங்களுக் கொருமுறை இவர்கள் சந்தித்து யோசனை செய்கிறார்கள். ஆயினும், குறிப்பிட்ட சில ஸமயங்களில் மந்திராலோசனை ஸபையார்களைக் கேளாமலே கவர்னர்ஜெனரல் தீர்மானங்களைச் செய்யலாம்.

இங்கிலாந்தில் இந்நாட்டுக் காரியதரிசியாக இருப்பவர்கூட, மேற்கூறிய தலைவர்களின் அதிகாரத்திற் பிரவேசிப்பதில்லை. இந்தியா துரைத்தனத்திற்கு வேண்டியஅளவு ஸ்வாதீனம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தியர்களை இம்மாதிரிதான் நடத்தவேண்டுமென்று சீமையில் உள்ளோர் இங்குள்ள தலைவர்களுக்கு ஒருபோதும் கட்டளையிடுவதில்லை. கவர்னர்ஜெனரல் அபிப்பிராயம் கேட்கும்போதுமட்டும் சீமையிலுள்ள காரியதரிசியானவர் தம்முடைய எண்ணங்களை வெளியிடுவார். இந்நாட்டில் வசிக்கும் அதிகாரிகளிடத்து இவ்விதம் அளவற்ற நம்பிக்கை வைப்பதில் ஒருவிதமான அபாயமும் இல்லை. நாம் ஒருவனுக்குக் கஷ்டமான வேலையைக் கொடுத்துவிட்டு அவ்வேலையில் அடிக்கடி தலையிட்டு

வந்தால் வேலையும் அலங்கோலமாகிவிடும்; வேலை செய்வோனுக்கும் அதிற் கவனமும், உத்ஸாகமும் குறையும். ஆகையால், சீமையில் உள்ளவர்கள் இந்நாட்டின் துரைத்தனத்தை வகிக்கும் தலைமை யதிகாரியிடம் எவ்வளவுக்கெவ்வளவு நம்பிக்கை வைத்து அவர் செய்யுங் காரியங்களில் தலையிடாமல் இருக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு துரைத்தனவிஷயம் நன்றாக நடைபெறுவதன்றி ஜனங்களுக்கும் அவரிடம் அன்பும் மரியாதையும் அதிகரிக்கும். இந்நாடு சீமையில் உள்ளவர்களுக்குச் சிறந்த மூலதனமாக இருப்பதால் அவர்களால் அனுப்பப்படும் தலைவர்கள் இத்தேசத்துக்கு நன்மையையும் தங்கள் தேசத்துக்குப் புகழையும் விளைவிக்கிறவர்களாக இருக்கவேண்டும்.

"ஆளுமாசன் பாலன்பு மவனுக்காவ தறியறிவும்
நாளுமவற்றைக் கலங்காம னன்குமுடிக்கு முளத்துணிவும்
மூளும்வினைக்குத் தன்காத்தின் மொய்த்தபொருளின் விழையாத
கோளுமுடையான் புரிவினையிற் குற்றமுறாது குணமேயாம்."

(விநாயக புராணம்.)



## 19.—இந்தியாவைப்பற்றி இங்கிலாந்தில் நடக்கும் அரசாட்சி

**இந்தியா காரியதரிசியும் அவருக்கு உதவியாகவுள்ள மந்திராலோசனை ஸபையும்—அவருக்கும் சக்கரவர்த்திக்குமுள்ள சம்பந்தம்—ஆங்கிலேய அரசர்களிடத்து இந்நாட்டாருக்குள்ள அன்பும், அதன் காரணமும்—இந்த அன்பைத் தெரிவிக்கும் அடையாளங்கள்.**

இத்தேசமானது இங்கிலாந்துக்கு உரியதென்பதை யாவரும் அறிந்திருக்கலாம். இந்த ராஜ்யத்தின் நன்மைகளைத் தேடுவதற்கும், மேல்விசாரணை செய்வதற்கும், இங்குள்ள சமாசாரங்களை உள்ளபடி அறிந்து ஆங்கிலேய துரைத்தனத்தாருக்குத் தெரிவிப்பதற்கும் சீமையிலேயே சில அதிகாரிகள் இருக்கவேண்டுவது அவசியமானதால் "செக்ரடரி அப் ஸ்டேட்" என்ற காரியதரிசி இங்கிலாந்தின் பிரதான மந்திரியால் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவருடைய ஆபீஸானது லண்டன்மாநகரத்தில் உள்ளது. அதற்கு 'இந்தியா ஆபீஸ்' என்று பெயர். சக்கரவர்த்தியின் மந்திரிகளுள் இந்தியாவின் காரியங்களைக் கவனிப்பவரும், இந்நாட்டு வர்த்தமானங்களை ஆங்கிலேயர்களுக்குத் தெரிவிப்பவரும் இவரே. இவருக்கு உதவியாக, ஏறக்குறைய 15 கனவான்கள் சேர்ந்துள்ள மந்திராலோசனை ஸபையொன்று இருக்கிறது. இச்சபையின் அங்கத்தினர்கள் இந்தி

யாவில் 10 வருஷங்களுக்குமேல் வசித்து இந்நாட்டு விஷயங்களில் நல்ல அனுபவமுள்ள சமர்த்தர்களாக இருப்பவர்கள்; இப்பொழுது இரண்டு இந்திய கனவான்களை இச்சபையின் அங்கத்தினர்களாக நியமித்திருக்கிறார்கள். இக்கனவான்கள், கேட்கப்படும் விஷயங்களில் தங்கள் அபிப்பிராயங்களைச் சொல்லவும், காரியதரிசி கொடுக்கும் வேலையைச் செய்யவுங் கூடுமேயன்றி தாங்களாகவே ஒரு காரியத்தையுஞ் செய்ய அதிகாரம் பெற்றிலர். ஆனால், இவர்களுடைய சம்மதமின்றி ராஜ்யச் செலவுகள் காரியதரிசியினாற் செய்யப்படமாட்டா. அந்தரங்கமாக நடத்தவேண்டிய ராஜநீதி முறைகளில் இவர்களுக்குத் தெரிவிக்காமலே எந்தக்காரியத்தையும் காரியதரிசி முடித்துவிடலாம். ஆங்கிலேய துரைத்தனத்திற்குத் தலைவர்களாகிய சக்கரவர்த்திக்கும் ஜனப்ரதிநிதி ஸபையார்களுக்கும் (Parliament) உட்பட்ட ஓர் அதிகாரியென்று இந்தியா காரியதரிசியைக் கருதவேண்டும். இவர் தம்மிடம் ஒப்புவிக்கப்பட்ட ராஜ்யத்தின் அமைதி, க்ஷேமம், இவ்விஷயங்களில் மேற்சொல்லிய தலைவர்களுக்குமட்டும் உத்தரவாதம் சொல்லவேண்டியவர். ஆங்கிலேயர்களுக்கு நம்பிக்கையுள்ள பிரதிநிதிகளுள் முதிர்ந்த ஒரு கனவானை முதல் மந்திரியாக (Prime Minister) ஆங்கிலேய வேந்தர் நியமிக்கிறார். இவர் தமக்கு உட்பட்ட ராஜாங்க இலாகாக்களைக் கவனிப்பதற்கும், ராஜ்ய நிர்வாகத்தில் உதவி செய்வதற்கும் ஜனப்ரதிநிதிகளுள் தமக்குச் சமமான



இங்கிலாந்து : இந்தியா ஆபீஸ்.

சிலரை உபமந்திரிகளாக நியமித்துக்கொள்ளுகிறார். முதல் மந்திரியும் உபமந்திரிகளும் சேர்ந்துள்ள ஸபையைக் 'காபினெட்' என்று சொல்லுகிறார்கள். இச்சபையில் இந்தியா காரியதரிசி ஓர் அங்கத்தினர். பார்லிமெண்டில் ஜனப்ரதிநிதிகளாற் கேட்கப்படும் கேள்விகளுக்கெல்லாம் இவர் உத்தரம் சொல்லி இந்தியா துரைத்தன ஸம்பந்தமான வரவு செலவு விஷயங்களை (Budget) அவர்கள் ஒப்புக்கொள்ளும்படி செய்வதல்லாமல், இத்தேசத்தில் உள்ள சட்ட நிர்மாண ஸபைகளிற் செய்யப்படும் தீர்மானங்களுக்குத் தம்முடைய சம்மதத்தைக் கொடுத்து ஆங்கிலேய வேந்தருடைய அபிப்பிராயத்தையும் கலந்துகொள்ளவேண்டும். ஆகையால், இத்தேசத்துச் சக்கரவர்த்தியாகிய ஆங்கிலேய வேந்தரும், அவருக்கு உதவியாக இருக்கும் பார்லிமெண்டு ஸபையாருமே இத்தேசத்தில் நடக்கும் எல்லா அதிகாரத்திற்கும் நியாயத்திற்கும் பாத்தியப்பட்டவர்களென்று சொல்லலாம்.

இந்நாட்டுத் துரைத்தன விஷயங்களுள் ஒன்றுந் தெரியாதவர்களுக்குக்கூட, காலஞ்சென்ற சக்கரவர்த்தினியாரின் பெயரும், அவரது புத்திரரின் பெயரும் இப்பொழுது உள்ள சக்கரவர்த்தியின் பெயரும் நன்றாகத் தெரிந்திருக்கும். ஆங்கிலேய வேந்தர் குடும்பத்தில் இந்நாட்டாருக்குள்ள பற்றும், மரியாதையும் அளவற்றன. ராஜவிசுவாஸம் என்பதே இத்தேசத்தார்களுக்கு முதன்மையான குணமாக இருக்கிறது. அரசர் குடிக



ளின் ஊழியக்காரரென்றும், ஜனங்களின் எண்ணப்படி செங்கோல் செலுத்தும்மட்டுமே அவருக்கு மரியாதை செய்யப்படுமென்றும், கனவிலும் இந்நாட்டார் நினைத்திலர். ஆங்கிலேய அரசாட்சிக்கு உட்பட்டதுமுதல் இந்நாட்டாரிடத்து ஆங்கிலேய மன்னர்கள் அன்பு பாராட்டித் துரைத்தனத்தைப் பலப்படுத்திக் குடிகளுக்கு அபயம் அளித்துப் பலவகையாக உதவிசெய்து வந்திருப்பதால், இந்நாட்டு ஜனங்கள் அவர்கள் குடும்பத்திற் பற்றுள்ளவர்களாக இருப்பது வியக்கத்தக்கதன்று.



விக்டோரியா மகாராணியார்.

காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியாரின் செங்கோன்மையே இவ்வித ராஜவிசுவாஸத்துக்குக் காரணமென்று சொல்லலாம். 1858-ம் வருஷத்தில் நடந்த போர்வீரர்களுடைய கலகத்துக்குப் பின்னர் இந்தியாவை இப்பெருமாட்டியார் தம் ஆதீனத்திற் கொண்டுவந்தபொழுது, கருணைப் பெருங்கடலாகிய சக்கரவர்த்தினியார், சிறந்த நீதிநூல்களில் எழுதியுள்ளபடி, 'பகையை அன்பால் வெல்லவேண்டும்' என்ற கொள்கையைக்கொண்டு இந்தியர்களுக்கு அபயம் அளித்துத்

துரைத்தனவிஷயத்தில், ஜாதிவித்தியாஸத்தைக் கவனிப்பதில்லையென்றும், மதவிஷயங்களிற் பிரவேசிப்பதில்லையென்றும், எந்நிலையராயினும், எக்குடிப் பிறந்தோராயினும், எம்மதத்தோராயினும், யோக்கியதைக்குத் தக்கபடியே உத்தியோகங்கள் கொடுக்கப்படுமென்றும் டில்லிமாநகரிற் பிரசுரஞ் செய்வித்தார். அன்றியும், இந்நாட்டுச் சிற்றரசர்கள் சீமைக்குப் போகுங்காலங்களில் அவர்களை மகிழ்வுடன் ஏற்று இந்தியர்களுடைய க்ஷேமலாபங்களை அவர்களிடம் பிரியமாகக் கேட்டுத் தெரிந்துகொண்டு தம்முடைய அரண்மனையிலும் சில உத்தியோகங்களுக்கு இந்தியர்களை நியமித்துப் பலவிதமாக இத்தேசத்தாரிடம் இருந்த பிரியத்தை வெளியிட்டு வந்தார். ஆகையால், 1901-ம் வருஷத்தில் இப்பெருமாட்டியார் காலஞ் சென்றபோது பசுவை இழந்த கன்றைப்போல் இந்நாட்டார் இவருடைய பிரிவாற்றாமையால் மிக வருந்தி இனி இம்மாதிரியான குணநிதி எப்போது கிடைக்குமென்று மிக்க கவலையுற்றிருந்தனர்.



எட்வர்ட் சக்கரவர்த்தியார்.






இளவரசர் செய்த சுற்றுப்பிரயாணம் 1875–1876.

ஆனால், இவருடைய புத்திராகிய எட்வர்ட் அரசர் பட்டத்துக்கு வந்தபின் தாயைப்போலவே துரைத்தனம் வகித்து மற்ற அரசர்களோடு சமாதான உடன்படிக்கைகள் செய்துகொண்டு, 1876-ம் வருஷத்தில் தாமே சுற்றிப்பார்த்த இத்தேசத்தை அன்போடு பரிபாலித்துச் சென்ற 1908-ம் வருஷம் டிஸம்பர் மாதத்தில் தம்முடைய நன்மொழியால் அப்பெருமாட்டியின் பட்டயத்தை உறுதிப்படுத்தியதால் மேற்கூறிய துயரமானது நீங்கிவிட்டது. மேலும், இவருடைய குமாரரும் யுவராஜாவுமாகிய ஜார்ஜ் என்பவர், 1906-ம் வருஷத்தில் இத்தேசத்தைச் சுற்றிப்பார்த்து, ஜனங்களோடு சம்பாஷித்து, இந்நாட்டிலுள்ள ஆச்சரியங்களைக் கண்ணுற்று, கடைசியில் சீமைக்குத் திரும்பியபோது இந்நாட்டாரை 'அன்பு' என்கிற பாசத்தாலேயே கட்டவேண்டுமென்று உரைத்தனர். இந்தப் பிரியவசனம் இந்நாட்டாருக்கு அமிர்தம்போல இருந்தது. 1910-ம் வருஷத்தில் எட்வர்ட் சக்கரவர்த்தி திடீரென்று இறந்தபோது அவரது அருமைப் புத்திராகிய ஜார்ஜ் என்பவரே பட்டத்திற்கு வந்தார். உடனே இந்தியாவிலும் பட்டாபிஷேகம் செய்துகொள்ளவேண்டுமென்று விளம்பரஞ்செய்து 1911-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 12-ம் தேதியில் பூர்வகாலத்தில் இத்தேசத்திற்குத் தலைநகராயிருந்த டில்லிமாநகரத்தில் மகுடாபிஷேகம் செய்துகொண்டு, இனி இந்த நகரமே இந்த ராஜ்யத்திற்கு தலைநகராகவிருக்கவேண்டுமென்றும் தெரிவித்தார். மேலும்



பங்காளத்தை ஒரு ராஜதானியாகச் செய்து, அதற்கு ஒரு கவர்னரையும் நியமித்து, 50 லக்ஷம் ரூபாய் அதிகமாக கல்விவிருத்தியில் செலவிடப்படுமென்றும் நன்மொழி கூர்ந்து, நம்பிக்கையென்ற பாசத்தை ஒருபோதும் இந்தியர்கள் கைவிடவேண்டாமென்ற இனிய வசனங்களையும் சொல்லி நம்முடைய மனதைக் கவர்ந்தார். இப்படியே பல ஸமயங்களில், ஆங்கில அரசர்கள் இத்தேசத்தாரிடத்து அளவற்ற பிரியத்தை வெளியிட்டிருக்கின்றபடியால் அவர்கள் குடும்பத்தில் இந்நாட்டாருக்குள்ள பற்றும் நம்பிக்கையும் பெருகிக்கொண்டே வருகின்றன.

சிறந்த துரைத்தன முறைகளைக்காட்டிலும் அரசனுடைய குணவிசேஷங்களிலேயே இத்தேசத்தாருக்கு நோக்கம் அதிகம். குடிகளே துரைத்தனம் வகிப்பதென்பது இத்தேசத்திற்குப் புதிது. நம்முடைய வேந்தர் நம்முடைய நன்மையை நாடுகிறாரென்ற எண்ணமானது இந்நாட்டாருக்கு வந்துவிட்டால் துரைத்தன முறைகளிற் சில தவறுகள் இருந்தபோதிலும் அவற்றைச் சிறிதும் கவனிக்கமாட்டார்கள். துரைத்தன மேலதிகாரிகளாகிய ஆங்கிலேய கனவான்கள் சிறிது காலம் இந்நாட்டில் இருந்துவிட்டுப் பிறகு ஜன்மதேசம் போய்விடுவதும், இந்தியா காரியதரிசியானவர் தம்முடைய உதவிச்சங்கத்தார் அதிகாரத்தில் இருக்கும்மட்டும் மந்திரியாக இருந்துவிட்டு அப்பால் விலகிவிடுவதுமே, துரைத்தன முறைகள் யாவும் சக்கரவர்த்தி

மௌனமாகச் செலுத்தும் அதிகாரத்தால் ஒழுங்காகவும் சிறப்பாகவும் உள்ளனவென்று ஜனங்கள் நினைக்க இடந் தருகின்றன.

செங்கோன் மன்னர்களைத் தெய்வம்போற் கொண்டாடுவது இந்நாட்டாருக்குத் தொன்றுதொட்ட வழக்கம். சிறுபிள்ளைகள் படிக்கும் பாடசாலைகளில் "வேந்தன் வாழ்க" என்று சொல்லும் வாழ்த்தும், கல்யாண காலங்களில் ராஜஸம்பாவனை ஏற்பட்டிருப்பதும் மேற்சொல்லிய வழக்கத்தை வலியுறுத்துகின்றன. தங்களுடைய அளவற்ற ராஜபக்தியை வெளியிடும்பொருட்டுக் காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியின் பெயரால், சிறந்த மாளிகையொன்றை, ஆதிகாலத்தில் டில்லிநகரில் மொகலாயர்களாற் கட்டப்பட்ட கட்டிடத்தைப் போலவே சென்னையிலுள்ளோர் அமைத்து இந்நாட்டுத் தொழிலாளிகளாற் செய்யப்படும் வஸ்திரம், கம்பளம், மரஸாமான், பித்தளை ஸாமான், தந்த ஸாமான் முதலிய சிறந்த பொருள்களை வருவித்து அதில் விற்றுவருகிறார்கள். வேறுவேறான சமயக்கொள்கைகளை யனுஸரிக்கும் பற்பல ஜாதியார்கள் வஸிக்கும் இந்நாட்டில், ராஜபக்தியையும் ஒற்றுமைக்குச் சிறந்த காரணமாகச் சொல்லலாம்.

"குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையுந் தாயு மறவோர்க்
கடிகளே தெய்வ மனைவோர்க்குந் தெய்வ
மிலைமுகப் பைம்பூ ணிறை." (நீதிநெறிவிளக்கம்.)



"மந்திரக் கிழவர் கண்ணா மக்கடன் றாள்க ளாகச்
சுந்தர வயிரத் திண்டோ டோழராச் செவிக ளொற்றா
வந்தர வுணர்வு நூலா வரசெனு முருவு கொண்ட
வெந்திர மிதற்கு வாயாத் தூதுவ ரியற்றப் பட்டார்."

(சூளாமணி.)

## 20—இங்கிலாந்தின் ஏகாதிபத்தியம்

**இங்கிலாந்தின் அரசர் இந்தியா சக்கரவர்த்தி என்பது—சுதேச ராஜ்யங்களின் வகைகளும் விஸ்தீரணமும்—அவற்றிற்கும் துரைத்தனத்துக்கும் உள்ள ஸம்பந்தம்—அவற்றைக் காப்பதால் துரைத்தனத்தாருடைய செங்கோன்மை வெளியாகின்றதென்பது—ஆங்கிலேயர்களுடைய மேற்பார்வையாற் சிற்றரசுகளுக்கு உண்டாகும் நன்மைகள்—சுதேச ராஜ்யங்களால் உள்ள நன்மைகள்.**

பல சிற்றரசர்களுக்கு மேற்பட்ட வேந்தரைச் சக்கரவர்த்தியென்றும், சிற்றரசர்களில்லாத தேசத்தின் மன்னரை அரசரென்றும் சொல்லுவதுண்டு. ஆனது பற்றியே, மாட்சிமைதங்கிய எட்வர்ட் மன்னர், சிற்றரசர்களில்லாத இங்கிலாந்துக்கு அரசரென்றும், மைஸூர், திருவாங்கூர், புதுக்கோட்டை, பரோடா, ஹைதராபாத் முதலிய பல சிறிய ராஜ்யங்கள் அமையப்பெற்ற இந்தியாவுக்குச் சக்கரவர்த்தியென்றும் சொல்லப்படுகிறார்.

இந்நாட்டில், சிற்றரசர்களுடைய ஆட்சிக்கு உட்பட்ட நாடுகளின் பரப்பளவு ஏறக்குறைய ஏழு லக்ஷம் சதுரமைல் என்றும், அவற்றின் ஜனத்தொகை ஏழு கோடி என்றும் தெரிகின்றது. மேற்படி ராஜ்யங்களுள் பெரியவைகளாகிய 175, இந்தியா துரைத்தனத்தாராலும், சிறியவைகளாகிய 500, மாகாணத் துரைத்தனத்தாராலும் கவனிக்கப்படுகின்றன. அநேக ராஜ்யங்கள் மிக்க செழிப்புள்ளவை. **மைஸூர்** ராஜ்யம் பொன் விளையும் பூமியெனப் பேர்பெற்றது. இடமகன்ற **நிஜாம் ராஜ்யத்தில்** நிலக்கரி, இரும்பு முதலிய உபயோகமுள்ள பொருள்கள் அகப்படுகின்றன. **பரோடா**வைக் **கூர்ஜர** நாட்டுக்கு நந்தவனமென்று சொல்லலாம். **காஷ்மீர**மும், **திருவாங்கூ**ரும் இயற்கையமைப்பிற்கும், நல்ல காட்சிகளுக்கும் பெயர்பெற்றவை.

இந்நாட்டில் 20 சதுரமைலளவுக்கு மேற்படாத பரப்புள்ள மிகச் சிறிய ராஜ்யங்களும் பல இருக்கின்றன. பொதுவாக, **ராஜபுதனத்திலும், மத்திய இந்தியாவிலும்** உள்ள ராஜ்யங்கள் சிறியவைகளே. தென்னிந்தியாவிலோ, ஆங்கிலேய துரைத்தனம் ஏற்படுவதற்கு முன்பு பலமுள்ள அரசர்கள் சிறிய ராஜ்யங்கள் எல்லாவற்றையும் கைப்பற்றிக்கொண்டு அவற்றைப் பெரியவைகளாகச் செய்துவைத்திருந்தார்கள். அந்த நிலைமையிலேயே அவை இப்பொழுதும் இருக்கின்றன. பின்வரும் அட்டவணைகளால் சுதேச ராஜ்யங்களின் பெயர்கள் முதலியன விளங்கும்:—



1.—இந்தியா துரைத்தனத்தாருடைய பார்வைக்கு உட்பட்டவை

| பெயர் | விஸ்தீரணம்; சதுரமைல் | 1910-ம் வருஷத்திய ஜனத்தொகை |
|---|---|---|
| 1. நேபாளம் | 54,000 | 40,00,000 |
| 2. நிஜாம் ராஜ்யம் | 82,698 | 1,11,41,142 |
| 3. மைஸூர் | 29,444 | 55,39,399 |
| 4. பரோடா | 8,099 | 19,52,692 |
| 5. காஷ்மீரம் | 80,900 | 29,05,578 |
| 6. பலுச்சிஸ்தான் ஏஜென்ஸி | 78,034 | 4,28,640 |
| 7. மத்திய இந்தியா ஏஜென்ஸி: 148 ராஜ்யங்கள். | 77,395 | 85,10,317 |
| 8. ராஜபுதன ஏஜென்ஸி: 20 ராஜ்யங்கள் | 1,28,918 | 98,41,765 |

2.—மாகாணத் துரைத்தனத்தாருடைய மேற்பார்வையிலிருப்பவை

| மாகாணத்தின் பெயர் | ராஜ்யங்களின் எண் | விஸ்தீரணம் | 1901-ம் வருஷத்திய ஜனத்தொகை |
|---|---|---|---|
| சென்னை | 5* | 9,969 | 41,88,086 |
| பம்பாய் | 354 | 65,761 | 69,08,648 |
| வங்காளம் | 30 | 58,652 | 39,98,544 |
| பஞ்சாப் | 34 | 36,532 | 44,24,398 |
| பர்மா | 52 | 67,011 | 17,77,987 |
| மத்தியமாகாணங்கள் | 15 | 29,435 | 19,96,383 |
| அஸ்ஸாம் | 26 | 12,356 | 3,94,984 |
| ஆக்ரா | 2 | 5,079 | 8,02,097 |

* திருவாங்கூர், கொச்சி, புதுக்கோட்டை, சாந்தூர், பங்கனபள்ளி.

மேற்சொல்லிய இடங்களில் ஹிந்துக்கள், மகமதியர்கள், பௌத்தர்கள், ஸீக்கர்கள், கிறிஸ்தவர்கள் முதலிய பற்பல மதஸ்தர்கள் இருக்கிறார்கள். ஆங்கிலேய அரசாட்சியால் உள்ள நன்மைகள் எல்லாவற்றையும் இவர்களும் அடைகிறார்கள். ஒவ்வொரு ராஜ்யமும் அதற்குரிய சிற்றரசராலேயே ஆளப்பட்டு வருகின்றது. இவற்றின் துரைத்தன விஷயங்களில் இந்தியா துரைத்தனத்தார் அனாவசியமாகத் தலையிடுகிறதில்லை. குடிகளுக்கு வேண்டிய சட்டதிட்டங்கள் யாவும் சிற்றரசர்களாலேயே செய்யப்படுகின்றன. ஆனால், துரைத்தனத்தாருக்கும் சிற்றரசர்களுக்கும் சம்பந்தமான விஷயங்கள் மட்டும் துரைத்தனத்தாருடைய பிரதிநிதிகளாகச் சுதேச ராஜ்யங்களில் வஸிக்கும் ரெஸிடெண்ட் என்ற ஆங்கிலேய மந்திரிகளால் நடத்தப்படவேண்டும். அன்றியும், இவ்விடங்களில் உள்ள வேலைகளுக்கு ஐரோப்பியர்களை நியமிப்பதாக இருந்தால்துரைத்தனத்தாருடைய அனுமதி வேண்டும். சிற்றரசர்கள், ஆங்கிலேய துரைத்தனத்தாரோடன்றி மற்றத் துரைத்தனத்தார்களோடு காரியம் நடத்த அதிகாரம் பெற்றிலர். இந்த ராஜ்யங்களிலுள்ள சேனைகள் யாவும் ஆங்கிலேய துரைத்தனத்துக்கு உட்பட்டவை.

இச்சிறு ராஜ்யங்களிற் கலகம் நேரிடாமல் மேற்பார்வையிட்டு வருகிறார்களேயன்றி, இவற்றை எப்படியாவது கைப்பற்றித் தங்கள் ராஜ்யத்துடன் சேர்த்துவிடவேண்டுமென்று ஆங்கிலேய துரைத்தனத்தார் எண்ண



வில்லை. 1858-ம் வருஷத்தில் மாட்சிமைதங்கிய விக்டோரியா மகாராணியாரால் ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்ட பட்டயத்தில், “அயல் நாடுகளைக் கைப்பற்ற வேண்டுமென்ற ஆசை நமக்கு இல்லை; பிறர் நம்முடைய நாடுகளிற் பிரவேசிப்பதாக இருந்தாலும் இடங்கொடோம்; அவர்களுடைய நாடுகள் அபகரிக்கப்படுவதையும் பார்த்திரோம்; சிற்றரசர்களுடைய உரிமைகளையும், மேன்மையையும், குலப்பெயரையும் சொந்தத்தைப்போலவே பாதுகாத்து வருவோம்; நாட்டின் அமைதியாலுஞ் செங்கோன் முறைகளாலுமே அடையக்கூடிய செழிப்பையும், நாகரிகப் பெருக்கத்தையும் நம்முடைய குடிகளைப்போலவே சிற்றரசர்களின் குடிகளும் அனுபவிக்கவேண்டுமென்பது நம்முடைய கொள்கை” என்ற இனிய வசனங்கள் வரையப்பட்டிருந்தன.

ஸ்வீகாரஞ் செய்துகொண்டாவது குலத்தை விருத்தியாக்கிக்கொள்வது ஹிந்துக்களுள் வழக்கமாக இருப்பதால், பிள்ளைகளில்லாத சிற்றரசர்கள் யாரையாவது ஸ்வீகாரஞ் செய்துகொண்டு தங்கள் பாரம்பரையை விருத்தியாக்கிக்கொள்ளலாமென்பதைத் துரைத்தனத்தார் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு அளவற்ற சிற்றரசர்களை இந்நாட்டில் வைத்துக்கொண்டு மிகவும் அமைதியாகவும் சிறப்பாகவும் ஆங்கிலேயர் ஆண்டுவருவது அயல்தேசத்தார்களுக்கு ஆச்சரியத்தை விளைவிக்கின்றது. ஏனெனில், மற்ற ராஜ்யங்களுட் பலவற்றில் சிற்றரசர்கள் அழிந்தபிறகு



இந்தியாவின் சிற்றரசர்கள்.



துரைத்தனம் பலப்படுகின்றது. இந்த ராஜ்யத்தில்
மட்டும்சிற்றரசர்கள் நல்ல நிலைமையில் இருக்கும்போதே
துரைத்தனம் பலப்பட்டிருக்கிறது; ஆதலால், மிருக
ராஜாவாகிய சிங்கத்தைச் சுற்றி யானை, புலி, குதிரை,
பசு, மான், நரி, முயல் முதலிய மிருகங்கள் இந்நாட்
டிற் சிறிதும் அச்சமின்றி இஷ்டப்படி விளையாடிக்
கொண்டிருக்கின்றன என்று சொல்லலாம்.

சிற்றரசர்களுடைய குடிகள் ஆங்கிலேயர்களாற் பல
நன்மைகளை அடைந்திருக்கிறார்கள். எல்லாச் சிற்றரசர்
களும் செங்கோன்முறைகளை யனுஸரித்துக் குடிகளைச்
சிறிதும் வருத்தாமல் இருக்கிறார்கள்; சட்டதிட்டங்
கள், கல்வி, தர்ம பரிபாலனம் முதலிய விஷயங்களில்
ஆங்கிலேயர்களைப் பின்பற்றி, சிசுஹத்தி, உடன்கட்டை
யேறுதல், செடில்குத்தல் முதலிய கொடிய வழக்கங்களை
நீக்கிவிட்டார்கள். பிரயாணத்திற்கும் வர்த்தகத்திற்
கும் இடையூறான சுங்கம், வரி முதலியவற்றைக் குறைத்
துவிட்டபடியால் யாத்திரைசெய்தலும், வியாபாரமும்
சுதேச ராஜ்யங்களிற் பெருகிவிட்டன. சில சுதேச
ராஜாக்கள் இருப்புப்பாதைகளை யமைத்துக் குடிகளு
க்கு அளவற்ற நன்மைகளை விளைவிக்கிறார்கள். துரைத்
தனத்தாரால் அமைக்கப்படும் இருப்புப்பாதைகளினா
லும் அவர்களுடைய குடிகள் நன்மையடைகிறார்கள்;
சில சுதேச ராஜ்யங்கள், ராஜச் சின்னங்கள் எல்லாம்
நன்றாக அமையப்பெற்று ஆங்கிலேய நாடுகளைப்போ
லவே விளங்குகின்றன.

சுதேச ராஜகுமாரர்களை ஆங்கிலேய துரைத்தனத்தார் தக்க ஆசிரியர்களைக்கொண்டு அவர்கள் அரண்மனைகளிலாவது அவர்களுக்கென்று ஏற்பட்ட ராஜகுமார வித்தியாசாலைகளிலாவது கல்வி கற்பிப்பதன்றி, செங்கோன்முறையிலும் நன்றாகப் பழக்கிவருகின்றனர். ராஜபுதனத்தில் அமைந்துள்ள ஆஜ்மீர் கலாசாலையும், கத்தியவாரில் உள்ள ராஜக்கோட்டைக் கலாசாலையும் ராஜகுமார வித்தியாசாலைகளே.

ஆங்கிலேய துரைத்தனம் ஏற்படுவதற்குமுன் இந்நாட்டு மன்னர்கள் தங்களை மிகவும் பெரியவர்களாக எண்ணித் தாங்களே பலவிதமான பட்டப்பெயர்களை வைத்துக்கொண்டு, தங்களுடைய நன்மைக்கும், லாபத்திற்கும் குடிகள் ஏற்பட்டிருக்கிறார்களேயன்றி அவர்களுடைய க்ஷேமத்தைத் தாங்கள் நாடவேண்டியதில்லையென்ற எண்ணமுடையவர்கள்போல் நடந்துவந்தார்களென்று தெரிகிறது. ஆனால், இப்போது உள்ள சிற்றரசர்கள் ஆங்கில துரைத்தன முறைகளையும், ஆங்கிலநாடுகளிற் குடிகளுக்கும் அரசருக்குமுள்ள சம்பந்தத்தையும், உலகத்திலுள்ள பல இடங்களில் ஆங்கிலேயர்களைப்போன்ற பல ஜாதியார்கள் செய்திருக்கும் வியக்கத்தக்க சீர்திருத்தங்களையும் கவனித்துத் தெரிந்துகொண்டு தாங்களும் அங்ஙனமே செய்ய முயன்று வருகிறார்கள். இவ்வாறு தங்களுடைய நன்மைகளையே முக்கியமாகக் கருதாமல், கடமைகளை ஊக்கத்துடன் சிற்றரசர்கள் செலுத்திவருவதால், அவர்களுடைய



நாடுகள் சிறப்புற்று விளங்குமென்பதற்குச் சந்தேகமுண்டோ!

சிற்றரசு ராஜ்யங்கள் இருப்பதாற் சில நன்மைகள் இருக்கின்றன. இடமகன்ற இந்தியாவின் மூன்றிலொரு பாகமானது சிற்றரசர்களுடைய ஆட்சிக்கு உட்பட்டிருப்பதில், தேசம் முழுவதையும் ஆங்கிலேயர் ஏகதேசத்தில் ஆளவேண்டிய சிரமம் குறைவுபடுகிறது. வேறுவேறான நடையுடை பாவனைகளுள்ள இடங்களுக்குத் தக்கபடி துரைத்தனங்கள் அமையப்பெற்று மேற்படி ராஜ்யங்களிருப்பது தேசத்தின் அமைதிக்குக் காரணமாகின்றது. அல்லாமலும், நல்ல விவேகமும், நுண்ணறிவும் உள்ள இந்தியர்கள் தங்களுடைய கல்வியறிவையும், திறமையையும் ஆங்கிலேய துரைத்தனத்தாருக்குக் காட்டுவதற்குச் சுதேச ராஜ்யங்கள் இடந்தருகின்றன. பல இந்திய புத்திமான்கள், இயற்கையறிவிலும், செயற்கையறிவிலும் நன்றாகத் தேர்ச்சியடைந்து சுதேச நாடுகளில் மந்திரிகளாக இருந்து ராஜ்யத்துக்கும் ஜனங்களுக்கும் அளவற்ற நன்மைகளைச் செய்து புகழ்பெற்றிருக்கிறார்கள். அங்ஙனம் புகழ்பெற்றவர்களுள், நிஜாம் ராஜ்யத்தில் அமைச்சராக இருந்த நவாப் ஸர் ஸாலர் ஜங் அவர்களும், மைஸூர் ராஜ்யத்தை நல்லநிலைமைக்குக்கொண்டுவந்தவர்களாகிய திவான் ஸி. அரங்காசார்லு அவர்களும், ஸர். கே. சேஷாத்திரி ஐயரவர்களும், திருவாங்கூர், இந்தூர், பரோடா முதலிய இடங்களில் அளவற்ற சீர்திருத்தங்களைச் செய்த



நவாப் ஸர். ஸாலர் ஜங்.

ராஜா, ஸர். டி. மாதவராவ் அவர்களும், திருவாங்கூரை முதன்மையான சுதேச ராஜ்யமாகச் செய்தவரும், பற்பல திருத்தங்களாற் புதுக்கோட்டையைப் புதுநகரமாக்கினவருமாகிய ஸர். அ. சேஷையா சாஸ்திரிகளும், ஆங்கிலேய துரைத்தனத்திற் பல உத்தியோகங்களை வகித்து இந்தூர் ராஜ்யத்தில் திவானாக இருந்து ஜனங்களுடைய குறைகளைத் தீர்த்துப் பல நன்மைகளைச் செய்ததன்றி, முதிர்ந்தவயதிலும் தேசத்தின் நன்மைக்கும் ஜனங்களுடைய நன்மைக்கும் ஊக்கத்தோடு உழைத்து வந்தவருமாகிய ம-ா-ா-ஸ்ரீ, திவான் பகதூர் ஆர். ரகு



நாதராயரவர்களும் முக்கியமானவர்கள். இப்பொழுது உள்ள இந்திய அமைச்சர்களும் அதிகாரநிலைமையில் இந்தியர்கள் தேசத்துக்கு இவ்வகையான சிறந்த நன்மைகளைச் செய்யலாமென்பதைத் தங்களுடைய நற்செயல்களாற் காட்டிவருகிறார்கள். இவர்களைப்போன்றவர்கள் இத்தேசத்தில் அதிகரிக்க அதிகரிக்கத் துரைத்தனத்தாருக்கு இந்நாட்டாரிடத்தில் நம்பிக்கையும் அன்பும் பெருகுமன்றோ!

*"ஆற்றலென் றோதப் பட்ட வரசர்கட் கவற்றின் மிக்க*
*வாற்றருஞ் சூழ்ச்சி யென்ப தாதலா லதனை யாயு*
*மாற்றலா ரமைச்ச ராக வமைச்சரோ டமர்ந்து செல்லு*
*மாற்றலா னரச னாகி னரியதொன் றில்லை யன்றே."*

(சூளாமணி.)

## நான்காம் பாகம்

# 21.—ஆங்கிலேயர் வருதற்குமுன் இந்தியா

**முற்கால நிலைமையால் தற்கால நன்மையைத் தெரிந்து கொள்ளலாமென்பது—இத்தேசத்துப் பழைய நிலைமை—முதலிற் குடியேறின ஆரியர்கள்—அவர்களுக்குப் பின்வந்த பல ஜாதியார்கள்—படையெழுச்சியினால் உண்டான நஷ்டங்கள்—அக்பருடைய செங்கோன்மை—அவருடைய ஸந்ததியாரின் ஒழுங்கின்மை — ஔரங்கஸீபுக்குப்பின் இருந்த துரைத்தனத்தின் சீர்கேடு.**

நிழலின் அருமையை வெயிலால் தெரிந்துகொள்வது போல, ஆங்கிலேய அரசாட்சியில், இந்நாட்டுக்குக் கிடைத்திருக்கும் நன்மைகளை முற்காலத்தில் இத்தேசம் இருந்த நிலைமையால் நன்றாகத் தெரிந்துகொள்ளக்கூடுமாதலால், அதனை வரிசைக் கிரமமாகக் கீழே சொல்லிவருவோம்:—

ஆகாயத்தை அளாவியுள்ள ஹிமயகிரியினாற் பக்கத்துத் தேசங்களினின்றும் பிரிக்கப்பட்ட இந்நாட்டில் தொன்றுதொட்டுப் பல ஜாதியார்கள் பல சமயங்களில் இருந்திருக்கிறார்கள். சற்றேறக்குறைய 4000 வருஷங்களுக்கு முன்பு ஏதோ ஒரு வடமேற்கு நாட்டிலிருந்து



மேற்சொல்லிய மலையைக் கடந்து வெள்ளைக்காரர்களைப் போன்ற உருவத்தையும் நிறத்தையும் பெற்ற பல மனிதர்கள் இந்நாட்டிற் புகுந்து முதல் முதல் ஸிந்து



அலெக்ஸாண்டர்.

நதிக் கரையிற் குடியேறித் தங்கள் நாகரிகத்தை நிலைநிறுத்தினார்கள். காலக்கிரமத்தில், இவர்கள் விருத்தியடைந்து, இந்நாட்டிலிருந்த ஜனங்களை வென்று கங்காதீரத்திற் பல ராஜ்யங்களை ஏற்படுத்திக்கொண்டு, மதம், தத்துவசாஸ்திரம், ஞானசாஸ்திரம் முதலியவற்றில் தேர்ச்

சியுற்றுக் கிழக்கு ஸமுத்திரக்கரை வழியாக இலங்கைத் தீவுவரையில் தங்களுடைய நாகரிகத்தைப் பாவச்செய்தார்கள். ஆயினும், அவர்களை இந்த நிலைமையில் அதிகநாள் தெய்வமானது வைக்கவில்லை. கிறிஸ்து பிறப்பதற்கு ஏறக்குறைய 500 வருஷங்களுக்கு முன்பு ஒரு **பாரஸீக வீரன்** இத்தேசத்தைப் படையெடுத்து, ஸிந்துநதி தீரத்தைக் கைப்பற்றிக்கொண்டானென்றும் இதற்குப் பிறகு 200 வருஷங்களுக்குள்ளாகக் கிரீஸ் தேசத்து மஹா சக்கரவர்த்தியாக இருந்த **அலெக்ஸாண்டர்** என்னும் யௌவன வீரரொருவர் ஸிந்து நதிக்கரையிலிருந்த அரசர்களை வென்று பஞ்சாப் நாட்டைத் தமது ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டாரென்றும் சரித்திரங்கள் கூறுகின்றன. இவர் இந்நாட்டைவிட்டுத் திரும்பியவுடன், **மகததேசத்தில்** நந்த வம்சத்தைச்சேர்ந்த **சந்திரகுப்தரென்ற** வீரர் கிரேக்கர்களை வென்று வடஇந்தியா முழுவதையுங் கைப்பற்றிக்கொண்டு பாதலிபுரத்தில் ஏகசக்ராதிபதியாகச் செங்கோல் செலுத்திவந்தார்.

இதற்குள், **கௌதமசாக்கியமுனி** யென்ற ஞானி யொருவர் ஆரியமதத்தில் தமக்குத் தோற்றிய சில மாசுகளை நீக்கிவிட்டு உபயோகமான பல அரிய விஷயங்களை அதிலிருந்து தம்முடைய மதத்திற்கு உபயோகப்படுத்திக்கொண்டு, மனிதர்கள் ஒருவரையொருவர் சகோதரர்களைப்போல் நேசிக்கவேண்டுமென்றும், ஜீவகாருண்யம் இருக்கவேண்டுமென்றும் போதித்து, ஆசையையொழித்தாலொழிய மோக்ஷமில்லையென்றும் வற்புறுத்



தினார். இவரால் ஏற்பட்ட மதம் பௌத்தமத மாகும். இது வெகு சுலபமாய் இந்நாட்டிற் பரவி ஆதிகாலத்தில் ஆரிய மதத்திற்கு ஸமமாக இருந்தது. இந்த நிலைமையில் சந்திரகுப்தருடைய பௌத்திரரான **அசோகரென்பவர்** மகததேசத்துச் சக்கரவர்த்தியாக இருந்தபோது இம்மதத்தை அங்கீகரித்து, இந்நாட்டில் நன்றாகப் பரவச் செய்தார். இதனால் இவருக்குப் பௌத்த சக்கரவர்த்தி யென்று பெயர். இப்போது க்ஷீணஸ்திதியில் இருந்தபோதிலும், உலகத்திலுள்ள ஜனங்களுள் சற்றேறக்குறைய நூற்றில் முப்பது பேர்களுக்கு இஃது ஆறுதலைக் கொடுத்துவருகின்றது. அசோகர் துரைத்தனமுறைகளில் மிக்க புகழ்பெற்று, குடிகளின் நன்மையை நாடி, ஏகசக்ராதிபதியாகச் செங்கோல் செலுத்திவந்தார். அவருக்குப்பின் இருந்த இந்திய அரசர்களுள் அவரைப்போலப் புகழ்பெற்றவர் அநேகரில்லை. அவருடைய காலத்திற்குப் பிறகு 750 வருஷங்கள் வரையில் ஆசியாகண்டத்து மத்திய தேசங்களிலிருந்து வந்த சாகர், ஹூணர், யவனர், கிரேக்கர், துருக்கியர் முதலிய ஜாதியார்களால் இத்தேசம் அமைதியற்றிருந்தது.



கௌதமர்.

கிறிஸ்து பிறந்த 700 வருஷங்களுக்கெல்லாம் மகமதியர்கள் இந்நாட்டைப் படையெடுத்துக் கைப்பற்ற ஆரம்பித்தார்கள். இவர்களுடைய உபத்திரவங்களும் ஆரவாரங்களும் 1761-ம் வருஷம்வரையில் ஓயவில்லை. முதல் முதல் இந்நாட்டின் ஏராளமான செல்வத்தைக் கைப்பற்ற வேண்டுமென்றும், மகமதிய மதத்தைப் பரவச்செய்ய வேண்டுமென்றும், விக்கிரக ஆராதனை செய்வோர்களை ஒழிக்கவேண்டுமென்றும் இவர்கள் இங்கு வந்தார்கள். இவ்வேலைகளை இவர்கள் வேண்டிய அளவு செய்தார்களென்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. முதலில், கிஜினி ராஜ்யத்தைச்சேர்ந்த மாமூட் என்பவர் பதினேழுதரம் இத்தேசத்தைப் படையெடுத்து, அரண்மனைகளையும், பொக்கிஷ சாலைகளையும், கோயில்களையுங் கொள்ளையிட்டு, ஹிந்துக்களாற் பூசிக்கப்பட்டு வந்த விக்கிரகங்களைப் பொடியாக்கித் தாம் கைக்கொண்ட செல்வமெல்லாம் தம்மைப் பின்தொடரா வில்லையேயென்ற ஆருத்துயரத்துடன், சவக்குழியில் அமிழ்ந்தார். இவரைப்போலவே மகமது கோரி என்பவர் ஒன்பதுதரம் படையெடுத்து இந்திய ராஜாக்களை வென்று, டில்லி ராஜ்யத்தை ஸ்தாபித்தார். இத்தேசத்திற் குடியேறினபிறகு கூட மகமதியர்கள் தங்களுடைய லாபத்தையே நாடி, குடிகளுக்கு வேண்டிய நன்மையைச் சிறிதேனும் கவனியாமல், அவர்களுடைய மதத்தைக் கெடுத்ததன்றித் திரவியநாசத்தையும் அவர்களுக்கு விளைவித்தனர். வரி கொடுக்க முடியாமற்



காட்டில் ஒளிந்துகொண்ட எளிய மனிதர்களை வேட்டையாடி, தம் வாயிலிருந்து விழுந்த பல்லுக்குக் கோரியமைத்த மகமதியரொருவரும் ஒருசமயத்தில் டில்லி சக்கரவர்த்தியாக இருந்தார். செங்கிஸ்கான், தாமர்லேன் என்ற இரண்டு கொடிய மனிதவைரிகள் திரள் திரளான மொகலாயர்களைச் சேர்த்துக்கொண்டு, இத்தேசத்து ஜனங்களை ஆயிரக்கணக்காகத் தங்களுடைய ஆயுதங்களுக்கு இரையாக்கி, அநேக நகரங்களை ரக்தமயமாகச் செய்து எஞ்சியிருந்த குடிகளையும் ஆண்டிகளாக்கினர். ராஜபாட்டைகளை அமைத்து, குளங்களையும், கால்வாய்களையும் வெட்டி, தங்குமிடங்கள் கட்டின புண்ணியவானாகிய பிரூஸ் டோக்லக் என்பவரைத் தவிர டில்லி அரசர்களுட் குடிகளுடைய நன்மையை நாடினவர் 500 வருஷகாலம்வரையில் வேறு ஒருவருமில்லை.

ஆனால், பதினாறாவது நூற்றாண்டில், மொகலாயர்கள் மகமதிய மதத்தைச் சார்ந்து டில்லி ராஜ்யத்தைக் கைப்பற்றியபோது துரைத்தனம் ஒருவாறு ஒழுங்குபட்டது. இவர்கள் காலம் முதலாகத்தான் ஜனங்கள் மதபேதங்களுக்காகத் துன்புறுத்தப்படாமல் இருந்தார்கள். துரைத்தன வரும்படியும் ஒருவாறு இத்தேசத்தின் நன்மைக்கு உபயோகப்பட்டுவந்தது. ராஜபாட்டைகளை அமைத்துக் குளங்களையும், கிணறுகளையும் வெட்டி வழிப்போக்கர்கள் தங்கும் இடங்களைக் கட்டி, நிலங்களை அளந்து, நியாயமான தீர்வையை விதித்து

அன்னிய மதத்தினருக்கிருந்த வரிகளை மாற்றி, ஹிந்துக்களுக்குள் வழங்கிவந்த கொடிய வழக்கங்களை நீக்கி அவர்களிற் சிறந்தவர்களுக்குத் துரைத்தனத்திற் பெரிய உத்தியோகங்களைக் கொடுத்து, வருத்தமுற்றவர்களுடைய வருத்தத்தைப் போக்கி, இந்நாட்டை ஆண்டுவந்த **ஆக்பரைப்** போலப் பெருந்தன்மையும், தயையுமுள்ள இந்திய அரசர்கள் சிலரே. ஆக்பருடைய சந்ததியார்கள் அவரைப்போல அவ்வளவு நன்றாக ராஜாங்கத்தை நடத்தவில்லை. அவருடைய புத்திரரான **ஜகான்கீர்** என்பவர் அழகே உருவெடுத்தாற்போன்ற **நூர்ஜஹான்** என்ற பெண்வலையிற் சிக்கி, அவளிடம் துரைத்தனத்தை ஒப்புவித்து சுகவாஸியாக இருந்துவந்தார். பிறகு அவர் குமாரராகிய **ஷாஜகான்** என்பவர் பலமுறை வெற்றி அடைந்து, ஏராளமான பொருளை **தாஜ்மஹால்** முதலிய ஆச்சரியமான கட்டிடங்களிலும், அரசர் இருத்தற்குரிய **மயிலாஸனத்திலும்** செலவுசெய்து, துரைத்தனத்தை மிகவும் ஆடம்பரத்துடன் நடத்திக்கொண்டு வந்தார். தம்முடைய பிள்ளைகள் தகுதியற்றவர்களாக இருந்தும் அவர்களிடமுள்ள அதிக அன்பினால் அவர்களைப் பெரிய மாகாணங்களுக்கு அதிகாரிகளாக நியமித்துத் தமக்கே கேட்டை விளைவித்துக்கொண்டதன்றி ஒரு குமாரராற் சிறைச்சாலையிலும் அடைக்கப்பட்டார். இவ்விதம் பிதாவுக்குத் துரோகம்செய்த புத்திரர் **ஔரங்கஸீப்** என்பவர். இவர் மகமதிய மதத்தில் அளவற்ற பக்தியுள்ளவரைப்போல் மிகவும்



நடித்த வேஷக்காரர்; ஆக்பருடைய காலம்முதல் வழங்கிவந்த துரைத்தன முறைகளை மாற்றி, மதவரிகளை ஏற்படுத்தி, ஹிந்துக்களை அதிகாரத்திலிருந்து விலக்கி, ராஜபுத்திரர்களை அவமதித்து, வீண் சண்டைகள் போட்டு, தம்மைச் சார்ந்தவர்களிடத்தும் பற்றில்லாமல் நேர்த்தியான ராஜ்யத்தைச் சீர்குலையச் செய்தவர் இவரே.

இதற்குள்ளாகத் தக்ஷிணதேசத்தில் **மஹாராஷ்டிர தேசமென்ற** மலைநாட்டிலுள்ள ஹிந்துக்கள் ஒருங்குசேர்ந்து **சிவாஜி** என்பவரைத் தலைவராகக்கொண்டு ஹிந்துமதத்தைக் காக்கவேண்டுமென்ற கொள்கையோடு, மொகலாயர்களுடைய நாடுகளைக் கொள்ளையிட்டு, மெக்கா முதலான யாத்திரை ஸ்தலங்களுக்குச் செல்லும் பிரயாணிகளை வருத்தி வரிகள் வாங்கிப் பலவிதமாக மகமதியர்களுக்குத் தீங்கை விளைவித்தார்கள். இக்காரணம்பற்றி, மகமதிய பக்த சிரோமணியாகிய ஔரங்கஸீப் கோபாவேசங்கொண்டு, வெகுகாலமாக ஆலவிருக்ஷம்போல இந்நாட்டில் வேரூன்றி, விழுதுகள் விட்டுப் பரவிய ஹிந்துமதத்திற்குத் தம்மை ஒரு கோடரியாக நினைத்து ஏராளமான ஸைன்னியங்களைச் சேர்த்துக்கொண்டு, தக்ஷிணத்தில் 24 வருஷம் வரையிற் பிறர் கையில் அகப்படாமல், எதிரிகள் சேர்த்துவைத்திருக்கும் உணவு முதலியவற்றை யபகரிப்பதிற் கண்ணுடையராய்ச் சண்டைபோட்டுக்கொண்டுவந்த மலைநாட்டு வாஸிகளோடு வீண்யுத்தம் செய்து, முடிவில்

தாம் நினைத்தகாரியம் முடியாமலே 89-வது வயதில் வட இந்தியாவுக்குத் தொண்டுகிழவராகத் திரும்பித் தம்முடைய வாணாளெல்லாம் வீணாளாயிற்றே என்ற துயரத்தோடு ஆமத்நகரத்தில் 1707-ம் வருஷத்திற் காலஞ்சென்றார்.

இவர் தலைசாய்ந்த 50 வருஷங்களுக்கெல்லாம் மொகலாயர்கள் வம்சம் அழிந்துபோயிற்று. ராஜ்யமும் பலவாறு பிரிவுபட்டுக் குறைந்து நாளடைவிற் சத்துருக்களுக்கு இரையாயிற்று. இவ்விதம் சீர்குலைந்த நாடும் பாரஸீக தேசத்துத் தலைவனாகிய நாதர்ஷா என்ற கொடியவனாற் கொள்ளையிடப்பட்டு, நாசத்தை யடைந்தது. அல்லாமலும், சண்டைமுறைகளிற் சிறந்த ஸீக் ஜாதியார்களும் மஹாராஷ்டிரர்களும் பலமடைந்து டில்லி ராஜ்யத்தைக் கவர்ந்துகொண்டார்கள். இத்தேசமானது இவ்வாறு சீர்கேடான நிலைமையிலிருந்தபோதுதான், கிழக்கு ஸமுத்திரக்கரையில் ஆங்கிலேயர்கள் உதயமானார்கள்.

“கூழுங் குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு.” (திருக்குறள்.)



# 22.—ஆங்கில வர்த்தகர்கள் ஆதீனத்தில் இந்தியா

---

**அசோகருக்குப் பின் இந்தியாவின் நிலைமை—ஆங்கிலேயர்களின் வரவு—அவர்களுடைய வர்த்தகஸ்தலங்களும் வர்த்தகமுறைகளும்—முதலில் உண்டான சண்டைகளுக்குக் காரணம்—லார்ட் பென்டிங்க் செய்த சீர்திருத்தங்கள்—லார்ட் டால்ஹௌஸி செய்த நன்மைகள்—கானிங் பிரபுவாலும் மாட்சிமைதங்கிய விக்டோரியாவாலுங் கிடைத்த பேறுகள்.**

ஆதிகாலத்தில், அசோகருடைய காலத்துக்குப்பின் இந்நாடானது அமைதியையும், நல்ல துரைத்தன முறைகளையும் பொதுவாகக் கண்டதில்லையென்றும், கொடிய படைத்தலைவர்கள் பலராற் கொள்ளையிடப்பட்டதென்றும், அரசர்கள் அடிக்கடி மாறியது கலகங்களுக்கும், கொலைகளுக்கும் இடமாயிற்றென்றும், ராஜ்யத்திற் கிடைத்த வரும்படி விசேஷமாக அரசர்களுடைய ஸுகத்துக்கு உபயோகப்பட்டு வந்ததேயன்றி, பொதுநன்மைக்காகப் பெரும்பாலும் செலவிடப்படவில்லையென்றும், துரைத்தனத்திற் குடிகளுக்கு ஒரு விதமான பாத்தியமும், சம்பந்தமும் இல்லையென்றும், மதவிஷயங்களிற்கூட ஜனங்கள் தங்கள் இஷ்டம்போல் நடக்க ஸ்வாதீனம் பெறவில்லையென்றும் இதற்குமுன் அத்தியாயத்தில் விரிவாகச் சொன்னோம். இந்நாடானது ஆங்கிலேயர் வசம் இன்னவிதமாக வந்ததென்றும்,

இன்ன இன்ன காலங்களில், மேற்சொல்லிய துரைத்தன முறைகள் இன்ன இன்னவாறு மாறினவென்றும், இப்போது ஜனங்களுக்கு உள்ள நன்மைகள் இன்னவையென்றும் இனிமேற் கூறுவோம்:—



ஆங்கிலேய வர்த்தகச் சங்கத்தாருடைய அடையாள முத்திரை.

சற்றேறக்குறைய 300 வருஷங்களுக்குமுன் ஆங்கிலேயர்கள் இத்தேசத்திற்கு வர்த்தகர்களாக வந்தார்கள். அப்போது அவர்கள் இத்தேசத்தைக் கைப்பற்றித் துரைத்தனம் வகிக்கக் கூடுமென்று சிறிதும் எண்ணவில்லை. வர்த்தகத்தில் நல்ல லாபமடையலாமென்றே எண்ணியவர்கள். ஆகையால் இந்நாட்டுக்கு வந்தவுடன் மஸூலிபட்டணம், சென்னை, பம்பாய், ஸூரத் முதலிய துறைமுகங்களில் அவர்கள் பண்டசாலைகளைக் கட்டிக்கொண்டு ஏறக்குறைய 140 வருஷகாலம்வரையில் மிக்க பொறுமையுடன் வர்த்தகத்தையே கவனித்துவந்தார்கள். இவர்களுக்குமுன்பு மற்ற ஐரோப்பியரும் இங்கே குடியேறிச் சிற்சில வர்த்தகச்சாலைகளை ஏற்படுத்தியிருந்தனர். 1744-ம் வருஷத்தில் இங்கிலாந்திற்கும் பிரான்ஸூக்கும் பலமான சண்டையுண்டாயிற்று. அப்போது இந்தியாவிலுள்ள ஆங்கிலேயர்களைத் துரத்திவிடவேண்டுமென்று பிரெஞ்சுக்காரர்கள் பலவாருக முயன்றும், ஆங்கிலேயர்



கள் தங்களுடைய பண்டசாலைகளைக் காத்துத் தங்களுடைய திறமையைக் காட்டியதல்லாமல், 16 வருஷ காலத்திற்குள் தங்களுடைய எதிரிகளைத் தலையெடுக்க வொட்டாமலும் செய்துவிட்டார்கள்.

வர்த்தகப் பெருக்கத்துக்குத் தேசத்தின் அமைதி அவசியமானது. ஆதலால், பெருத்த சேனைகளை வைத்துக்கொண்டு எப்போதும் போர்புரிந்து பிறருக்கும் தங்கள் குடிகளுக்கும் தீமையை விளைவித்துக்கொண்டு வந்த தலைவர்களை வென்று இந்நாட்டிற்கு அமைதியை விளைவிக்கவேண்டுமென்று, வர்த்தகத்தை உத்தேசித்து இங்கு வந்த ஆங்கிலேயர்கள் எண்ணினார்கள். 18-வது நூற்றாண்டில், மொகலாயர்களுடைய துரைத்தனம் தளர்ச்சியடைந்ததன்றி, அதிகாரிகளே நாடுகளைக் கைப்பற்றிக்கொண்டு, பலவிதமான வரிகளைப் போட்டு வர்த்தகத்தைக் கெடுத்துவந்தார்கள். ஆதலால், இவர்களுள், காரணமின்றித் தங்களை எதிர்ப்போரைமாத்திரம், ஆங்கிலேயர்கள் முதலில் அடக்க ஆரம்பித்தார்கள். இவ்விஷயமானது, இங்கிலாந்திலிருந்த வர்த்தகச் சங்கத்தின் மேலதிகாரிகளுக்கும் அங்கத்தினருக்கும் திருப்தியாக இல்லை. ஏனெனில், சண்டையில்லாமலே வர்த்தகத்தொழிலைச் செய்யவேண்டுமென்பது அவர்களுடைய எண்ணம். ஆயினும், 19-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில், இத்தேசத்தின் அமைதியைக் கெடுத்துவந்த மஹாராஷ்டிரர்களோடு போர்புரிந்து அவர்களை வென்றே இந்நாட்டில் அமைதியை உண்டாக்

கிறார்கள். இதற்குள்ளாக, மைஸூர் ராஜ்யத்தில் தங்களுடைய கொடியை நாட்டித் தக்ஷிணத்திலுள்ள எல்லா அரசர்களையும் நடுங்கச்செய்த ஹைதர், திப்பு என்ற இரண்டு மகமதிய வீரர்களும் மடிந்துவிட்டார்கள். ஆகையால், இதுமுதலாக ஆங்கிலேய துரைத்தனம் பலப்பட்டதென்று சொல்லலாம்.

சென்ற 90 வருஷகாலமாகத்தான் இராஜாங்கம் ஒழுங்காக நடக்கின்றது. குடிகளின் நன்மையை நாடியே துரைத்தனம் வகிக்கவேண்டுமென்று முதலில் வற்புறுத்தினவர் 1818-ம் வருஷத்தில் இத்தேசத்தின் தலைவராக இருந்த லார்ட் வில்லியம் பென்டிங்க் என்னுங் கனவானவர். பலகாலமாக வழங்கிவந்த சில கெட்ட வழக்கங்களைத் தடுத்து, கொலைசெய்து கொள்ளையிடுவதையே குலத்தொழிலாகக் கொண்ட தக் என்ற ஜாதியாரை அடக்கி, தங்களுடைய அபிப்பிராயங்களை இஷ்டப்படி வெளியிடலாமென்று குடிகளுக்கு ஸ்வாதீனங் கொடுத்து, ஜனங்களைக் கல்வியிலும் ஒழுக்கத்திலும் மேன்மைப்படுத்த



லார்ட் வில்லியம் பென்டிங்க்.



வேண்டுமென்ற அவாவுற்று அதற்கு வேண்டிய காரியங்களை ஆரம்பித்தவரும், முதல்முதல் கல்கத்தாவில் வைத்தியகலாசாலை ஒன்றை ஸ்தாபித்துக் கச்சேரிகளிலும், நியாயஸ்தலங்களிலும் ஆங்கிலபாஷை வழங்கிவரவேண்டுமென்று சட்டமிட்டவரும் இவரே. அல்லாமலும், ஆங்கிலேயர்களைக்கொண்டே எல்லா வேலைகளையும் பார்ப்பதில் இராஜாங்கத்துக்குச் செலவு அதிகமாவதால், இந்தியர்களையும் உயர்ந்த வேலைகளுக்கு நியமித்து, செலவைக் குறைத்துத் துரைத்தனத்தை ஒழுங்குபடுத்தலாமென்றும் இவர் வற்புறுத்தினார்.



தக் என்ற கொலைபாதகர்கள்.

பிறகு ஆங்கிலேயர்களுக்கு நண்பாக இருந்த பஞ்சாப் தேசத்துக் கேஸரியாகிய ரஞ்சிட்ஸிங்க் என்னும்பெயருள்ள ஸிங்க் ஜாதித் தலைவர் 1839-ம் வருஷத்திற் காலஞ்சென்றார். அப்போது அவருடைய மிகுதியான சேனைகள் தலைவர்களுக்கு அடங்காமல் அவருக்குப்பின் துரை

த்தனம் வகித்த அவர் மனைவியாகிய அரசியின் கட்டளைப்படி ஆங்கிலநாடுகளைப் படையெடுக்க, ஆங்கிலேயர்கள் அவற்றை முறியடித்து 1849-ம் வருஷத்திற் பஞ்சாப் மாகாணத்தையுந் தங்களுடைய ஆளுகைக்கு உட்படுத்திக்கொண்டார்கள். மஹாராஷ்டியர்களையும் ஸிங்க் ஜாதியார்களையும்போன்ற மற்றவர்களும் இதற்குப் பிறகு அடங்கிவிட்டபடியால், தேசத்தின் அமைதி குறைவுபடாதென்ற நம்பிக்கை வந்தது; அச்சமயத்தில் இத்தேசத்துத் தலைவராக இருந்த லார்ட் டால்ஹௌஸி என்பவர், சிற்றரசர்களுடைய ஸ்வீகார புத்திரர்களுக்கு அவர்களுடைய நாடுகளிற் பாத்தியமில்லையென்று சொல்லி அந்நாடுகளை ஆங்கிலேய நாடுகளோடு சேர்த்து மேற்சொன்ன ஸ்வீகார புத்திரர்களுக்கும், ராஜகுடும்பங்களுக்கும் மனக்கொதிப்பை உண்டாக்கினர். ஆயினும், இந்தக் கனவானே இந்தியாவில் தபால், தந்தி, சாலைகள், இருப்புப்பாதைகள், கால்வாய்கள் முதலிய நன்மைகளை முதலில் அளித்து, மேற்றிசைக் கல்வியையும் பரவச்செய்தவர். இந்தத் தலைவர் அதிகாரத்தினின்றும் நீங்கிச் சென்றவுடன், இந்திய சேனைகளுக்கு நூதனமான துப்பாக்கிகளையும் தோட்டாக்களையும் துரைத்தனத்தார் கொடுக்கவே, பசு, பன்றி முதலிய பிராணிகளின் கொழுப்பினால் அவை பூசப்பட்டுள்ளனவென்றும், ஹிந்துக்களையும் மகமதியர்களையும் தாழ்மைப்படுத்துவதற்கே ஆங்கிலேயர்கள் அவற்றைக் கொடுத்தனரென்றும் தவறாக எண்ணி,



வங்காளத்திற் சில யுத்தவீரர்கள் கலகஞ்செய்தார்கள். தங்கள் நாட்டையிழந்து ஜீவனாம்சத்தை வாங்கிக்கொண்டு ஜீவித்துவந்த சில ராஜவம்சஸ்தர்கள் அவர்களோடு சேர்ந்து அநேகம் படைவீடுகளைக் கொள்ளையிட்டு, டில்லிநகரைக் கைப்பற்றி ஆங்கிலேய ஸ்த்ரீபுமான்கள் பலரைக் கொன்று, வடஇந்தியாவை ரக்தமயமாகச் செய்துவிட்டார்கள். ஆயினும், அப்போது இந்தியாவின் தலைவராக இருந்த லார்ட் காணிங்கு என்பவருடைய மனோதைரியத்தாலும், ஆங்கிலேய வீரர்களுடைய வன்மையாலும், ராஜவிசுவாசமுடைய ஸிங்க் ஜாதியார்களது உதவியாலும், இக்கலகம் அடங்கிற்று.



லார்ட் காணிங்கு.

சிறந்த ராஜநீதி முறைகளில் தேர்ச்சிபெற்ற லார்ட் காணிங்கு என்பவர் குடிகளின் அறியாமையும், பயமுமே மேற்படி கலகத்திற்குக் காரணமென்று அறிந்து, அவர்களுடைய நம்பிக்கையையும் விச்வாஸத்தையும் பெற்று, ராஜ்யத்திற் சீர்திருத்தங்கள் செய்வதுதான் நல்லவழியென்று வற்புறுத்தினார். இந்த அபிப்பிரா

யத்தையே மாட்சிமைதங்கிய விக்டோரியா மகாராணியார் வைத்துக்கொண்டு இந்தியாவை வர்த்தகச் சங்கத்தாரிடமிருந்து தம்முடைய ஆதீனத்திற் கொண்டுவந்து, ஒரு மந்திரியை இத்தேசத்துக் காரியதரிசியாக நியமித்து, அவருக்கு உதவியாக 15 பேர்கள் அடங்கிய மந்திராலோசனை சபை ஒன்றை ஏற்படுத்தி, இந்நாட்டாரின் சந்தேகங்களையும் பயத்தையும் நீக்குவதற்காகச் சிறந்த துரைத்தனமுறைகள் அடங்கிய ஒரு பட்டயத்தை இந்தியர்களுக்கு அளித்து, இந்தியா சட்ட நியமன சபையில் (Imperial Legislative Council) மூன்று இந்தியர்களுக்கு இடந்தந்து, ஒவ்வொரு மாகாணத்திலும் உயர்தர நியாயஸ்தலங்களையும் (High Courts), கல்வி விருத்திக்கு அவசியமான பல கலாசாலைகளையும், ஸர்வ கலா சங்கங்களையும் ஏற்படுத்தினர்.

"கொள்ளுமொரு முதலுக்கு மோசம் வாராதபடி
குறுகவே செலவுசெய்வார்
வண்டப் புரட்டர்தா முறிதந்து பொன்னடகு
வைக்கினுங் கடனீந்திடார்
மருவுநா ணயமுளோர் கேட்டனுப் புகினுமவர்
வார்த்தையி னெலாங்கொடுப்பார்
கண்டெழுது பற்றுவா வினின்மயிர் பிளந்தே
கணக்கிலனு வாகிலும்விடார்
காசுவீ ணிற்செல விடாருசித மானதிற்
கனதிரவி யங்கள்விடுவார்
மண்டலத் தூடுகன வர்த்தகஞ் செய்கின்ற
வணிகர்க்கு முறைமையிதுகாண்." (குமரேசசதகம்.)



# 23.—ஆங்கில மன்னர் ஆதீனத்தில் இந்தியா

**விக்டோரியா மஹாராணியாரும் ரிப்பன் பிரபுவும் செய்த நன்மைகள்—இந்நாட்டிற்கு எதிர்பாராது நேர்ந்த துன்பங்கள்—கர்ஸன் பிரபு செய்த திருத்தங்கள்—இப்போது யோசனையிலிருக்கும் துரைத்தன முறைகள்—இத்தேசத்தின் தற்கால நிலைமை—ஜனங்களுக்குச் செய்யும் பொது நன்மைகள்—வறுமையும் அதன் காரணங்களும்—அதனைப் போக்கு முபாயமும், துரைத்தனத்தாரின் உதவியும்—துரைத்தனத்தாருக்குங் குடிகளுக்குமுள்ள மனக்கலப்பு தேசத்தின் விருத்திக்குக் காரணமாகும் என்பது.**

ஆங்கிலேய வர்த்தகர்களது செல்வப் பெருக்கத்துக்காக அல்லாமல் ஜனங்களுடைய நன்மைக்காக இந்நாட்டில் துரைத்தனம் ஏற்படவேண்டுமென்ற எண்ணம், இத்தேசமானது ஆங்கிலேய துரைத்தனத்தாருடைய ஆதீனத்திற்கு வந்தபிறகுதான், பலமாக உண்டாயிற்று. இம்மாறுபாட்டுக்குக் காரணம் ஆங்கில வேந்தர்களே என்று சொல்லலாம். இந்த நாட்டை விக்டோரியா சக்கரவர்த்தினியார் தாமே நேரிற் பாராவிட்டாலும், தம்முடைய செல்வப் புதல்வர்களைப் பார்த்துவரச்செய்து இத்தேசத்து நிலைமையை அவர்கள் முகமாகத் தெரிந்துகொண்டு ராஜப்பிரதிநிதிகளை இத்தேசத்திற்கு அனுப்பும்போதெல்லாம், அவர்களுக்குச் சிறந்த துரைத்தன முறைகளையும் இந்நாட்டாரை அன்பாக

நடத்தவேண்டுமென்ற புத்திமதியையுங் கூறிவந்தார். இருப்புப்பாதைகளை அமைத்தல், கால்வாய்களை வெட்டுதல், கல்வியைப் பரவச்செய்தல் முதலிய பொது நன்மைகளில் மிகுந்த ஊக்கத்தைக் காட்டிய லார்ட் மேயோ என்பவர் 1869-ம் வருஷத்தில் ராஜப்பிரதிநிதியாக இருந்தபோது விக்டோரியாவின் இரண்டாவது புத்திரரும் டியூக்-அப்-எடின்பர்க் என்ற பட்டப்பெயர் தாங்கியவருமாகிய ஆல்பிரெட் யர்னஸ்டு ஆல்பர்ட் என்பவர் இத்தேசத்திற்கு வந்து பல இடங்களுக்குஞ் சென்று குடிகளின் மனத்தைக் கவர்ந்ததல்லாமல் ராஜபக்தியையும் பரவச்செய்தார். பிறகு, அப்போது யுவராஜாவாக இருந்த எட்வர்ட் அரசர் 1875-ம் வருஷத்தில் இங்கு வந்து இத்தேசத்தின் புதுமைகளையும் பழைய நாகரிகங்களையும் அறிந்து சிற்றரசர்களோடு சம்பாஷித்து ஆங்கிலேய துரைத்தனத்தின் பெருமையை விளக்கி, இந்தியர்கள் தம்மிடம் பாராட்டிய ராஜவிசுவாஸத்தை, இங்கிலாந்துக்குச் சென்றவுடன் தம் அருமைத் தாயாரிடம் பிரியமாகத் தெரிவித்தார்.

1877-ம் வருஷத்தில் விக்டோரியா மஹாராணியார் தம்முடைய உரிமையையும் தமக்கும் இந்நாட்டு அரசர்களுக்குமுள்ள சம்பந்தத்தையும், நன்றாக விளக்கும்பொருட்டு இந்தியா சக்கரவர்த்தினி என்ற பட்டப்பெயரைச் சூட்டிக்கொண்டார். அச்சமயத்தில் டில்லி நகரில் முடிசூட்டுக் கொண்டாட்டம் இனிது நிறைவேறியது. 1858-ம் வருஷத்திற் கொடுத்திருந்த பட்டயத்தின் விஷயங்கள் மறுபடியும் பிரஸித்தஞ் செய்யப்பெற்றன. மேற்படி விஷயங்களை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரவேண்டுமென்ற எண்ணங்கொண்டே 1880-ம் வருஷத்தில் ரிப்பன் பிரபுவானவர் இத்தேசத்துத் தலைவராக வந்தவர்போலக் காணப்பட்டார். இவரை இத்தேசத்துக்குப் பரம உபகாரியென்றே ஜனங்கள் நினைக்கிறார்கள். சொல்லொன்றுஞ் செய்கை வேறுமாக இல்லாமற் சொன்னபடியே துரைத்தன விஷயங்களைச் செய்துகாட்டிய பிரபுக்களுள் இவரைச் சிறந்தவராகச் சொல்லலாம். சுதேசபாஷா பத்திரிகைகளுக்கு அபாயத்தை விளைவித்த வாய்ப்பூட்டுச் சட்டத்தை (Vernacular Press Act) நீக்கியவரும், நகரவிசாரணை, ஜில்லா விசாரணை முதலிய விஷயங்களில், குடிகளுக்கு அதிகாரம் அளித்தவரும், கல்விப் பெருக்கத்துக்கு வேண்டிய முறைகளைத் தெரிந்துசொல்ல ஒரு கல்வி விசாரணைச் சங்கத்தை (Education Commission) ஏற்படுத்தியவரும் இவரே. தேசத்தாருடைய மனதைக் கவர்ந்துகொண்டமையால், இவர் பெயரானது இன்றைக்கும், கல்மேலெழுத்துப்போல், எல்லாருடைய ஞாபகத்திலும் பதிந்திருக்கிறது.

இவர் காலம் முதலாகவே இந்தியர்களுக்குத் துரைத்தனவிஷயத்தில் ஸம்பந்தமும், பாத்தியதையும் அதிகமாக ஏற்பட்டு வருகின்றன. சமர்த்தர்களாகவுள்ள இந்தியர்களுக்கு இன்ன அதிகாரங்களைக் கொடுக்கலாமென்று தெரிந்து சொல்வதற்காக ஒரு சபை (Public

Service Commission) இக்காலத்தில் ஏற்பட்டது. சட்ட நியமன சபைகளுக்கு, ஜனங்கள் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பலாமென்றும், இப்பிரதிநிதிகள், துரைத்தன வரவு செலவு விஷயங்களைப்பற்றி விசாரிக்கலாமென்றும், 1892–ம் வருஷத்திற் சட்டமிட்டார்கள்.

ஆயினும், இதற்குப் பிறகு 10 வருஷ காலம்வரையில், இந்நாடானது, தடுக்கமுடியாத பல காரணங்களாற் பலவகைத் துன்பங்களை அடைந்துவந்தது. வைத்திய முறைகளுக்கு எட்டாத மஹாமாரி என்னும் கொடிய வியாதியாலும், வருஷந்தோறும் நேர்ந்த பஞ்சத்தாலும், ஜனத்தொகையைக் குறைக்கும் பூகம்பம் முதலிய அபாயங்களாலும், ஒருவிதமான கட்டுக்கும் அகப்படாத மலைநாட்டு மகமதியர்களுடைய உபத்திரவத்தாலும் இந்நாட்டிற்கு உண்டான பொருள் நஷ்டமும், உயிர்க்கேடும், துன்பமும் இதில் எழுதி யடங்குவனவல்ல. 'பட்டகாலிலே படும்' என்றபடி, மேற்கூறிய துன்பங்களோடு, 1901–ம் வருஷத்தில் விக்டோரியா சக்கரவர்த்தினியாருடைய மரணமாகிய துக்கமும் இத்தேசத்துக்கு நேர்ந்தது.

புயல் சூழ்ந்த கடல்மீது பாய் கட்டிய கப்பலை மீகாமன் ஜாக்கிரதையாகச் செலுத்துவதுபோல பலவகையான அபாயங்கள் நிரம்பியிருந்த இந்நாட்டை நன்றுகப் பரிபாலிப்பதற்கு ஊக்கமுந் தைரியமுமுள்ள **லார்ட் கர்ஸன்** என்றவர் இச்சமயத்தில் தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் காலத்திற் செய்யப்பெற்ற



சீர்திருத்தங்களுக்கு அளவில்லை. கல்வி கற்பிக்கும் முறைகளைத் திருத்திப் புதிய ஸர்வகலா சங்கங்களை அமைத்து; காவல் விசாரணை இலாகாவைப் பலப்படுத்தி, இருப்புப்பாதைகள் முதலிய சாதனங்களை விருத்தியாக்கி இத்தேசத்துப் புராதன நாகரிகத்தைத் தெரிவிக்கும் பழைய கோட்டைகள், கோயில்கள், மண்டபங்கள் முதலிய கட்டிடங்களைத் துரைத்தனத்தாரே செப்பனிடும்படி செய்து, ஏழைகளுடைய நன்மைக்காக உப்பு வரியையும், வருமான வரியையுங் குறைத்து, எல்லை நாடுகளிலிருந்த முரட்டு மனிதர்களை அடக்கி இத்தேசத்திற்கு அமைதியை விளைவித்தவர் இவரே.



லார்ட் கர்ஸன்.
1899–1905.

சில காரணங்களால், 1905–ம் வருஷத்தில் இவர் தாமாகவே வேலையைவிட்டு நீங்கியவுடன், துரைத்தன முறைகளில் நல்ல பழக்கமுள்ளவரும், ஜனங்களுக்குத் திருப்தியை விளைவிக்கக் கூடியவருமாகிய லார்ட் மிண்டோ என்ற கனவான் இத்தேசத்துத் தலைவராக வந்தார். இங்கிலாந்தில் ஜான் மார்லே என்ற கலா

நிபுணர் இத்தேசத்துக் காரியதரிசியாக நியமனம்
பெற்றதும் இந்தச் சம
யமே. இவர்கள் இருவ
ரும் இத்தேசத்தின் நிலே
மையை நன்ருகத் தெரி
ந்துகொண்டு, துரைத்த
னத்தாருக்கும், குடிக
ளுக்கும் வெளிப்படை
யாகவும் மறைவாகவும்
துன்பத்தை விளேவித்து
வந்த துஷ்டர்களே யடக்
கிக் குடிகளுக்குப் பல
நன்மைகளேச் செய்து
அவர்களுக்கு உரிய பாத்
தியங்களே அளிப்பதே
சிறந்த முறையென்று கருதி இந்தியர்களால் தெரிந்
தெடுக்கப்பட்ட ப்ரதிநிதிகளேச் சட்ட நியமன சபை
களில் மிகுதியாக ஏற்படுத்துவதல்லாமல், மந்திரா
லோசனே ஸபைகளிலும் அவர்களுக்கு இடங்கொடுத்து
வருகிருர்கள்.


லார்ட் மின்டோ.
1905–1910.

மேற்சொல்லிய சிறந்த வேலேயைச் செய்துவிட்டு
லார்ட் மின்டோ அவர்கள் ஜன்மதேசத்திற்குத் திரும்
பியபிறகு துரைத்தனவிஷயங்களில் வெகு தேர்ச்சி
யடைந்த லார்ட் ஹார்டிஞ்ச் என்பவர் கவர்னர் ஜனர
லாய் இருந்துவருகிருர். இவர் இத்தேசத்திற்கு வந்தது



முதல் சில அவச்யமில்லாத வேலேகளேக் குறைத்து
துரைத்தனத்தைச் செ
ட்டாய் செய்யவேண்டு
மென்று ஊக்கமுடைய
வராயிருக்கிருர். இவர்
காலத்தில்தான் சென்ற
1911–ம் வருஷம் டிஸ
ம்பர் மாஸம் 12–ம்
தேதியில் நம்முடைய
சக்கரவர்த்தியா ராகிய
ஜார்ஜ் என்பவரும், சக்
கரவர்த்தினியாராகிய
மேரி என்பவரும் டில்
லிமாநகரத்தில் மகுடா
பிஷேகம்செய்துகொள்
ளுங் காலத்தில் இந்தி
யர்களுக்கு நன்மைசெய்வதே ஆங்கில மன்னர்களுக்கு
விருதென்று சொல்லி; இந்நாட்டார்களுக்குள்ள சில
மனக்குறைகளேயும் அவரது இரண்டாவது சுற்றுப்பிர
யாணத்தால் நீக்கிவிட்டார்கள். இச்சமயத்தில்தான்
இனி டில்லிமாநகரமே தலேநகரா யிருக்கவேண்டுமென்
றும், பங்காளம் சென்னேயைப்போல் ராஜதானியாயிற்
றென்றும், அஞ்ஞானமாகிய இருளேப்போக்கும் கல்வி
விருத்திக்காகவே வருஷந்தோறும் 50 லக்ஷம் ரூபாய்
அதிகமாய்ச் செலவிடப்படுமென்றும் விளம்பரம் செய்த


லார்ட் ஹார்டிஞ்ச்

ளர். இம்மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தியாரும் சக்கரவர்த்தினியாரும் நீடூழி வாழ்ந்து இங்கிலாந்தின் புகழையும், இந்தியாவின் நன்மையையும் நிலைநாட்டுவாராக!




இளவரசர் செய்த சுற்றுப்பிரயாணம் 1905.

ஆங்கிலேய துரைத்தனத்திற்குமுன் இத்தேசமிருந்த நிலைமையையும், இப்போது இருக்கும் நிலைமையையும் நோக்குங்கால், இந்தியாவுக்குப் பலவகையான நன்மைகள் கிடைத்திருக்கின்றனவென்பது விளங்கும். கொடி



யவர்களது கலகமும், கடற்கொள்ளைக்காரர்கள் செய்த துன்பமும், அரசின்மையால் உண்டாகும் அபாயங்களும், ஆங்கிலேயர்களுடைய நிலப்படையாலுங் கப்பற் படையாலும் இன்னவாறு அகற்றப்பட்டனவென்றும், ஒருவனுடைய பாத்தியம் இவ்விதமாக ஸ்திரப்படுகிறதென்றும், அமைதியின் மிகுதியால் இந்நாட்டில் விவஸாயம், வர்த்தகம், கைத்தொழில் முதலிய ஜீவனோபாயங்கள் விருத்தியடைகின்றனவென்றும், அயல்நாட்டாருடைய ஸாமான்கள் மிகுதியாக இங்கு வருகின்றனவென்றும், தந்தி, தபால், இருப்புப்பாதை, கால்வாய் முதலிய பொது நன்மைகள் துரைத்தனத்தாருடைய சிறந்த தர்மங்களாக விளங்குகின்றனவென்றும், எல்லா மதஸ்தர்களுக்கும் வித்தியாசமின்றிக் கல்வி புகட்டுவதைத் துரைத்தனத்தார் தங்கள் கடமையாகக் கொண்டிருக்கிறார்களென்றும், காலக்கிரமத்திற் பற்பல பெரிய வேலைகளில் இந்தியர்களும் நியமிக்கப்பெற்று வருகிறார்களென்றும் முன்னமே சொல்லியிருக்கிறோம்.

அல்லாமலும், கல்வியாராய்ச்சியிலேயே தம்முடைய வாழ்நாளையெல்லாஞ் செலவிட்டுக் கல்வியைப் பாவச் செய்யும் உலோகோபகாரிகளாகிய வித்வச்சிகாமணிகளுக்கும், தம்முடைய செல்வத்தை ஏழைகளின் நன்மைக்காகப் பொதுவிஷயங்களிற் செலவிடும் புண்ணிய புருஷர்களுக்கும், துரைத்தனவிஷயத்தில் துரைத்தனத்தாருக்கு வேண்டிய ஸகாயஞ்செய்யும் புத்திமான்களுக்கும் வருஷந்தோறும் ஜனவரிமாஸம் முதல் தேதியிலும்,

சக்கரவர்த்தியவர்கள் பிறந்த தினத்திலும் கௌரவமான பட்டப்பெயர்களையும், தங்கம் வெள்ளி முதலியவற்றாற் செய்யப்பெற்ற பதக்கங்களையும், மலர்களையும் துரைத்த



மேரி சக்கரவர்த்தினியார்.

னத்தார் அளித்து மேற்கூறிய கனவான்களுக்கு முற்காலத்திலிருந்த அரசர்களைப்போலவே உத்ஸாகத்தை விளைவிக்கின்றனர்.





ஜார்ஜ் சக்கரவர்த்தியார்.

மேற்சொல்லிய எல்லா நன்மைகளைக்காட்டிலும் எளியவர்களுக்கு துரைத்தனத்தார் செய்யும் உதவியானது மிகவும் பாராட்டத்தக்கது. மழையில்லாதகாலங்களிற் பஞ்சத்தால் வருந்தும் ஆயிரக்கணக்கான ஏழைகளைக்கொண்டு குளங்கள், கால்வாய்கள் முதலியவற்றை வெட்டி அவர்களுக்குத் தக்க கூலியளித்து அவர்களுடைய பசித்துன்பத்தை நீக்கிவருவதல்லாமல் வருஷந்தோறும் பஞ்சநிதி (Famine Fund) என்ற ஒரு நிதியையும் சேர்த்துவருகிறார்கள். இதனால் எளியவர்களுடைய துயரத்தைப் போக்கு முபாயங்களைத் துரைத்தனத்தார் கூடுமானவரையில் தேடுகின்றனரென்பது வெளியாகின்றது.

ஆயினும், எல்லா வளமும் பொருந்திய இந்நாட்டில் தரித்திரமானது இன்னும் ஏன் காணப்படுகிறதென்றும், ஆயிரத்தில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் ஏன் ஒருவேளை ஆகாரத்தோடு நின்றுவிடுகிறார்களென்றும், இந்த வறுமையைத் துரைத்தனத்தாரே ஏன் நீக்கக்கூடாதென்றும் சிலர் சொல்லக்கூடும். வறுமையென்பது இந்நாட்டில் மட்டும் இருக்கிறதென்று நினைக்கவேண்டாம். எந்நாட்டிலும், எந்நிலையிலும் தரித்திரம் நிழலைப்போல் மனிதர்களைத் தொடர்ந்தேயிருக்கிறது. செங்கோன்மைக்குப் பேர்பெற்றிருக்கும் இங்கிலாந்திலும், குடியரசுள்ள பிரான்ஸ் தேசத்திலும், அமெரிகாகண்டத்திலும், கொடுங்கோன்மையுள்ள ராஜ்யங்களிலும் வறுமையென்பது குடிகொண்டே இருக்கிறது. ஆகையால்,



துரைத்தனத்தாரே வறுமையை முற்றிலும் நீக்கமுடியாதென்பது நன்கு விளங்கும். பணத்தோடு பணம் சேருவதும், தரித்திரத்தோடு தரித்திரம் சேருவதும் உலகத்தில் இயற்கை. செல்வமானது விருத்தியாகிச் சிலர் கையிற் சேர்ந்தவுடன், உழைப்பாளிகள் அவர்களுக்கு அடிமைகளாகி அவர்களுக்காக உழைத்து அவர்களுடைய லாபத்தைப் பெருக்கி, தாங்கள்மட்டும் ஒரே நிலையில் இருந்துவருகிறார்கள். தங்களுடைய முயற்சி சிறிதுமில்லாமற் பிறருடைய உழைப்பாற் கிடைக்கும் பயன்முழுவதையும் அடைந்துவருகிற தனவான்களும், தங்களுடைய செல்வப்பெருக்கத்தாலும் வன்மையாலும் உழைப்பாளிகளைத் தம் வசப்படுத்திக்கொண்டு அவர்களுடைய செல்வவிருத்தியைக் கெடுக்கும் மூலதனக்காரர்களும், பிறருடைய பணத்தைக் குறைந்த வட்டிக்குக் கடனாக வாங்கி அவர்களுக்கே கடுமையான வட்டிக்குக் கடன்கொடுக்கும் முதலாளிகளும் பெரும்பாலும் தரித்திரத்தை எவ்விடத்தும் நிலைத்திருக்கச் செய்துவருகிறார்களென்பது பலருடைய கொள்கை. அல்லாமலும், தங்களுடைய முன்னோர்கள் அனுசரித்துவந்த செட்டான வழக்கங்களின் அருமையையும் அவர்களுடைய நல்லொழுக்கங்களின் பெருமையையுங் கவனியாமல், அதிகச் செலவை உண்டாக்கும் நூதனமான கெட்ட வழக்கங்களை யனுசரிக்கும் சில பேர்களாலும் தரித்திரம் விருத்தியாகிறதென்று சொல்லலாம்.

மூலதனத்தையுடைய முதலாளிகளால் தொழிலாளி

களுக்கு உண்டாகும் பலவிதமான துன்பங்களைத் தடுப்பதற்காகவும், நீராவி யந்திரங்களை வைத்து வேலைசெய்யுந் தொழிற்சாலைகளில் வேலைக்காரர்கள் ஒழுங்காகவும் துன்பமில்லாமலும் நடத்தப்படுகிறார்களா வென்பதைக் கவனிக்கவும், காபித் தோட்டங்கள், தேயிலைத் தோட்டங்கள் முதலிய விடங்களில் உழைக்கும் ஆயிரக்கணக்கான வேலைக்காரர்கள் ஆங்கிலேய முதலாளிகளால் சரிவர நடத்தப்படுகிறார்களாவென்று பார்க்கவும், பினாங்கு, சிங்கப்பூர், மோர்சு முதலான அயலிடங்களிற் பல தொழில்களில் அமர்ந்துள்ள இந்நாட்டு ஜனங்களைக் காக்கவும், அபாயமுள்ள சுரங்கங்களில் வேலைசெய்கிறவர்களுக்கு அபாயம் நேரிடாதபடி பார்த்துக்கொள்ளவும் துரைத்தனத்தார் பல அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள். ஏழைகள் தங்களுக்குள்ள சொற்பப்பொருளை எந்தவிதமாகவாவது விருத்திசெய்துகொண்டு தரித்திரத்தைப் போக்கிக்கொள்ளலாமேயன்றி வேறுவகையாக அதனை நீக்க முடியாதென்று துரைத்தனத்தார் நன்றாகத் தெரிந்துகொண்டு 1904-ம் வருஷத்தில் ஐக்கிய நாணயச்சங்கச் சட்டத்தை (Co-operative Credit Societies Act of 1904) ஏற்படுத்தினர். இதனால், ஏழைகளாகிய கிராமவாசிகளும் நகரவாசிகளும் தங்கள் நிலைமைக்குத் தக்கபடி நிதிகள் ஏற்படுத்திக்கொண்டு பிறருடைய மூலதனத்தை எதிர்பாராமலே வர்த்தகம், கொடுத்தல், வாங்கல், கைத்தொழில் முதலிய உபாயங்களால், தங்கள் வறுமையைப் போக்கிக்கொள்ளலா



மன்றோ! ஜனங்கள், தங்கள் வரும்படியில் மிகுந்து வைத்துக் கொடுக்கும் சிறு பொருள்களை வாங்கிக்கொண்டு அவர்கள் கேட்கும்போது கொடுப்பதற்காக ஏற்படுத்தியிருக்கும் சேமநிதியும், துரைத்தன உத்தியோகத்தில் இருப்பவர்கள் மாதந்தோறும், தங்கள் சம்பளத்தில் வீசம் பங்குக்குக் குறையாமலும் அரைக்காற் பங்குக்கு மேற்படாமலும் கொடுக்கும் பணத்தைச் சேர்த்துப் பிற்காலத்தில் உபயோகப்படும்படி கொடுப்பதற்காக ஏற்படுத்தியிருக்கும் பின்னுதவு நிதியும் (Provident Fund) துரைத்தனத்தார் ஜனங்களுடைய செல்வ விருத்திக்காக எடுத்துக்கொண்டிருக்கும் நன்முயற்சியைத் தெரிவிக்கின்றன; ஐரோப்பிய நாடுகளில், செல்வ விருத்தியானது ஜனங்களின் ஊக்கம், முன்யோசனை, தைரியம், கட்டுப்பாடு, அன்பு முதலிய சிறந்த நற்குணங்களாலேயே உண்டாகின்றது. நம் முன்னோரிடத்திலும் இக்குணங்கள் ஆதிகாலத்தி லிருந்தனவென்பதற்கு ஐயமில்லை. அரசர்கள் பொதுநன்மைக்காக ஒன்றுஞ்செய்யாத காலத்திலும், கிராமவாசிகள் ஒன்றுசேர்ந்து நீர்ப்பாய்ச்சலுக்கு வேண்டிய குளங்கள், கால்வாய்கள், அணைக்கட்டுகள் முதலிய அளவற்ற ஸாதனங்களைத் தாங்களே அமைத்துக்கொண்டார்களென்று தெரிகிறது. ஆகையால், விவஸாயம், வர்த்தகம், கைத்தொழில் முதலியவற்றில் ஏழைகள் எவ்வளவுக்கெவ்வளவு உழைக்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அவர்களுடைய வறுமை நீங்கிவரும் என்று சொல்லலாம்.

இவ்வுலகத்தில் ஆங்கிலேயர்கள் அடைந்திருக்கும் புகழுக்கு இந்தியா துரைத்தனமே முக்கியமான காரணமென அயல்நாட்டாரும், நல்ல துரைத்தன முறைகளை இந்நாட்டில் அமைப்பதே பெரும்புகழைத் தருமென ஆங்கிலேயரும் நினைக்கிறார்கள். இவ்வுலகத்தில் மாசற்றது ஒன்றுமில்லை. ஆதலால் துரைத்தனமுறைகளிற் சிற்சில பிழைகளிருக்கக்கூடும். ஆயினும் அப்பிழைகளைத் தாங்கள் தெரிந்துகொண்டாலும், பிறர் அவற்றை எடுத்துக்காட்டினாலும், அவற்றை நீக்குவதில் ஆங்கிலேய துரைத்தனத்தார் ஊக்கமுள்ளவர்களாக இருக்கின்றனர். இவ்விதமான கொள்கையிருந்தால் துரைத்தனத்தாருக்குப் புகழுண்டாகுமென்பதற்கு என்ன தடை? ஒரு தாய் வயிற்றிற் பிறந்து பல காரணங்களால் இளமை தொடங்கிப் பிரிந்து வேறு வேறு இடங்களில் வஸிக்கும் சகோதரர்கள் ஒரே இடத்திற்கு வந்து கூடுங்கால் மிக்க மகிழ்ச்சியுற்று மறுபடி பிரியாமல் வாழ்வதில் எப்படி பிரியமுள்ளவர்களாக இருப்பார்களோ அப்படியே ஆதியங்கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டு வெகுகாலத்துக்குமுன் பிரிந்து வேறு வேறு இடங்களிலிருந்து புகழ்பெற்று இப்போது சேர்ந்திருக்கும் இந்தியர்களும், ஆங்கிலேயர்களும் மணக்கலப்புற்று ஒற்றுமையுடன் வாழவாழ இந்நாடானது இப்பூவலயத்திற் சிறந்த மணிபோல் விளங்கிவரும்.

"குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்ன
னடிதழீஇ நிற்கு முலகு." (திருக்குறள்.)

முற்றிற்று.

சென்னையில் உபாத்தியாயர்களுக்காக நடைபெறும் பரீட்சையில் கொடுக்கப்பெற்ற

# கேள்விகள்

## 1907.

மார்க்குகள்.

I. கிராம ஏற்பாட்டைக்குறித்து 3-வது வகுப்பிற்குப் பாடக்குறிப்பு வரைக. 16

II. தபாலாபீசுகளில் நடக்கும் பலவித வேலைகளை எழுதுக. ஒரு கடிதம் சென்னை (மதிராஸ்) தபாலில் போடப்பட்டு கர்னூலிலிருக்கும் விலாஸத்தாருக்குக் கொடுக்கப்பட்டது. அதன் சரித்திரத்தை அந்தக் கடிதமே சொல்லும் பாவனையில் கதாரூபமாய் எழுதுக. 8

III. சிவில் கேசு (Civil Case) க்கும் கிரிமினல் கேசு (Criminal Case) க்கும் என்ன பேதம்? கொலை என்றால் என்ன? யுத்தகளத்தில் போர் செய்வோரைக் கொல்லுதல் ஏன் கொலை யல்ல? 6

IV. லோகல் போர்டுகள் (Local Boards) அவைகளுக்கு வேண்டிய பணங்களைப் பெறும்

மார்க்குகள்.

விதமென்ன? எப்பேர்ப்பட்ட விஷயங்களுக்கு அப்பணங்கள் செலவிடப்படுகின்றன? 6

V. சென்னை இராஜதானியில் சர்க்கார் நிலவரி வசூல் செய்வதற்கான இரண்டுவகை ஏற்பாடுகள் யாவை? அவைகளின் ஆரம்ப சரித்திரத்தைப் பற்றி உமக்குத் தெரிந்ததை எழுதுக. 8

VI. சென்னைச் சட்டநிரூபண சபையைப்பற்றி உமக்குத் தெரிந்ததை வரைக. 6

50

## 1907.

I. (a) ஒரு கிராம உபாத்தியாயர் தான் சென்னபட்டணத்துக்குப் போகாமலே அங்கிருக்கும் ஒரு புஸ்தக வியாபாரியிடமிருந்து சில வாசக புஸ்தகங்களை வாங்கவும், புஸ்தகங்களைப் பெற்றுக் கொண்டபிறகு விலையைக் கொடுக்கவும் விரும்புகிறார்.

இதுசம்பந்தமாகச் செய்யப்பட்டிருக்கும் தபால் ஏற்பாட்டை விவரிக்க. 3

(b) ஓரிடமிருந்து மற்றோரிடத்திற்குப் பணம் அனுப்புவதற்கான தபால் சாதனங்களை விவரிக்க. அவசர சமயங்களில் பணம் சீக்கிரத்தில் போய்ச் சேர ஏதாவது தபால் ஏற்பாடுள்ளனவா? 3



மார்க்குகள்.

II. (a) ஒரு கிராமத்தில் திருட்டுமுதலான குற்றங்கள் நடந்தால், கிராமாதிகாரிகளும் போலீஸ்தாரர்களும் செய்யவேண்டிய கிருஷிகள் என்ன? 4

(b) இவைகளை விசாரித்து நியாயந்தீர்க்கும் உத்தியோகஸ்தர்கள் யார்? 2

III. (a) கிராமாதிகாரிகள் விசாரணை செய்யக்கூடிய சில்லரைக் குற்றங்களையும், அவர்களுடைய அதிகாரத்தின் அளவையுங் கூறுக. 3

(b) எவ்வித சிவில் வழக்குகளைக் கிராம முனிசீப் விசாரணை செய்யலாம்? இவர்களுக்குப் பணம் சம்பந்தமாய் எந்தமட்டும் அதிகாரம் செல்லும்? 3

IV. (a) ஒரு கிராமக் கணக்கனுடைய கடமைகளைச் சுருக்கமாய் எழுதுக. 3

(b) அம்மை குத்துவதால் விளையும் பயன்களை விவரிக்க. 2

V. (a) கவர்ன்மெண்டார் ஜனங்களிடமிருந்து வரி வசூல் செய்வானேன்? 1

(b) பிரஜைகளிடமிருந்து வரி வசூல் செய்யாத இராஜாங்கம் எங்கேனும் உளதா? 1

(c) எவ்வகுப்பு ஜனங்கள் சர்க்காருக்கு அதிக வரும்படி கொடுக்கிறார்கள்? 1

மார்க்குகள்.

VI. (*a*) உமதுபேரில் கோசமாயிருக்கிற ஒரு நிலத்தை இன்னொருவருக்கு விக்கிரயசாஸன மெழுதிக்கொடுக்க நீர் விரும்பினால் அதுவிஷயமாய் யாருக்கு மனுச்செய்துகொள்ளவேண்டும்? உமது கோரிக்கையின்படி அநுமதி கொடுக்கப்பட்டால் என்னென்ன ஸாதகமுண்டாகும்? 3

(*b*) தர்க்காஸ்து மனு என்றால் என்ன? அது எப்படி முடிவு செய்யப்படுகின்றது? 3

VII. (*a*) ஒரு ரூபாய்க்குக் கீழ்ப்பட்ட தபால் லேபில்களின் பெயரைச் சொல்லுக. 2

(*b*) 20 ரூபாய் வரையிலுள்ள பலவித பொது ஸ்டாம்புகளின் பெயரைக் கூறுக. 4

VIII. காட்டிலாகா ஏற்பட்டிருக்கும் நோக்கங்களையும் அதனால் பிரஜைகளுக்கு உண்டாகும் ஸாதகத்தையும் சுருக்கிக் கூறுக. 4

IX. ஒரு கிராம எலிமெண்டெரி பாடசாலை, சர்க்கார் அங்கீகரிப்பதற்காக, உள்ளாகவேண்டிய நிபந்தனைகள் என்ன? அவ்வித பாடசாலைகளுக்குச் சர்க்காருடைய உதவியின் தன்மையைச் சுருக்கி எழுதுக. 4

X. ஒரு கிராமத்தில் ஒரு குற்றத்தைப் போலீஸ்தாரர்கள் விசாரிக்கும் விதத்தை நீர் பிள்ளைகளுக்கு எப்படி போதிப்பீர்? 4

50



## 1908.

மார்க்குகள்.

I. (*a*) கீழ்தரப் படிப்பு (Elementary education) விருத்திசெய்வதன்பொருட்டு இந்தியா கவர்ன்மெண்டாரால் செய்யப்பட்டிருக்கும் முக்கியமான ஏற்பாடுகளென்ன? 3

(*b*) இக்காலத்து எலிமெண்டெரி பாடசாலைக்கும் இதற்கு முந்தியிருந்த திண்ணைப் பள்ளிக்கூடத்திற்குமுள்ள முக்கியமான வித்தியாசங்களென்ன? 3

II. (*a*) ஒரு ஜில்லாவிலுள்ள முக்கியமான சர்க்காரதிகாரிகள் யார்? 2

(*b*) ஜில்லா கலெக்டருடைய வேலைகள் என்ன? 4

III. "நியாய பரிபாலனமானது பல சமயங்களில் கட்சிக்காரர்களுடைய மதம், வர்ணாச்ரமம் இவைகளை யனுசரித்திருக்கிறது." இவ்வாக்கியத்தை விளக்குக. 3

IV. இந்தத் தேசத்தில் செலாமணியாகும் நாணயங்கள் என்னென்ன? அவைகளில் எந்த நாணயம் இங்கிலாந்திலும் செலாமணியாகும்? 3

V. (*a*) நில செட்டில்மெண்டு (Land Settlement) என்றால் என்ன? 2

மார்க்குகள்.

(b) இந்தத் தேசத்தில் வழங்கும் இருவித செட்டில் மெண்டுகள் எவை? 2

(c) அவைக ளொன்றுக்கொன்றுள்ள வித்தியாசங்க ளென்ன? 3

VI. பின் வருவனவற்றைச் சுருக்கமாக விளக்குக.

(a) வைசராயினுடைய சட்ட நிரூபண சபை.

(b) இந்தியா ஆபீஸ்.

(c) தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங்க். 6

VII. (a) இந்தியாவினுடைய எல்லைப் படமொன்று வரைந்து, அதில் பிரிட்டிஷ் அரசாட்சிக்குட்பட்ட சுதேச இராஜாங்கங்களைக் குறிப்பிடுக. 5

(b) மைசூர், இராஜபுதனம் இவ்விரண்டு சுதேச இராஜாங்கங்களின் பூர்வ சரித்திரத்தைச் சுருக்கமாக எழுதுக. 4

(c) பிரிட்டிஷ் இந்தியா, சுதேச இராஜாங்கங்கள் இவ்விரண்டினுடைய அரசாட்சிக்குமுள்ள முக்கியமான வித்தியாசங்க ளென்ன? 3

VIII. "இராணுவமும் போலீசும்"—என்பதைப் பற்றி நான்காவது வகுப்புக்கு முதல் பாடத்துக்கு ஒருமாதிரிப் பாடக்குறிப்பு வரைக. 7

50



## 1909.

மார்க்குகள்.

I. கீழ்தரப் பாடசாலைகளுக்கு உபாத்திமைத் தொழிலுக்காகத் திரவ்விய சகாயம் (டீசிங் கிராண்ட்) எவ்வாறு கணக்கிடப்படுகிறது? பழைய ரிஸல்ட் கிராண்ட் ஏற்பாட்டைவிட இப்புதிய ஏற்பாடு எவ்விதங்களில் மேலானது? போர்ட் பாடசாலைகளை நிர்வகிப்பதில் பொறுப்புள்ளவர்கள் யார் யார்? எவ்வாறு? 6

II. ஓரிடமிருந்து மற்றோரிடத்திற்குப் பணம் அனுப்ப சர்க்கார் என்னென்னவிதமான ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

இவைகளில், ஏதாவது ஒன்றின்படி பணம் கட்டினதுமுதல், சேருகிறவரையில் உள்ள விவரங்களை விஸ்தாரமாய் எழுதுக. 2+3

III. கிரிமினல் கேஸ்; ஸிவில் வழக்கு இவைகளைச் சுருக்கமாய் விளக்குக. மேற்கண்ட வழக்குகளை விசாரித்து முடிவுசெய்ய ஏற்பட்டிருக்கிற பல கோர்ட்டுகளை வரிசைக்கிரமமாய் எழுதுக. 4

போலீசாருக்கும், நியாயாதிபதிகளுக்கும் உள்ள முறைமையை விளக்கி எவ்விஷயங்களில் அவர்களின் கடமைகள் வேறுபடுகின்றன என்பதை தெரிவிக்க. 3

மார்க்குகள்.

IV. ரிவினியூ ஸெட்டில்மெண்ட் என்றால் என்ன? இதற்கும் லான்ட் சர்வேக்கும் என்ன சம்பந்தம்? 5

V. லோகல் போர்டுகளுக்கு என்னென்ன வகைகளில் வரும்படியுண்டு? இந்த வருமானத்தை எதெதின்பொருட்டு செலவிடுகிறார்கள்? இந்த வரவு செலவு கணக்கை அவர்கள் யாருக்கு ஒப்பிக்கவேண்டும்? 6

VI. சென்னை கவர்ன்மெண்டாருக் குட்பட்ட சுதேச இராஜாங்கங்களைக் குறிப்பிட்டு அவைகளைக் கவர்ன்மெண்டார் எப்படி மேல்விசாரணை செய்கிறார்கள் என்பதை விவரிக்க. 5

VII. நீர்ப்பாய்ச்சல், இருப்புப்பாதை இவ்விரண்டையும் சர்க்கார் எவ்வாறு பார்த்துவருகிறார்கள் என்பதைத் தெளிவாகவும், சுருக்கமாகவும் எழுதுக. 4

VIII. சர்க்கார் அல்லது லோகல் போர்ட் உத்தியோகத்திலில்லாத ஒரு மனிதன் கவர்ன்மெண்டுக்கும், தன்னைச் சுற்றியுள்ள மற்ற ஜனங்களுக்கும் எப்படி உதவிபுரியலாம்? 6

IX. மூன்றாவது வகுப்புக்குக் காட்டிலாகாவைப்பற்றி ஒரு பாடக்குறிப்பு எழுதுக. (நேரம் 40 நிமிஷம்.) 6

50



## 1910.

மார்க்குகள்.

I. மூன்றாவது வகுப்புப் பிள்ளைகளுக்கு "கவர்ன்மெண்ட்" என்னும் வார்த்தையின் கருத்தை எவ்வாறு விளக்கி உதாகரிப்பீர்? 4

II. (1) இவ்விராஜதானியின் படிப்பு விசாரணையின் (எடுகேஷனல் ஏஜென்ஸீஸ்) கூட்பிரிவினைகளைக் கூறுக. 4

(2) அவற்றிற்கு இராஜாங்கத்தார் கொடுக்கும் உதவியைச் சுருக்கமாக விவரிக்க. 2

(3) தொழில் படிப்பு (டெக்னிகல் எடுகேஷன்) என்றால் என்ன? உமக்குத் தெரிந்த ஏதாவது இரண்டு தொழில் பாடசாலைகளைக் கூறுக. 2

III. (1) கிராம முனிசிபுகளின் நியாயவிசாரணை சம்பந்தமான அலுவல்கள் எவை? 2

(2) ஜில்லாவின் கார்ய நிர்வாகி யார்? 1

(3) அவர் எவ்வாறு சமாதானத்தை நிலைநிறுத்தி, தன் அதிகாரத்திற் குட்பட்ட பிரதேசத்தில் நடக்கும் குற்றங்களை அடக்குகிறார் என்பதை விவரிக்க. 3

IV. (1) சர்க்காருக்கும் இந்தியா இருப்புப்பாதைகளுக்குமுள்ள சம்பந்த மென்ன? 3

(2) இராஜாங்கத்தாருக்கும் ஜனங்களுக்கும் அவற்றால் உண்டாகும் நன்மைகளைப்பற்றி ஒரு பாடக்குறிப்பு தயார் செய்க. 4

மார்க்குகள்.

V. (1) இராஜாங்கச் செலவு விஷயம்.

(2) வர்த்தகம், வியாபாரம் இவை சம்பந்தமாய் சர்க்காரின் உதவி.

இவற்றை விவரிப்பதில், பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு வெளியே உலாவ அழைத்துப் போகையில் அவர்களினது உற்றுப்பார்க்கும் சக்தியை எவ்வாறு உபயோகப்படுத்துவீர்? 4

VI. (1) இந்திய நாணயங்களைச் செய்வதில் இப்போது எந்த உலோகங்களை உபயோகிக்கிறார்கள். 2

(2) ஜனங்கள் சில நாணயங்களை மற்றவைகளைக்காட்டிலும் அதிகமாக அழிப்பானேன்? 3

(3) ஒரு நாணயத்திற்கும், நாணயமாக வழங்கும் நோட்டுக் காகிதத்திற்குமுள்ள (கரென்ஸி நோட்) ஒற்றுமை வேற்றுமைகளைக் கூறுக. 3

VII. ஒரு பெரிய நகரத்தில் மாதம் ரூபாய் 500 வரும்படியுள்ள ஓர் உத்தியோகஸ்தர் தன் சொந்த வீட்டிலிருந்துகொண்டு, ஒரு குதிரை, ஒரு வண்டி, ஒரு ஆள்வண்டி (ரிக்ஷா), ஒரு நாய், சில சமயங்களில் உபயோகிக்க ஒரு பைஸிகில் இவைகளை வைத்துக்கொள்கிறார். மதுபானம், சுருட்டு இவைகளின்மீது இவருக்குப் பிரியம் உண்டு. ஜனநெருக்கமான நகரத்தை விட்டு 5 மைல் தூரத்திலிருக்கும் தனது ஒரு விசாலமான தோட்டத்தில் ஞாயிற்றுக்கிழமையைக் கழிக்கிறார். இவர் கொடுக்கவேண்டிய வரிகளையும், பாக்கிகளையும் பற்றி சுருக்கமாக விவரிக்க. 5



மார்க்குகள்.

VIII. (1) சுதேச நாடுகளின்மீது சர்க்காருக்கு எவ்விதமான அதிகாரம் உண்டு? 3

(2) உமக்குத் தெரிந்த ஏதாவது ஒரு சுதேச நாட்டின்மீது பிரிட்டிஷ்காரரின் மேலதிகாரத்தால் உண்டாகும் சாதகங்களை விவரிக்க. 3

(3) பிரிட்டிஷ் அரசாட்சிக்கு முந்தி நமது தேசத்தார் அடையாது நாம் இப்போது அனுபவிக்கும் நன்மைகளுள் இரண்டு கூறுக. 2

50

## 1911.

I. கீழ்வரும் தொடர்மொழிகளைக்கொண்டு கிரேட் பிரிடெனில் அங்கிலேய அரசாட்சி ஏற்பாட்டை நான்காவது வகுப்பு பிள்ளைகளுக்கு எவ்வாறு நன்கு விளக்குவீர்:— 6

'மகா கனம்வாய்ந்த அரசர், பிரபுக்கள் (லார்ட்ஸ்), பொது ஜனங்கள் (காம்மன்ஸ்), கக்ஷிகள், பார்லிமெண்ட் சபை ஸ்தானம், எழு வருஷம், தலைவர், முக்கிய மந்திரி, மந்திரிகள், ஆலோசனைசபை, இந்திய நாட்டு ஸ்டேட் ஸெக்ரிடெரி,

மார்க்குகள்.

இந்திய அரசாட்சி ஆலோசனை சபை, இந்திய அரசாட்சி ஆபீசு?

II. இந்தியா படம் ஒன்று வரைந்து அதில் அரசாட்சி சம்பந்தான (பொலிடிகல் டிவிஷன்) பல பிரிவுகளையும் திருவாங்கூர், மைசூர், ஹைதராபாத் என்னும் சுதேச ராஜ்யங்களையும் குறித்துக் காட்டுக. 6

III. எலிமெண்டெரி படிப்பு, தொழில் படிப்பு (ஸ்பெஷல் படிப்பு) என்றால் என்ன? இவைகளின் அபிவிர்த்திக்காக இந்திய துரைத்தனத்தார் எவ்வித ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்? 6

IV. பொதுக்கட்டிட வேலைகள் (பப்ளிக் வொர்க்ஸ்) என்றால் என்ன? இந்த இலாகாவின் வேலையினால் ஒரு நாட்டில் நடக்கும் வியாபாரமும் வர்த்தகமும் எவ்வாறு அபிவிர்த்தி செய்யப்படுகின்றன என்பதை தகுந்த உதாரணங்களைக் கொண்டு விளக்குக. 6

V. (a) இந்தியாவின்மீது வேற்றரசர் படை எடுத்து வராமலிருக்கும்படியும்,

(b) இந்தியாவில் உள்ளூர் கலகங்கள் இல்லாமலிருக்கும்படியும்,

(c) இந்தியாவிலுள்ள ஜனங்களின் தேக சௌக்கியத்தின்பொருட்டும்,



மார்க்குகள்.

துரைத்தனத்தார் என்னென்ன ஏற்பாடுகள் செய்துள்ளார்? 5

VI. (a) ஜமாபந்தி.

(b) அரையணா ஒரு அணா தபால் தலைகள்.

(c) ஒரு கொலைகேஸில் ஜில்லா ஜட்ஜி அவர்களுடைய அதிகாரங்கள்.

(d) ரெவினியூ செட்டில்மெண்டும், ரெவினியூ ஸர்வேயும்.

(e) ஜமீன்தாரி ஏற்பாடும், ரயத்வாரி ஏற்பாடும்.

(f) 1909-ம் ௵த்திய இந்திய ஆலோசனை சபை சட்டம் (நவம்பர்மீ 15உ).

(g) ஜூரார்களும், அஸெஸர்களும்.

(h) சவரன் நாணயம்.

இவைகளைக்குறித்து உமக்குத் தெரிந்தவற்றை எழுதுக. 8

VII. சென்னை மாகாண துரைத்தனத்தாருக்குட்பட்டு இவ்விராஜதானி முழுவதும் நிர்வாகம் உள்ள மாகாண உத்தியோகஸ்தர்களையும், அவர்களின் வேலைகளையும் கூறுக. 6

VIII. பின் வருவனவைகளைக் கூறுக:—

(a) மூன்று வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகளும் அவர்கள் செலுத்தக்கூடிய அதிகாரங்களும். 3

மார்க்குகள்

(b) ஜாதி, மதவிஷயமாக இந்தியநாட்டு ஜனங்களின் சுவதந்திரங்களை நியாயாதிபதிகள் நிர்ணயிக்க அனுசரிக்கும் சட்டங்கள். 3

(c) சுய ஆட்சி சபைகளின் பலவகைகளின் பெயர்கள். 4

(d) சுதேச ராஜ்யங்களில் அங்கிலேய துரைத்தனத்தாருக்கு பிரதிநிதியாயிருப்பவர். 2

IX. (a) ஸெண்ட்ரல் கவர்ன்மெண்ட் என்றால் என்ன?

(b) அதினிருப்பிடம் (ஹெட் க்வார்ட்டர்ஸ்) எவ்விடம்?

(c) அதின் தலைவர் யார்?

(d) அவருடைய முக்கியமான வேலைகள் என்ன? 5

60

# OPINIONS

Sir J. Thomson, K.C.S.I., *Member of the India Council.*—The scope and purpose of the book are excellent; and in so far as I have had time to read the text * * * I have found it illuminating. It will doubtless have a wide market and be most useful in education.

Sir Theodore Morison, K.C.I.E., *Vice-President of the India Council.*—* * * From the head lines I judge that the work must be full of interest and advantage to young students. * * * * I am growing more and more convinced that the important ideas, the ideas which sway humanity, spring, as was said, from the heart; and to touch the heart one must speak through one's mother tongue.

The "Madras Mail".—Mr. T. S. Subramania Aiyar, Assistant Professor of History at the Presidency College, has just published a little work in Tamil of considerable interest and even importance. It is called "The Elements of Civics for India". It consists of a series of chapters dealing with subjects such as the family and its duties, the family and the State, what the Sircar does for us, and so forth. It describes in simple language the system of public education, the functions of the Sircar as a judge, as a protector of public order, as a constructor of railways and public works. It explains the system and reasons of taxation, and describes the system of self-government by the Taluq Boards and Municipalities. The third part deals with the system of Government, rising from Provincial through the India Government to the Home Government; and the fourth part briefly describes the condition of India before and after the establishment of the British *Raj*. All this is related in easy colloquial Tamil, such

as may easily be read and understood by people of all grades of education, including school children; and it is illustrated with numerous photographs. Such a work has been badly needed in primary schools, and we are heartily glad to see it done, and well done. We imagine that the book will be eagerly welcomed by all concerned in the management of vernacular schools; and it should certainly be introduced as speedily as may be, for it must always be of the greatest moment, as Mr. Subramania Aiyar observes in his preface, that honest and law-abiding citizens should be trained in the schools, where much of India's future prosperity and happiness must be decided.

**The "Hindu," Madras.**—The author has evidently bestowed much care in the selection of materials and his division of subjects is very appropriate. He has divided the volume into four parts, the first part dealing with the Sircar and its functions regarding education, law and justice, railways, telegraphs; the second detailing the duties and responsibilities of the people; the third giving a brief but clear account of the Government and its structure; and the fourth summarizing the chief events in the History of India within forty pages. The book has been specially prepared for use as textbook in training and elementary schools. But to the Tamil-knowing public generally who require to know about the subject, Mr. Subramania Aiyar's work will be found very interesting and instructive. The language is easy and flowing. We have to congratulate the author on the successful manner in which he has treated the novel subject, and we are confident that the book will become popular.

**The "United India".**—"The book need only to be known to be bought."

**Sir S. Subramania Aiyar, B.A., LL.D., Kt., C.I.E.**—"The style is just what in my opinion is necessary for the general improvement of the vernaculars of our country."



**Dewan Bahadur R. Raghunatha Rao, C.I.E.**:—"I am convinced that this is a very useful work and if studied will make the coming generation more useful to our country."

**The Hon. Mr. Justice V. Krishnasamy Aiyar Avl., B.A., B.L.**—"The design and scope of the work are excellent. It has been executed with commendable care and judgment."

**Rao Bahadur S. Mangesh Rao Avl., B.A.**—"I think you have supplied a real want by coming to the rescue of the poor elementary schoolmaster, who was at sea as to what he should teach on the subject."

**M.R.Ry. P. Sambanda Mudaliar Avl., B.A., B.L.**—"I regard the book as one of the most useful contributions to the Tamil language in the present day."

**M.R.Ry. K. Venkatrama Aiyar Avl., B.A.**—"I have now been a schoolmaster for thirty years, and I do not remember having come across a vernacular textbook so masterly in detail and so accurate."

**Rao Bahadur P. I. Chinnasami Pillai Avl.**—"I should strongly recommend that the book should be introduced in all the primary schools with the least possible delay, so that pupils in their impressionable age are well grounded on sound principles and duties of good citizenship."

**The Hon. Mr. P. S. Sivaswami Aiyar Avl., B.A., B.L., C.I.E.**—"Though the book is adapted to the [illegible] ments of elementary schools it can be read [illegible] dvantage [illegible] students of the higher forms and by the m[illegible]e people. The style in which the work is written is as [illegible] removed from the ordinary current language of the day as [illegible]ble and is just the style needed for books intended to popul[illegible] knowledge."

---

S. P. C. K. PRESS, VEPERY, [illegible]DRAS—1912

120759